வருஷா வருஷம் ஸ்ரீ முத்தண்ணாவாள் ஆராதனையை பிதாவாள் செய்து வந்தார்கள். பக்தி மார்கமே தனக்குப் போதுமென்று எண்ணி வந்தவர்கள், அறுபது வயதிற்கு மேல் தன் குருபோல் ஸோமயாகம் முதலியன செய்ய வேண்டும் என்று ஸங்கல்பித்து, குருபுத்ரர்களைக் கொண்டு ஸ்ரீரங்கத்தில் ப்ரபலமாய் ஸோமயாகமும், பருத்தியூர் ஸ்ரீ கோதண்டராம ஸன்னிதியில் அதிராத்ரம் **(अतिरात्रम्)** என்னும் யாகத்தையும் செய்து, அக்னிஹோத்ரிகளாகவும் ஆனார்கள்.

குரு புத்ரர்களான தங்கள் பிதாக்களிடத்தில் அதே பக்தியும், ப்ரேமையும் பூண்டிருந்தார்கள். திருச்சேறை ஸ்ரீ ஸாரநாதன் ஸந்நிதியில் கதை சொல்லிக் கொண்டிருக்கும்போது, ஒரு நாள் தங்கள் பிதாக்களை சேங்காலிபுரத்திலிருந்து அழைத்து வந்தார்கள். ப்ரும்மஸ்ரீ ஸ்வாமினாத தீக்ஷிதர், ப்ரும்மஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் இரண்டு பேரும் வந்தார்கள். அப்போது பிதாவிற்கு உடம்பு சாதாரணமாய் ஆரோக்கியமாகவே இருந்தது. நானும், என் தமையன் கல்யாணராம சாஸ்திரியும்

இருந்தோம். குரு பத்[illegible]னை நோக்கி, "நான் மு-
முத்தண்ணாவாளைப் [illegible] ஆ[illegible] [illegible] [illegible]
கொள்ளட்டுமா?" என்று கேட்டார். [illegible] [illegible]
ஏது காரணத்தைக் கொண்டோ அதைத் தக்க [illegible]
நீதியென்று அபிப்ராயப் பட்டார்கள். "அப்படியானால்
இப்போதிருந்தே [illegible] அந்த [illegible]
பரிசுகிரியங்கள்" என்று கேட்டுக் கொண்டார். ஆனால்
'பிதா இன்னும் கொஞ்ச நாட்கள் இருப்பார்' என்று [illegible]
எங்களுக்கு இது அசாத்யமாகத் தோன்றியபடியால் நாங்கள்
கவனிக்கவில்லை. ஆனால் குரு வார்த்தைப்படி [illegible] அந்த
குடவாசலுக்கு பிதாவை அழைத்துச் சென்றோம்.

काममेवं विधोलोक: காமமேவம் விதோ'லோக என்று கால் ஸ்லோகத்தைச் சொல்லிவிட்டு த்யானத்தில் ஆழ்ந்து விட்டார்கள். நான் பதறிப்போய் கொடுக்கப்போகிறேன். "நான் ஆத்மாராமன். எனக்கு இதெல்லாம் வேண்டாம்" என்று கண்டித்து விட்டார். குடவாசல் நரசிம்மசாஸ்திரி முதலிய பக்தர்களுக்கு திவ்ய ஸ்வப்னம் ஆனதும், யோகிகள் போகும் மார்க்கத்தில் (பத்'த'தியில்) அவாள் சென்றதும் ப்ரமாணம். இதில் இங்கே கவனிக்கக் கூடியது, 'குரு ஸாயுஜ்யம் **(गुरुसायुज्यम्)** வேண்டும்' என்று ஸதா ஆசைப்பட்டுக் கொண்டிருந்த குருவுக்கு, அவாள் செய்த வேண்டுதல் ஆராதனை தினத்தன்றே முக்தி கிடைத்தது. நிச்சயமாக குரு ஸாயுஜ்யம் கிடைத்திருக்கும் என்று நம்மை நம்பச் செய்கிறது.

மஹான்களுடைய கீர்த்தி நாளுக்கு நாள் விருத்தியாகுமே தவிர குறையாது. ஸ்ரீமுத்தண்ணாவாள் புண்யகீர்த்தி, ப்ரதான சிஷ்யரான என் பிதாவால் முன் காலத்திலும், அவர் சந்ததியிலேயே உதித்த தங்களால், பல விதங்களில் இந்நாட்களில் பரவி வருவதும் மிகப் பொருத்தமே. வேணும். அநேக நமஸ்காரம்.

தங்கள் இஷ்டன்,
பருத்தியூர் கே. பட்டாபிராம சாஸ்திரி.

மற்றொரு சிஷ்யருக்குக் குருவான ஆச்சர்யம்.

ஸ்ரீமான் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்த்ரிகள் என்பவர்கள் [illegible] (நாடகம் அலங்காரம் வ்யாகரணம்) முதலியவைகளைப் படித்து, ஸ்ரீமத் ராமாயண உபன்யாஸம் செய்து வந்தார்கள். அவருக்கு வேதாந்த சாஸ்த்ரம் படிக்க வேண்டுமென்று தோன்றியது. பல குருக்களிடம் சென்றார்கள். ஒரு குருவிடம் சென்று பழம், தேங்காய், திராக்ஷை, கற்கண்டு முதலிய பல வஸ்துக்களை வைத்து நமஸ்கரித்து, காலை பத்து மணிக்கு, தான் வந்த காரியத்தையும் தெரிவித்தார்கள். இவர்களை, ''எங்கு போஜனம் செய்யப் போகிறாய்'' என்று கூடக் கேட்காமல், மாலையில் வந்து பார்க்கும்படிச் சொன்னார்கள். ஆனால் அங்கு ப்ருஹ்ம வித்யையைக் கற்க மனமில்லை. மற்றொரு குருவிடம் சென்றார்கள். அவர்களையும் அதேபோல் நமஸ்கரித்து வேண்டிக் கொண்டார். ஆனால் அவரிடத்தில் ஸதாசாரம் பரிபூர்ணமாக இல்லாததால், அங்கும் ப்ரும்ம வித்யையைக் கற்க மனமில்லை.

உடன் ஸ்ரீரங்கக்ஷேத்ரம் சென்று, ஏகாதசியன்று காலை ஸ்ரீ ரங்கநாதனை நமஸ்கரித்தார்கள். உபவாஸ ஸ்ரமத்தால் சற்று மயக்கமுற்று எழுந்திருக்கவில்லை. அப்பொழுது ஸ்வப்னம். அதில் ஸ்ரீ ரங்கநாதன் பன்னிரண்டு திருநாமங்களுடனும், பொன்னாடை போர்த்திய திருமேனியுடனும், துளஸீ மாலையுடனும் தர்சனம் அளித்து, ஸ்ரீ வாஞ்சியம் என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் யாகம் நடக்கிறதைப் பார். அதில் ஆத்்வரம் (आध्वरम्) செய்யும் மஹான் சேங்காலிபுரம் ஸ்ரீ முத்தண்ணாவாள் என்கிற ஸ்ரீ வைத்யனாத தீக்ஷிதர் அவர்களை வேதாந்த குருவாக க்ரஹித்துக் கொள்'' எனக் கூறி மறைந்து விட்டார்கள். இவர்கள் தெற்கு சீமையைச் சேர்ந்தவாளாகையால், 'ஸ்ரீ வாஞ்சியம் எங்கு இருக்கிறது? சேங்காலிபுரம் எங்கு இருக்கிறது?' என்று தெரியாமல் விசாரித்துக் கொண்டு அன்று இரவே சேங்காலிபுரம் வந்து சேர்ந்தார்கள்.

தெருவின் ஆரம்பத்தில் ஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் அவர்களின் சிஷ்யரான ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதரை எழுப்பிக் கண்டார். இவர்தான் வேதாந்த குருவோ என யோசித்தார். ஆனால் ஸ்ரீ ரங்கநாதன் ஸ்வப்னத்தில் காண்பித்த உருவம் இல்லையே என சந்தேஹித்தார்.

``ஸ்ரீ முத்தண்ணாவாள் என்கிற [illegible] என்பவர் தாங்கள்தான்'' என்று [illegible] ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள், தான் ஸ்ரீ முத்தண்ணாவாளின் சிஷ்யர் என்றும், 'அவர்கள் [illegible] செய்துவிட்டு பயணம் செய்து [illegible] என்றும், விடியற்காலை [illegible] சிஷ்யர்களுக்கு [illegible] உபதேசித்துக் கொண்டு [illegible] என்றும் சொல்லி, தாங்கள் [illegible] என்றும், ஏதாவது கொஞ்சம் ஆகாரம் செய்ய வேண்டும் என்றும் சொன்னார். 'அதற்கு சாஸ்திரிகள் [illegible] ``சுத்தோபவாஸம்'' **(शुद्धोपवासम)** என்றும், ``[illegible] வருகிறேன்'' என்றும் சொன்னார். ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் மிகுந்த ஸெளலப்யத்துடன், [illegible] மிகுந்த ஆவல் கொண்ட [illegible] ``கொஞ்சம் க்ஷீரமாவது (பால்) சாப்பிட வேண்டும்'' என வேண்டினார். அதற்கு ஸ்ரீ முத்தண்ணாவாளை தரிசனம் செய்த பிறகுதான் சாப்பிடப் போவதாகக் கூறி, ஸ்ரீ சாஸ்திரிகள் ஏகாதசி சுத்தோபவாஸத்துடன் இரவு தூங்காமலேயே ஸ்ரீமுத்தண்ணாவாளின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அதேபோல் விடியற்காலை சிஷ்யர்களுடன் ஸ்ரீ முத்தண்ணாவாள் வந்தார்கள். தான் ஸ்வப்னத்தில் கண்ட உருவமாகவே வந்த ஸ்ரீ முத்தண்ணாவாளின் ச[1]ரணங்களில் ஸ்ரீ சாஸ்திரிகள் நமஸ்கரித்து, ஆனந்தக் கண்ணீர் பெருக்கி, ஸ்ரீ ரங்கநாதனுடைய ஸந்நிதியில் தான் கண்ட ஸ்வப்னத்தையும் சொன்னார்கள். அதைக் கேட்ட ஸ்ரீ முத்தண்ணாவாள், 'ஸ்ரீ ரங்கநாதன் மோக்ஷ வித்யையை உபதேசம் செய்ய, தான் தகுதி உள்ளவர் என்று கூறினார்' என ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள். அன்று முதல் அவருக்கு வேதாந்தத்தை உபதேசம் செய்தார்கள். 'ஸ்ரீ மஹாகு[3]ரு த[3]சகம்' **(महागुरु दशकम)** என்னும் ஸ்தோத்ரத்தில் இவ்விஷயத்தைக் கூறும் ஶ்லோகமாவது: (மார்க[3]ப[3]ந்து[4] ஸ்தோத்திரம் **(मार्गबन्धु स्तोत्रम)** போல் சொல்லவேண்டியது.) (இந்த ஸ்தோத்திரத்தின் பத்து ஶ்லோகங்களும் ஜயமங்களம் ஆறாவது பாகத்தில் உள்ளது)

श्रीवैद्यनाथाध्वरीन्द्रं - विश्व
वन्द्यं सुमन्त्रं भजेहं यतीन्द्रम्
(श्रीवैद्यनाथाध्वरीन्द्रम्)
रङ्गालये स्वप्न काले - रङ्ग
नाथेन गुर्वर्थं आदर्शितम्यं
श्रीवाञ्च्यदेशे सुयज्ञे - राम
स्वाम्याख्यशास्त्री गुरुं तं प्रपेदे
(श्रीवैद्यनाथाध्वरीन्द्रम्)

ஸ்ரீவைத்3யநாதா2த்4வரீந்த்3ரம் - விஶ்வ
வந்த்3யம் ஸுமந்த்ரம் ப4ஜேஹம் யதீந்த்3ரம்
(ஸ்ரீவைத்3யநாதாத்4வரீந்த்3ரம்)
ரங்கா3லயே ஸ்வப்ன காலே - ரங்க3
நாதே2ன கு3ர்வர்த்த2ம் ஆத3ர்ஶிதம்யம்
ஸ்ரீவாஞ்ச்ய தே3ஶே ஸுயஜ்ஞே - ராம
ஸ்வாம்யாக்2ய ஶாஸ்த்ரீ கு3ரும் தம் ப்ரபேதே3
(ஸ்ரீவைத்3யநாதாத்4வரீந்த்3ரம்)

இவர்களது அனுக்3ரஹ சக்தி

ஒரு சமயம் இவர்களிடம் ஒருவர் ரோகத்தினால் உடம்பு முழுவதும் வெளுப்பாகி, இவர்களை நமஸ்கரித்துக் கண்ணீர் சொரிந்தார். இவர்கள் பதினைந்து நிமிஷமே கண்ணை மூடி தியானம் செய்துவிட்டு, ஸஹஸ்ராவ்ருத்தி (ஆயிரம் தடவை) காயத்ரியை நித்யம் ஜபம் செய்யும்படி உபதேசித்தார்கள். பிறகு ஒரு மண்டலம் கழித்து அவர் தனது மனைவியுடன் சிறந்த மாடுகள் பூட்டப்பட்ட வண்டியில், பழங்கள், வஸ்திரங்கள், பொருள் முதலியவைகளுடன் வந்து இவர்களை நமஸ்கரித்தார். மேலும் அவர், ''முன்பு தங்களிடம் ரோகத்துடன் கஷ்டப்பட்டுக்கொண்டு வந்து ஸஹஸ்ராவிருத்தி காயத்ரியை நித்யம் ஜபம் செய்யும்படி உபதேசம் பெற்றுக் கொண்டு செய்தேன். இப்போது ரோகம் நன்றாக நிவர்த்தியாகி விட்டது'' என்றார். உடன் அவர் கொண்டு வந்த வஸ்த்ரம், பொருள் முதலியவற்றை

திருப்பதி வெங்கடாஜலபதிக்குக் கைங்கர்யமாக ஸ்ரீ முத்தண்ணாவாள் சொன்னார்கள். அவரும் அதே போல் செய்து பல க்ஷேமங்களை அடைந்தார்.

இன்னொரு சமயத்தில் உபநிஷத் பாஷ்ய பாடம் (उपनिषत् भाष्यपाठम्) சொல்லிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவர் வந்து வெகு தூரத்திலிருந்த அப்படியே வீதியில் விழுந்து நமஸ்கரித்தார். எதற்காக வந்தார் என்று ஸ்ரீ முத்தண்ணாவாள் அறிந்து கண்ணை மூடிப் பார்த்து, "எத்தனை நாட்கள் ஆயிற்று" என்று கேட்டார்கள். ஆறு தினங்கள் ஆனதாக அவர் கூறினார். இன்னும் ஏழு தினங்கள் கழித்துத் தன்னிடம் வந்தால் புத்ர லாபத்தைக் கொடுக்கக் கூடிய சிறந்த ஸாளக்ராமத்தைத் தருவதாகவும் சொன்னார்கள். அதுசமயம் சிஷ்யர்கள் கேட்டதற்கு ஸ்ரீ முத்தண்ணாவாள், "புத்ர சோகம் ஏற்பட்டு ஆறு தினங்கள் ஆகிறது. மீண்டும் அவன் புத்திரன் அடைய வேண்டும் என்பதற்காக மறுபடியும் வரும்படிச் சொன்னேன்" என்று அவர்களிடம் கூறினார்கள். அந்த ப்ரகாரம் அவர் ஒரு வாரம் கழித்து இவர்களிடம் வந்து, ஸாளக்ராமத்தை வாங்கிக் கொண்டு பூஜை ஆராதித்து, மறுபடியும் புத்ர லாபத்தை அடைந்தார். இவ்வாறு பக்தர்களுக்கெல்லாம் அனுக்ரஹித்திருக்கிறார்கள்.

ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் என்பவர் ஸ்ரீ முத்தண்ணாவாளின் சிஷ்யரும், ப'ந்து'வும் (बन्धु) ஆவார். அவர் ஒரு ஸமயம் முடிகொண்டான் என்ற சிறந்த க்ராமத்திற்குச் சென்றார். அவர் விடியற்காலை ஸ்நானம் செய்ய வேண்டிய குளத்திற்குச் சென்று, மற்ற எல்லா சரீர சௌகர்யங்களையும் முடித்துக் கொண்டு, மிகுந்த நேரம் கழித்து தான் எழுந்ததாக நினைத்து, மிக்க பரபரப்புடன் ஸ்நானம் செய்ய ஜலத்தில் இறங்கினார். உடனே ஏதோ காலைப் பிடித்து இழுத்தது. அதை மீள முயன்றும், முடியவில்லை. நன்கு பலமாக இழுத்து அவர் ஜலத்தில் மூழ்கியதும் கழுத்தையும் பிடித்தது. அப்பொழுது ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் அகாலத்தில் எழுந்து வந்து விட்டோம் என்பதையும், பிடிப்பது ப்ரும்மரக்ஷஸ் என்றும் உணர்ந்து ஸ்ரீ குரு முத்தண்ணாவாள் உபதேசம் செய்த ஶூலினி (शूलिनी) தேவதையின் மந்திரத்தை ஜபம் செய்தார். உடனே பிடிப்பது நின்றது மட்டுமல்லாமல் இவரைத் தூக்கிக் கரையிலும் கொண்டு வந்து விட்டது. சிரமத்தில் சிறிது நேரம் சோர்ந்து படுத்திருந்தார்.

அதாவது, ஒரு சமயம் ஸ்ரீ முத்தண்ணாவாள் எல்லா மந்த்ரங்களையும் உபதேசித்து ஸ்ரீ ஸூலினி மந்த்ரத்தையும் உபதேசித்து, 'இதை நித்யம் ஜபிப்பதோடு ஏதாவது கஷ்டம் வந்த ஸமயத்திலும் ஜபம் செய்தால் அக்கஷ்டம் நீங்கி க்ஷேமம் உண்டாகும்' என்று சொன்னதையும், அனுக்ரஹத்தின் பெருமையையும் ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் நினைத்து உள்ளூர சந்தோஷித்துக் கொண்டிருந்தார். ஆனால் வெகு நேரம் ஜலத்தில் மூழ்கியிருந்ததாலும், கழுத்தை ரொம்பவும் பலமாக பிடித்திருந்ததாலும் சிறிது சோர்வு அவரிடம் காணப்பட்டது.

விடியற்காலையில் அங்குள்ள எல்லோரும் ஸ்நானத்திற்காக அங்குவந்து படுத்திருக்கும் இவரைக் கண்டு திடுக்கிட்டார்கள். பிறகு ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் என்பதை அறிந்து, களைப்பைப் போக்கி விசாரித்தார்கள். அதற்கு அவரும் நடந்தவைகளைக் கூறி, ஸ்ரீ முத்தண்ணாவாளின் அனுக்ரஹத்தையும், அவர்கள் உபதேசித்த மந்திரத்தின் பெருமையையும் சொன்னார்களாம். அதைக் கேட்ட எல்லோரும் மிகுந்த ஆனந்தம் அடைந்தார்கள்.

ஸ்ரீ முத்தண்ணாவாள் அவர்கள் ஸ்நானம் செய்துவிட்டு காலை 5.30 மணிக்கு வீடு திரும்புவார்கள். அது சமயம் இவர்களை எதிர்பார்த்துக் கொண்டு பாதையின் ஒரு பக்கத்தில் வெகு தூரத்தில் ஐந்தாவது ஜாதியினர் (ஹரிஜனங்கள்) நின்று கொண்டிருப்பார்கள். இவர்கள் வருவதைப் பார்த்ததும், நமஸ்கரித்து, வீட்டில் ஜுரம் முதலிய தங்கள் குறைகளைக் கூறி, காக்க வேண்டும் என்பார்கள். அதைக் கேட்கும் ஸ்ரீ முத்தண்ணாவாள் மனமிரங்கி, சிறிது நேரம் நின்று 'சௌக்யமாகிவிடும்' என்று கையால் ஜாடை செய்துவிட்டுப் புறப்படுவார்கள். இதில் அவர்கள் சந்தோஷம் அடைந்து, இவர்கள் சென்றதும் அங்கு சென்று, இவர்கள் பாதம் பட்ட மண்ணை எடுத்துக் கொண்டு வீடு சென்று, துன்பம் அடைந்தவர்களின் நெற்றியில் இடுவார்கள். பிறகு மறுதினம் தங்கள் குறை நீங்கியதும், இவர்களிடம் அதே காலை நேரத்தில் எதிர்பார்த்துக் கொண்டிருந்து, கூறி நமஸ்கரிப்பார்கள். இவர்கள் இவ்விதம் யாராவது சிறிது குறை என்று கூறினாலும், உடன் மனமிரங்கி, பகவானைப் பிரார்த்தித்து அவர்களுக்கு க்ஷேமம் ஏற்பட வேண்டும் என்று நினைப்பது இவர்களது உயர்ந்த குணமாகும்.

வாக் ஸித்[3]தி[4] (वाक् सिद्धि)

ஸ்ரீ பெரிய முத்தண்ணா, தமது [illegible] சிஷ்யருமான ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதரிடம் மிகுந்த அனுக்ரஹ புத்தி கொண்டவர். அதற்கு ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதருக்கு வேதங்களிலும், புராணங்களிலும், கர்மாக்களிலும் உள்ள சிறந்த பக்தியும், நல்ல குணங்களுமே காரணமாகும். ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதரின் மாதாவின் [illegible] (आब्दीकम्) (தலை ஶ்ராத்தம்) வந்தது. அந்த தினத்தன்று இரண்டு பிராம்மணர்களுக்கு வேண்டிய வேஷ்டிகள் ([illegible]), குடை, பாதரக்ஷை, பாத்திரங்கள் முதலியவைகளை சேகரித்து வைத்திருந்தார். அது ஸமயம் வழக்கம் போல் ஸ்ரீ முத்தண்ணாவும் விசாரிக்க அவர் வீட்டிற்குக் காலையில் சென்றார். அதாவது முன் காலத்தில் ஒருவர் வீட்டில் ஶ்ராத்தம் என்றால், பந்துக்கள் யாவரும் அவர் வீட்டிற்குச் சென்று என்ன சாமான்கள் இருக்கிறது, என்னென்ன வேண்டும் என விசாரித்து, வேண்டிய உதவி செய்வது வழக்கம். அதுபோல் ஸ்ரீ முத்தண்ணாவாள் கேட்டதின் பேரில் ஸ்ரீ தீக்ஷிதர், தான் சேர்த்து எடுத்து வைத்திருந்ததைக் காண்பித்தார். அதைப் பார்த்து ஸ்ரீ முத்தண்ணாவாள், ''ஏன் இரண்டு பேர்களுக்கு எடுத்து வைத்திருக்கிறாய்? நம் குடும்பத்தில் மாதாவின் சிராத்தத்தன்று பித்ரு வரணத்தைச் (पितृवरणम्) சேர்த்து மூன்று பேர்களை அல்லவா சொல்ல வேண்டும்?'' என்றும்,

मातृ श्राद्धे तु सम्प्राप्ते पितरं तत्र भोजयेत् ।
अभोजिते तु पितरि मात्रा पिण्डो न गृह्यते ।।

மாத்ரு ஶ்ராத்[3]தே[4] து ஸம்ப்ராப்தே
பி[1]த[1]ரம் தத்ர போ[4]ஜயேத் ।
அபோ[4]ஜிதே து பிதரி மாத்ரா பிண்டோ[3] ந க்[3]ருஹ்யதே ।।

என்ற வாக்யமும் உனக்குத் தெரியுமே. ஏன் இவ்விதம் செய்தாய்?'' என்றும் கேட்டார். உடனே ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் கண்ணீர் பெருக்கி, ''என்னிடம் இவ்வளவே சக்தி இருக்கிறது. வசதி இல்லாததாலேயே இவ்விதம் செய்தேன்'' என்றார். உடன் ஸ்ரீ முத்தண்ணாவாள், ''வேண்டியதை நான் அனுப்புகிறேன். மூன்று பேர்களையே வைத்துச் செய்'' என்றார். ஸ்ரீ தீக்ஷிதர், ''பத்து நாழிகை ஆகி விட்டதே இனி பிராம்மணாள் கிடைக்காதே'' என்றார். அதற்கு

ஸ்ரீ முத்தண்ணாவாள் "நீ கவலைப் படாதே. சிராத்த ஆரம்பத்திற்கு முன்பு யாராவது பெரியவாள் வருவாள்" என்று சொல்லி வீட்டிற்குச் சென்று சாமான்களையும் அனுப்பினார்கள்.

அதேபோல் ஸ்ரீ தீக்ஷிதர் பிராம்மணர்களுக்கு எண்ணெய் கொடுக்க ஸித்தமாய் இருக்கும்போது, லால்குடி த்ரியம்பக தீக்ஷிதர் என்ற பெரியவர்கள் அக்னிஹோத்ரத்தை எடுத்துக் கொண்டு (பத்னியுடன்) வருவதைக் கண்டு, மிகுந்த சந்தோஷமடைந்து, அவர்களை அழைத்து பாத்யம் **(पाद्यम्)**, ஆஸனம் முதலியவைகளை அளித்து உபசரித்தார். மேலும் நமஸ்கரித்து, "இன்று சிராத்தம். அதற்கு தாங்கள் ஒரு பிராம்மணர்களாக இருந்து அனுக்ரஹிக்க வேண்டும்" என்று வேண்டினார். அதற்கு அவர் "பரான்ன நியமம் **(परान्न नियमम्)** (வெளியில் சாப்பிடுவதைத் தவிர்ப்பது) வைத்திருக்கிறேன். நான் எவ்விதம் இருக்க முடியும்?" என்றார். உடன் ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர், "தாங்கள் என் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்ளாவிடில் ஸ்ராத்தம் நஷ்டமாகிவிடும்" என்று மீண்டும் நிர்பந்தித்தார். உடன் "அப்படியானால் நான் இருக்கிறேன்" என்று ஒப்புக் கொண்டார். அப்பொழுது ஸ்ரீ முத்தண்ணாவாள், 'யாராவது வருவாள்' என்று கூறியதை நினைத்து ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர், அவரிடம் கூறி ஆனந்தம் அடைந்தார். பிறகு சிராத்தம் நன்கு நிறைவேறியது. கடைசியில் ஸ்ரீ முத்தண்ணாவாளை நமஸ்கரித்து, "தங்கள் அனுக்ரஹத்தினால் மாத்ரு சிராத்தம் நன்கு நடந்தது. நானும் பாக்கியசாலி ஆனேன்" என்றார். இவ்விதம் பல உதவிகள் பந்துக்களுக்குச் செய்திருக்கிறார்கள்.

சிதம்பர தரிசனம்

ஸ்ரீ முத்தண்ணாவாள் ஒவ்வொரு வருஷத்திலும் பலமுறை அக்னிஹோத்ரத்துடன் காலால் நடந்து ஸ்ரீ சித்சபேசனை தரிசிக்க சிதம்பரம் போவார்கள். நித்யம் தன் கிராமத்திலும் ஸாயங்காலம் அக்னிஹோத்ரத்தையும், சிவ தரிசனத்தையும், ஸ்ரீ விஷ்ணு ஆலயத்தில் ஸ்ரீ ரங்கநாத தர்சனத்தையும் விடாது மழை பெய்தாலும், தர்சனம் செய்துதான் இரவில் போஜனம் செய்வார்கள். ஊரிலும் சிவ தர்சனம் செய்யும் பொழுது ஸ்ரீ நடராஜா சன்னிதியில் சுமார் 15 நிமிஷத்திற்குக் குறையாமல் நின்று கண்களை

மூடிக் கொண்டு த்யானம் செய்வார்கள். 'சித்தவச சதகம்' (चित्तवश शतकम) என்று ஒரு ஸம்ஸ்க்ருத ஸ்தோத்திரம் இவர்கள் செய்திருப்பதாகப் பெரியோர்கள் சொல்லிக் கேள்வி. ஆனால் அது கிடைக்கவில்லை.

இவர்கள் ஒரு சமயம் சிதம்பரம் சென்றபொழுது திருவண்ணாமலையில் விளங்கிய ஸ்ரீ ரமண மஹரிஷிகள் அவர்கள் சிறு வயதில் தங்கள் ஊரிலிருந்து திருவண்ணாமலைக்கு முதல் தடவையாகப் போவதற்காக சென்றபொழுது இவர்களைச் சிதம்பரத்தில் தர்சனம் செய்தார்களாம். சிறு வயதுள்ள ஸ்ரீ ரமண மஹரிஷி அவர்கள், ''நான் திருவண்ணாமலைக்குப் போகலாம் என நினைக்கிறேன். எனக்கு அருள் புரிய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்களாம். அதற்கு ஸ்ரீ முத்தண்ணாவாள், स्मरणादरुणाचलम ஸ்மரணாதருணாசலம் திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி ஏற்படும். நேரில் சென்று தர்சனம் செய்தால் நிச்சயம் முக்தி கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை'' எனக் கூறினார்களாம். இந்த விஷயத்தை ஸ்ரீ ரமண மஹரிஷியின் சிஷ்யராகிய ஸ்ரீ தண்டபாணி ஸ்வாமிகள் என்பவர் என்னிடம், [illegible] தன்னிடம் சொன்னதாகச் சொன்னார்கள்.

குரு பக்தி

இவர்கள் தனது வேதாந்த குருவாகிய ஸ்ரீ நாராயணானந்த ஸ்வாமிகள் அவர்களை ஒரு சமயம் கம்ஸபுர (கஞ்சனூர்) க்ஷேத்திரத்திலிருந்து சேங்காலிபுரம் கிராமத்திற்கு அழைத்து வந்தார்களாம். வெளியூருக்கே ஸஞ்சாரம் செய்யாதிருந்த குருவும், சிஷ்யரிடத்திலிருந்த அன்பினால் ஸம்மதித்தார்களாம். அவர்கள் இரவில்தான் புறப்படுவது வழக்கமாம். அதிலும் குதிரை வண்டியில்தான் ஏற சம்மதித்தார்களாம். இரவில் ஸ்ரீ முத்தண்ணாவாள் தமது ஸ்ரீ குருவை அழைத்து வரும்போது சேங்காலிபுரத்திலிருந்து சுமார் ஆறு பர்லாங் தூரத்திலுள்ள 'அன்னவாசல்' என்ற இடத்தில் வண்டியின் ஓர் பக்கத்து ஏற்கால் உடைந்து விட்டது. இவர்கள் மெதுவாக வண்டியிலிருந்து இறங்கி விட்டனர். அந்த இடம் குளத்தங்கரை. அக்கரையில் ஓர் வாண்டையாரின் அழகிய பங்களா மட்டிலும் தனித்து உள்ளது. அந்த வாண்டையார் வாசலில் கட்டிலில் படுத்து இருந்தார்.

நாங்கள் அவரை ஸ்ரீ முத்தண்ணாவாள் பெயர் சொல்லி அழைத்தார். அவர் உடனே விழித்துக் கொண்டு, ஸ்ரீ முத்தண்ணாவாளைப் பார்த்து ஆச்சர்யம் அடைந்து, ''என்ன எனக்கு இப்படி இரவில் தர்சனம் கிடைத்ததே. என்ன பாக்கியம்'' எனச் சொல்லி நமஸ்கரித்தார். ஸ்ரீ முத்தண்ணாவாள் தனது ஸ்ரீ ஆசார்யாள் அங்கு வந்த நடப்பதையும், வண்டி முறிந்த விபரத்தையும் சொன்னார்கள். அப்பொழுது வாண்டையார், தான் தன் குதிரை வண்டியிலேயே கொண்டு விட்டு விடுவதாயும், ''இரவு மூன்று மணிக்குமேல் ஆகிவிட்டதால், இந்தப் படித்துறையிலேயே தங்கி, ஸ்நானம், அனுஷ்டானம் முதலியவைகளைச் செய்து செல்லவேண்டும்'' என நமஸ்கரித்து வேண்டினார். அதேபோல் அனுஷ்டானம் முதலியவைகளைச் செய்தார்கள். உதயமானதும் வாண்டையார் உயர்ந்த தம் குதிரை வண்டியை, புஷ்பம் முதலியவற்றால் அலங்காரம் செய்து, இவர்கள் இருந்த படித்துறைக்குப் பக்கத்தில் கொண்டுவந்து நிறுத்தினார். அந்த வண்டியில் ஏறிப் புறப்பட்டுச் சாலைக்குப் போனதும், சாலை முழுவதும் பந்தல் போடப்பட்டு, தோரணங்கள் கட்டி, அலங்காரம் செய்திருந்ததைக் கண்ட ஸ்ரீ நாராயணானந்த ஸ்வாமிகள், அளவு கடந்த ஆனந்தத்தை அடைந்தார்கள்.

ஸ்ரீ முத்தண்ணாவாள் க்ருஹம் வந்து சேர்ந்ததும் ஸ்ரீ ஸ்வாமிகள், வாண்டையாருக்கு விபூதியை அனுக்ரஹம் செய்து கொடுத்து, ''தங்களுக்கு மனதில் ஏதாவது குறை உண்டா?'' என வாண்டையாரைக் கேட்டார்கள். தனக்குக் குழந்தை இல்லாத குறையை அவர் தெரிவித்தார். ஸன்யாஸியான ஸ்ரீ நாராயணானந்த ஸ்வாமிகள், ''அடுத்த வருஷம் தங்களுக்குப் புருஷ ப்ரஜை பிறக்கப் போகிறது என்றும், அக்குழந்தைக்கு நாராயணன் என்று பெயர் வைக்கும்படியும் சொன்னார்கள். அதேபோல் அடுத்த வருடம் புருஷப்ரஜை பிறந்தது. நாராயணன் என்றும் பெயர் வைத்தார். அவர் நாராயண வாண்டையார் என பரம ஆஸ்திகராக விளங்கினார்.

ஸ்ரீ முத்தண்ணாவாளின் குருவான ஸ்ரீ நாராயணானந்த ஸ்வாமிகள் கம்ஸபுர க்ஷேத்ரமான கஞ்சனூர் கிராமத்திலேயே ஸித்தி ஆனார்கள். மணிக'ர்ணிகா' தீர்த்த'ம் **(मणिकर्णिका तीर्थम्)** என்ற மணியன் குளத்திற்கு வடகரையில் இன்றும் ஸ்ரீ நாராயணானந்தா ஸ்வாமிகளின்

அதிஷ்டானம் (अधिष्ठानम्) [illegible] பெரியோர்களும், நாங்களும் அந்த க்ஷேத்ரம் [illegible] ஸ்ரீ ஸமாதியை தர்சனம் செய்து வருவது வழக்கம்

ஸ்ரீ முத்தண்ணாவாள் கஞ்சனூரிலும், அதற்குப் பக்கத்திலுள்ள கோட்டூர் முதலிய கிராமங்களிலும் [illegible] குடும்பத்திற்குச் சம்பந்தம் செய்து கொள்வது வழக்கம் அதற்குக் காரணம், அங்கு காவேரி வடக்கு நோக்கிச் செல்வதால், அதில் ஸ்நானம் செய்வது [illegible] பலம். यत्र कुत्राऽपि कावेरी गच्छत्युत्तर वाहिनी अशांनी कृच्छ्र फलदा யத்ர குத்ராऽபி காவேரீ க³ச்ச²த்யுத்தர வாஹினீ [illegible] ப²லதா³ அதாவது, கோடிக்கணக்கான [illegible] தானம் செய்த பலன் கிடைக்கும் என்ற [illegible] ஆகும். நித்யம் விடியற்காலம் ஸ்நானம், அக்னி [illegible] வேதாந்த உபதேசம், [illegible] ப்ரவசனம், [illegible] (ब्रह्मयज्ञ प्रशनम्) முதலிய, காலையில் செய்ய வேண்டிய காரியங்களைத் [illegible] செய்து வந்தார்கள்.

பகல் போஜனமான பிறகு [illegible]. ஸ்ரீமத் பாகவதம் முதலிய க்ரந்தங்களைத் திருப்பித் திருப்பி பாராயணம் செய்து உபதேசம் செய்வார்கள். தமது வாழ்நாள் முழுவதும் தெய்வீகமான காரியங்களிலேயே ஈடுபடுவதற்காக நித்யம் ஆயிரக்கணக்கான சிஷ்யர்களுக்கு வேத சாஸ்திரம், ஸ்ரௌதம் (श्रौतम्) முதலியவைகளை உபதேசித்து வந்தனர். பல ஸன்யாஸிகளுக்கு தனது அகத்தில் (க்ருஹத்தில்) பிக்ஷை அளித்தும், பல வித்யார்த்திகளுக்கு அன்னம் இட்டும் வந்தார்கள். பல ப்ரும்மசாரிகள் பிக்ஷை வாங்கிய அன்னத்தை அகத்தில் வைத்துக் கொண்டு புசிப்பார்கள்.

இவர்களது தம்பியான ஸ்ரீ சின்ன முத்தண்ணாவாளான ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் என்பவர்கள், வேதம், சாஸ்த்ரம், நாடகம் முதலியவற்றை வித்யார்த்திகளுக்கு உபதேசிப்பார்கள். இவர்கள் மதுரமாக ஸ்லோகம் சொல்வதைக் கேட்டு, பல வித்யார்த்திகள் இவர்களிடத்திலேயே, நாடகம், காவ்யம் படிக்க ஆவல் கொள்ளுவார்களாம். ஸ்ரீ சின்ன முத்தண்ணா அவர்கள், ஸ்ரீ ராமனிடத்தில் லக்ஷ்மண ஸ்வாமி பக்தி செலுத்தியதுபோல் ஸ்ரீமுத்தண்ணாவாளிடம் நடந்து வந்தார்கள். லக்ஷ்மணர், ஸ்ரீ ராமருக்கு முன்பே வைகுண்டம்

போனது போல் இவர்களும் காலமானார்கள். இவர்கள் காலமாகும் தருணத்தில் பெரிய முத்தண்ணா, ''சுப்பராமா, உனக்கு ஸந்யாஸத்தில் தாத்பர்யம் உண்டோ?'' எனக் கேட்டார்கள். ''நாற்பது வருஷகாலம் தங்களுக்கு பணிவிடை புரிந்த புண்யமே எனக்குப் போதும்'' என்றும், ''ஆஹிதாக்னி ஸம்ஸ்காரமே **(आहिताग्नि सम्स्कारम्)** போதும்'' என்றும் சொன்னார்களாம். ஸ்ரீ பெரிய முத்தண்ணாவாளின் வாழ்நாளில் மனதிற்கு சிரமம் ஏற்பட்டது என்பது ஸ்ரீ சின்ன முத்தண்ணாவின் காலமான செய்தி ஒன்றுதான். வேறு எவ்விதமான துக்கமும் ஏற்பட்டதில்லையாம்.

திருமலை யாத்திரை

பிரிய சிஷ்யர்களான ராமாயணம் பருத்தியூர் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் திருப்பதிக்குத் தன் குருவான ஸ்ரீ பெரிய முத்தண்ணாவாளை அக்னிஹோத்ரத்துடன் அழைத்துச் சென்றார்கள். அங்கு சில தினங்கள் தங்கி ஸ்ரீ ஸ்ரீனிவாசனை தர்சனம் செய்து தீர்த்த ச்ராத்தம், க்ஷேத்ர பிண்டம் முதலியவைகளையும் செய்தார்களாம். அங்கு பல ஏழைகளுக்கு ஸ்ரீ கிருஷ்ண சாஸ்த்ரிகள் பொருள்களை சக்திக்கு மீறிக் கொடுத்தார்கள். இதைக் கண்ட குருவான பெரிய முத்தண்ணாவாள் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்த்ரிகளை ''நீ கலியுக கர்ணன்'' எனச் சொன்னார்களாம்.

ஸ்ரீ ராமேஸ்வர யாத்திரை

ஒரு முறை ஸேது ஸ்நானத்திற்கு ஸ்ரீ முத்தண்ணா அவர்கள் அக்னிஹோத்ரத்துடனும், தன் தம்பி குழந்தைகள், சிஷ்யர்கள், பந்துக்கள் எல்லோருடனும் காலால் நடந்து சென்றார்கள். பல வண்டிகள் சாமான்களுடன் கூட வந்தனவாம். ஒவ்வொரு க்ஷேத்ரமாகச் சென்று ஸ்நானம், அக்னிஹோத்ரம் முதலியன செய்து, ஸேது மாஹாத்ம்யத்தைப் படித்து, உபதேசித்துக் கொண்டு சென்றார்களாம். நூற்றுக்கணக்கானவர்கள் கூடச் சென்றார்கள். இவர்களை நவபாஷாணத்திலேயே வந்து, ராமேஸ்வரத்தில் வசிக்கிறவரும், அக்னிஹோத்ர பரம்பரையைச் சேர்ந்தவருமான

ஸ்ரீவெங்கட [illegible] தீக்ஷிதர் அவர்கள். [illegible] வரவேற்றார்களாம். இவர்கள் அங்கு [illegible] அஶ்வமேத⁴ ப்ரப³ந்தத்தை [illegible] சிஷ்யர்களுக்கு ஆகிய தங்கள் [illegible] தீக்ஷிதர் [illegible] அவர்கள் அப்பொழுது आख्याता [illegible] உட்கார்ந்தபடி கூறியும், அந்தணர் செய்து [illegible] இருந்தார்களாம். இந்த நிகழ்ச்சியை ஸ்ரீ வெங்கட [illegible] தீக்ஷிதர் அவர்களே நேரில் என்னிடம் கூறியுள்ளார்.

இவர்கள் [illegible] (पञ्चायतन पूजा) செய்யும் பொழுது ஆயிரம் நக்ஷத்ரங்களைக் [illegible] கொண்டு பூஜை செய்வது வழக்கம். இவர்கள் [illegible], ஸ்ரீ ஸுப்ரம்மண்யம், பஞ்சாக்ஷரம், [illegible] (मधादक्षिणामृतिः), [illegible] (शूलिनी) முதலிய மந்திரங்களை நித்யம் ஏகாந்தமாக உட்கார்ந்து ஜபிப்பார்களாம். அந்த மந்த்ரங்களை தமது புத்ரர், சிஷ்யர் முதலியவர்களுக்கு உபதேசம் செய்திருக்கிறார்கள். அவர்கள் பூஜை செய்யும்பொழுதும், அக்னிஹோத்ரம் செய்யும்பொழுதும், தரிசிப்பவர்களுக்கு அவர்கள் உபாஸிக்கும் தேவதை போல இவர்கள், எனத் தோன்றுமாம்.

ப³ந்து⁴ பிரியம்

இவர்கள் ஞாதியான நாராயண தீக்ஷிதர் என்பவர், தனது இரண்டு சிறு குழந்தைகளையும், தனது மனைவியையும் விட்டுப் பிரிந்து காலமாகிவிட்டார்கள். இவர்கள் பிறருடைய வீட்டில் குடியிருந்ததால் முதல் தினம் ஸம்ஸ்காரம் ஆகி கிழக்கே உள்ள குளத்தங்கரையில் ஸ்நானமானதும், இக்குழந்தைகளையும், அவர்களது மனைவியையும் யார் ரக்ஷிப்பது என மரித்தவரின் தம்பியே தனது ஏழ்மைத்தனத்தால் கவலைப்பட்டார். அப்பொழுது ஸ்ரீ முத்தண்ணாவாள், "நம்மாத்திற்கு நான் அழைத்துச் செல்கிறேன்" எனச் சொல்லி, அக்குழந்தைகளையும், அவர் மனைவியையும் தன் வீட்டிற்கு அழைத்து வந்து வைதிக கர்மங்களையெல்லாம் நடத்தி முடித்து, தன் வீட்டிலேயே வைத்து ரக்ஷித்து வந்தார்கள். மரித்தவரின் மூத்த புத்ரனே ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் என விளங்கினார்கள். இவர்களுக்கு விவாஹம் செய்து வைத்து, புருஷ ப்ரஜை பிறந்து, குழந்தைக்கு அப்த பூர்த்தியும்

ஆனது. ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் தான் வேறு வீட்டிலிருப்பதற்கு மாதம் 4 அணா (கால் ரூபாய்) வாடகைக்குப் பேசி இருப்பதைத் தனது குருவினிடம் தெரிவித்தார்கள். வேதம், சாஸ்திரம், ப்ரயோகம் முதலியவற்றை ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதருக்கு உபதேசம் செய்து தனது புத்ரன் போல் நினைத்த ஸ்ரீ முத்தண்ணாவாள், அவரை தனித்து ஜாகைக்கு அனுப்ப மனமில்லாமல் இருந்தபோதும், அவர் கோரிக்கையை பூர்த்தி செய்வதற்காக சம்மதித்தார்கள். ஆனால், அவர் பார்த்த வீட்டை வேண்டாமெனச் சொல்லி, மேலத் தெருவில் தானே ஒரு வீட்டை இரண்டணா வாடகைக்கு ஏற்பாடு செய்து, ''இந்த வீடு பிறகு உனக்கே கிடைக்கும்'' என்று சொன்னார்களாம். அவ்வாறே சிறிது காலம் கழித்து ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள், தான் குடியிருந்த வீட்டை நூற்றைம்பது ரூபாய் விலைக்கு வாங்கி விட்டார்கள்.

ஸ்வப்னத்தில் அனுக்ரஹம்

ஸ்ரீ முத்தண்ணாவாள் ஸித்தியான பிறகு ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் அவர்களுக்கு ஸ்ரீ க³ருட³ ச²யனம் **(गरुड चयनम्)** செய்ய வேணுமென ஆவல் உண்டாகியது. தனது குரு புத்ரர்களான ஸ்ரீ ஸ்வாமிநாத தீக்ஷிதர் அவர்களையும், ஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் அவர்களையுமே ஆத்³வர ஹௌத்ரம் **(आध्वरम्, हौत्रम्)** செய்ய வேண்டுமெனக் கூறினார்கள். இவ்விருவர்களும் ஸ்ரீ முத்தண்ணா அவர்களிடத்தில் ஸோமயாகம் முடிய, ஆத்³வர ஹௌத்ரம் பிரயோக³த்தைக் **(आध्वर हौत्र प्रयोगम्)** கற்றிருந்தார்கள். ஆதலால் அதற்கு மேலான க³ருட³ச²யன ப்ரயோகத்தைத் தங்களால் நடத்தமுடியாது எனக் கூறிவிட்டார்கள். இதைக் கேட்ட ஸ்ரீ ஸ்வாமிநாத தீக்ஷிதர், இவர்கள் ஆத்வர ஹௌத்ரம் செய்யாவிடில் க³ருட³ ச²யனம் செய்வதில்லை எனத் தீர்மானித்து விட்டார்கள்.

சில தினங்களானதும், ஒரு தினம் ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் அவர்களுக்கு ஸ்வப்னத்தில் ஸ்ரீ முத்தண்ணாவாள் காஷாயம், தண்ட கமண்டலத்துடன் ஸன்யாசி ரூபத்தில் தரிசனமளித்து, தனது குழந்தைகளான ஸ்ரீ ஸ்வாமிநாத தீக்ஷிதர் அவர்களை தனது ஸமாதியில் வந்து, நமஸ்கரித்து, ஆத்வர ப்ரயோகத்தைப் படிக்கும்படியும், தம்பியுமான ஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் அவர்களுக்கு ஹௌத்ரத்தை ஸமாதி ஸந்நிதியிலேயே ஸந்தை சொல்லும்படியும்

கூறினார்களாம். இந்த ஸ்வப்னம் ... ஸ்ரீ ஸ்வாமி தீக்ஷிதர் அவர்கள் இதை ... விடியற்காலையிலேயே தெரிவித்தார்கள். அன்று பொழுது விடிந்ததுமே நாள் நன்றாக இருந்ததால் அன்றே ஆராதனை அமோகமாக நடந்தது. இவ்விதம் அவர்களுக்கே அக்னி ஹௌத்ரம் செய்தார்களாம். இவ்விதம் அவர்களின் ப்ரத்யக்ஷ ஞானத்தைக் கண்டு பெரியோர்கள் எல்லோரும் ஆச்சர்யம் அடைந்தார்கள்.

விவாஹம்

ஸ்ரீ முத்தண்ணா அவர்கள் கஞ்சனூரில் ஒத்தத்தெருவிலுள்ள ஸ்ரீ முத்து சாஸ்திரிகள் என்ற வேத'வித்(वेदवित)தின் புத்திரியான ஸ்ரீ நாகலக்ஷ்மியை விவாஹம் செய்து கொண்டார்கள். அதே தெருவில் பக்கத்தில் உள்ள [illegible] கிராமத்தில் ஸ்ரீ ராம தீக்ஷிதர், ஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் என்ற மஹான்களின் சகோதரியை ஸ்ரீ சின்ன முத்தண்ணாவாள் விவாஹம் செய்து கொண்டார்கள். பெரிய முத்தண்ணாவாளின் மனைவியான மாதுஸ்ரீ நாகலக்ஷ்மி அம்மாள், ஸ்ரீ முத்தண்ணாவாள் ஸித்தியான பிறகு வெகுகாலம் ஜீவித்திருந்தார்கள். அவர்கள் நித்யம் ஆயிரக்கணக்கான பகவந்நாமாக்களை ஜபிப்பது வழக்கம். சிவ தரிசனம், விஷ்ணு தரிசனம், அக்னி ஹோத்ர தரிசனம் முதலியவைகளைத் தவறாமல் செய்து வருவது வழக்கம். வயது முதிர்ந்து தள்ளாத நிலைமையில் இருக்கும் பொழுது, சிறிய குழந்தைகளான நாங்கள் ஸ்நானம் செய்வித்து அவர்களுக்கு பணிவிடை செய்வது வழக்கம். அப்பொழுது அந்த அம்மாள் எங்களுக்குச் செய்த அனுக்ரஹங்களை எழுத்தாலோ, சொல்லாலோ தெரிவிக்க முடியாது. தர்ம சாஸ்த்ரங்களை எல்லாம் அந்த அம்மாளே கூறுவார்கள்.

வயது முதிர்ந்த தனது மாமியாரான இவர்களுக்கு எங்கள் தாயார் மாதுஸ்ரீ சுப்பலக்ஷ்மி அம்மாள், இரண்டு காலமும் நமஸ்காரம் செய்து, ''இன்று ஸ்வாமி நைவேத்யம் (சமையல்) என்ன செய்வது?'' என்று கேட்பார்கள். அவர்கள் கூறியதையே செய்வார்கள். எங்கள் தாயாருக்கு அவர்கள் செய்த அனுக்ரஹமும் அளவில் அடங்காதது. எங்களுக்கு பாட்டியான நாகலக்ஷ்மி அம்மாளும், எங்கள் தாயாருமே

பல புண்ணிய கதைகளையும், குடும்பத்திலுள்ள பல பெரியோர்களின் வரலாறுகளையும், அறுபது வருஷங்களின் பெயர்களையும், இருபத்து ஏழு நக்ஷத்திரங்களின் பெயர்களையும், வாரம், மாதம், மேஷம் முதலிய ராசிகளின் பெயர்களையும், இன்னும் பல பகவத் கதைகளையும் சிறு வயதிலேயே சொல்லிக் கொடுப்பது வழக்கம். அதாவது குழந்தைகளுக்கு சிறு வயதிலேயே, நல்ல பழக்கங்களையும், தெய்வ நம்பிக்கையையும் சொல்லிக் கொடுத்து விட்டால், அதனால் அவர்கள் பின்பு பல க்ஷேமங்களை அடைவார்கள் என்ற எண்ணத்தினாலேயே இவ்விதம் செய்து வந்தார்கள்.

ஸ்ரீ பெரிய முத்தண்ணாவின் சிறந்த குணம்

மேலும் ஸ்ரீ பெரிய முத்தண்ணாவாள் அவர்கள் குடும்பத்திற்கு ராஜாக்கள் ஸர்வ மான்யமாக **(सर्वमान्यम्)** நஞ்சை நிலம் கொடுத்திருந்தார்கள். அதாவது வேதம், சாஸ்திரம் முதலியவைகளை ரக்ஷித்து வருவதற்காகவே இவர்களுக்கு இந்த உதவி செய்திருந்தார்கள். இவைகளுக்கு வரி கிடையாது. இவ்விதமான நிலங்கள் சேர்ந்து ஊரின் சமீபத்தில் ஓர் இடத்தில் இருக்கிறது. அதனாலேயே அதனை ஸர்வமான்யம் என்று அழைத்து வருகிறார்கள். அந்த நிலங்களை குத்தகையாக நான்காவது வர்ணத்தார்களிடம் ஒப்புவித்திருந்தார்கள். அவர்கள் மகசூல் சமயத்தில் வந்து, மொத்தம் சாகுபடி கண்ட நெல்லைக் கூறி, "தங்களுக்குக் கொடுத்தது போக, மீதமான இவ்வளவு நெல் நான் எடுத்துக் கொள்கிறேன்" எனக்கூறி அவ்விதமே செய்வார்கள். ஏதாவது ஒரு தினம் இவர்களிடம் வந்து "தாங்கள் ஒரு தடவை வயலைப் (நிலத்தைப்) பார்க்க வரவேண்டும்" என்று நமஸ்கரித்துச் சொல்வார்கள். அவர்களும் அவ்விதமே வருஷம் ஒரு முறை சென்று பார்க்கச் செல்வார்கள். அப்படிச் செல்லும் சமயத்தில், சமீபத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் யாவரும் அங்கேயே நமஸ்கரித்து இவர்கள் திரும்பும் வரை கை கூப்பியே நின்று கொண்டிருப்பார்கள். இவர்கள் இவ்விதம் ஒரு தடவை சென்று பார்ப்பதாலேயே நிறைய நெல் விளைவதாக குத்தகைக்காரர்கள் திடமாக நம்புவார்கள்.

ஸ்ரீ முத்தண்ணாவாளின் இளைய சகோதரரைச் சின்ன முத்தண்ணா என்று அழைப்பார்கள். அவர் தனது தமையனாரான பெரிய முத்தண்ணாவாளை தெய்வமென்றே

கருதுவார்கள். எங்காவது வெளியூர் சென்றாலும் [illegible] நமஸ்கரித்து, அனுக்ரஹம் பெற்றுக்கொண்டு புறப்படுவார்கள். அவ்விதம் ஒரு சமயம் ஸ்ரீ சின்ன முத்தண்ணாவாள் செங்கப்பட்டி என்ற பந்து⁴க்கள் கிராமத்திற்குச் சென்றிருந்தார். அங்கிருந்து இரவில் முடி கொண்டான் என்ற ஊருக்குப் போக வேண்டியது நேர்ந்தது. அந்தப்பாதை முழுவதும் [illegible] மரங்கள் நிறைந்திருக்கும். அதிலும் பக்கத்தில் ஓர் பெரிய ஆலமரம் மிக அடர்ந்து பரவி வளர்ந்திருக்கிறது. அவ்விடத்தில்தான் திருடர்கள் மறைந்து நின்று, வருகிறவர்களை மறித்து பொருள்களைப் பறிப்பது வழக்கமாம்.

அதே பாதையில் ஸ்ரீ சின்ன முத்தண்ணாவாள் போய்க் கொண்டிருந்தார். அந்த பயங்கரமான ஆலமரத்தைத் தாண்டியதும் ஓர் பலத்த குரல் கேட்டது. அதாவது, "ஹே சுப்பராம தீக்ஷிதரே. தாங்கள் பெரியவர் நன்றாக வேதத்தை பத³ம் **(पदम्)** சொல்விராமே" என்றது. இதைக் கேட்ட ஸ்ரீ சின்ன முத்தண்ணாவாள் என்ற ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் காலடிச் சத்தம் கேட்காமல் சமீபத்தில் [illegible] இருப்பதையும் எண்ணி, ஆலோசித்து, இது 'ப்ரும்ம ரக்ஷஸ்' என்று அறிந்தார். பிறகு, "நான் அறிந்தவரை [illegible] சொல்லுவேன்" என்றார். உடன் அது வேதத்தில் [illegible] **(संहिता)** என்ற பாகத்தில், இரண்டாவது காண்டத்தை ஆரம்பித்துச் சொல்லிற்று. இவர்களும் அதோடு சர்ச்சையாகச் சொல்லிக் கொண்டே நடந்து சென்றார். அதுவும் தொடர்ந்து சொல்லிக் கொண்டே சென்றது. (சர்ச்சை என்றால் ஒருவர் ஒரு பத³ம் **(पदम्)**, அடுத்தவர் அதற்கு மேல் பத³ம், இவ்விதம் இருவரும் மாறி மாறிச் சொல்வதே ஆகும்) முடிகொண்டான் சமீபம் சென்று கொண்டிருந்தனர்.

அது சமயம் அங்கு சற்று தூரத்தில் ஒருவர் ரோட்டில் வீட்டிற்குள் தூங்குகிறவனை, "மணி நான்கு ஆகிவிட்டது. சீக்கிரம் வண்டி பூட்ட வேண்டும் எழுந்து வா" என்று அழைத்துக் கொண்டிருந்தார். அதற்குள் நூற்றுக்கணக்கான ப¹ஞ்சா¹தி³ **(पञ्चादि)** ஆகியும், பொழுது விடியாததை அறிந்து, ஸ்ரீ முத்தண்ணாவாள், 'அகாலத்தில் **(अकालम्)** (இரவில்) தாம் வந்து விட்டோம்' என்றுணர்ந்தார். முன்பு அழைத்துக் கொண்டிருந்த வீட்டின் சமீபம் வந்ததும், அந்த ப்ரும்ம ரக்ஷஸ், "என்னைக் கைவிட்டு விடாதீர்கள்" என்று உரக்க அழுது, "எனக்கு நல்ல கதி கிடைக்கும் என்று தாங்கள் அனுக்ரஹிக்க வேண்டும்" என்றது. பிறகு அவர்கள்,

''பகவானைப் பிரார்த்தனை செய்யுங்கள். கிடைத்து விடும்'' என்றார்களாம். அதுவும் நகர்ந்து விட்டது, இவர்களும் அந்த வீட்டுக்கு சென்றதும், அங்கிருந்தவர் இவர்களைக் கண்டு வியந்து, ''சற்று தூக்கில் அழுகை கேட்கிறதே, யார் அழுவது? என்ன விசேஷம்?'' என்று கேட்டார். அதற்கு ஸ்ரீ சின்ன முத்தண்ணாவாள் நடந்த விவரங்களைக் கூறி, ஸ்ரீ பெரிய முத்தண்ணாவாள் அனுக்ரஹத்தால் சிறிதும் பிசகு இல்லாமல் வேதம் கூறினேன். இல்லாவிடில் ஏதாவது பெரிய கஷ்டம் ஏற்பட்டிருக்கும்'' என்று கூறினார்கள். இதைக் கேட்டு அங்குள்ள எல்லோரும் மிகவும் ஆச்சர்யம் அடைந்தார்கள். பிறகு இவர்கள் ஊருக்கு வந்து ஸ்ரீ பெரிய முத்தண்ணாவாளை நமஸ்கரித்து, நடந்தவைகளைக் கூறி, ''தங்கள் அனுக்ரஹத்தால் எனக்கு ஓர் கஷ்டமும் ஏற்படாமல் க்ஷேமமாக வந்து சேர்ந்தேன்'' எனக் கண்ணீர் வடித்துக் கூறினார். அவர்களும் ஸ்ரீ சின்ன முத்தண்ணாவாளைத் தூக்கிக் கட்டித்தழுவி ஸமாதானம் செய்து, ''ஸ்ரீ பகவானை நம்பினவர்களுக்கு ஒரு குறைவும் வராது'' என்று கூறினார். அதிலிருந்து ஸ்ரீ சின்ன முத்தண்ணாவாள் வெளியூர் போகவேண்டி இருந்தால், அவர்களுடன் நான்கு சிஷ்யர்களைக் கூட அனுப்புவார்கள்.

ஸ்ரீ முத்தண்ணாவாளின் தெய்வ நம்பிக்கை

ஸ்ரீ முத்தண்ணாவாள் அவர்கள் வாழ்நாளில் எந்த நேரம் பேசினாலும் முடிவில் தெய்வ பக்தி என்றும், 'ஈஶ்வரானுக்[3]ரஹம்' 'த[4]ர்மம்' என்றுமே கூறுவார்கள். மேலும் தன் சிஷ்யர்களுக்கோ, புத்ராள் முதலிய ப[3]ந்து[4]க்களுக்கோ, மாடு, கன்று முதலியவற்றிற்கோ சிறிதேனும் நோய் ஏற்பட்டால், உடன் தன் ஊரின் மேற்கு எல்லையில் உள்ள குளத்தின் கீழ் கரையில் இருக்கும் விநாயகர் ஆலயம் சென்று பிரார்த்திப்பார். அந்த விநாயகர் ரொம்பவும் மஹிமை வாய்ந்தவர். ஏதாவது கார்யத்தை, அவரைப் பிரார்த்தனை செய்து கொண்டு ஆரம்பிப்பார்கள். மங்களமாக அக்கார்யம் பூர்த்தியாகும். அந்த விநாயகரையே தர்சனம் செய்து, ப்ரார்த்தனை செய்து, தேங்காய் உடைத்து, நைவேத்தியம் செய்து கொண்டு வருவார். உடன் துன்பம் நீங்கினவர்களாய்க் காணப்படுவார்கள். பிரார்த்தனை செய்த உடனேயே குணம் ஆகும் என்பது திண்ணம். இவ்விதம் அவர்களிடம் வேறு யாராவது தன் குறைகளைக் கூறினாலும் அவர்களையும்

அந்த விநாயகரையே வேண்டிக்கொண்டும் பூஜையும் [illegible] செய்துவரும்படியும் கூறுவார்கள் [illegible] இருந்து நன்மை பெறுவது [illegible] அண்டியவர்களையும் [illegible] பெருவாழ்வு வாழச் செய்வதே பெரு நோக்காகும். [illegible]

அவர்கள் வசித்த ஊருக்கு [illegible] காளிபுரம் (शिवकाळिपुरम्) என்று பெயர் குறிப்பிட்டிருப்பது [illegible]. அதாவது ஊரின் தெற்கு திசை எல்லையில் ஒரு காளி கோவிலும், ஸ்ரீ சிவன் ஆலயமும் இருக்கிறது. அந்த காளிதேவி வடக்கு திசையை (அந்த ஊரை) நோக்கியே பார்த்துக் கொண்டிருக்கிறாள். அதனாலேயே அந்த ஊருக்கு மிகுந்த பெருமை உண்டு. அந்த ஸ்ரீ காளியை தர்சனம் செய்ய இவர்கள் அடிக்கடி அங்கு செல்வது வழக்கம். "அந்த காளியும் ரொம்பவும் கருணையோடு நம் ஊரில் இருக்கிறாள்" என்று கூறுவார்கள். இன்னும் அநேக பெருமைகள் எல்லோரும் நேரில் கண்டிருக்கிறார்கள். அந்த காளிதேவி கோவில்கொண்டு, ஊரின் எல்லையில் வடக்கு முகமாக இருந்துகொண்டு, தன் கடாக்ஷத்தினால் எங்கள் கிராமத்தை ரக்ஷித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மந்த்ர சக்தி

சேங்காலிபுரம் என்ற தன் ஊரில், ஓர் பெரிய கிருஹஸ்தரும், ஆஸ்திகரும், தனவந்தருமான ஒருவருடைய பத்னிக்கு ப்ரும்ம ரக்ஷஸ் பிடித்திருந்தது. அது வீட்டிலுள்ள யாவருக்கும் துன்பமளித்தது. பல மந்திரவாதிகளைக் கொண்டு, அந்த ப்ரும்மரக்ஷஸ்ஸை விரட்ட முற்பட்டார்கள். ஆயினும் ஒன்றும் பூர்ணமான பயனளிக்கவில்லை. பிறகு கடைசியாக ஓர் பெரிய மந்திரவாதியைக் கொண்டு பல மஹான்யாஸ ஜப ஹோமங்கள் இரண்டு மூன்று தினங்கள் செய்தார்கள். கடைசி தினத்தன்று அம்மந்திரவாதி அந்த ப்ரும்மரக்ஷஸை அழைத்து, "நீ போகப்போகிறாயா? இல்லையா? உனக்கு ஏதேனும் பலி வேண்டுமா? நீ சீக்கிரம் போகாவிடில் இன்னும் கடுமையாய் ஜபம் செய்து உனக்கு மிகுந்த துன்பத்தைத் தரப் போகிறேன்" என்றார். அதுவரை பேசாதிருந்த அந்த ப்ரும்ம ரக்ஷஸ், " இவ்வூரில் இருக்கும் ஸ்ரீ பெரிய முத்தண்ணா என்கிற ஸ்ரீ வைத்தியனாத தீக்ஷிதர் இங்கு வந்து, அவர் வாக்கினால் எனக்கு நல்ல கதி

கிடைக்கும் என்று கூறினால், நான் சீக்கிரமே இவ்விடத்தை விட்டுப் போய் விடுகிறேன்'' என்று கூறியது.

அதைக் கேட்ட வீட்டிலுள்ள யாவரும், ஸ்ரீ பெரிய முத்தண்ணாவாளிடம் வந்து ''தங்களால்தான் எங்களுக்கு க்ஷேமம் ஏற்பட வேண்டும். தங்களைத் தவிர வேறு கதி **(गति)** எங்களுக்கு இல்லை'' என்று நமஸ்கரித்து வருந்தினார்கள். பிறர் துன்பப்படுவதைச் சகியாத ஸ்ரீ பெரிய முத்தண்ணாவாளும், இம்மாதிரி கார்யங்களில் ஈடுபட மனமில்லாது இருந்தும், கருணையால் அவர் வீட்டிற்குச் சென்று, அந்த ப்ரும்மராக்ஷஸை, ''என் ஒரு குடும்பத்தை துக்கப்படும்படி செய்ய வேண்டும்?'' என்று கேட்டார். அதற்கு ப்ரும்மராக்ஷஸ், ''தங்கள் வாக்கினால் எனக்கு நல்ல கதி **(गति)** கிடைக்கும் என்று கூறினால் நான் இவ்விடத்தை விட்டுச் செல்கிறேன்'' என்றது.

ஸ்ரீ முத்தண்ணாவாள், ''உனக்கு ஸ்ரீ பகவான் நல்ல கதி **(गति)** கொடுப்பார்'' என்றார். உடன் பிரம்மராக்ஷஸ், ''தாங்கள் இவ்விதம் கூறியதே போதும். நான் பாபம் **(पापम)** நீங்கி, நல்ல லோகம் சென்று விடுவேன். சீக்கிரமே இங்கு விட்டுப் போய் விடுகிறேன்'' என்றது. அது ஸமயம் அங்கிருந்த மந்திரவாதி முதலியோர்கள், ''நீ செல்வது எங்களுக்கு எவ்விதம் தெரியும்?'' என்று கேட்டார்கள். அது, ''நான் போகும்போது, கொல்லையில் இருக்கும் பெரிய புளியமரத்தின் கிளையை முறித்துச் செல்வேன்'' என்றது. இவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். அவ்விதமே படபடவென்று, நடு இரவில் சப்தம் கேட்டதைக் கேட்டு, கொல்லையில் ஓடிப்போய்ப் பார்த்தார்கள். பெரிய புளியமரத்தின் பெருத்த கிளை, காரணமின்றி முறிவதைக் கண்டு வியந்தார்கள்.

ப்ரும்மரக்ஷஸால் விடுபட்ட ஸ்த்ரீ, பிறகு யாதும் துன்பம் இல்லாமல் சௌக்கியமாக இருந்தாள். அவர்கள் குடும்பம் முழுவதும், மந்திரவாதியும், பெரிய முத்தண்ணாவாளின் அனுக்ரஹத்தையும் பெருமையையும் எப்பொழுதும் கூறி ஆனந்தம் அடைந்தார்கள்.

இவர்களின் ஊருக்குப் பக்கத்தில் சிமிழி என்ற கிராமம் உள்ளது. அங்குள்ள யாவரும் இவர்களிடம் மிகுந்த பக்தி உள்ளவர்கள். 'பரசு ஐயா' என்றவர் இவர்களில் ஒருவராவார். அவர் ஸ்ரீ பெரிய முத்தண்ணாவாளிடம் தர்க்கம் முதலிய சாஸ்திரங்கள் பயின்று, வேதாந்தங்களையும் கற்றறிந்தார். வேதாந்தங்களில் இவர்களுடைய ஞானம்

உலகப் பிரஸித்தியானது. ஒரு சமயம் [illegible] வேதாந்த வித்வான்கள், "தாங்கள் யாரிடம் வேதாந்தம் கற்றீர்கள்? மிகவும் [illegible]" என்று கேட்டார்கள். அதற்கு ஸ்ரீ பரசு ஐயா அவர்கள், "சேங்காலிபுரத்தில் ஸ்ரீ பெரிய முத்தண்ணாவாள் என்ற பெரியோர்களிடம் வேதாந்தம் பயின்றேன்" என்றார்.

இவ்விதமிருக்க, [illegible] இருக்கும் அவருக்கு ஒரு தினம் [illegible] [illegible] "வேதம் இல்லாமல் இதை யாரும் பயில்வதில்லை" எனத் தோன்றியது. உடன் சேங்காலிபுரம் சென்று, தனது பரம ஆசார்யாளான ஸ்ரீ முத்தண்ணாவாளை நமஸ்கரித்து, "எனக்கு வேதங்களை அறிவிக்க வேண்டும்" என வேண்டினார். ஸ்ரீ பரசய்யாவின் தீவிர முயற்சியையும், பக்தியையும் கண்டு, "அவ்விதமே செய்கிறேன்" என அன்றே கற்பிக்கத் தொடங்கினார்கள்.

ஒரு தினம் பரசு அய்யா வேதத்தைக் கற்று சிமிழிக்குப் புறப்பட்டுப் போனார். அவர் புறப்பட்டுப் போன சிறிது நேரத்திற்கெல்லாம் பெரிய மழை வந்தது. அப்பொழுது இரவு மணி பத்து. ஜபம் செய்து கொண்டிருந்த ஸ்ரீ முத்தண்ணாவாள், பரசு ஐயாவுக்கு ஏதாவது ஆபத்து வந்திருக்கக் கூடும் என்று தோன்றி, சிஷ்யர்களுடன் போய்ப் பார்த்தார். நடு வழியில் ஒரு வாய்க்காலில் பரசு ஐயா தவறி விழுந்து ப்ரக்ஞை (நினைவு) தப்பியிருந்தார். உடனே அவரை ஸ்ரீ முத்தண்ணாவாள் சிஷ்யருடன் தூக்கி, நெற்றியில் விபூதியை மந்திரித்து இட்டார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் பரசு ஐயாவுக்கு ப்ரக்ஞை வந்ததாம். சேங்காலிபுரத்திற்கே அழைத்துவந்து, மறு தினம்தான் வண்டியில் அனுப்பினார்கள். இம்மாதிரி அவர்களுடைய தயாஸ்ஸும், அனுக்ரஹ புத்தியும், அன்பும் அளவு கடந்தது.

சில வருஷங்களிலேயே வேதம் முழுவதும் (அதாவது ஸம்ஹிதை, ஶாகை[2], பத[3]ம், க்ரமம் - **संहिता शाखा पदम् क्रमम्**) இவைகளைக் கற்று முடித்தார் பரசு அய்யா. பிறகு தன் ஊரான சிமிழிக்குச் சென்று, ஊரிலுள்ள யாவருக்கும் வேதத்தை அப்யாஸம் செய்வித்தார். சிமிழிக்குச் சமீபத்தில் 'எண்கண்' என்ற ஸ்ரீமுருக க்ஷேத்ரம் உள்ளது. அங்கு தை மாதம் 'புஷ்யோத்ஸவம்' மிகச் சிறப்பாக நடக்கும். அந்த உத்ஸவத்தில் ஒரு அக்னிஹோத்ரி குடும்பத்தால் நடத்தப்பட்டுவரும் வேத பாராயணங்களில் இவரே

முதன்மையான ஸ்தானம் வஹிப்பார். அதிலிருந்து அந்த பாசய்யா வேத பாராயணம் செய்யாத நேரமே இராது எனக் கூறலாம். எல்லோரும் இந்த பாசய்யாவைப் பார்த்து, ''இவ்வளவு வயதிற்குப் பின் தங்களுக்கு எவ்விதம் வேதம் வந்தது'' எனக் கேட்டார்கள். அவர்களுக்கு, ''நான் வேதத்தை பால்யத்தில் கற்கவில்லை. ஸ்ரீ பெரிய முத்தண்ணா அவர்களின் அனுக்ரஹத்தால், எல்லாம் என் வாக்கில் வருகிறது'' என்று ஸ்ரீ பாசய்யா கூறுவார்.

இப்படி அவர்களிடத்தில் வேதம் அத்[4]யயனம் **(अध्ययनम्)** செய்தவர்கள், பல சிஷ்யர்களை வேதம் அத்யயனம் செய்வித்துத் தானும் அவைகளை எப்பொழுதும் பாராயணம் செய்து வருவதிலேயே தன் காலம் முழுவதையும் கழிப்பார்கள்.

ஒரு சமயம் ஸ்ரீ முத்தண்ணாவாள், தனது குருக்கள் (ஸ்ரீநாராயணேந்த்ராள்) இருக்கும் கஞ்சனூருக்கு அக்னிஹோத்ரத்துடனும், சிஷ்யர்களோடும் கால்நடையாகச் சென்றனர். விடியற்காலம் பருத்தியூரில் தனது சிஷ்யர் கிருஹத்தில் அக்னிஹோத்ரம் செய்து விட்டு, அங்கிருந்து 'கண்டாமாணிக்கம்' என்ற ஊர் வழியாகச் சென்று கொண்டிருந்தார். அதுசமயம் வழியில் சிமிழியில் வஸித்து வந்த, ''அன்னவாசல் கிருஷ்ணய்யர்'' என்றவர் எதிரில் 'கருவேலி' என்ற இடத்திலிருந்து வந்தார். அந்த சமயம் ஆடி மாதம். ஸ்ரீ முத்தண்ணாவாளைக் கண்டதும், ஸ்ரீ கிருஷ்ணய்யர், தான் ஸ்நானம் முதலியன செய்யாமல் அவர்களின் எதிரில் செல்ல வெட்கமடைந்து, ரோடை விட்டிறங்கி, வயல் பக்கம் வெகு தூரம் சென்றார். ஸ்ரீ முத்தண்ணாவாள் ஸ்ரீ கிருஷ்ணய்யரை, ''ஏ, கிருஷ்ணா இங்கே வா'' என்றழைத்து, ''எங்கிருந்து வருகிறாய்?'' எனக் கேட்டார்கள். அவர் கருவேலியிலிருந்து வருவதாகச் சொன்னார். ''வரும் மார்கத்தில் உள்ள நதிகளில் தீர்த்தம் இருக்கிறதா?'' எனக் கேட்டார்கள். எல்லாவற்றிலும் நிரம்ப ஜலம் போவதாக ஸ்ரீ கிருஷ்ணய்யர் கூறினார்.

ஸ்ரீ முத்தண்ணாவாள் ''பல் துலக்கி, விபூதி இட்டு, ஸந்த்யாவந்தனத்தையாவது செய்து வரக்கூடாதா?'' என்று கேட்டார்கள். அன்று முதல் விடியற்காலையில், ஸ்நானம், உத[3]யோபஸ்தா[2]னம் **(उदयोपस्थानम्)**, ப்ரும்ம யக்ஞ ப்ரஶ்னம் (வேதத்தை ஜபித்தல்) முதலியவைகளைத் தனது ஆயுள் பூராவும் ஸ்ரீ கிருஷ்ணய்யர் செய்து வந்தார்கள். இவர்களுடைய புத்ரன் சிமிழி ஸ்ரீ வேங்கடராம சாஸ்திரிகள் என்பவர். இவர்

வேதம், சாஸ்திரங்களை கற்று அறிந்து [illegible] ஸ்ரீ ராமாயணம், ஸ்ரீமத் பாகவதம் முதலானவைகளை கற்று உபன்யஸித்தும் வந்தார்கள்.

தீர்த்த ஸ்நான நம்பிக்கை

ஸ்ரீ சின்ன முத்தண்ணாவாளை வீட்டில் அக்னிஹோத்ரம் செய்துவரும்படி சொல்லி, ஸ்ரீ பெரிய முத்தண்ணாவாள் ஸேது ஸ்நானத்திற்கு மற்றவர்களுடன் சென்றிருந்தார்கள். ஸ்ரீ சின்ன முத்தண்ணாவாளை பிறகு ஸேதுக்கு அனுப்பலாமென ஸ்ரீ பெரிய முத்தண்ணாவாள் நினைத்திருக்கலாம். பிறகு பல காரணங்களாலும் ஸ்ரீ சின்ன முத்தண்ணாவாள் ஸேது ஸ்நானமில்லை. ஸ்ரீ லக்ஷ்மண ஸ்வாமி முதலில் வைகுண்டம் போனது போல் ஸ்ரீ சின்ன முத்தண்ணாவாள் காலகதி அடைய நேரிட்டது. அந்த ஸமயத்தில் ஸ்ரீ சின்ன முத்தண்ணாவாள், ஸ்ரீ பெரிய முத்தண்ணாவாளிடம், "நான் ஸேது ஸ்நானம் செய்யவில்லையே" என வருத்தத்துடன் கூறினாராம். அதற்கு பெரிய முத்தண்ணாவாள், "நான் ஸேது ஸ்நானம் செய்த புண்யம் முழுவதையும் உனக்கு கொடுத்து விட்டேன்" எனச் சொன்னார்களாம். "மஹான்களான தாங்கள் ஸேது ஸ்நான புண்யம் முழுவதையும் எனக்கு கொடுத்து விட்டேன் என்று சொன்னதும், எனக்கு அந்த புண்யம் கிடைத்து விட்டதாகவே ஆனந்தம் உண்டாகிவிட்டது" என கண்ணீர் வடித்து ஸ்ரீ சின்ன முத்தண்ணா அவர்கள் கூறினார்களாம்.

அவர்கள் வாழ்க்கையின் இறுதி

இப்போது சென்ற நந்தன வருஷத்துக்கு முன் நந்தன வருஷம் தை மாதம் 2-ஆம் தேதி (1893 கி.பி.) ஏகாதசி, கனு, கோ^{3} பூஜையன்று, அறுபத்திமூன்றாவது (63) வயதில் காலை செய்யவேண்டிய அக்னிஹோத்ரம் முதலியவைகளைச் செய்து முடித்தார்கள். பிறகு இவர்களது மனைவி ஸ்ரீ நாகலக்ஷ்மி அம்மாள், இவர்களது தம்பியின் குமாரியை அழைத்துக் கொண்டு குளத்திற்குக் கனுப்பிடி வைக்கச் சென்றிருக்கும்போது, இவர்கள் ஸர்வ ப்ராயஶ்சித்தம் **(सर्व प्रायश्चित्तम्)** செய்து கொண்டு, ஸன்யாஸ ஸ்வீகாரம் செய்து கொண்டார்கள். இவர்களது தம்பியான ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் அவர்களுக்குத்தான் இரண்டு குமாரர்களும் ஒரு குமாரியும்

புத்ரர்கள். இம்மூன்று குழந்தைகளும் பெரிய முத்தண்ணா அவர்களையே பிதா என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். சின்ன முத்தண்ணா அவர்களை, தங்களது பிதா என்று வெகுகாலம் கழித்துத்தான் அறிந்தார்கள்.

சின்ன முத்தண்ணாவாளான ஸ்ரீ சுப்பராம தீக்ஷிதர் அவர்களுடைய இரண்டாவது குமாரரான ஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதரை (என் பிதாவை) ஸ்ரீ பெரிய முத்தண்ணா அவர்கள் புத்ர ஸ்வீகாரம் செய்து கொண்டிருந்தார்கள். இவர்கள் ஸன்யாஸம் செய்து கொள்ளப்போகும் தீர்மானத்தை அறிந்த புத்ரரான ஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதர் அவர்களும், தம்பியின் குமாரரான ஸ்ரீ ஸ்வாமிநாத தீக்ஷிதர் அவர்களும், இன்னும் சிஷ்யர்களும் வருத்தப்பட்டார்கள். அப்போது ஸ்ரீ முத்தண்ணா அவர்கள், ''பா'ஷ்ய ஶ்ரவணம் **(भाष्यश्रवणम्)** செய்திருக்கிறீர்கள். யதி' த'ர்மத்தை **(यतिधर्मम्)** அவலம்பிப்பதைப் (ஏற்றுக்கொள்வதைப்) பார்த்து வருத்தப்படுவது உசிதமில்லை. அதிலும் ஸ்ரீ பகவத் கீதையிலுள்ள **नहि कल्याण कृत् कश्चित् दुर्गति तात गच्छति** நஹி கல்யாண க்ருத் கஶ்சித் து^{3}ர்க^{3}திம் தா'த' க'ச்ச'தி (நல்ல காரியத்தைச் செய்கிறவன் ஒரு போதும் கெடுதலை அடையமாட்டான்) என்ற பாதி ஶ்லோகத்தை எப்பொழுதும் ஞாபகம் வைத்துக் கொண்டால் க்ஷேமமாக இருப்பீர்கள்'' என்றும் ''ஏதாவது மனக்கவலை இருந்தால் எனது ஸமாதியில் வந்து தரிசனம் செய்து ப்ரார்த்தித்துக் கொண்டால் எல்லாக் கவலைகளும் நீங்கிவிடும்'' என்றும் அப'ய ப்ரதா'னம் **(अभय प्रदानम्)** செய்தார்களாம். தனது புத்ரருக்கும், தம்பியின் புத்ரருக்கும் ஸந்ததி **(सन्तति)** இல்லாததால் பரிஹாரம் செய்ய வேண்டிய க்ரமங்கள் வீட்டுச் சுவடியில் எழுதி வைத்திருப்பதாயும், இன்னும் ஒரு வருஷத்திற்குப் பிறகு ஸந்ததி உண்டாகும் என்றும் சொல்லி அனுக்ரஹித்தார்கள். அதேபோல் பரிஹாரங்கள் செய்து ஒரு வருஷம் கழித்துக் குழந்தைகள் பிறந்தார்கள்.

இவர்களது சிஷ்யர்களில் ஒருவர் வைத்தியத்திலும், தா'து' **धातु** (நாடி) பார்ப்பதிலும் நிபுணராக இருந்தார். அவர் ''தங்களுக்கு தாது நன்றாக இருக்கிறது. இப்போது ஸன்யாஸம் வேண்டாம்'' என்று சொன்னார்.

அதற்கு இவர்கள் ''துவாதசியாகி, நாளைய தினம் பகல் பதினைந்து நாழிகைக்கு ஸித்தி அடைந்து

விட்டுப் போகிறேன். [illegible] என்று சொன்னார்கள். அப்படி [illegible] தன் சிஷ்யனின் ஊராகிய [illegible] கிராமத்தில் [illegible] சொன்னார்கள். ஆனால் இருந்த [illegible] மறுநாள் துவாதசி அன்றே ஸித்தி அடைந்து [illegible]

இவர்களது குல கூடஸ்தர்களின் (कुलकूटस्थाः) [illegible] கிரமத்தைக் காட்டும் [illegible]:

वैकुण्ठनाथमखिनं कूटस्थं प्रणमाम्यहम् ।
अपर्याप्तामृतञ्चापि दीक्षितं तत्सुतं द्विजम् ।।
श्रीनिवासाख्य यज्वानं तत्पुत्रञ्च नतोऽस्म्यहम् ।
नारायणमखीन्द्रञ्च पुत्रं तस्यापि सद्विजम् ।।
वैद्यनाथाध्वरीद्रञ्च प्रणम्य शिरसा मुहुः ।
नारायणाख्य यज्वानं पुत्रं तस्यापि सद्गुरुम् ।।
अनन्तराम मखिनं यतिराजं नामाम्यहम् ।
ततो जातो वैद्यनाथ दीक्षितो गुरुसत्तमः ।।
मुत्तण्णा इति विख्यातः शिष्यायुत सुपूजितः ।
शिवकाळीपुरग्रामे समाधिस्थो विराजते ।
पितामहं जगत्पूज्यं तं गुरुम् प्रणमाम्यहम् ।।

வைகு[1]ண்ட[2]நாத[2]மகி[2]னம் கூ[1]டஸ்த[2]ம் ப்ரணமாம்யஹம் ।
அபர்யாப்தாம்ருதஞ்சாபி தீ[3]க்ஷிதம் தத்ஸுதம் த்[3]விஜம் ।।
ஸ்ரீநிவாஸாக்[2]ய யஜ்வானம் தத்புத்ரஞ்ச நதோऽஸ்ம்யஹம் ।
நாராயணமகீ[2]ந்த்ரஞ்ச புத்ரம் தஸ்யாபி ஸத்[3]விஜம் ।।
வைத்[3]யநாதா[2]த்[4]வரீத்[3]ரஞ்ச ப்ரணம்ய ஶிரஸா முஹு: ।
நாராயணாக்[2]ய யஜ்வானம் புத்ரம் தஸ்யாபி ஸத்[3]கு[3]ரும் ।।
அனந்த[1]ராம மகி[2]னம் யதி[1]ராஜம் நாமாம்யஹம் ।
ததோ ஜாதோ வைத்[3]யநாத[2] தீ[3]க்ஷிதோ கு[3]ருஸத்தம: ।।
முத்தண்ணா இதி விக்[2]யாத: ஶிஷ்யாயுத[1] ஸுபூஜித: ।
ஶிவகாளீபுர க்[3]ராமே ஸமாதி[4]ஸ்தோ[2] விராஜதே ।
பிதாமஹம் ஜகத் பூஜ்யம் தம் கு[3]ரும் ப்ரணமாம்யஹம் ।।

இவர்களது தலைமுறை:-
(மேற்சொன்ன ஸ்லோகத்தின் கருத்து)

1. ஸ்ரீ வைகுண்டநாத தீக்ஷிதர் - அவரது புத்ரர்.

2. ஸ்ரீ அப்பய்யாம்ருத நாத தீக்ஷிதர் - அவரது புத்ரர்.
(अपयांमामृत दीक्षितः)

3. ஸ்ரீ ஸ்ரீனிவாச தீக்ஷிதர் - அவரது புத்ரர்.

4. ஸ்ரீ நாராயண தீக்ஷிதர்

5. ஸ்ரீ வைத்யனாத தீக்ஷிதர்

6. ஸ்ரீ நாராயண தீக்ஷிதர்

7. ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் - அவரது புத்ரர்.

8. ஸ்ரீ முத்தண்ணாவாள் என்கிற ஸ்ரீ வைத்யனாத தீக்ஷிதர். (இவர்களின் புத்ரர் ஸ்ரீ சுப்ரமண்ய தீக்ஷிதரின் புத்ரர்தான், ஸ்ரீஜயமங்கள ஸ்தோத்ர புஸ்தகத்தை தொகுத்த ஸ்ரீஅனந்தராம தீக்ஷிதர் ஆவர்கள்)

ஸ்ரீ யோகி கண்ட தேஜஸ்

வட தேசத்திலிருந்து, பிரும்மச்சாரியான யோகி ஒருவர் கம்ஸபுரம் என்னும் கஞ்சனூர் க்ஷேத்திரத்திற்கு வந்தார். அங்கு காவேரி வடக்கு நோக்கிச் செல்கிறது. **(उत्तर वाहिनी-** உத்தர வாஹினி) அங்கு ஸ்நானம் செய்கிறவர்களுக்கு லக்ஷக்கணக்கில் கோ³(பசு)தா³னம் **(गोदानम्)** செய்த புண்யம் கிட்டுமாம். அங்கு சிறிது காலம் ஸ்நானம், ஜபம் செய்த யோகி, சேங்காலிபுரத்தில் ஸ்ரீ முத்தண்ணாவாளுடைய ஸமாதியை தர்சனம் செய்வதற்காக குறுக்கு மார்க்கமாக நடந்தே வந்தார். ஸ்ரீ ஸமாதியில் சில தினங்கள் தங்கி ஜபம் செய்து கொண்டிருந்தார்கள். அவர் ஸ்ரீ த³த்தாத்ரேய **(श्री दत्तात्रेयः)** உபாஸகர். அவர் ஆஹாரம் ஒன்றும் செய்வதில்லை. குருவாரத்தன்று (வியாழக்கிழமை) மட்டிலும் யாராகிலும் சித்ரான்னம் (கலந்த சாதம்) செய்து கொண்டு வந்து கொடுத்தால் அதை ஸ்ரீ ஸமாதிக்கு நிவேதனம்

செய்து அதில் ஒரு பாகத்தை தான் [illegible] போட்டு, பக்தர்களுக்கு ஒரு பாகத்தைக் கொடுத்து மீதி தானும் உட்கொள்வது வழக்கம் [illegible] இஞ்சி, ஓமம் இவைகளையும் சேர்த்து அரைத்து. [illegible] பழத்தை சிறிது பிழிந்து பானமாக [illegible] மட்டிலும் உட்கொண்டு வந்தார். அவர்களது [illegible] யார் பார்த்தாலும் [illegible]

அப்பொழுது எங்கள் பிதா ஸ்ரீ [illegible] தீக்ஷிதர் அவர்கள் இருந்தார்கள். அந்த போது வந்த பெரியவாள் ஸ்ரீஸ்வாமிக்கு அபிஷேகத்திற்குச் சென்ற என் பிதா அவர்களைப் பார்த்தார்கள். இந்த [illegible] தான் வந்திருப்பதாயும், இவர் இரண்டு [illegible] ஓர் ஜ்யோதிஸ் தெரிவதாயும், ஆனந்தக் கண்ணீர் விட்டு [illegible] சொன்னார்கள். அபிஷேகம் செய்த பஞ்சாமிர்தத்தை அவர்களிடம் என் பிதா கொடுத்தார்கள். அதை அப்படியே தன் தலையில் கொட்டிக் கொண்டு ஆனந்தமடைந்தார்கள். [illegible] இந்த ஸன்னிதியில் வந்து தரிசிப்பவர்கள், பிரார்த்தித்துக் கொள்பவர்கள் ஸகல பாக்யங்களையும் அடைவார்கள் என்று மனமுருகிச் சொன்னார்கள். இப்படியான நிகழ்ச்சி நடக்கும்போது அங்கு நானும் பக்கத்தில் இருந்தேன்.

ஸ்ரீ மஹா குருவைப் பற்றிய கீர்த்தனம்

சய்யானம் ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் என்ற பெரியவாள் ஸ்ரீமத் ராமாயண உபன்யாஸம் பல வருஷங்கள் பலமுறைகள் ஸங்கீதத்துடன் செய்து வந்தார்கள். இவர்கள் ஸ்ரீ முத்தண்ணாவாளுடைய சிஷ்யாள் என்பது முன்பேயே எழுதப்பட்டிருக்கிறது. இவர்கள் தனது குருவான ஸ்ரீ முத்தண்ணாவாளைப் பற்றி ''நாத நாமக்ரியா'' (**नाद नामक्रिया**) என்ற ராகத்தில், ஆதி தாளத்தில் தனது குருவை நேரில் பார்ப்பது போல் யாவரும் உணர்வதற்காக **स्मित विकसित वक्त्रम्** ஸ்மித விகஸித வக்த்ரம் (புன் முறுவலுடன் மலர்ந்த முகம்) **भक्त वात्सल्य जलधेः** ப⁴க்தவாத்ஸல்ய ஜலதே⁴: (பக்தனிடம் அன்பு கொண்ட) இந்த இரண்டு ஶ்லோகங்களையும் எழுதினார்கள்.

ஸ்ரீ மஹா குரு கீர்த்தனம்

(ராகம்-நாத நாமக்கிரியை) தாளம்-ஆதி

प. वन्दे श्री गुरुराजं वरदमपार कृपांबुधिमनिशं
वन्दे श्री गुरुराजम् ।।

अ.प.
मन्दहास सुन्दरमुखकमलं महादेव हरिपूजन विमलं

च. त्रिपुण्ड्रभासित विराजिता फालं
दिनकर सन्निभ तेजोजालम् ।
पावनरुद्राक्षोज्ज्वलमालं
पवित्र यशसं पाण्डुरचेलम् ।।
(वन्दे)

सकलवेदवेदाङ्गनिधानं सदाकलित परमात्म ध्यानम् ।
सर्वभूत समाभवज्ञानं संश्रितार्ति हारिणं असमानम् ।।
(वन्दे)

शुद्धहविस्तर्पित सुरवृन्दं शुभभाषित निर्जितमकरन्दम्।
रागरहितं अनुभूतानन्दं रामदासनुत पदारविन्नूपम् ।।
(वन्दे)

ப. வந்தே3 ஸ்ரீ கு3ருராஜம் வரத3மபா1ர
க்ருபாம்பு3தி4மநிஶம்
வந்தே3 ஸ்ரீ கு3ருராஜம்

அ.ப. மந்த3ஹாஸ ஸுந்த3ர முக2 கமலம்
மஹாதே3வ ஹரிபூ1ஜன விமலம்

ச. த்ரிபுண்ட்3ர பா4ஸித விராஜிதா பா2லம்
தி3னகர ஸந்நிப4 தேஜோ ஜாலம் ।
பா1வன ருத்3ராக்ஷோஜ்ஜ்வல மாலம்
ப1வித்ர யஶஸம் பாண்டு3ர சே1லம் ।।
(வந்தே3)

ஸகல வேத³ வேதா³ங்க³ நிதா⁴னம
ஸதா³க³லித பரமாத்ம த்⁴யானம் ।
ஸர்வபூ⁴த ஸமாப⁴வ ஜ்ஞானம்
ஸம்ஶ்ருதார்த்தி ஹாரிணம் அஸமானம் ॥
(வந்தே³)

ஶுத்³த⁴ஹவிஸ்தர்ப்பித ஸுரவ்ருந்த³ம்
ஶுப⁴பா⁴ஷித நிர்ஜித மகரந்த³ம் ।
ராக³ரஹிதம் அநுபூ⁴தானந்த³ம்
ராமதா³ஸநுத பதா³ரவிந்த³பம் ॥
(வந்தே³)

கீர்த்தனத்தின் தாத்பர்யம்

பல்லவி

வணங்குகிறேன், ஸ்ரீ குருராஜனை தினம் தினம் வரமளிப்பவரும், எல்லையிலா கருணைக் கடலும் ஆன (குரு)

அனுபல்லவி

புன் முறுவல் பூத்த அழகிய தாமரை முகத்தவர் பரமேசப மஹாவிஷ்ணு பூஜையால் தூயவர் (ஆன)

சரணம்

1. த்ரிபுண்ட்ரத்தினால் ப்ரகாசிக்கும் சோபிதமான நெற்றியுடையோர்
திவ்ய ஒளி கூட்டத்தால் சூரியனை ஒத்தவர்
புனித ருத்ராக்ஷத்தினால் ஜ்வலிக்கும் மாலை பூண்டவர்
புண்ய கீர்த்தியடைந்த வெண்ணாடை உடுப்பவர் (ஆன)

2. எல்லா வேத வேதாங்கங்களின் இருப்பிடமானவர்,
என்றும் ஈடுபட்ட பரம் பொருள் தியானமுள்ளவர்,
எல்லா உயிர்களிடமும் ஸம பாவ ஞானமுள்ளவர்,
அடுத்தோர் துயரகற்றுபவர், ஒப்பற்றவர் (ஆன)

3. சுத்தமான ஹவிஸை (அன்னத்தை) தேவதைகளுக்கு அர்ப்பிப்பவர், எல்லோரையும்

சுபமான வார்த்தைகளால் (வண்டை மகரந்தம்போல்) வசீகரிப்பவர்,

[illegible] யாகம்
[illegible] அகற்றியவர், பேரானந்தம் அனுபவிப்பவர்,
[illegible] புகழப்பட்ட பதத் தாமரை கொண்டவர்
([illegible])

ச்லோகங்கள்

स्मित विकसित वक्त्रं स्निग्ध भस्म त्रिपुण्ड्रं
भगवदनुभवाढ्यं भस्म रुद्राक्ष मालम् ।
सतत यजन दीक्षं सर्व भूतानुकम्पं
सनक मुनि समानं सद्गुरुं भावयामि ।। ४

भक्तवात्सल्य जलधेः परमानन्द रूपिणः ।
अस्मदाचार्य राजस्य प्रपन्नोस्मि पदाम्बुजम् ।।५

ஸ்மித விக[1]ஸித வக்த்ரம் ஸ்நிக்[3]த[4] ப[4]ஸ்ம த்ரிபுண்ட்[3]ரம்
ப[4]க[3]வத[3]நுப[4]வாட்[4]யம் ப[4]ஸ்ம ருத்[3]ராக்ஷ மாலம் ।
ஸதத யஜன தீ[3]க்ஷம் ஸர்வ பூ[4]தாநுக[1]ம்ப[1]ம்
ஸனக முனி ஸமானம் ஸத்[3]கு[3]ரும் பா[4]வயாமி ।। 4

ப[4]க்த வாத்[1]ஸல்ய ஜலதே[4]: பரமானந்த[3] ரூபி[1]ண: ।
அஸ்மதா[3]சார்ய ராஜஸ்ய ப்ரபந்நோஸ்மி பதா[3]ம்பு[3]ஜம் ।।

இதன் பொருள்

1. புன் முறுவலித்த மலர்ந்த முகத்தவரும், நிரம்ப
(அல்லது பிரியமான) விபூதி த்ரிபுண்ட்[3]ரம் அணிந்தவரும்
கடவுளைக் கலந்த அனுபவம் நிரம்பியவரும்,
விபூதி ருத்ராக்ஷம், மாலை தரித்தவரும்
என்றும் யாகம் செய்ய தீக்ஷை பூண்டவரும்,
எல்லா உயிர்களிடமும் இரக்கம் கொண்டவரும்
ஸனக முனிக்கொப்பானவருமான எனது
ஸத்குருவை தியானிக்கிறேன்.

2. அன்பர்களிடம் அன்புக் கடலானவரும்
பரமானந்த ரூபம் உடையவருமான எமது
ஆசாரிய ராஜருடைய தாமரைத்
திருவடியை ஶரணடைகிறேன்.

ஸ்ரீ முத்தண்ணாவாள் சரித்திரத்தை [illegible] அவர்கள் மூலமும், என் [illegible] ஸ்ரீ முத்தண்ணாவாளின் பிரிய சிஷ்யர் [illegible] தீக்ஷிதர் மூலமும், பருத்தியூர் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் உபன்யாஸ மத்தியில் சொல்வதைக் கேட்டும், [illegible] ஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள் பல தடவை அனுபவித்து [illegible] வடித்துச் சொல்லியதின் மூலமும், ஆதிவிடியில் இருந்தவரும், எனது பெரியவாளின் மாமாவான ஸ்ரீ கல்யாணராம ஐயர் மூலமும், எங்கள் ஊரில் இருந்தவரும், தர்ம சாஸ்த்ரத்தில் அளவு கடந்த அறிவு பெற்றவருமான ஸ்ரீ சிவராம சாஸ்த்ரிகள் முதலிய பல பெரியவர்கள் மூலமும் கேட்டுத் தெரிந்து கொண்டதை எனது மனதுக்கு விருப்பமானபடி எழுதியுள்ளேன்.

இச்சரித்திரத்தை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ பரமாசார்யாளின் (68-வது பீடாதிபதி ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்) ஆக்ஞையின் பேரில், 'காமகோடி' பத்திரிகையில் வெளியிட்டுள்ளேன்.

இப்பவும் ஸ்ரீ முத்தண்ணாவாளின் ஸமாதியை கோவிலாகக் கட்டி, அவர்களின் ஸ்மரணை என்றென்றும் இருப்பதற்காக "ஸ்ரீ முத்தண்ணாவாள் வேத சாஸ்த்ர பாடசாலை" தற்போதும் நடந்து வருகிறது.

இந்த ஸமாதியில் பல பக்தர்கள் பால் அபிஷேகம், அர்ச்சனை முதலியவைகளை நடத்தியும், வேத பாராயணங்களை நடத்தியும், தாங்கள் கோரிய பலனை உடன் அடைந்து வருகிறார்கள். பலர் புத்ர லாபத்தையும், ஆரோக்யத்தையும், ஸகல காரிய ஸித்தியையும் அடைந்து வருகிறார்கள். சேங்காலிபுரம் கிராமம், கும்பகோணம் திருவாரூர் மார்க்கத்தில் புதுக்குடி என்னும் இடத்திலிருந்து வடக்கே ஒரு மைல் தூரத்தில் இருக்கிறது. அல்லது குடவாசல் மார்கமாகவும் செல்லலாம்.

ஸ்ரீஅனந்தராம தீக்ஷிதர் அவர்களின் உபன்யாஸ ஸி.டி-க்களிலிருந்து ஸ்ரீமுத்தண்ணாவாள் ஸம்பந்தமாக கிடைத்த ஸம்பவங்கள்.

எந்த அரசன் சத்ருவை எதிர்த்து அடக்கவில்லையோ, எந்த பிராம்மணன் தீர்த்தம், க்ஷேத்திரம் இவைகளுக்குச் செல்லவில்லையோ, இவ்விருவர்களையும் பூமியானது வளையில் இருக்கும் எலிகளை பாம்பு விழுங்குவதுபோல் விழுங்கி விடுகிறது. (அதாவது கீர்த்தி அற்றவர்களாக ஆகி அவர்களது குலமும் மங்கி விடுகிறதென்பது கருத்து.)

द्वे कर्मणि नरः कुर्वन्नस्मिन् लोके विरोचते ।
अब्रुवन् परुषं किञ्चित् असतोऽनर्चयंस्तथा ॥२९

த்^{3}வே கர்மணி நர: கு^{1}ர்வன்
அஸ்மின் லோகே விரோச^{1}தே ।
அப்^{3}ருவன் ப^{1}ருஷம் கிஞ்சித்
அஸதோऽநர்ச்சயம்ஸ் ததா^{2} ॥ 29

இவ்வுலகில் இரண்டு காரியங்கள் செய்கிறவன் நன்கு பிரகாசிக்கிறான். கடூரமான சொல்லைச் சொல்லாமலும், துஷ்டர்களை பூஜிக்காமலும் இருப்பது என்ற இவ்விரண்டுமே ஆகும்.

द्वाविमौ पुरुषव्याघ्र परप्रत्यय कारिणौ ।
स्त्रियः कामितकामिन्यः लोकःपूजित पूजितः ।।३०

த்'வாவிமெள புருஷவ்யாக்'ர பர ப்ரத்யய காரிணெள।
ஸ்த்ரிய காமித காமின்ய: லோக: பூஜித பூஜித: ।। 30

ஓ புருஷ ஸ்ரேஷ்டனே! இவ்வுலகில் இரண்டு பேர்கள் பிறர் செய்வதைப் பார்த்து, தானும் செய்வார்கள். ஸ்திரீகள் பிறர் ஆசை கொண்ட வஸ்துவில் ஆசைப்படுவார்கள். ஸாமான்ய ஜனங்கள் பிறரால் கொண்டாடப்பட்டவர்களை தானும் கொண்டாடி பூஜிப்பார்கள்.

द्वाविमौ कण्टकौ तीक्ष्णौ शरीर परिशोषिणौ ।
यश्चाधनः कामयते यश्च क्रुध्यत्यनीश्वरः ।।३१

த்[3]வாவிமெள க[1]ண்ட[1]கெள[1] தீ[1]க்ஷ்ணெள
ஶரீர பரிஶோஷிணெள ।
யஶ்சாத[4]ன: காமயதே யஶ்ச க்ருத்[4]யத் யநீஶ்வர: ।। 31

பொருளற்றவன், தான் போகங்களை அனுபவிப்பதற்காக பல வஸ்துக்களை வாங்க விரும்புவதும், சக்தியற்றவன் கோபித்துக் கொள்வதும் இவ்விரண்டும் கூர்மையான முள் குத்தி துயரத்தை அளிப்பது போல் சரீரத்தை தபிக்கச் செய்து விடும்.

द्वावेव न विराजेते विपरीतेन कर्मणा ।
गृहस्थश्च निरारम्भः कार्यवांश्चैव भिक्षुकः ।।३२

த்[3]வாவேவ ந விராஜேதே விபரீதேன கர்மணா ।
க்[3]ருஹஸ்தஶ்ச நிராரம்ப[4]:
கார்யவாம்ஶ்சைவ பி[4]க்ஷுக: ।। 32

குடும்பியானவன் (க்ருஹஸ்தன்) முயற்சி இல்லாமலிருத்தல், ஸன்யாஸியானவர் பல காரியங்களைச் செய்தல் என்ற இந்த விபரீதமான காரியங்களால் இவ்விருவரும் பிரகாசிப்பதில்லை (ஸன்யாஸி பிரணவ ஜபம் செய்து கொண்டு பகவத் தியானம் செய்ய வேண்டும். குடும்பியான கிருஹஸ்தன் தன் ஸ்வ தர்மத்தை அனுஷ்டித்துக் கொண்டு யதி[1]களையும் (यतिः-ஸன்யாஸி) பூஜிக்க வேண்டும்) இப்படி இல்லாமலிருப்பது மாறுதல் எனக் கூறப்பட்டுள்ளது.

द्वाविमौ पुरुषौ राजन् स्वर्गस्योपरि तिष्ठतः ।
प्रभुश्च क्षमया युक्तः दरिद्रश्च प्रदानवान् ॥३३

த்^{3}வாவிமௌ புருஷௌ ராஜன்
ஸ்வர்க^{3}ஸ்யோபரி திஷ்ட்ட^{2}த: ।
ப்ரபு^{4}ஶ்ச க்ஷமயா யுக்த: த^{3}ரித்^{3}ரஶ்ச ப்ரதா^{3}னவான் ॥ 33

ஓ அரசனே! இந்த இரண்டு புருஷர்கள் ஸ்வர்க்கத்துக்கும் மேலாகிய பிரம்மலோகம் முதலியவைகளில் இருப்பவர்களாக ஆகிறார்கள். அவர்களில் ஒருவர் பிரபுவாக இருந்து பொறுமையாக இருப்பவர். மற்றொருவர் தரித்திரனாக இருந்தும் நிரம்ப தானங்களைச் செய்பவர்.

न्यायागतस्य द्रव्यस्य बोद्धव्यौ द्वावतिक्रमौ ।
अपात्रे प्रतिपत्तिश्च पात्रे चाप्रतिपादनम् ॥३४

ந்யாயாக^{3}தஸ்ய த்^{3}ரவ்யஸ்ய
போ^{3}த்^{3}த^{4}வ்யௌ த்^{3}வாவதி^{1}க்^{1}ரமௌ ।
அபாத்ரே ப்ரதிபத்திஶ்ச பாத்ரே சாப்ரதிபாத^{3}னம் ॥ 34

நல்ல வழியில் ஸம்பாதித்த பொருள் தன்னைவிட்டு விலகுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன என்பதை புத்திமான்கள் உணர வேண்டும். ஒன்று அயோக்யனுக்கு தானம் செய்வது. மற்றொன்று நல்லவர்களுக்குக் கொடாமல் இருப்பது.

द्वावम्भसि निवेष्टव्यौ गले बध्वा दृढां शिलाम् ।
धनवन्तं अदातारं दरिद्रं चाऽतपस्विनम् ॥३५

த்^{3}வாவம்ப^{4}ஸி நிவேஷ்டவ்யௌ
க^{3}லே ப^{3}த்^{4}வா த்^{3}ருடா^{4}ம் ஶிலாம் ।
த^{4}னவந்தம் அதா^{3}தாரம் த^{3}ரித்^{3}ரம் சாऽத^{1}பஸ்வினம் ॥ 35

இரண்டு பேர்களை கழுத்தில் கடினமான கல்லைக்கட்டி ஜலத்தில் போட வேண்டும். ஒருவன் பணமிருந்தும் தானம் செய்யாமல் இருப்பவன். மற்றொருவன் தரித்திரனாய் இருந்து மந்திர ஜபங்களைச் செய்யாமலும் ஸ்தோத்ரம் முதலியவைகளைப் படிக்காமலும் இருப்பவன்.

द्वाविमौ पुरुषव्याघ्र सूर्य मण्डल भेदिनौ ।
परिव्राड्योग युक्तश्च रणेचाभिमुखो हतः ॥३६

த்3வாவிமௌ புருஷவ்யாக்4ர
ஸூர்ய மண்ட3ல பே4தினௌ ।
பரிவ்ராட்4யோக3 யுக்தஶ்ச ரணேசாபி4முகோ2 ஹத:॥ 36

ஓ புருஷ ஶ்ரேஷ்டனே! இந்த இரண்டு பேர்களும் சூரிய மண்டலத்தைத் தாண்டிக் கொண்டு செல்வார்கள். அதில் ஒருவர் தியான யோகத்துடன் கூடிய யதி1 (यति-ஸன்யாஸி). *மற்றொருவர் யுத்தத்தில் பின்புறம் காட்டாமல் எதிர்த்து யுத்தம் செய்து மரித்தவர்.*

चत्वारि राज्ञा तु महाबलेन
वर्ज्यान्याहुः पण्डितस्तानि विद्यात् ।
अल्प प्रज्ञैः सह मन्त्रं न कुर्यान्
न दीर्घसूत्रैः अलसैश्चारणैश्च ॥३७

ச1த்வாரி ராஜ்ஞா து மஹாப3லேன
வர்ஜ்யான்யாஹு: பண்டி3தஸ்தானி வித்3யாத்।
அல்ப ப்ரக்ஞை: ஸஹ மந்த்ரம் ந கு1ர்யான்
ந தீ3ர்க4 ஸூத்1ரை: அலஸைஶ்சா1ரணைஶ்ச॥ 37

அரசன் இந்த நான்கு காரியங்களை விட்டுவிட வேண்டும். அதை அறிவாளி என்னவென்று அறிய வேண்டும். அவைகளாவெனில் அல்ப புத்தி உள்ளவர்களுடனும், சீக்கிரமாகச் செய்ய வேண்டிய காரியத்தை தாமதித்துச் செய்கிறவனுடனும், சோம்பேறிகளுடனும், வேலை செய்யாமல் புகழ்ச்சிப் பேச்சை மட்டும் பேசிக் கொண்டிருப்பவர்களுடனும் மந்திராலோசனை செய்யக் கூடாது.

चत्वारि ते तात गृहे वसन्तु
श्रियाऽभिजुष्टस्य गृहस्थ धर्मे ।
वृद्धो ज्ञातिरवसन्नः कुलीनः
सखा दरिद्रो भगिनी चानपत्या ॥३८

சத்வாரி தே தாத க்^{3}ருஹே வஸந்து
ஶ்ரியாऽபி^{4}ஜுஷ்டஸ்ய க்^{3}ருஹஸ்த்த த^{4}ர்மே ।
வ்ருத்^{3}தோ^{4} ஞாதிரவஸந்ந: கு^{1}லீன:
ஸகா^{2} த^{3}ரித்^{3}ரோ ப^{4}கி^{3}நீ சா^{1}னபத்யா ।। 38

ஓ அரசனே! நிறம்ப பொருளுள்ள கிருஹஸ்த தர்மத்தில் நிற்கும் உனது வீட்டில் இந்நான்கு பேர்களும் எப்பொழுதும் வஸிக்கட்டும். வயது முதிர்ந்த பங்காளியும், பந்துக்களில்லாத ஸத்குலத்தில் பிறந்தவனும், தரித்திரனான ஸ்னேஹிதனும், குழந்தையில்லாத சகோதரியும் ஆவார்கள். (வயது முதிர்ந்த பங்காளி யாவருக்கும் குல தர்மங்களை உபதேசிப்பார். ஆதரவற்ற ஸத் குலத்தில் பிறந்தவன் குழந்தைகளுக்கு ஸதா^{3}சா^{1}ரங்களை **(सदाचारम्)** *உபதேசிப்பான். தரித்ரனான ஸ்னேஹிதன் நன்மையை உபதேசிப்பான். குழந்தை இல்லாத சகோதரி பொருள்களை பாதுகாப்பாள்)*

देवतानां च संकल्पं अनुभावं च धीमताम् ।
विनयं कृतविद्यानां विनाशं पापकर्मिणाम् ।।३९

தே^{3}வதானாம் ச ஸங்கல்பம் அநுபா^{4}வம் ச தீ^{4}மதாம்।
வினயம் க்ருதவித்^{3}யானாம் விநாஶம் பாபகர்மிணாம்।।39

பிருஹஸ்பதியானவர் உடன் பலனை அளிக்கக்கூடிய நான்கு விஷயங்களை உபதேசித்தார். அவைகளை உமக்குக் கூறுகிறேன். ஓ அரசனே! கேளும். தேவதைகளுடைய எண்ணம், புத்திமான்களுடைய மஹிமை, நன்கு படித்தவர்களுடைய வணக்கம் (அடக்கம்), பாபிகளுடைய கெட்ட செயல் இவைகள் உடன் பயன் அளிக்கும். (தேவர்களை நாம் பூஜித்ததும் அவர்கள் நமக்கு அனுக்ரஹிக்க வேண்டும் என்று நினைத்ததும் பயன் கிட்டி விடும். புத்திமான்களான மஹான்களை ஸேவித்தால் அவர்களுடைய மஹிமை உடன் நமக்குப் பயனை அளித்து விடும்)

चत्वारि कर्माण्यभयङ्कराणि
भयं प्रयच्छन्त्य यथा कृतानि ।
मानाग्निहोत्रमुत मानमौनं
मानेनाधीतमुत मानयज्ञः ।।४०

ச த்வாரி கர்மாண் யப[4]யங்கராணி
ப[4]யம் ப்ரயச்ச[2]ந்த்ய யதா[2] க்ருதானி ।
மானாக்[3]னிஹோத்ரமுத மானமௌனம்
மானேனாதீ[4]தமுத மானயஞ: ।। 40

அக்னி ஹோத்ரம், மௌனம், அத்[4]யயனம் (अध्ययनम्), யக்ஞம் இந்த நான்கு கர்மாக்களும் அப[4]யத்தை (अभयम्) அளிக்கக் கூடியன. அவைகள் வேறு விதமாக கௌரவத்திற்காகச் செய்யப்பட்டால் பயத்தை அளிக்கின்றன.

पञ्चाग्नयो मनुष्येण परिचर्याः प्रयत्नतः ।
पितामाताऽग्निरात्मा च गुरुश्च भरतर्षभ ।।४१

பஞ்சாக்[3]னயோ மனுஷ்யேண பரிசர்யா: ப்ரயத்னத:।
பிதா மாதாऽக்[3]னி ராத்மா ச கு[3]ருஶ்ச ப[4]ரதர்ஷப[4] ।। 41

தந்தை, தாய், அக்னி, ஆத்மா, குரு, அக்னிக்கு ஒப்பான இவ்வைந்து பேர்களையும் மனிதன் முயற்சியுடன் ஆராதிக்க வேண்டும்.

पञ्चैव पूजयल्लोके यशः प्राप्नोति केवलम् ।
देवान् पितॄन् मनुष्यांश्च भिक्षून्यतिथिपञ्चमान्।।४२

பஞ்சைவ பூஜயல்லோகே
யஶ: ப்ராப்னோதி கேவலம் ।
தே[3]வான் பித்ருன் மநுஷ்யாம்ஶ்ச
பி[4]க்ஷூன் யதி[1]தி[2] பஞ்சமான் ।। 42

உலகில் தேவர்கள், பித்ருக்கள், மனுஷ்யர்கள், யதி[1]கள் (यत्ति), அதி[1]தி[2]கள் (अतिथि), ஆகிய இந்த ஐந்து வகையார்களையும் பூஜிப்பவன் இவ்வுலகில் மிகப் புகழை அடைவான்.

पञ्च त्वानुगमिष्यन्ति यत्र यत्र गमिष्यसि ।
मित्राण्यमित्रः मध्यस्था उपजीव्योप जीविनः।।४३

பஞ்ச த்வானுக[3]மிஷ்யந்தி யத்ர யத்ர க[3]மிஷ்யஸி ।
மித்ராண்யமித்ர: மத்[4]யஸ்தா[2] உபஜீவ்யோப ஜீவின:।। 43

ஓ அரசனே! எங்கு தாங்கள் சென்றாலும் இவ்வைந்து பேர்களும் தங்களைத் தொடர்ந்து இருக்க வேண்டும். ஸ்னேஹிதர், சத்ருக்கள், மத்யஸ்தர்கள் (நடுநிலைமை வஹிக்கிறவர்கள்), நாம் ஆதரிக்க வேண்டிய பெரியோர்கள், நம்மை அண்டி பிழைப்பவர்கள், இவர்களாகும். (குறிப்பு) எதிர்க்கட்சிக்காரர்கள் அரசனிடம் உள்ள தவறுகளை தைர்யமாக கூறுவார்கள். நடுநிலைமை வஹிக்கிறவர்கள் அவர்கள் சொன்ன தவறை திருத்திக்கொள் எனக் கூறுவார்கள்.

षड्दोषाः पुरुषेणेह हातव्या भूतिमिच्छता ।
निद्रा तन्द्रा भयं क्रोधः आलस्यं दीर्घसूत्रता ।।४४

ஷட்^{3}தோ^{3}ஷா: புருஷேணேஹ ஹாதவ்யா பூ^{4}திமிச்ச^{2}தா।
நித்^{3}ரா தந்த்^{3}ரா ப^{4}யம் க்ரோத^4:
ஆலஸ்யம் தீ^{3}ர்க^4 ஸூத்^{1}ரதா ।। 44

ஸம்பத்தை விரும்புகின்ற மனிதன், அதிக நித்ரை (निद्रा-தூக்கம்), சோம்பல், பயம், கோபம், முயற்சி செய்யாமலிருப்பது, காரியத்தை தாமதமாகச் செய்வது என்ற இந்த ஆறு தோஷங்களையும் விட்டுவிட வேண்டும்.

षडिमान्पुरुषो जह्यात् भिन्नां नावमिवार्णवे ।
अप्रवक्तारमाचार्यं अनधीयानमृत्विजम् ।।
अरक्षितारं राजानं भार्यां चाप्रियवादिनीम् ।
ग्रामकामं च गोपालं वनकामं च नापितम् ।।४५

ஷடி^{3}மான் புருஷோ ஜஹ்யாத்
பி^{4}ந்நாம் நாவமிவார்ணவே ।
அப்ரவக்தாரமாசா^{1}ர்யம் அநதீ^{4}யானம் ருத்விஜம் ।।
அரக்ஷிதாரம் ராஜானம் பா^{4}ர்யாம் சாப்ரியவாதி^{3}னீம்।
க்^{3}ராமகாமம் ச கோ^{3}பாலம் வனகாமம் ச நாபி^{1}த^{1}ம் ।। 45

கல்வியை நன்கு சொல்லிக் கொடுக்காத ஆசார்யனையும், வேத மந்திரங்களை நன்கு ஆவ்ருத்தி செய்யாத ரித்விக்கையும் (ऋत्विक्), பாதுகாக்காத அரசனையும், அப்ரியமாகப் பேசும் மனைவியையும், பசுக்களை திடல்களில் மேயவிட்டு தெருவில் வந்து திரியும் மாடு மேய்ப்பவனையும், தெருவில்

சஞ்சரிக்காமல் காட்டுக்குச் செல்லும் க்ஷவரகனையும், மனிதன் உடைந்த தோணியை ஸமுத்ரத்தில் தள்ளுவது போல் விட்டு விட வேண்டும்.

षडेवतु गुणाः पुंसा नहातव्याः कदाचन ।
सत्यं दानं अनालास्यं अनसूया क्षमा धृतिः ।।४६

ஷடே^{1}வது கு^{3}ணா: பும்ஸா நஹாதவ்யா: கதா^{3}சன ।
ஸத்யம் தா^{1}னம் அநாலாஸ்யம்
அனஸூயா க்ஷமா த்^{4}ருதி: ।। 46

மனிதன் ஸத்யம், தானம், சோம்பலின்மை, பொறாமை இல்லாமை, பொறுமை, தைர்யம், ஆகிய ஆறு குணங்களையும் ஒரு பொழுதும் விட்டு விடக்கூடாது.

अर्थागमो नित्यमरोगिता च
प्रिया च भार्या प्रियवादिता च ।
वश्यश्च पुत्रोऽर्थकरी च विद्या
षड् जीवलोकस्य सुखानि राजन् ।।४७

அர்தா^{2}க^{3}மோ நித்யம் அரோகி^{3}தா ச
ப்ரியா ச பா^{4}ர்யா ப்ரியவாதி^{3}தா ச ।
வஶ்யஶ்ச புத்ரோऽர்த்த^{2}க^{1}ரீ ச வித்^{3}யா
ஷட்^{3} ஜீவலோகஸ்ய ஸுகா^{2}னி ராஜன் ।। 47

ஓ அரசரே! தினமும் பொருளின் வரவு, நோயில்லாமல் இருத்தல், அன்பு கொண்ட மனைவி, பிரியமாகப் பேசுதல், தனக்கு அடங்கிய பிள்ளை, பொருளை அளிக்கும் கல்வி, இந்த ஆறும் இவ்வுலகிலுள்ள மனிதனுக்கு சுகத்தை அளிக்கும்.

षडिमानि विनश्यन्ति मुहूर्तं अनवेक्षणात् ।
गावः सेवा कृषिर्भार्या विद्या वृषल सङ्गतिः ।।४८

ஷடி^{3}மானி விநஶ்யந்தி
முஹூர்த்தம் அநவேக்ஷணாத் ।
கா^{3}வ: ஸேவா க்ருஷிர் பா^{4}ர்யா
வித்^{3}யா வ்ருஷல ஸங்க^{3}தி: ।। 48

பசுக்கள், ஊழியம்(सेवा), பயிர் செய்த பூமி, மனைவி, கல்வி, வேலைக்காரன் செய்யும் வேலை, இவைகளை ஒரு மணி நேரம் கவனிக்காவிடில் வீணாகி விடும்.

षडेते ह्यवमन्यन्ते नित्यं पूर्वोपकारिणम् ।
आचार्यं शिक्षिताः शिष्याः कृतदाराश्च मातरम् ।।
नारीं विगत कामस्तु कृतार्थश्च प्रयोजघम् ।
नावं निस्तीर्णकान्तारा
आतुराश्चचिकित्सकम् ।।४९

ஷடே3 தே ஹ்யவமன்யந்தே
நித்யம் பூ1ர்வோப1கா1ரிணம் ।
ஆசார்யம் ஶிக்ஷிதா: ஶிஷ்யா:
க்ருத தா3ராஶ்ச மாத1ரம் ।।
நாரீம் விக3த காமஸ்து க்ருதார்த்த2ஶ்ச ப்ரயோஜக4ம்।
நாவம் நிஸ்தீர்ண காந்தாரா ஆதுராஶ்ச சிகித்ஸகம்।। 49

கல்வி கற்று முடித்தவர்கள் ஆசார்யனையும், மனைவியை மணந்து கொண்டவர்கள் தாயையும், காமம் நீங்கினவன் பெண்டிரையும், உதவியை அடைந்தவர்கள் உதவி செய்தவனையும், நதியைத் தாண்டி கரையை அடைந்தவன் தோணியையும், வியாதி நீங்கினவன் வைத்யனையும் அவமதிப்பார்கள் (இந்த ஆறு பேர்களும் முன்பு உபகரித்த வர்களையும் மறந்து விடுவார்கள் எனக் கருத்து).

आरोग्यमानृण्य मविप्रवासः
सद्भिर्मनुष्यैस्सह संप्रयोगः ।
स्वप्रत्ययावृत्तिरभीतवासः
षड्जीवलोकस्य सुखानि राजन् ।।५०

ஆரோக்3யமாந்ருண்ய மவிப்ரவாஸ:
ஸத்3பி4ர்மநுஷ்யைஸ்ஸஹ ஸம்ப்ரயோக3:।
ஸ்வ ப்ரத்யயா வ்ருத்1தி1 ரபீ4தவாஸ:
ஷட்3 ஜீவலோகஸ்ய ஸுகா2னி ராஜன் ।। 50

வியாதியின்மை, கடனில்லாமை, வெளியூர்களுக்கு அடிக்கடி அலையாமலிருக்கல், ஸாதுக்களின் சேர்க்கை, தன் புத்தி பலத்தினால் ஜீவித்தல், பயமில்லாமல் குடி இருத்தல், ஓ அரசனே! இந்த ஆறும் மனித உலகத்திற்கு ஸுகத்தை தருகின்றன.

अष्टौ पूर्व निमित्तानि नरस्य विनशिष्यतः ।
ब्राम्हणान् प्रथमं द्वेष्टि ब्राम्हणैश्च विरुध्यते ।।
ब्राम्हणस्वानिचादत्ते ब्राम्हणांश्च जिघांसति ।
रमते निन्दयाचैषां प्रशंसां नाभिनन्दति ।।
नैनान् स्मरति कृत्येषु याचितश्चाभ्यसूयति ।
एतान्दोषान्नरःप्राज्ञः बुद्ध्येत् बुध्वा विसर्जयेत् ।।५१

அஷ்டௌ பூர்வ நிமித்தானி நரஸ்ய விநஶிஷ்யத:।
ப்^{3}ராம்ஹணான் ப்ரத^{2}மம் த்^{3}வேஷ்டி
ப்^{3}ராம்ஹணைஶ்ச விருத்^{4}யதே ।।
ப்^{3}ராம்ஹணஸ்வாநிசாத^{3}த்தே
ப்^{3}ராம்ஹணாம்ஶ்ச ஜிகா^{4}ம்ஸதி ।
ரமதே நிந்த^{3}யாசைஷாம் ப்ரஶம்ஸாம் நாபி^{4}நந்த^{3}தி ।।
நைனான் ஸ்மரதி க்ருத்யேஷு
யாசிதஶ்சாப்^{4}யஸூயதி ।
ஏதான் தோ^{3}ஷாந்நர:ப்ராஜ்ஞ:
பு^{3}த்^{4}யேத் பு^{3}த்^{4}வா விஸர்ஜயேத் ।। 51

மனிதன் நாசத்தை அடைவதற்கு முன்பு எட்டு அறிகுறிகள் ஏற்படும். முதலில் பிராம்மணர்களைத் துவேஷிப்பான், பிராமணர்களுடன் விரோதிப்பான், பிராம்மணர்களுடைய பொருள்களை அபகரிப்பான், பிராம்மணர்களைக் கொல்ல விரும்புவான், பிராம்மணர்களை பிறர் தூஷிப்பதைக் கண்டு சந்தோஷப்படுவான், பிராம்மணர்களை புகழ்வதைக் கண்டு துக்கிப்பான், நல்ல காரியங்களில் பிராம்மணர்களை அழைக்க மாட்டான். பிராம்மணர்கள் யாசிப்பதைக் கண்டு அஸூயைப்படுவான். புத்தியுள்ள மனிதன் இவைகள் எட்டும் நாசத்தை அளிக்கும் தோஷங்களென உணர்ந்து அவைகளை விட்டு விட வேண்டும்.

अष्टा विमानिहर्षस्य नवनीतानि भारत ।
वर्तमानानि दृश्यन्ते तान्येवस्व सुखान्यपि ।।
समागमश्च सखिभिः महांश्चैव धनागमः ।
पुत्रेण च परिष्वङ्गः सन्निपातश्च मैथुने ।।
समयेच प्रिया लापः स्वयूथ्येषु समुन्नतिः ।
अभिप्रेतार्थ लाभश्च पूजा च जनसंसदि ।।५२

அஷ்டா விமானிஹர்ஷஸ்ய நவநீதானி பா⁴ரத ।
வர்த்தமானானி த்³ருஶ்யந்தே
தான்யேவஸ்வ ஸுகா²ன்யபி ।।
ஸமாக³மஶ்ச ஸகி²பி⁴: மஹாம்ஶ்சைவ த⁴னாக³ம: ।
புத்ரேண ச பரிஷ்வங்க³: ஸந்நிபாதஶ்ச மைது²னே ।।
ஸமயேச ப்ரியாலாப: ஸ்வயூத்²யேஷு ஸமுன்னதி: ।
அபி⁴ப்ரேதார்த்த² லாப⁴ஶ்ச பூஜா ச ஜனஸம்ஸதி ।। 52

ஓ பரத சிரேஷ்டரே ஸ்னேஹிதர்களின் சேர்க்கை, நிரம்ப பொருள் வருதல், தன் குழந்தையின் ஆலிங்கனம், அன்பு கொண்ட ஸ்திரீ புருஷர்களின் சேர்க்கை, நல்ல ஸமயத்தில் பிரியமாக பேசுதல், தனது வகுப்பினருக்குள் தலைமையாக இருத்தல், கோரிய பொருளை அடைதல், பெரிய கூட்டத்தில் பூஜையைப் பெறுதல், இந்த எட்டும் சந்தோஷத்தை அளிப்பதற்கு வெண்ணெய் போன்றவைகள். அவைகளே தனக்கு சுகத்தை அளிக்கின்றவைகளாகவும் இருக்கின்றன.

अष्टौगुणाः पुरुषं दीपयन्ति
प्रज्ञाच कौल्यंच दमः श्रुतं च ।
पराक्रमश्चाऽबहुभाषिता च
दानं यथाशक्ति कृतज्ञता च ।।५३

அஷ்டௌ கு³ணா: புருஷம் தீ³பயந்தி
ப்ரக்ஞா ச கௌ¹ல்யஞ்ச த³ம: ஶ்ருதம் ச ।
பராக்ரமஶ்சாऽப³ஹு பா⁴ஷிதா ச
தா³னம் யதா²ஶக்தி க்ருதக்ஞதா ச ।। 53

அறிவு, நற்குலத்தில் பிறப்பு, அடக்கம், படிப்பு, பராக்ரமம், அதிகமாய்ப் பேசாமலிருத்தல், தன் சக்திக்குத்தக்க தானம் செய்தல், நன்றி மறவாமை இந்த எட்டு குணங்களும் மனிதனைப் பிரகாசப்படுத்துகின்றன.

प्राप्यापदं नव्यथते कदाचित्
उद्योगमन्विच्छति चाप्रमत्तः ।
दुःखं च काले सहते महात्मा
धुरन्धरस्तस्य जितास्सपत्नाः ।।५४

ப்ராப்யாபத3ம் நவ்யத2தே கதா3சி1த்
உத்3யோக3மன்விச்ச2தி சாப்ரமத்த: ।
து3:க2ம் ச காலே ஸஹதே மஹாத்மா
து4ரந்த4ரஸ்தஸ்ய ஜிதாஸ் ஸபத்னா: ।। 54

ஆபத்தை அடைந்தும் ஒரு பொழுதும் மனதை துன்புறுத்திக் கொள்ளான், தவறிவிடாமல் முயற்சி செய்வான், துக்கம் நேரிட்ட காலத்தில் அதை ஸஹிப்பான், இப்படிப் பட்டவன்தான் மஹாத்மா. அவன் சத்ருக்களை எல்லாம் ஜெயித்து விடுவான்.

अनर्थकं विप्रवासं गृहेभ्यः
पापैस्सन्धिं परदाराभिमर्शम् ।
दम्भं स्तैन्यं पैशुनं मद्यपानं
नसेवते यश्च सुखी सदैव ।।५५

அநர்த்த2கம் விப்ரவாஸம் க்3ருஹேப்4ய:
பாபைஸ் ஸந்தி4ம் பர தா3ராபி4மர்ஶம் ।
த3ம்ப4ம் ஸ்தைன்யம் பைஶுனம் மத்3ய பானம்
நஸேவதே யஶ்ச ஸுகீ ஸதை3வ ।। 55

*காரியமில்லாமல் வீட்டை விட்டு வெளிதேசம் செல்வதையும், பாபிகளின் சேர்க்கையையும், பிறர் மனைவியைத் தொடுவதையும், டம்ப4த்தையும் **(दम्भम्)**, திருட்டையும், கோள் சொல்வதையும், கள் குடித்தலையும் எவன் விட்டு விடுகிறனோ அவன் எப்பொழுதும் ஸுகியாக இருப்பான்.*

नवैरमुद्दीपयति प्रकाशं न दर्पमारोहति नास्तमेति ।
न दुर्गतोस्मीति करोत्यकार्यं
तमार्यशीलं परमाहुरार्याः ॥५६

நவைரமுத்[3]தீ[3]பயதி ப்ரகாஶம்
ந த[3]ர்ப்பமாரோஹதி நாஸ்தமேதி ।
ந து[3]ர்க[3]தோஸ்மீதி கரோத்யகார்யம்
த[1]மார்ய ஶீலம் பரமாஹுராரா்யா: ॥ 56

இழே போன சண்டையை மறுபடி பேசி வளர்ப்பதில்லை. பொருள் முதலிய லாபங்கள் கிடைத்ததும் கர்வம் அடைவதில்லை, தானம் செய்ய வேண்டுமே என கவலைகொண்டு தரித்ரனாக நடிப்பதில்லை, கஷ்டத்தை அடைந்து விட்டேனென தப்புக் காரியம் செய்வதில்லை. அப்படிப்பட்டவனை மஹான்கள் பெரியோர்களின் ஆசாரத்தைக் கைப்பிடித்த உத்தமனென கூறுகிறார்கள்.

नस्येसुखेवै कुरुते प्रहर्षं नान्यस्य दुःखे भवति प्रहृष्टः ।
दत्वान पश्चात्कुरुतेऽनुतापं सकथ्यते सत्पुरुषार्थशीलः ॥५७

நஸ்யே ஸுகே[2]வை கு[1]ருதே ப்ரஹர்ஷம்
நான்யஸ்ய து[3]:கே[2] ப[4]வதி ப்ரஹ்ருஷ்ட்ட: ।
த[3]த்வான பஶ்சாத் கு[1]ருதேऽநுதா[1]ப[1]ம்
ஸகத்[2]யதே ஸத்புருஷார்த்த[2]ஶீல: ॥ 57

தனக்கு ஸுகமேற்பட்ட போது சந்தோஷம் அடையாதவனும், பிறருடைய துக்கத்தைக் கண்டு சந்தோஷம் அடையாதவனும், தானம் கொடுத்துவிட்டு பின் வருத்தப்படாதவனுமான மனிதன் ஸத்புருஷனாகவும், புகழத்தக்க ஒழுக்கம் உடையவனாகவும் சொல்லப் படுகிறான்.

दम्भं मोहं मत्सरं पापकृत्यं राजद्विषं पैशुनं पूगवैरम् ।
मत्तोन्मत्तैः दुर्जनैश्चापिवादं
यःप्रज्ञावान् वर्जयेत्सप्रधानः ॥५८

த[3]ம்ப[4]ம் மோஹம் மத்ஸரம் பாபக்ருத்யம்
ராஜத்[3]விஷம் பைஶுனம் பூ[1]க[3] வைரம் ।
மத்தோன்மத்தை: து[3]ர்ஜனைஶ் சா[1]பி[1]வாத[3]ம்
ய:ப்ரஜ்ஞாவான் வர்ஜயேத் ஸப்ரதா[4]ன: ॥ 58

டம்பத்தையும் (दम्भम), மோஹத்தையும் (அக்ஞானத்தையும்), பொறாமையையும், பாபச் செயலையும், அரசாங்கத்துடன் த்வேஷத்தையும், கோள் சொல்வதையும், ஜனக்கூட்டத்தை விரோதிப்பதையும், கள் முதலியவற்றால் மத3ம் (मदम) கொண்டவர்களோடும், பித்தர்களோடும், கெட்டவர்களோடும், பேச்சை விலக்குகிற பேரறிவாளனே சிறந்தவன்.

यस्सर्वभूतप्रशमे निविष्टः सत्यो मृदुर्मानकृच्छुद्धभावः।
अतीवसञ्ज्ञायते ज्ञातिमध्ये महामणिर्जात्य इवप्रसन्नः।।५९

யஸ் ஸர்வபூ4த ப்ரஶமே நிவிஷ்ட:
ஸத்யோ ம்ருது3ர் மானக்ருச் சு2த்3த4பா4வ: ।
அதீவ ஸஞாயதே ஞாதிமத்4யே
மஹாமணிர் ஜாத்ய இவ ப்ரஸந்ந: ।। 59

எல்லோருடைய கஷ்டங்களையும் போக்கி (யாவரும் ஒற்றுமையாக இருக்கும்படி செய்கிறவனும், உண்மை பேசுகிறவனும், மிருது ஸ்வபாவம் உள்ளவனும்) பெரியோர்களை நன்கு பூஜிக்கிறவனும், சுத்தமான எண்ணம் உள்ளவனாயும் இருப்பவன் நல்ல ஜாதிரத்தினம் போல் மனிதர்களுக்குத் தலைவனாக விளங்குவான்.

प्रदायैषामुचितं तात राज्यं
सुखीपुत्रैः सहितो मोदमानः ।
न देवानां नापिच मानुषाणां
भविष्यसि त्वं गर्हणीयो नरेन्द्र ।।६०

ப்ரதா3யைஷாமுசிதம் தாத ராஜ்யம்
ஸுகீ2புத்ரை ஸஹிதோ மோத3மான: ।
ந தே3வானாம் நாபி1ச1 மானுஷாணாம்
ப4விஷ்யஸி த்வம் க3ர்ஹணீயோ நரேந்த்3ர ।। 60

ஓ அண்ணா! இந்த பாண்டவர்களுக்குச் சேர வேண்டிய ராஜ்யத்தைக் கொடுத்து புத்ரர்களுடன் சுகமாகவும், சந்தோஷமாகவும் இருப்பீர். அவ்வாறு செய்தால், தேவர்களுக்கோ, மனிதர்களுக்கோ நிந்திக்கத்தக்கவராக ஆகமாட்டீர்.

यः प्रमाणं न जानाति स्थानेवृद्धौ तथाक्षये ।
कोशे जनपदे दण्डे न सराज्येऽवतिष्ठते ।। ६१

ய: ப்ரமாணம் ந ஜானாதி ஸ்தா^{1}னே-
வ்ருத்^{3}தௌ^{4} த^{1}தா^{2}க்ஷயே ।
கோ^{1}ஶே ஜனபதே^{3} த^{3}ண்டே^{3}
ந ஸராஜ்யேऽவதிஷ்ட^{2}தே ।। 61

எவன் கோட்டை முதலான இருப்பிடத்திலும் பொருள் முதலியவைகளின் வளர்ச்சியிலும், அவைகளின் குறைவிலும், பொக்கிஷத்திலும், பட்டணத்திலும், ஸேனையிலும் அளவை அறியாதவனோ, அவன் ராஜ்யத்தில் நிலைத்திருக்க முடியாது.

न राज्यं प्राप्तमित्येव वर्तितव्यम साम्प्रतम् ।
श्रियं ह्यविनयोहन्ति जरारूपमिवोत्तमम् ।।६२

ந ராஜ்யம் ப்ராப்தமித்யேவ
வர்த்திதவ்யம ஸாம்ப்ரதம் ।
ஶ்ரியம் ஹ்யவினயோஹந்தி ஜராரூபமிவோத்தமம் ।। 62

ராஜ்யம் கிடைத்துவிட்டதென கர்வம் கொண்டிருக்கக் கூடாது. கிழத்தனம் சிறந்த அழகை அழிப்பது போல் அஹங்காரமானது ராஜ்யத்தை அழித்துவிடும்.

यच्छक्यं ग्रसितुं ग्रस्यं ग्रस्तं परिणमेच्चयत् ।
हितं च परिणामेयत् तदाद्यं भूतिमिच्छता ।।६३

யச்ச^{2}க்யம் க்^{3}ரஸிதும் க்^{3}ரஸ்யம்
க்^{3}ரஸ்தம் பரிணமேச்சயத் ।
ஹிதம் ச பரிணாமேயத் த^{1}தா^{3}த்^{3}யம் பூ^{4}திமிச்ச^{2}தா ।। 63

எதைச் சாப்பிடமுடியுமோ, அதைச் சாப்பிட வேண்டும். சாப்பிட்ட பிறகு அது ஜெரிக்க(ஜீரணம்) ஆனால் வேண்டும். ஜெரித்தபிறகு அது நன்மையைச் செய்ய வேண்டும். க்ஷேமத்தைக் கோருகிறவன் அப்படிப்பட்ட ஆகாரத்தைத்தான் உட்கொள்ள வேண்டும்.

यथामधु समादत्ते रक्षन् पुष्पाणि षट्पदः ।
तद्वदर्थान् मनुष्येभ्यः आदद्यादविहिंसया ।।६४

யதா மது[4] ஸமாத[3]த்தே ரக்ஷன் புஷ்பாணி ஷட்பத[3]:।
தத்[3]வத[3]ர்த்தான் மனுஷ்யேப்[4]ய:
ஆத[3]த்[3]யாத[3] விஹிம்ஸயா ।। 64

எவ்வாறு தேனியானது புஷ்பங்களுக்கு தீங்கு வராமல் தேனை எடுத்துவருகிறதோ, அதுபோல் அரசன் பிரஜைகளை ஹிம்ஸிக்காமல் வரியை வசூல் செய்யவேண்டும்.

पुष्पं पुष्पं विचिन्वीत मूलच्छेदं न कारयेत् ।
मालाकार इवारामे नयथाङ्गार कारकः ।।६५

புஷ்பம் புஷ்பம் விசின்வீத மூலச்சே[2]த[3]ம் நகாரயேத்।
மாலாகார இவாராமே நயதா[2]ங்கா[3]ர காரக: ।। 65

பூந்தோட்டத்தில் மாலை கட்டுகிறவன் மரங்களிலுள்ள புஷ்பங்களை எடுப்பானே அல்லாமல், கரி(க்காக) மரத்தை சுடுகிறவன் மரத்தை அடியோடு வெட்டுவது போல் வெட்டுவதில்லை. (அதுபோல் மனிதர்களை அடியோடு கஷ்டப்படுத்தி வரி வாங்காமல் சிறிது சிறிதாக ஹிம்ஸிக்காமல் வரி வாங்க வேண்டும்)

किन्नु मे स्यादिदं कृत्वा किन्नु मे स्यादकुर्वतः ।
इतिकर्माणि सञ्चिन्त्य कुर्याद्वा पुरुषो नवा ।।६६

கின்னு மே ஸ்யாதி[3]த[3]ம் க்ருத்வா
கின்னு மே ஸ்யாத[3]குர்வத: ।
இதிகர்மாணி ஸஞ்சிந்த்ய குர்யாத்[3]வா புருஷோ நவா ।।66

மனிதன் இதைச் செய்தால் என்ன உண்டாகும், இதைச் செய்யாவிடில் என்ன ஏற்படும் என்பதை நன்கு ஆலோசித்து, காரியங்களைச் செய்யவேண்டும். அல்லது செய்யாமலிருக்க வேண்டும்.

प्रसादो निष्फलो यस्य क्रोधश्चापि निरर्थकः ।
नतं भर्तारं इच्छन्ति षण्डं पतिमिव स्त्रियः ।।६७

ப்ரஸாதோ[3] நிஷ்ப[2]லோ யஸ்ய
க்ரோத[4]ஶ்சாபி நிரர்த்த[2]க: ।
நத[1]ம் ப[4]ர்தாரம் இச்ச[2]ந்தி ஷண்ட[3]ம் பதிமிவ ஸ்த்ரிய:।।67

எவனுடைய சந்தோஷம், கோபம், இரண்டும் பயனில்லாமல் இருக்கிறதோ, அவனை பிரஜைகள், நபும்ஸகனை (नपुंसक:) *பெண்கள் விரும்பாதது போல் விரும்பமாட்டார்கள்.*

कांश्चिदर्थान्नरः प्राज्ञः लघुमूलान् महाफलान् ।
क्षिप्रमारभते कर्तुं नविघ्नयति तादृशान् ।।६८

காம்ஸ்சித3ர்தா2ந்நர: ப்ராக்ஞ:
லகு4 மூலான் மஹாப1லான் ।
க்ஷிப்ரமாரப4தே கர்த்தும் நவிக்4னயதி தாத்3ருஸான் ।। 68

புத்திமானான மனிதன் சிறு முயற்சியால் பெரிய பயன்களை அளிக்கும் காரியங்களை சீக்கிரம் ஆரம்பிப்பான். அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய தாமதிப்பதில்லை.

ऋजुपश्यति यस्सर्वं चक्षुषा नु पिबन्निव ।
आसीनमपि तूष्णीकं अनुरज्यन्ति तं प्रजाः ।।६९

ருஜுபஸ்யதி யஸ்ஸர்வம் சக்ஷுஷா நு பிப3ந்நிவ ।
ஆஸீனமபி தூ1ஷ்ணீகம் அனுரஜ்யந்தி தம் ப்ரஜா: ।। 69

மனதில் தோஷமில்லாமல் ருஜுவாக (நேர்மை) யாவற்றையும் கண்ணால் பார்க்கும் அரசன் சும்மா இருந்தபோதிலும், பிரஜைகள் அவனை விரும்புவார்கள்.

यस्मात् त्रस्यन्ति भूतानि मृगव्याधान्मृगा इव ।
सागरान्तामपिमहीं लब्ध्वा स परिहीयते ।।७०

யஸ்மாத் த்ரஸ்யந்தி பூ4தானி
ம்ருக3வ்யாதா4ன் ம்ருகா3 இவ ।
ஸாக3ராந்தா1மபி1மஹீம் லப்3த்4வா ஸ பரிஹீயதே ।। 70

மிருகங்களைக் கொல்லும் வேடர்களைக் கண்டு மிருகங்கள் பயப்படுவதுபோல் எவனைக் கண்டு பிரஜைகள் பயப்படுகின்றனரோ, அப்படிப்பட்டவன் ஸமுத்திரங்களுக்குட்பட்ட பூமி முழுவதையும் ஆண்ட போதிலும் பதவியைவிட்டு நழுவி விடுவான்.

धर्ममाचरतो राज्ञः सद्भिश्चरितमादितः ।
वसुधा वसुसंपूर्णा वर्धते भूतिवर्धनी ।।७१

த4ர்மம் ஆசரதோ ராக்ஞ: ஸத்3பி4ஸ் சரிதமாதி3த: ।
வஸுதா4 வஸுஸம்பூர்ணா வர்த4தே பூ4திவர்த4னீ ।। 71

இதற்கு முன்புள்ள ஸாதுக்களான அரசர்கள் செய்துவந்த தர்மத்தை விடாமல் செய்யும் அரசனுடைய பூமியானது, ஸ்வர்ணம் நிரம்பி மேன்மேலும் ஸம்பத்துக்களை விருத்3தி4 (वृद्धि) செய்வதாக ஆகிறது.

धर्मेण राज्यं विन्देत धर्मेण परिपालयेत् ।
धर्ममूलां श्रियं प्राप्य नजहाति न हीयते ।।७२

த4ர்மேண ராஜ்யம் விந்தே3த த4ர்மேண பரிபாலயேத் ।
த4ர்மமூலாம் ஶ்ரியம் ப்ராப்ய நஜஹாதி ந ஹீயதே ।। 72

தர்ம வழியாகத்தான் ராஜ்யத்தைப் பெறவேண்டும். தர்மம் வழுவாமல் ராஜ்யத்தை பரிபாலிக்க வேண்டும். நியாயமான வழியில் வரி வாங்க வேண்டும். அப்படிப்பட்ட அரசனிடமிருந்து ராஜ்யம் நழுவாது. குறைவையும் அடையமாட்டான்.

अप्युन्मत्तात् प्रलपतः बालाच्च परिजल्पतः ।
सर्वतस्सारं आदद्यात् अश्मभ्य इव काञ्चनम् ।।७३

அப்1யுன்மத்தாத் ப்ரலபத: பா3லாச்ச பரிஜல்பத: ।
ஸர்வத1ஸ்ஸாரம் ஆத3த்3யாத்
அஶ்மப்4ய இவ காஞ்சனம் ।। 73

பைத்தியக்காரன் புலம்புகின்ற சொற்களிலிருந்தும், மாறி மாறிப் பேசுகின்ற குழந்தைகளின் சொற்களிலிருந்தும், மற்றும் எல்லா இடங்களிலிருந்தும் ஸாரத்தை **(सारम्)**, கற்களிலிருந்து தங்கத்தை (பிரித்து) எடுப்பது போல், எடுக்கவேண்டும்.

गन्धेन गावः पश्यन्ति वेदैः पश्यन्ति ब्राम्हणाः ।
चारैः पश्यन्ति राजानः चक्षुर्भ्यां इतरे जनाः ।।७४

க3ந்தே4ன கா3வ: பஶ்யந்தி
வேதை3: பஶ்யந்தி ப்3ராம்ஹணா: ।
சா1ரை: பஶ்யந்தி ராஜான:
சக்ஷுர்ப்4யாம் இதரே ஜனா: ।। 74

வஸ்துகளை பசுக்கள் வாசனையால் அறிகின்றன (பார்க்கின்றன), பிராமணர்கள் வேதங்களால் இவ்வுலகம் அவ்வுலகம் யாவற்றையும் பார்க்கின்றனர். அரசர்கள் கண்ணுக்குத் தெரியாத பொருள்களை சா1ரர்களால் (चारा:- *உளவாளிகளால்) பார்க்கின்றனர். மற்ற மனிதர்கள் கண்களால் பொருள்களை பார்க்கின்றனர்.*

पर्जन्यनाथाः पशवः राजानो मन्त्रि बान्धवाः ।
पतयो बान्धवाः स्त्रीणां ब्राम्हणा वेदबान्धवाः ।।७५

பர்ஜன்யநாதா2: பஶவ: ராஜானோ மந்த்ரி பா3ந்த4வா:।
ப1த1யோ பா3ந்த4வா: ஸ்த்ரீணாம்
ப்3ராம்ஹணா வேத3பா3ந்த4வா: ।। 75

பசுக்கள் மழையை நாதனாக உடையவைகள், அரசர்கள் மந்திரிகளை ப1ந்து1க்களாகக் (बन्धुः) *கொண்டவர்கள், ஸ்திரீகளுக்கு கணவர்கள்தான் பந்துக்கள். பிராம்மணர்கள் வேதங்களையே பந்துக்களாக உடையவர்கள்.*

सत्येन रक्ष्यते धर्मः विद्या योगेन रक्ष्यते ।
मृजया रक्ष्यते रूपं कुलं वृत्तेन रक्ष्यते ।।७६

ஸத்யேன ரக்ஷ்யதே த4ர்ம:
வித்3யா யோகே3ன ரக்ஷ்யதே ।
ம்ருஜயா ரக்ஷ்யதே ரூபம்
குலம் வ்ருத்1தே1ன ரக்ஷ்யதே ।। 76

தர்மம் ஸத்யத்தால் காக்கப்படுகிறது, கல்வி அப்1யாஸத்தால் **(अभ्यासम)** *(திரும்ப திரும்ப படிப்பதால்) ரக்ஷிக்கப்படுகிறது, அழகு சுத்தம் செய்வதால் (அழுக்கைப் போக்குவதால்) ரக்ஷிக்கப்படுகிறது, குலம்* **(कुलम्)** *நன்னடத்தையால் காக்கப்படுகிறது.*

मानेन रक्ष्यते धान्यं अश्वान् रक्षत्यनुक्रमः ।
अभीक्ष्ण दर्शनं गाश्च स्त्रियो रक्ष्याः कुचेलतः ।।७७

மானேன ரக்ஷ்யதே தா4ன்யம்
அஶ்வான் ரக்ஷத் யநுக்ரம: ।
அபீ4க்ஷ்ண த3ர்ஶனம் கா3ஶ்ச
ஸ்த்ரியோ ரக்ஷ்யா: குசே1லத: ।। 77

அளவினால் நெல் முதலிய தான்யங்களை பாதுகாக்க வேண்டும். தேய்ப்பது, நடத்திச் செல்வது முதலியவற்றால் குதிரைகளை காக்க வேண்டும். அடிக்கடி பார்ப்பதால் பசுக்களை ரக்ஷிக்க வேண்டும். ஸ்திரீகளை மட்டமான வஸ்திரங்களைக் கொடுக்காமல் நல்ல வஸ்திரங்களைக் கொடுத்து பாதுகாக்க வேண்டும்.

न कुलं वृत्तहीनस्य प्रमाणमिति मे मतिः ।
अन्तेष्वपि हि जातानां वृत्तमेव विशिष्यते ।।७८

ந குலம் வ்ருத்^{1}த^1 ஹீனஸ்ய ப்ரமாணமிதி மே மதி: ।
அந்தேஷ்வபி ஹி ஜாதானாம்
வ்ருத்^{1}த^{1}மேவ விஶிஷ்யதே ।। 78

நல்ல நடத்தை இல்லாதவனது குலம் **(कुलम्)** நல்லதாக இருந்தபோதிலும் அது சிறப்பைத் தராதென்பது என் கருத்து. கீழ்ப்பட்ட வகுப்பில் பிறந்தவனாய் இருந்த போதிலும் அவனது நல்ல நடத்தையே அவனுக்கு சிறப்பை அளிக்கும்.

य ईर्षुः परवित्तेषु रूपे वीर्ये कुलान्वये ।
सुख सौभाग्य सत्कारे तस्य व्याधिरनन्तकः ।।७९

ய ஈர்ஷு: பர வித்^{1}தே^{1}ஷு
ரூபே வீர்யே கு^{1}லான்வயே ।
ஸுக^2 ஸௌபா^{4}க்^{3}ய ஸத்காரே தஸ்ய வ்யாதி^{4}ரனந்தக: ।।79

முடிவில்லாத பல வியாதிகள் ஓர் மனிதனுக்கு ஏற்படுவதற்குக் காரணத்தைக் கூறுகிறார். அதாவது பிறருடைய பொருள்களையும், அழகையும், வீர்யத்தையும், சிறந்த பாக்யங்களையும், பூஜையையும் கண்டு பொறாமைப்படுகிறவனுக்கு முடிவில்லாத பல வியாதிகள் ஏற்படும் எனக் கருத்து.

विद्यामदो धनमदः तृतीयोऽभि जनोमदः ।
मदा एतेऽवलिप्तानां एतएव सतां दमाः ।।८०

வித்^{3}யாமதோ^{3} த^{4}னமத^3: த்ருதீயோऽபி ஜனோ மத^3: ।
மதா^{3} ஏதேऽவலிப்தானாம் ஏத ஏவ ஸதா^{1}ம் த^{3}மா: ।।80

வித்யையால் ஏற்படும் மத^{3}ம் **(मदम्)** (கொழுப்பு), தனத்தினால் ஏற்படும் மதம், நற்குலப் பிறப்பினால் ஏற்படும்

மதம் (**मदम्**), *இம்மூன்றும் ஸாதுக்களுக்கு மதத்திற்கு* (**मदम्**) *எதிரிடையான த^{3}மமாய்* (**दमम्**-*அடக்கமாய்*) *ஆகின்றன.*

असन्तोऽभ्यर्थितास्सद्भिः क्वचित्कार्ये कदाचन।
तावन्नतस्य सुकृतं किंचित् कार्यं कदाचन ।।८१

அஸந்தோऽப^{4}யர்த்தி^{2}தாஸ் ஸத்^{3}பி^{4}:
க்வசித் கார்யே க^{1}தா^{3}சன ।
தாவந்நதஸ்ய ஸுக்ருதம் கிஞ்சித் கார்யம் க^{1}தா^{3}சன।। 81

அஸத்துக்களை ஸாதுக்கள் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென எப்பொழுதாவது வேண்டினார்களேயானால், சிறிது கூட அந்தக் காரியத்தைச் செய்யாமல் அவர்கள் தன்னை வேண்டிய மாத்திரத்தில் (அஸத்துக்கள்) தன்னை ஸத்தாக நினைத்துக் கொண்டு விடுகின்றனர்.

गतिरात्मवतां सन्तः सन्त एव सतां गतिः ।
असतां च गतिस्सन्तः नत्वसन्तः सतां गतिः।।८२

க^{3}திராத்மவதாம் ஸந்த: ஸந்த ஏவ ஸதா^{1}ம் க^{3}தி: ।
அஸதா^{1}ம் ச க^{3}திஸ்ஸந்த: நத்வஸந்த: ஸதாம் க^{3}தி:।। 82

பிராணிகள் யாவருக்கும் ஸத்துக்களே கதி (**गति**). *ஸாதுக்களுக்கும் ஸாதுக்கள்தான் கதி. ஒருபோதும் அஸத்துக்கள் ஸாதுக்களுக்கு கதியல்ல.*

सभाजिता वस्त्रवतां इष्टाशा गोमता जिता ।
अध्वाजितो यानवता सर्वं शीलवता जितम् ।।८३

ஸபா^{4}ஜிதா வஸ்த்ரவதாம் இஷ்டாஶா கோ^{3}மதா ஜிதா।
அத்^{4}வாஜிதோ யானவதா ஸர்வம் ஶீலவதா ஜிதம் ।। 83

நல்ல வஸ்திரம் தரித்தவன் ஸபையை ஜெயித்து விடுவான். (முன் பின் தெரியாத சபையோர்கள் கூட நல்ல வஸ்திரம் தரித்தவனை கௌரவிப்பார்கள் எனக் கருத்து) நல்ல ஆகாரத்தை விரும்புகிறவன் பசுக்கள் உள்ளவனாய் இருந்தால் அந்த ஆசையைப் பூர்த்தி செய்து கொண்டு விடுவான். நல்ல வாஹனமுள்ளவன் வழியை ஜெயித்து விடலாம். (வெகு தூரத்துக்கு அப்பால் செல்ல வேண்டுமானாலும் உடன் சென்று விடலாம்) நல்ல நடத்தை உள்ளவன் எல்லா உலகங்களையும் ஜெயித்து விடலாம்.

शीलं प्रधानं पुरुषे तद्यस्येह प्रणश्यति ।
न तस्य जीवितेनार्थः न धनेन नबन्धुभिः ॥८४

ஶீலம் ப்ரதா4னம் புருஷே தத்3யஸ்யேஹ ப்ரணஶ்யதி।
ந தஸ்ய ஜீவிதேநார்த்த2: ந த4னேன ந ப3ந்து4பி4: ॥ 84

மனிதனுக்கு நல்ல நடத்தையும், நல்ல எண்ணமும்தான் முக்கியமானது. அவைகள் எவனிடம் இல்லையோ, அவனுக்கு உயிரினாலும், பணத்தினாலும், பந்து'க்களாலும் (बन्धुः) *ஒரு பயனுமில்லை.*

सम्पन्नतरमेवान्नं दरिद्रा भुञ्जने सदा ।
क्षुत्स्वादुतां जनयति साचाढ्येषु सुदुर्लभा ॥८५

ஸம்ப1ந்ந தரமேவான்னம் த3ரித்3ரா பு4ஞ்ஜனே ஸதா3।
க்ஷுத் ஸ்வாது3தா1ம் ஜனயதி
ஸாசாட்4யேஷு ஸுது3ர்லபா4 ॥ 85

நிரம்ப உணவுகளை தரித்ரர்கள் எப்பொழுதும் நன்கு சாப்பிடுகிறார்கள். அவர்களுக்கு எப்பொழுதும் பசி இருக்கிறது. அந்தப் பசியானது, எந்த உணவிலும் ருசியை உண்டு பண்ணுகிறது. அம்மாதிரியான பசியோ, ருசியோ, பணக்காரர்களிடம் மிகவும் துர்லபம்.

प्रायेण श्रीमतां लोके भोक्तुं शक्तिर्न विद्यते ।
जीर्यन्त्यपि हि काष्ठानि दरिद्राणां महीपते ॥८६

ப்ராயேண ஶ்ரீமதாம் லோகே
போ4க்தும் ஶக்திர் ந வித்3யதே ।
ஜீர்யந்த்யபிஹி காஷ்டா2னி த3ரித்3ராணாம் மஹீபதே ॥86

பெரும்பாலும் பணக்காரர்களுக்கு சாப்பிடுவதற்கு சக்தி இருப்பதில்லை. தரித்ரர்களுக்கு மரக்கட்டைகளை சாப்பிட்டாலும் ஜீர்ணமாகிவிடும்.

अवृत्तिर्भयमन्त्यानां मध्यानां मरणाद्भयम् ।
उत्तमानां तु मर्त्यानां अवमानात् परं भयम् ॥८७

அவ்ருத்திர் ப4யமந்த்1யானாம்
மத்4யானாம் மரணாத்3ப4யம் ।

உத்தமானாம் து மர்த்1யானாம்
அவமானாத் பரம் ப4யம் ।। 87

கீழ்ப்பட்ட மனிதர்களுக்கு பிழைப்பில்லாமையால் பயமும். நடுத்தர மனிதர்களுக்கு மரணத்தினால் பயமும், மேலான மனிதர்களுக்கு அவமானத்தினால் மிக பயமும் ஏற்படும்.

धर्मार्थौयः परित्यज्य स्यादिन्द्रिय वशानुगः ।
श्रीप्राण धनदारेभ्यः क्षिप्रं स परिहीयते ।।८८

த4ர்மார்த்தௌ2ய: பரித்யஜ்ய ஸ்யாதி1ந்த்1ரிய வஶாநுக3:।
ஶ்ரீப்ராண த4னதா3ரேப்4ய: க்ஷிப்ரம் ஸ பரிஹீயதே ।। 88

தர்மம் அர்த்தம் இவைகளை விட்டுவிட்டு எவன் இத்திரியங்களுக்கு வசமாக இருக்கிறானோ அவன் சீக்கிரத்தில் லக்ஷ்மி, உயிர், பொருள், மனைவி இவைகளிலிருந்து நழுவி விடுவான்.

असन्त्यागात् पापकृतामपापान्
तुल्योदण्डः स्पृशते मिश्रभावात् ।
शुष्केणार्द्रं दह्यते मिश्रभावात्
तस्मात् पापैस्सहसन्धिं न कुर्यात् ।।८९

அஸந்த்யாகா3த் பாபக்ருதாம் அபா1பா1ன்
துல்யோத3ண்ட3: ஸ்ப்ருஶதே மிஶ்ர பா4வாத் ।
ஶுஷ்கேணார்த்3ரம் த3ஹ்யதே மிஶ்ர பா4வாத்
தஸ்மாத் பா1பை1ஸ் ஸஹஸந்தி4ம் ந கு1ர்யாத் ।। 89

தப்பு செய்தவர்களுடன் நல்லவர்கள் சேருவதால், நல்லவர்களையும் தப்பு செய்தவர்கள் செய்த குற்றம் வந்து அடைந்துவிடும். எவ்வாறு பச்சைக் கட்டைகள் காய்ந்த கட்டைகளுடன் சேர்ந்தால் அதுவும் எரிந்து விடுமோ அது போலாகும்.

अनसूयार्जवं शौचं सन्तोषः प्रियवादिता ।
दमस्सत्यं अनायासः न भवन्ति दुरात्मवान् ।।९०

அநஸூயார்ஜவம் ஶௌச1ம்
ஸந்தோஷ: ப்ரிய வாதி3தா ।
த3மஸ்ஸத்யம் அனாயாஸ: ந ப4வந்தி து3ராத்மவான்।। 90

அஸூயை இல்லாமை, ருஜுவாக (நேர்மையாக) இருத்தல், பரிசுத்தம், சந்தோஷம், இனிமையான சொல், இந்திரிய ஜெயம், ஸத்யம், சிரமப்படாமல் காரியம் செய்தல் இவைகளெல்லாம் அயோக்யர்களிடம் காணமுடியாது.

आत्मज्ञानमनायासः तितिक्षा धर्मनित्यता ।
वाक्चैव गुप्ता दानञ्च नैतान्यन्त्येषु भारत ।।९१

ஆத்மஞானம் அநாயாஸ: தி1தி1க்ஷா த4ர்ம நித்யதா1।
வாக்சைவ கு3ப்தா தா3னஞ்ச
நைதான் யத்னேஷு பா4ரத ।। 91

உள்ளத்திலுள்ள ஸ்ரீ பகவானை அறிதல், துயரத்தைக் கொடுக்காத காரியத்தை செய்தல், கஷ்டங்களை ஸஹித்தல், நித்யம் தர்மத்தை அனுஷ்டித்தல், அடக்கமாகப் பேசுதல், அடக்கமாக தானம் செய்தல் இந்த குணங்கள் மட்டமான மனிதர்களிடம் இருப்பதில்லை.

हिंसा बलमसाधूनां राज्ञां दण्ड विधिर्बलम् ।
शुश्रूषा तु बलं स्त्रीणां क्षमा गुणवतां बलम् ।।९२

ஹிம்ஸா ப3லம் அஸாதூ4னாம்
ராஞாம் த3ண்ட3 விதி4ர்ப3லம் ।
ஶுஶ்ரூஷா து ப3லம் ஸ்த்ரீணாம்
க்ஷமா கு3ணவதாம் ப3லம் ।। 92

*அயோக்யர்களுக்கு பிறரை ஹிம்ஸிப்பதே ப3லம் (**बलम्**), அரசர்களுக்கு தண்டிப்பதே பலம், ஸ்திரீகளுக்கு கணவனுக்குச் செய்யும் பணிவிடையே பலம், குணசாலிகளுக்கு பொறுமையே பலம்.*

वाक्सम्यमो हि नृपते सुदुष्करतमो मतः ।
अर्थवच्च विचित्रं च नशक्यं बहुभाषितुम् ।।९३

வாக்ஸம்யமோஹி ந்ருபதே ஸுது3ஷ்கர த3மோ மத1:।
அர்த்த2வச்ச விசித்ரம் ச நஶக்யம் ப3ஹுபா4ஷிதும் ।। 93

ஓ அரசனே! வாக்கை அடக்குவது மிகவும் கடினமான காரியம். ஆச்சரியமாயும் நல்ல கருத்து உள்ளதாயுமுள்ள பேச்சுக்களை நிரம்பப் பேசுவது மிகக் கடினம்.

अभ्यावहति कल्याणं विविधं वाक्सुभाषिता ।
सैव दुर्भाषिता राजन् अनर्थायोपपद्यते ।।९४

அப்யாவஹதி கல்யாணம் விவித4ம் வாக்ஸுபா4ஷிதா।
ஸைவ து3ர்பா4ஷிதா ராஜன் அநர்தா2யோபபத்3யதே।। 94

பலவிதமான அழகான சொற்களைப் பேசினால், அந்தச் சொல்லானது கேட்பவர்களுக்கும் சொல்லுகிறவர்களுக்கும் மங்களத்தை நிரம்ப அளிக்கும். ஓ அரசனே! கெட்ட பொருளுடன் கூடிய சொல்லோவெனில் பெரும் துயரங்களை அளிப்பதற்குக் காரணமாகிவிடும்.

रोहते सायकैर्विद्धं वनं परशुना हतम् ।
वाचा दुरुक्तं बीभत्सं न संरोहति वाक्क्षतम् ।।९५

ரோஹதே ஸாயகைர்வித்3த4ம் வனம் பரஶுனா ஹதம்।
வாசாது3ருக்தம் பீ3ப4த்ஸம் நஸம்ரோஹதி வாக்க்ஷதம்।।95

அம்பினால் அடிப்பட்ட புண் ஆறிவிடும். கோடாலியால் வெட்டப்பட்ட மரம் துளிர்த்து விடும். கெட்ட சொற்களினால் மனதில் ஏற்பட்ட புண்ணானது ஆறவே ஆறாது.

कर्णिनालीकनाराचान् निर्हरन्ति शरीरतः ।
वाक्शल्यस्तु ननिर्हर्तुं शक्यो हृदिशयो हि सः ।।९६

கர்ணி நாளீக நாராசான் நிர்ஹரந்தி ஶரீரத: ।
வாக்ஶல்யஸ்து நநிர் ஹர்து1ம்
ஶக்யோ ஹ்ருதி3ஶயோ ஹி ஸ: ।। 96

கர்ணி, நாளீகம், நாராச1ம் (कर्णि, नालीकम्, नाराचम्) *என்னும் பலவித அம்புகள் சரீரத்தில் போடப்பட்டால் அதை பிடுங்கி எடுத்து விடலாம். கெட்ட சொல்லாகிற அம்பைப் போட்டால் அதை உள்ளத்திலிருந்து எடுக்கமுடியாது. அங்கேயே தங்கிவிடும்.*

यस्मै देवाः प्रयच्छन्ति पुरुषाय पराभवम् ।
बुद्धिं तस्यापकर्षन्ति सोऽवाचीनानि पश्यति ।।९७

யஸ்மை தே3வா: ப்ரயச்ச2ந்தி புருஷாய பராப4வம்।
பு3த்3தி4ம் தஸ்யாபகர்ஷந்தி ஸோऽவாசீனானி பஶ்யதி।।97

எவனுக்கு அவமானத்தை அளிக்க வேண்டுமென

தேவர்கள் நினைக்கின்றனரோ, அவனது நல்ல அறிவைக் கெடுத்துவிடுகின்றனர். அதனால் அந்த மனிதன் தப்பான காரியங்களைச் செய்ய விரும்புகிறான்.

सर्वतीर्थेषु वा स्नानं सर्वभूतेषु चार्जवम् ।
उभे त्वेते समे स्यातां आर्जवं वा विशिष्यते ।।९८

ஸர்வதீர்த்தே²ஷு வா ஸ்னானம்
ஸர்வ பூ⁴தேஷு சார்ஜவம் ।
உபே த்வே தே ஸமே ஸ்யாதாம்
ஆர்ஜவம் வா விஶிஷ்யதே ।। 98

உலகத்திலுள்ள அறுபத்தாறு கோடி தீர்த்தங்கள் யாவற்றிலும் ஸ்நானம் செய்வதும், எல்லா பிராணிகளிடத்திலும் ருஜுவாய் (நேர்மையாய்) இருத்தலும் ஸமமாகும். அல்லது ருஜுவாக இருத்தல் உயர்வாகவும் ஆகலாம்.

आर्जवं प्रतिपद्यस्व पुत्रेषु सततं विभो ।
इह कीर्तिं परां प्राप्य प्रेत्य स्वर्गं अवाप्स्यसि ।।९९

ஆர்ஜவம் ப்ரதிபத்³யஸ்வ புத்ரேஷு ஸததம் விபோ⁴।
இஹ கீர்த்தி¹ம் ப¹ராம் ப்ராப்ய
ப்ரேத்ய ஸ்வர்க³ம் அவாப்ஸ்யஸி ।। 99

ஓ அரசனே! உமது புத்ரர்களான பாண்டவர்களிடத்தில் நேர்மையாக நடந்து கொள்ளும். அதனால் இவ்வுலகில் சிறந்த கீர்த்தியை அடைந்து பின்பு புண்ய லோகங்களையும் அடைவீர்.

यावत्कीर्तिः मनुष्यस्य पुण्या लोके प्रगीयते ।
तावत्सपुरुष व्याघ्र स्वर्गे लोके महीयते ।।१००

யாவத் கீர்த்தி: மநுஷ்யஸ்ய
புண்யா லோகே ப்ரகீ³யதே ।
தாவத் ஸ புருஷ வ்யாக்⁴ர
ஸ்வர்கே³ லோகே மஹீயதே ।। 100

ஓ புருஷ ஶ்ரேஷ்டனே! எந்த மனிதன் (சாஸ்திரப்படி) செய்த புண்ய கார்யத்தினால் ஏற்பட்ட புகழ் இவ்வுலகில் (எவ்வளவு காலம்) விளங்குகிறதோ, அவ்வளவு காலம் அந்த தர்மம் செய்த மனிதன் புண்ய லோகங்களில் விளங்குவான்.

(ஆதலால்தான் புண்ய புருஷர்கள் சத்திரம், கோவில், வேத பாடசாலை, தண்ணீர் பந்தல், குளம், ஸன்யாஸிகள் தங்கும் மடம், படித்துறைகள் கட்டுவது, முதலிய தர்மங்களைச் செய்து வைக்கின்றனர். அதை பின்பும் பராமரிக்க பொருள்களை வைத்து, தான் பரலோகம் சென்றாலும் அந்த தர்மங்கள் நீடித்து நடக்கும்படி செய்து, தன் புகழ் இவ்வுலகில் எப்பொழுதும் இருக்கும்படி செய்வார்கள்)

यां रात्रिमधिविन्ना स्त्री यां चैवाक्षपराजितः ।
यांच भाराभितप्ताङ्गः दुर्विवक्तातु तां वसेत् ।।१०१

யாம் ராத்ரிமதி4விந்நா ஸ்த்ரீ யாம் சைவாக்ஷபராஜித:।
யாஞ்ச பா4ராபி4 தப்தாங்க3:
து3ர்விவக்தாது தாம் வஸேத் ।। 101

பொய்யாகத் தீர்ப்புக் கூறியவனும், பொய்யாக சாக்ஷி சொன்னவனும், மேலே கூறப்படும் மூன்று துக்கங்களையும் அடைவான் என்பதை ஓர் கதை மூலம் விதுரர் கூறுகிறார். மனைவி இருக்கும் போது மற்றொரு மனைவியை மணந்து கொண்டு வந்த தன் கணவனைக் கண்ட முதல் மனைவி இரவு முழுவதும் எவ்விதம் கண்ணீர் விட்டுத் துயரத்தை அடைவாளோ, மேலும் சூதாட்டத்தில் சொத்து முழுவதையும் வைத்துத் தோல்வி அடைந்தவன் அந்த இரவு முழுவதும் எந்த துக்கத்தை அடைவானோ, பெரிய சுமையைச் சுமந்து வெய்யிலில் வெகுதூரம் நடந்து வந்தவன் அந்த இரவு முழுவதும் உடம்பு வலியினால் எவ்வாறு துக்கப்படுவானோ, அவ்வாறு பொய்சாக்ஷி கூறியவனும், மாறாகத் தீர்ப்புக் கூறியவனும் ஆயுள் உள்ளவரை கஷ்டத்தை அனுபவிப்பான்.

तस्माद्राजेन्द्र भूम्यर्थे नानृतं वक्तुमर्हसि ।
मा गमः ससुतामात्यः नाशं पुत्रार्थमब्रुवन् ।।१०२

தஸ்மாத் ராஜேந்த்3ர பூ4ம்யர்த்தே2
நாந்ருத1ம் வக்துமர்ஹஸி ।
மா க3ம: ஸஸுதா1மாத்ய: நாஶம் புத்ரார்த2மப்3ருவன்।।102

ஓ ராஜ ஶ்ரேஷ்டனே, பூமி முழுவதையும் அடைவதற்காக நீ பொய் சொல்லுவது சரியல்ல. பிள்ளைகளிடத்தில் இருக்கும் அன்பினால் ஸத்யம் பேசாமல் இருந்து, பிள்ளைகள், மந்திரிகள் இவர்களுடன் நீர் அழிந்து போகக்கூடாது.

यथा यथाहि पुरुषः कल्याणे कुरुते मनः ।
तथा तथाऽस्य सर्वार्थाःसिध्यन्ते नात्रसंशयः ।।१०३

யதா யதாஹி புருஷ: கல்யாணே கு[1]ருதே[1] மன: ।
ததா[2] ததா[2]ऽஸ்ய ஸர்வார்த்தா[2]:
ஸித்[4]யந்தே நாத்ர ஸம்ஶய: ।। 103

ஒரு மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு நல்ல காரியத்தில் மனதைச் செலுத்துகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனுக்கு எல்லாப் பொருள்களும் கைகூடும்.

नैनं छन्दांसि वृजिनात् तारयन्ति
मायाविनं मायया वर्तमानम् ।
नीडं शकुन्ता इव जातपक्षाः
छन्दांस्येनं प्रजहत्यन्तकाले ।। १०४

நைனம் ச[2]ந்தா[3]ம்ஸி வ்ருஜினாத் தாரயந்தி
மாயாவினம் மாயயா வர்த[1]மானம் ।
நீட[3]ம் ஶகுந்தா இவ ஜாதபக்ஷா:
ச[2]ந்தா[3]ம்ஸ்யேனம் ப்ரஜஹத் யந்த[1]காலே ।। 104

வேதம் கற்றவன் ஆசா[1]ரமில்லாமல் (आचारम्) கபடமாய் வெளி வேஷத்துடன் இருப்பானேயாகில், மரண காலத்தில் அந்த வேதங்களோவெனில், குயில் குஞ்சுகள் தன் தாய்களால் காக்கையின் கூடுகளில் வைக்கப்பட்டிருந்த போதிலும், இறக்கை முளைத்ததும் காக்கையின் கூடுகளை விட்டுப்போவது போல் ஆசாரமில்லாதவனை விட்டு வெளியில் சென்று விடும்.

मद्यपानं कलहं पूगवैरं
भार्यापत्योरन्तरं ज्ञातिभेदम् ।
राजद्विष्टं स्त्रीपुंसयोर्विवादं
वर्ज्यान्याहुः यश्चपन्थाः प्रदुष्टः ।।१०५

மத்[3]யபா[1]னம் கலஹம் பூ[1]க[3] வைரம்
பா[4]ர்யா பத்யோரந்தரம் ஞாதிபே[4]த[3]ம் ।
ராஜத்[3]விஷ்டம் ஸ்த்ரீபும்ஸயோர் விவாத[3]ம்
வர்ஜ்யான்யாஹு: யஶ்சபந்தா[2]: ப்ரது[3]ஷ்ட: ।। 105

கள் குடித்தல், சண்டையிடுதல், பெரியோர் கூட்டத்தை எதிர்த்தல், கணவன் மனைவி இருவர்களையும் பிரித்தல், பங்காளிகளுக்குள் மனஸ்தாபத்தைச் செய்தல், அரசனை விரோதித்தல், ஸ்திரீ புருஷர்கள் கலகம் செய்தல், கெட்ட மார்க்கத்தில் செல்லுதல் இவைகளை விட்டு விட வேண்டுமென பெரியோர்கள் கூறுகின்றனர்.

सामुद्रिकं वणिजं चोरपूर्वं
शलाकधूर्तं च चिकित्सकं च ।
अरिंच मित्रं च कुशीलवं च
नैतान् साक्ष्येत्त्वधिकुर्वीत सप्त ।।१०६

ஸாமுத்[3]ரிக[1]ம் வணிஜம் சோர பூர்வம்
ஶலாகதூ[4]ர்த்த[1]ம் ச சிகித்ஸகம் ச ।
அரிஞ்ச மித்ரம் ச குஶீலவம் ச
நைதான் ஸாக்ஷ்யேத்வதி[4] கு[1]ர்வீத ஸப்த ।। 106

ரேகை பார்த்துச் சொல்லுகிறவனையும், முன்பு திருடனாக இருந்து பின்பு வியாபாரம் செய்கிறவனையும், யோகி வேஷம் போட்டு கயிறு கம்பி வைத்துக்கொண்டு குறி சொல்லுகிறவனையும், வைத்யனையும், சத்ருவையும், நண்பனையும், பாடுகின்றவனையும், ஆக இந்த ஏழு பேர்களையும் ஸாக்ஷியாகவோ, மத்யஸ்தர்களாகவோ (நீதிபதியாகவோ) வைக்கக்கூடாது.

मानाग्निहोत्रमुतमान मौनं
मानेनाधीतमुतमानयज्ञः ।
एतानि चत्वार्यभयङ्कराणि
भयं प्रयच्छन्त्य यथाकृतानि ।।१०७

மானாக்[3]னிஹோத்ரமுதமான மௌனம்
மானேனாதீ[4]த முதமான யஞ: ।
ஏதானி ச[1]த்வாரி அப[4]யங்கராணி
ப[4]யம் ப்ரயச்ச[2]ந்த்ய யதா[2]க்ருதானி ।। 107

பிறர் தன்னை பூஜிக்கப்பதற்காக செய்யும் அக்னிஹோத்ரமும், பிறர் கொண்டாடுவதற்காக வைத்துக் கொண்ட மௌனமும், பிறர் தன்னை பூஜிப்பதற்காக கற்ற வேதமும், யாவரும்

தன்னைப் பெரியவன் எனச் சொல்லுவதற்காகச் செய்யும் தியாகமும், தப்பான எண்ணத்தினால் மாறுபாடாகச் செய்யப்பட்டதால் அவைகள் பயத்தை அளிக்கின்றன. இவைகளையே ஸர்வார்ப்பண புத்தியோடு செய்தால் பயத்தைப் போக்கிவிடும்.

अगारदाहीगरदः कुण्डाशी सोमविक्रयी ।
पर्वकारश्च सूचीच मित्रध्रुक् पारदारिकः ।
भ्रूणहा गुरुतल्पीच यश्चस्यात्पानपो द्विजः ।
अतितीक्ष्णश्च काकश्च नास्तिको वेदनिन्दकः ।
स्त्रुवप्रग्रहणो व्रात्यः कीनाशश्चात्मवानपि ।
रक्षेत्युक्तश्च यो हिंस्यात् सर्वे ब्रह्महभिस्समाः ।।१०८

அகா3ரதா3ஹீக3ரத: குண்டா3ஶீ ஸோம விக்ரயீ ।
பர்வகாரஶ்ச ஸூசீச மித்ர த்4ருக் பார தா3ரிக: ।
ப்4ரூணஹா கு3ருதல்பீச யஶ்சஸ்யாத்பானபோ த்3விஜ:।
அதிதீக்ஷ்ணஶ்ச காகஶ்ச நாஸ்திகோ வேத3 நிந்த3க:।
ஸ்ருவப்ரக்3ரஹணோ வ்ராத்ய: கீநாஶஶ்சாத்மவானபி।
ரக்ஷேத் யுக்தஶ்ச யோ ஹிம்ஸ்யாத்
ஸர்வே ப்3ரம்ஹ ஹபி4ஸ்ஸமா: ।। 108

வீட்டிற்குத் தீ வைப்பவனும், விஷமிடுகின்றவனும், மனைவியை வ்யபிசரிக்கச் செய்து பிழைப்பவனும், ஸோம ராஜாவை (ஸோம கொடியை-सोमलता) விற்கின்றவனும், பிறரைக் கொல்லக் கூடிய ஆயுதங்களைச் செய்கிறவனும், கோள் சொல்லுகிறவனும், நண்பனுக்கு துரோகம் செய்கிறவனும், பிறருடைய மனைவியிடம் சேருகிறவனும், கர்பத்திலிருக்கும் சிசுவைக் கொல்லுகிறவனும், குருவின் மனைவியை புணர்கின்றவனும், கள் குடிக்கும் பிராம்மணர் முதலிய மூன்று வர்ணத்தார்களும், மிகக் கடூரமான மனம் உடையவனும், காக்கை புண்ணைக் குத்துவது போல் துயரம் அடைந்தவனை மேன்மேலும் துயரப்படுத்துகிறவனும், பரலோகம் இல்லையெனச் சொல்லுகிறவனும், வேதங்களை தூஷிப்பவனும், கிராம புரோஹிதனும், உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்களை விட்டவனும்; ஆடு, மாடு முதலியவற்றை ரஹஸ்யமாய் கொல்லுகிறவனும், தன்னைக் காக்க

வேண்டுமென ஶரணம் அடைந்தவனை சக்தி இருந்தும் காக்காமல் கைவிடுகின்றவனும். ஆக இவர்கள் யாவரும் ப்ரம்மஹத்தி செய்தவர்களுக்கு ஸமமானவர்கள்.

तृणोल्कया ज्ञायते जातरूपं
वृत्तेन भद्रो व्यवहारेण साधुः ।
शूरो भयेष्वर्थ कृच्छ्रेषु धीरः
कृच्छ्रेष्वापत्सु सुहृदश्चारयश्च ।।१०९

த்ருணோல்கயா ஞாயதே ஜாத ரூபம்
வ்ருத்1தே1ன ப4த்3ரோ வ்யவஹாரேண ஸாது4: ।
ஶூரோ ப4யேஷ்வர்த்த2 க்ருச்ச்2ரேஷு தீ4ர:
க்ருச்ச்2ரேஷ்வாபத்ஸு ஸுஹ்ருத3ஶ்சாரயஶ்ச ।। 109

தீப்பந்தத்தினால் இருட்டில் உருவமுள்ள வஸ்துவும், தர்மமானது நடத்தையினாலும், துன்பம் செய்யாமை முதலிய வ்யவஹாரத்தினால் ஸாதுவும், பயம் நேரிட்டபோது சூரனும், பொருளாதார நெருக்கடியில் தீரனும்; பஞ்சம் முதலிய சங்கடங்களும் பெரிய ஆபத்துக்களும் நேர்ந்தபோது மித்ரர்களும், சத்ருக்களும் அறியப்படுவார்கள்.

जरा रूपं हरति हि धैर्यमाशा
मृत्युः प्राणान् धर्मचर्यां असूया ।
क्रोधः श्रियं शीलमनार्य सेवा
ह्रियं कामः सर्वमेवाभिमानः ।।११०

ஜரா ரூபம் ஹரதி ஹி தை4ர்யமாஶா
ம்ருத்யு: ப்ராணான் த4ர்மச1ர்யாம் அஸூயா ।
க்ரோத4: ஶ்ரியம் ஶீலமனார்ய ஸேவா
ஹ்ரியம் காம: ஸர்வமேவாபி4மான: ।। 110

கிழத்தனம் ரூபத்தையும், ஆசையானது தைரியத்தையும், எமன் பிராணன்களையும், அஸூயை தர்மம் செய்வதையும், கோபமானது ஸம்பத்தையும் (தெய்வத்தின் அருளால் கிடைத்த ஸம்ருத்தி), அயோக்கியர்களின் சேர்க்கை நல்ல நடத்தையையும், காமம் லஜ்ஜையையும், அஹங்காரம் எல்லாவற்றையுமே அபகரித்துவிடும்.

श्रीर्मङ्गलात् प्रभवति प्रागल्भ्यात् संप्रवर्धते ।
दाक्ष्यात्तु कुरुते मूलं संयमात् प्रतितिष्ठति ।।१११

ஶ்ரீர்மங்க1ளாத் ப்ரப4வதி ப்ராக3ல்ப்4யாத் ஸம்ப்ரவர்த4தே।
தா3க்ஷ்யாத்து கு1ருதேமூலம் ஸம்யமாத் ப்ரதிதிஷ்ட2தி।। 111

மங்கள வஸ்துக்களான வேத வித்துக்கள், அக்னிஹோத்ரி, க3ருட3 ச1யனம் (गरुड चयनम) *செய்தவர், பசு, ஸுமங்கலி, தங்கம், முத்து, பழம், வலது உள்ளங்கை முதலிவற்றை தரிசிப்பதாலும், மங்கள காரியங்களைச் செய்வதாலும் ஐஸ்வர்யம் ஏற்படுகிறது. அது ஸாமர்த்தியத்தால் நன்கு வளர்கின்றது. சீக்கிரமான செய்கையால் வேரூன்றுகிறது. அடக்கத்தால் (அந்த ஐஸ்வர்யம்) நிலைத்து இருக்கின்றது.*

अष्टौ गुणाः पुरुषं दीपयन्ति
प्रज्ञाच कौल्यं च दमः श्रुतं च ।
पराक्रमश्चा बहुभाषिता च
दानं यथाशक्ति कृतज्ञताच ।।११२

அஷ்டௌ கு3ணா: புருஷம் தீ3பயந்தி
ப்ரஞாச கௌ1ல்யம் ச த3ம: ஶ்ருதம் ச ।
பராக்ரமஶ்சா ப3ஹு பா4ஷிதா ச
தா3னம் யதா2 ஶக்தி க்ருதஞதாச ।। 112

அறிவு, நற்குலத்தில் பிறப்பு, ஐம்புலன்களை அடக்குதல், கல்வி, பராக்கிரமம், மிதமாகப் பேசுதல், சக்திக்கு தக்கபடி தானம் செய்தல், நன்றியறிதல், ஆகிய இந்த எட்டு குணங்களும் மனிதனை பிரகாசிக்கச் செய்கின்றன.

इज्याध्ययन दानानि तपस्सत्यं क्षमा घृणा ।
अलोभ इति मार्गोयं धर्मस्याष्टविधः स्मृतः ।।११३

இஜ்யாத்4யயன தா3னானி தபஸ்ஸத்யம் க்ஷமா க்4ருணா।
அலோப4 இதி மார்கோ3யம்
த4ர்ம ஸ்யாஷ்டவித4: ஸ்ம்ருத: ।। 113

யாகம், தானம், அத்4யயனம் (अध्ययनम्), *தவம், ஸத்யம், பொறுமை, த3யை* (दया), *லோப4* (लोभम्)

குணமில்லாமை இவை எட்டும் நரகத்திற்கு வழிகளாகச் சொல்லப்படுகின்றன.

सत्यं रूपं श्रुतं विद्या कौल्यं शीलं बलं धनम्।
शौर्यञ्च चित्रभाष्यञ्च दशेमे स्वर्गयोनयः ।।११४

ஸத்யம் ரூபம் ஶ்ருதம் வித்3யா
கௌ1ல்யம் ஶீலம் ப3லம் த4னம் ।
ஶௌர்யஞ்ச சித்ரபா4ஷ்யஞ்ச
த3ஶேமே ஸ்வர்க3யோனய: ।। 114

உண்மை பேசுதல், அழகு, சாஸ்திரம், வேதாத்1யயனம் **(वेदाध्ययनम)**, *நற்குலப் பிறப்பு, நன்னடத்தை, சரீர பலம், பொருள், சூரத்தன்மை, ஆச்சரியமாய் பேசுதல், இந்தப் பத்தும் ஸ்வர்க ஸுகத்தைப் போன்ற ஸுகத்தை அளிக்கவல்லன.*

पापं कुर्वन् पापकीर्तिः पापमेवाश्नुते फलम् ।
पुण्यं कुर्वन् पुण्यकीर्तिः पुण्यमत्यन्तमश्नुते ।।११५

பாபம் குர்வன் பாபகீர்த்தி: பாபமேவாஶ்னுதே ப2லம்।
புண்யம் குர்வன் புண்யகீர்த்தி:
புண்யம் அத்யந்தம் அஶ்னுதே ।। 115

பாபத்தைச் செய்கிறவன், அபகீர்த்தியை அடைந்து பாபத்தின் பயனான துக்கத்தை அனுபவிக்கிறான். நல்ல கர்மங்களைச் செய்கிறவன் நல்ல புகழை அடைந்து நற்பயனான சுகத்தை அடைகிறான்.

तस्मात्पापं न कुर्वीत पुरुषः संशित व्रतः ।
पापं प्रज्ञां नाशयति क्रियमाणं पुनः पुनः ।
नष्टप्रज्ञः पापमेव नित्यमारभते नरः ।।११६

தஸ்மாத் பாபம் ந குர்வீத புருஷ: ஸம்ஶித வ்ரத: ।
பாபம் ப்ரஜ்ஞாம் நாஶயதி க்ரியமாணம் புன: புன: ।
நஷ்ட ப்ரஜ்ஞ: பாபமேவ நித்யம் ஆரப4தே நர: ।। 116

ஆகையல் மனிதன் நல்ல காரியங்களை தீவிரமாய் செய்துகொண்டு, பாபம் செய்யாதிருக்க வேண்டும். திரும்பத் திரும்ப பாபத்தைச் செய்வதால் புத்தியைக் கெடுத்து விடும்.

புத்தியை இழந்தவன் தினமும் தொடர்ந்து பாபத்தையே செய்வான்.

पुण्यं प्रज्ञां वर्धयति क्रियमाणं पुनः पुनः ।
वृद्धप्रज्ञः पुण्यमेव नित्यमारभते नरः ।
पुण्यं कुर्वन्पुण्यकीर्तिः पुण्यं स्थानंस्मगच्छति ।
तस्मात्पुण्यं निषेवेत पुरुषस्सु समाहितः ।।११७

புண்யம் ப்ரஞாம் வர்த^{4}யதி க்ரியமாணம் புன: புன:।
வ்ருத்^{3}த^{4} ப்ரஞ: புண்யமேவ நித்யமாரப^{4}தே நர: ।
புண்யம் குர்வன் புண்ய கீர்த்தி:
புண்யம் ஸ்தா^{2}னம் ஸ்ம க^{3}ச்ச^{2}தி ।
தஸ்மாத்புண்யம் நிஷேவேத புருஷஸ்ஸு ஸமாஹித:।। 117

திரும்பத் திரும்ப புண்ய கர்மங்களைச் செய்தால் புத்தியை வளர்க்கும். வளர்ந்த புத்தியை உடையவன் தினந்தோறும் புண்ய கர்மத்தையே செய்வான். புண்ய காரியங்களைச் செய்கிறவன் புண்ய லோகங்களை அடைகிறான். ஆகையால் மனிதன் மனதை அடக்கி புண்யத்தையே செய்ய வேண்டும்.

असूयको दन्दशूको निष्ठुरो वैरकृच्छठः ।
सकृच्छ्रं महदाप्नोति न चिरात् पापमाचरन् ।।११८

அஸூயகோ த^{3}ந்த^{3}ஶூகோ
நிஷ்ட்டு^{2}ரோ வைர க்ருச்ச^{2}ட^{2}: ।
ஸ க்ருச்ச்^{2}ரம் மஹதா^{3}ப்னோதி நசிராத் பாபமாசரன் ।। 118

அஸூயைப்படுகிறவனும், குரூரமாகப் பேசுகிறவனும், துவேஷத்தைச் செய்கிறவனும், ரஹஸ்யமாக அப்ரியத்தைச் செய்கிறவனுமான மனிதன் பாபத்தைச் செய்து விரைவில் பெரிய கஷ்டத்தை அடைவான்.

अनसूयुः कृतप्रज्ञः शोभनान्याचरन् सदा ।
नकृच्छ्रं महदाप्नोति सर्वत्र च विरोचते ।।११९

அநஸூயு: க்ருதப்ரஞ: ஶோபநான் யாசரன் ஸதா^{3} ।
நக்ருச்ச்^{2}ரம் மஹதா^{3}ப்னோதி ஸர்வத்ர ச விரோசதே।। 119

அஸூயைப்படாமலும், நல்ல புத்தியுடனும், நல்ல காரியங்களை எப்பொழுதும் செய்து கொண்டிருப்பவன் பெரும் துயரத்தை அடைவதில்லை. எங்கும் பிரகாசிப்பான்.

दिवसेनैव तत्कुर्यात् येनरात्रौ सुखं वसेत् ।
अष्टमासेन तत्कुर्यात् येन वर्षाः सुखं वसेत् ।।
पूर्वे वयसि तत्कुर्यात् येन वृद्धः सुखं वसेत् ।
यावज्जीवेन तत्कुर्यात् येन प्रेत्य सुखं वसेत् ।।१२०

தி^{3}வஸேனைவ தத் குர்யாத்
யேன ராத்ரௌ ஸுக^{2}ம் வஸேத் ।
அஷ்ட மாஸேன தத் குர்யாத்
யேன வர்ஷா: ஸுக^{2}ம் வஸேத் ।।
பூ^{1}ர்வே வயஸி தத் குர்யாத்
யேன வ்ருத்^{3}த^4: ஸுக^{2}ம் வஸேத் ।
யாவஜ் ஜீவேன தத் குர்யாத்
யேன ப்ரேத்ய ஸுக^{2}ம் வஸேத் ।। 120

எதைச் செய்தால் இரவில் சுகமாக இருப்பானோ, அதை பகலிலேயே செய்து கொள்ள வேண்டும். எதைச் செய்தால் மழைகாலம் முழுவதும் ஸுகமாய் வஸிப்பானோ, அதை மற்ற எட்டு மாதங்களில் செய்து கொள்ள வேண்டும். எதனால் வயது காலத்தில் ஸுகமாய் வஸிப்பானோ அதை இளமையிலேயே செய்து கொள்ள வேண்டும். எதனால் இறந்தபின் ஸுகமாய் வஸிப்பானோ, அதை உயிர் உள்ள அளவும் செய்து கொள்ள வேண்டும்.

जीर्णमन्नं प्रशंसन्ति भार्यां च गतयौवनाम् ।
शूरं विजितसंग्रामं गतपारं तपस्विनम् ।।१२१

ஜீர்ணமன்னம் ப்ரஶம்ஸந்தி
பா^{4}ர்யாம் ச க^{3}த யௌவனாம் ।
ஶூரம் விஜித ஸம்க்^{3}ராமம் க^{3}தபா^{1}ரம் தபஸ்வினம் ।। 121

ஜீர்ணமான அன்னத்தையும், யௌவனம் நீங்கிய மனைவியையும், யுத்தத்தில் வெற்றி அடைந்த சூரனையும், தத்வமறிந்த தபஸ்வியையும் கொண்டாடுகிறார்கள்.

धनेनाधर्म लब्धेन यच्छिद्रमपि धीयते ।
असंवृतं तद्भवति ततोऽन्यदवदीर्यते ।।१२२

த4னேநாத4ர்ம லப்3தே4ன யச்சி2த்3ரமபி தீ4யதே ।
அஸம்வ்ருதம் தத்3ப4வதி ததோऽன்யத3வதீ3ர்யதே ।। 122

அதர்மத்தால் ஸம்பாதித்த பொருளை தானம் செய்து தோஷங்களை மறைக்க முயற்சிக்கலாம். ஆனால் அந்த தோஷமும் மறையாமல் ஆவதோடு, வேறு குற்றங்களும் வெளியாகும்.

गुरुरात्मवतां शास्ता शास्ता राजा दुरात्मनाम्।
अथ प्रच्छन्नपापानां शास्ता वैवस्वतो यमः ।।१२३

கு3ருராத்மவதாம் ஶாஸ்தா
ஶாஸ்தா ராஜா து3ராத்மனாம் ।
அத2 ப்ரச்ச2ன்ன பாபானாம்
ஶாஸ்தா வைவஸ்வதோ யம: ।। 123

விவேகம் உள்ளவர்களுடைய தவறை குரு போக்கிவிடுவார். துஷ்டனுடைய தவறை அரசன் போக்கி விடுவான். இவ்விருவர்களுக்கும் தெரியாமல் ரஹஸ்யமாய் தவறு செய்கிறவனை எமன் தண்டித்து விடுவான்.

ऋषीणां च नदीनांच कुलानांच महात्मनाम्।
प्रभवो नाधिगन्तव्यः स्त्रीणां दुश्चरितस्य च ।।१२४

ரிஷீணாம் ச நதீ3நாஞ்ச குலாநாஞ்ச மஹாத்மனாம் ।
ப்ரப4வோ நாதி4க3ந்தவ்ய: ஸ்த்ரீணாம் து3ஶ்சரிதஸ்யச ।।124

முனிவர்கள், நதிகள், மஹான்களுடைய குலம், ஸ்திரீகளின் கெட்ட நடத்தை இவைகளின் காரணங்கள் பரீக்ஷிக்கத் தக்கதல்ல.

द्विजाति पूजाभिरतः दाता ज्ञातिषु चार्जवी ।
क्षत्रियः शीलभाग्राजंश्चिरं पालयते महीम् ।।१२५

த்3விஜாதி பூ1ஜாபி4ரத: தா3தா1 ஞாதிஷு சா1ர்ஜவீ ।
க்ஷத்ரிய: ஶீலபா4க்3ராஜம்ஶ் சி1ரம் பா1லயதே மஹீம் ।। 125

பிராம்மணர்களை பூஜிப்பதில் ஆவல் உள்ளவனும், கொடையாளியும், பந்துக்களிடத்தில் ருஜுவாக (நேர்மையாக) இருப்பவனும், நன்னடத்தை உள்ளவனுமான அரசன் நீண்ட காலம் பதவியில் இருந்து மக்களை பாதுகாப்பான்.

सुवर्णपुष्पां पृथिवीं चिन्वन्ति पुरुषास्त्रयः ।
शूरश्च कृतविद्यश्च यश्च जानाति सेवितुम् ॥१२६

ஸுவர்ண புஷ்பாம் ப்ருதி2வீம்
சின்வந்தி புருஷாஸ் த்ரய: ।
ஶூரஶ்ச க்ருதவித்3யஶ்ச யஶ்ச ஜானாதி ஸேவிதும் ॥ 126

சூரன், நல்ல கல்வி உள்ளவன், தேச ஸேவையை நன்கு செய்யத் தெரிந்தவன் ஆக இம்மூன்று பேர்களும் தங்கம் விளையும் பூமியை அடைவார்கள்.

आक्रुश्यमानो नाक्रोशेन् मन्युरेव तितिक्षतः ।
आक्रोष्टारं निर्दहति सुकृतं चास्य विन्दति ॥१२७

ஆக்ருஶ்யமானோ நாக்ரோஶேன்
மன்யுரேவ தி'தி'க்ஷத: ।
ஆக்ரோஷ்டாரம் நிர்த3ஹதி
ஸுக்ருதம் சாஸ்ய விந்த3தி ॥ 127

கோபமடைந்து தூஷிப்பவனை, பதிலுக்கு தூஷிக்கலாகாது. இவனுடைய பொறுமையே அவனை எரித்து விடும். அவனுடைய புண்யத்தையும் இவன் அடைந்து விடுவான்.

यदि सन्तं सेवति यद्यसन्तं
तपस्विनं यदि वास्तेनमेव ।
वासो यथा रङ्गवशं प्रयाति
तथा स तेषां वशमभ्युपैति ॥ १२८

யதி3 ஸந்தம் ஸேவதி யத்3யஸந்தம்
தபஸ்வினம் யதி3 வாஸ்தேனமேவ ।
வாஸோ யதா2 ரங்க3வஶம் ப்ரயாதி
ததா2 ஸ தேஷாம் வஶமப்யுபைதி ॥ 128

நாஸ்திகனையோ, ஆஸ்திகனையோ தவம் செய்கிறவனையோ, திருடனையோ அடைந்து ஒருவன் வசித்தால் அவர்களது குணமானது இவன் சித்தத்தில் பதிந்துவிடும். வஸ்திரமானது எந்த வர்ணமுள்ள சாயத்தில் நனைக்கிறாமோ அது போலாகும். இவனும் அவ்வாறு ஆகிறான்.

अतिवादं न प्रवदेन्न वादयेत्
योऽनाहतः प्रतिहन्यान्न घातयेत् ।
हन्तुं च यो नेच्छति पापकं वै
तस्मै द्वाः स्पृहयन्त्यागताय ॥१२९

அதிவாத^{3}ம் ந ப்ரவதே^{3}ன்ன வாத^{3}யேத்
யோऽநாஹத: ப்ரதிஹன்யான்ன கா^{4}த^{1}யேத் ।
ஹந்தும் ச யோ நேச்ச^{2}தி பாபகம் வை
தஸ்மை த்^{3}வா: ஸ்ப்ருஹயந்த்யாக^{3}தாய ॥ 129

எவன் அதிகமான வார்த்தை பேசுவதில்லையோ, பிறரைக் கொண்டும் பேசும்படி செய்வதில்லையோ, அடிக்கப்பட்டும் எதிர்த்து அடிப்பதில்லையோ, அடிக்கும்படி செய்கிறதுமில்லையோ, தனக்கு கெடுதி செய்தவனையும் கொல்ல விரும்புகிறதுமில்லையோ, அவன் புண்யலோகம் செல்லும்போது தேவர்கள் ஆசை கொண்டு அழைக்கின்றனர்.

अव्याहृतं व्याहृताच्छ्रेय आहुः
सत्यं वदेत् व्याहृतं तद्द्वितीयम् ।
प्रियं वदेद् व्याहृतं तत्तृतीयं
धर्म्यं वदेद् व्याहृतं तच्चतुर्थम् ॥१३०

அவ்யாஹ்ருதம் வ்யாஹ்ருதாச் ச்^{2}ரேய ஆஹு:
ஸத்யம் வதே^{3}த் வ்யாஹ்ருதம் தத்^{3} த்^{3}விதீயம் ।
ப்ரியம் வதே^{3}த் வ்யாஹ்ருதம் தத் த்ருதீயம்
த^{4}ர்ம்யம் வதே^{3}த் வ்யாஹ்ருதம் தச்சதுர்த்த^{2}ம் ॥ 130

பேசுவதைக் காட்டிலும் பேசாமலிருத்தல் மிகவும் ச்லாக்யமானது என மஹான்கள் சொல்கிறார்கள். (இது முதலாவதாகும்) பேசினால் உண்மையைப் பேச வேண்டும். இது இரண்டாவதாகும். அப்படி உண்மையைப் பேசுவதிலும் பிரியத்தை பேச வேண்டும். இது மூன்றாவதாகும். அப்படி பிரியத்தைப் பேசுவதிலும் தர்மமாய் உள்ளதையே பேச வேண்டும். இது நான்காவதாகும்.

यादृशैः सन्निवशते यादृशांश्चोप सेवते ।
यादृगिच्छेच्च भवितुं तादृग्भवति पूरुषः ।।१३१

யாத்^{3}ருஶை: ஸந்நிவஶதே
யாத்^{3}ருஶாம்ஸ்சோப ஸேவதே ।
யாத்^{3}ருகி^{3}ச்சே^{2}ச்ச ப^{4}விதும் தாத்^{3}ருக்^{3}ப^{4}வதி பூருஷ: ।। 131

மனிதன் எப்படிப்பட்டவர்களுடன் சேருகிறானோ, எப்படிப்பட்டவர்களுடன் சேவை செய்கிறானோ, எப்படிப்பட்டவனாக ஆக விரும்புகிறானோ அப்படிப்பட்டவனாகவே ஆகிறான்.

यतो यतो निवर्तते ततस्ततो विमुच्यते ।
निवर्तनाद्धि सर्वतः न वेत्ति दुःखमण्वपि ।।१३२

யதோ யதோ நிவர்த்ததே ததஸ்ததோ விமுச்யதே ।
நிவர்த்தநாத்^{3}தி^{4} ஸர்வத: ந வேத்தி து^{3}:க^{2}மண்வபி ।। 132

எதெதிலிருந்து விலகுகிறானோ, அததிலிருந்து விடுபடுகிறான். எல்லாவற்றிலிருந்தும் விலகினால் சிறிதும் துக்கம் ஏற்படாது.

भावमिच्छति सर्वस्य नाभावे कुरुते मनः ।
सत्यवादी मृदुर्दान्तः यः स उत्तमपूरुषः ।।१३३

பா^{4}வமிச்ச^{2}தி ஸர்வஸ்ய நாபா^{4}வே கு^{1}ருதே மன: ।
ஸத்யவாதீ^{3} ம்ருது^{3}ர்தா^{3}ந்த: ய: ஸ உத்தம பூ^{1}ருஷ: ।। 133

எல்லோருடைய க்ஷேமத்தையும் கோரி, ஒருவருக்கும் கெடுதல் செய்ய மனமற்றவனாய் இருந்து கொண்டும், ஸத்யம் பேசிக்கொண்டும், மென்மையும் அடக்கம் உள்ளவனாயும் இருப்பவன் உத்தம புருஷனாவான்.

नानर्थकं सान्त्वयति प्रतिज्ञाय ददाति च ।
रन्ध्रं परस्य जानाति यः स मध्यम पूरुषः ।।१३४

நானர்த்த^{2}கம் ஸாந்த்வயதி ப்ரதிக்ஞாய த^{3}தா^{3}தி ச ।
ரந்த்^{4}ரம் பரஸ்ய ஜாநாதி ய: ஸ மத்^{4}யம பூ^{1}ருஷ: ।। 134

பயனில்லாத இன் சொல்லை பேசுவதில்லையோ, கொடுப்பதாகச் சொன்னால் கொடுத்து விடுவானோ, பிறருடைய குற்றத்தை அறிவானோ, அவன் மத்^{1}யம (**मध्यम**) புஷனாவான்.

नश्रद्दधाति कल्याणं परेभ्योऽप्यात्म शङ्कितः।
निराकरोति मित्राणि यो वै सोऽधमपूरुषः ।।१३५

நஶ்ரத்³த³தா⁴தி கல்யாணம் பரேப்⁴யோऽப்யாத்ம ஶங்கித:।
நிராகரோதி மித்ராணி யோ வை ஸோऽத⁴ம பூருஷ:।। 135

தன்னம்பிக்கை இல்லாமலும், மற்றவர்கள் நல்லது சொல்வதையும் நம்பாமல் நண்பர்களையும் விட்டுவிட்டு இருப்பவன் அத⁴மனான (अधमम्- கீழான) மனிதன்.

उत्तमानेव सेवेत प्राप्तकाले तु मध्यमान् ।
अधमांस्तु न सेवेत य इच्छेद्भूतिमात्मनः ।।१३६

உத்தமாநேவ ஸேவேத ப்ராப்தகாலே து மத்⁴யமான்।
அத⁴மாம்ஸ்து ந ஸேவேத ய இச்சே²த்³பூ⁴திமாத்மன:।।136

எவன் தனக்கு ஸம்பத்தை விரும்புகிறானோ, அவன் உத்தமர்களையே ஆஶ்ரயிக்க வேண்டும். அவசியமான ஸமயமேற்பட்டால், மத்யமர்களையும் ஆஶ்ரயிக்கலாம். அதமர்களை ஒருபொழுதும் ஆச்ரயிக்கக் கூடாது.

असंविभागी दुष्टात्मा कृतघ्नो निरपत्रपः ।
तादृङ्नराधिपो लोके वर्जनीयो नराधिप ।।२४६

அஸம்விபா⁴கீ³ து³ஷ்டாத்மா க்ருதக்⁴னோ நிரபத்ரப:।
தாத்³ருங்நராதி⁴போ லோகே வர்ஜநீயோ நராதி⁴ப ।।246

ஓ அரசனே! யாவரும் அனுபவிக்கும்படி பொருளைப் பிரித்துக் கொடாதவனும், கெட்ட மனம் உடையவனும், நன்றி மறந்தவனும், லஜ்ஜை அற்றவனுமான அரசன் உலகத்தில் விலக்கத்தக்கவன்.

न च रात्रौ सुखं शेते ससर्प इव वेश्मनि ।
यःकोपयति निर्दोषं सदोषोऽभ्यन्तरं जनम् ।।२४७

ந ச ராத்ரௌ ஸுக²ம் ஶேதே
ஸஸர்ப்ப இவ வேஶ்மனி ।
ய: கோ¹பயதி நிர்தோ³ஷம்
ஸதோ³ஷோऽப்⁴யந்தரம் ஜனம் ।। 247

எவன் குற்றமுள்ளவனாயிருந்து கொண்டு தன்னிடமுள்ள குற்றமில்லாத மனிதனை கோபமடையச் செய்கிறானோ, அவன் பாம்புள்ள வீட்டில் வசிப்பவன் போல இரவில் சுகமாய்த் தூங்குவதில்லை.

येषु दुष्टेषु दोषः स्यात् योगक्षेमस्य भारत ।
सदा प्रसादनं तेषां देवतानामिवाचरेत् ।।२४८

யேஷு து3ஷ்டேஷு தோ3ஷ: ஸ்யாத்
யோக3க்ஷேமஸ்ய பா4ரத ।
ஸதா3ப்ரஸாத3னம் தே1ஷாம்
தே3வதாநாமிவாசரேத் ।। 248

எவர்கள் மனவருத்தம் அடைந்தால் யோக க்ஷேமத்திற்கு தீங்கு ஏற்படுமோ, அவர்கள் விஷயத்தில் தேவதைகளுக்குச் செய்வது போல் எப்போதும் சந்தோஷம் வரும்படி நடக்க வேண்டும்.

येऽर्थाः स्त्रीषु समायुक्ताः प्रमत्त पतितेषु च ।
येचानार्ये समासक्ताः सर्वे ते संशयं गताः ।।२४९

யேऽர்த்தா2: ஸ்த்ரீஷு ஸமாயுக்தா:
ப்ரமத்த பதி1தே1ஷு ச ।
யேசா1நார்யே ஸமாஸக்தா:
ஸர்வே தே ஸம்ஶயம் க3தா1: ।। 249

ஸ்திரீகளிடத்திலும், கள் முதலியவற்றால் மத3ம் (मदम्) கொண்டவர்களிடத்திலும், ஒழுக்கம் இல்லாதவர்களிடத்திலும், இழிவானவர்களிடத்திலும் (கொடுத்து) வைக்கப்பட்டிருக்கிற பொருள் சந்தேஹத்தை அடைந்தவைகளே. (அதாவது அவர்கள் நம்பி யாரிடமாவது கொடுத்து பொருள் ரக்ஷிக்கப்படாமல் போய்விடுமெனக் கருத்து).

यत्र स्त्री यत्र कितवः बालो यत्रानुशासिता ।
मज्जन्ति तेऽवशा राजन् नद्यामश्मप्लवो यथा।।२५०

யத்ர ஸ்த்ரீ யத்ர கிதவ: பா3லோ யத்ராநுஶாஸிதா।
மஜ்ஜந்தி தே1ऽவஶா ராஜன்
நத்3யாம் அஶ்மப்லவோ யதா2 ।। 250

எந்த குடும்பத்தில் ஸ்திரியும், சூதாடியும், சிறுவனும் அதிகாரம் செலுத்துகிறார்களோ, அந்த குடும்பத்தினர் கல்தெப்பம்போல் நதியில் முழுகுவது போல் துக்கத்தில் அழுந்தினவர்களாகி முழுகி விடுவார்கள்.

यं प्रशंसन्ति कितवाः यं प्रशंसन्ति चारणाः ।
यं प्रशंसन्ति बन्धक्यो न स जीवति मानवः ।।२५१

யம் ப்ரஶம்ஸந்தி கி'த'வா:
யம் ப்ரஶம்ஸந்தி சா'ரணா: ।
யம் ப்ரஶம்ஸந்தி ப'ந்த4க்யோ நஸஜீவதி மானவ: ।।251

எவனை சூதாட்டக்காரர்கள் புகழ்கின்றனரோ, எவனைக் கூத்தாடிகள் புகழ்கின்றனரோ, எவனை விபசாரிகள் புகழ்கின்றனரோ, அவன் உயிருடன் நல்வாழ்க்கை நடத்த முடியாது.

हित्वा तान्परमेष्वासान् पाण्डवानमितौजसः ।
आहितं भारतैश्वर्यं त्वया दुर्योधने महत् ।।२५२

ஹித்வா தான்பரமேஷ்வாஸான்
பாண்ட3வான் அமிதௌஜஸ: ।
ஆஹிதம் பா4ரதைஶ்வர்யம்
த்வயா து3ர்யோத4னே மஹத் ।। 252

ஓ பாரதரே! சிறந்த வில்லை உடையவர்களும் அளவற்ற பராக்கிரமம் உடையவர்களுமான பாண்டவர்களை விட்டுவிட்டு, உம்மால் துரியோதனனிடத்தில் பெரிய ஐஸ்வர்யம் வைக்கப்பட்டிருக்கிறது.

तं द्रक्ष्यसि परिभ्रष्टं तस्मात्त्वं अचिरादिव ।
ऐश्वर्यमद संमूढं बलिं लोकत्रयादिव ।।२५३

தம் த்3ரக்ஷ்யஸி பரிப்4ரஷ்டம்
தஸ்மாத் த்வம் அசி'ராதி3வ ।
ஐஶ்வர்யமத3 ஸம்மூட4ம் ப3லிம் லோகத்ரயாதி3வ ।।253

ஐஶ்வர்ய மத3த்தால் **(मदम्)** புத்தி மயங்கி இருக்கின்ற அவன் (துர்யோதனன்) அந்த ஐஶ்வர்யத்திலிருந்து, மூவுலகங்களிலிருந்தும் மஹாபலி நழுவினது போல், உன் பிள்ளை நழுவி வருந்தப்படுவதைப் பார்ப்பீர்.

धृतराष्ट्र उवाच -

अनीश्वरोयं पुरुषो भवाभवे
सूत्रप्रोता दारुमयीव योषा ।
धात्रा तु दिष्टस्य वशे कृतोऽयं
तस्माद्वद त्वं श्रवणे धृतोऽहम् ।।२५४

த்4ருதராஷ்ட்ர உவாச -

அநீஸ்வரோயம் புருஷோ ப4வாப4வே
ஸூத்ரப்ரோதா தா3ருமயீவ யோஷா ।
தா4த்ரா து தி3ஷ்டஸ்ய வஶே க்ருதோऽயம்
தஸ்மாத்3 வத3 த்வம் ஶ்ரவணே த்4ருதோऽஹம் ।। 254

திருதராஷ்டிரன் சொல்லுகிறார்: மனிதன் பிரம்மாவினால் முன்வினைப்பயனை அனுசரித்து படைக்கப்பட்டு இருப்பதால் பொருள் உடையவனாகவும், பொருள் இல்லாதவனாகவும், கயிற்றில் கோர்க்கப்பட்டதும் மரத்தால் செய்யப்பட்டதுமான பெண் பொம்மை போல அசக்தனாக **(अशक्तः)** *இருக்கிறான். ஆகையால் நீ அதைச் செய் இதைச் செய் எனக்கூறுகிறாயே, எப்படிச் செய்ய முடியும்? நீ கோபித்துக் கொள்ளாமல் நான் உறுதியுடன் கேட்கிறேன் என திருதராஷ்டிரன் கேட்டான்.*

विदुर उवाच -

अप्राप्तकालं वचनं बृहस्पतिरपि ब्रुवन् ।
लभते बुद्ध्यवज्ञानं अवमानं च भारत ।। २५५

விது3ர உவாச -

அப்ராப்தகாலம் வசனம் ப்3ருஹஸ்பதிரபி ப்3ருவன்।
லப4தே பு3த்3த்4யவஞானம் அவமானம் ச பா4ரத ।। 255

விதுரர் சொல்லுகிறார்: ஓ அரசனே! ஸமயம் தவறி வார்த்தை சொல்லுகிறவன், பிருஹஸ்பதியாக இருந்தாலும், புத்திக் குறைவையும் அவமானத்தையும் அடைகிறான்.

प्रियो भवति दानेन प्रियवादेन चापरः ।
मन्त्रमूल बलेनान्यः यः प्रियः प्रिय एव सः ।।२५६

ப்ரியோ ப^{4}வதி தா^{3}னேன ப்ரியவாதே^{3}ன சாபர: ।
மந்த்ரமூல ப^{3}லேநான்ய: ய: ப்ரிய: ப்ரிய ஏவ ஸ: ।। 256

ஒருவன் தானத்தினால் பிரியனாகிறான். மற்றொருவன் இனிமையாகப் பேசுவதினால் பிரியனாகிறான். வேறு ஒருவன் நல்ல ஆலோசனையைக் கூறுவதினால் பிரியனாகிறான். எவன் இயற்கையாகவே பிரியனாக இருக்கிறானோ அவன் எப்பொழுதும் பிரியமுள்ளவன்.

द्वेष्यो न साधुर्भवति न मेधावी न पण्डितः ।
प्रिये शुभानि कार्याणि द्वेष्यं पापानि चैवह ।।२५७

த்^{3}வேஷ்யோ ந ஸாது^{4}ர்ப^{4}வதி நமேதா^{4}வீ நபண்டி^{3}த: ।
ப்ரியே ஶுபா^{4}னி கார்யாணி
த்^{3}வேஷ்யம் பாபானி சைவ ஹ ।। 257

வேண்டாதவனாக இருந்தால், அவன் நல்லவனாக இருந்தாலும் நல்லவனெனத் தோன்றாது. புத்திமானும் புத்திமானாகத் தோன்றுவதில்லை. பண்டிதனும் பண்டிதனாகத் தோன்றுவதில்லை. பிடித்த மனிதன் செய்யும் காரியமெல்லாம் நல்லதென்றே தோன்றும். வேண்டாதவன் செய்த காரியமெல்லாம் கெட்டதென்றே தோன்றும்.

उक्तं मया ज्ञातमात्रेपि राजन्
दुर्योधनं त्यज पुत्रं त्वमेकम् ।
तस्य त्यागात् पुत्रशतस्य वृद्धिः
अस्यात्यागात् पुत्रशतस्य नाशः ।।२५८

உக்தம் மயா ஞாதமாத்ரேபி ராஜன்
து^{3}ர்யோத^{4}னம் த்யஜ புத்ரம் த்வமேகம் ।
தஸ்ய த்யாகா^{3}த் புத்ர ஶதஸ்ய வ்ருத்^{3}தி^{4}:
அஸ்யா த்யாகா^{3}த் புத்ரஶதஸ்ய நாஶ: ।।258

அரசனே! துர்யோதனன் பிறந்தவுடன் அவனை விட்டுவிடும்(தியாகம் செய்யும்)படியும், அந்த பிள்ளையை விடுவதால் மற்ற நூறு குழந்தைகள் விருத்^{3}தி^{4} (वृद्धि) அடைவார்கள் என்றும் அவனை விடாவிடில் மற்ற எல்லோருக்கும் நாசம் எனவும் நான் கூறினேன்.

न वृद्धिर्बहुमन्तव्या या वृद्धिः क्षयमावहेत् ।
क्षयोपि बहुमन्तव्यः यः क्षयो वृद्धिमावहेत् ।।२५९

ந வ்ருத்'தி⁴ர் ப³ஹுமந்த'வ்யா
யா வ்ருத்³தி⁴: க்ஷயமாவஹேத் ।
க்ஷயோபி ப³ஹுமந்த'வ்ய:
ய: க்ஷயோ வ்ருத்³தி⁴மாவஹேத் ।। 259

எந்த விருத்தியானது (वृद्धि) பின்பு நாசத்தை அளிக்குமோ அந்த வளர்ச்சியை பெரிதென நினைக்கக்கூடாது. குறைவாக இருந்தாலும் எந்த குறைவானது பின்பு விருத்தியை அளிக்குமோ அதையே பெரிதாக நினைக்கவேண்டும்.

समृद्धा गुणतः केचित् भवन्ति धनतोऽपरे ।
धनवृद्धान् गुणैर्हीनां धृतराष्ट्र विवर्जय ।।२६०

ஸம்ருத்³தா⁴ கு³ணத: கேசித் ப⁴வந்தி த⁴னதோऽபரே।
த⁴னவ்ருத்³தா⁴ன் கு³ணைர் ஹீனாம்
த்⁴ருதராஷ்ட்ர விவர்ஜய ।। 260

ஒ திருதராஷ்டிரனே! சிலர் குணங்களால் பூர்ணர்களாக இருக்கிறார்கள். சிலர் தனத்தால் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். தனத்தினால் நிறைந்திருந்தாலும் குணத்தினால் குறைந்தவர்களை விட்டுவிட வேண்டும்.

धृतराष्ट्र उवाच -

सर्वं त्वमायतीत्युक्तं भाषसे प्राज्ञ संमतम् ।
न चोत्सहे सुतं त्यक्तुं यतो धर्मस्ततो जयः ।।२६१

த்⁴ருதராஷ்ட்ர உவாச -
ஸர்வம் த்வமாயதீ'த் யுக்தம்
பா⁴ஷஸே ப்ராக்ஞ ஸம்மதம் ।
ந சோத்ஸஹே ஸுத'ம் த்யக்தும்
யதோ த⁴ர்மஸ் ததோ ஜய: ।। 261

திருதராஷ்டிரன் கேட்டார்- நீ கூறுவதானது அறிவு உள்ளவர்கள் ஒப்புக்கொள்ளக் கூடியதாகவும், வருங்காலத்தில் நன்மையை அளிக்கக்கூடியதாகவும் உள்ளது. ஆனால் பிள்ளையை விட்டுவிட எனக்குத் துணிவு இல்லை. எங்கு தர்மம் உள்ளதோ அங்கு ஜெயம் (எனக் கூறினார்).

विदुर उवाच -

अतीव गुणसंपन्नः न जातु विनयान्वितः ।
सुसूक्ष्ममपि भूतानां उपमर्दमुपेक्षते ।।२६२

விது^{3}ர உவாச -

அதீ^{1}வ கு^{3}ண ஸம்பன்ன: ந ஜாது வினயான்வித: ।
ஸுஸூக்ஷ்மமபி பூ^{4}தானாம் உபமர்த^{3}முபேக்ஷதே ।।262

விதுரர் பதில் கூறுகிறார்: நிரம்பிய குணமுள்ளவனும், வணக்கத்துடன் இருப்பவனுமான மனிதன் பிராணிகளுக்கு ஏற்படும் சிறிய நாசத்தைக்கூட பொறுக்கமாட்டான்.

निवर्तमाने सौहार्दे प्रीतिर्नीचे प्रणश्यति ।
या चैव फलनिर्वृत्तिः सौहृदे चैव यत्सुखम् ।।२६३

நிவர்த்தமானே ஸௌஹார்தே^{3}
ப்ரீதிர் நீசே ப்ரணஶ்யதி ।
யா சைவ ப^{2}லநிர்வ்ருத்^{1}தி:
ஸௌஹ்ருதே^{3} சைவ யத் ஸுக^{2}ம் ।।263

இழிவானவனிடத்தில் ஸ்நேஹம் நீங்கும்போது அன்பும், அவனால் ஏற்படும் உதவியும், ஸ்நேஹத்தால் ஏற்பட்ட ஸுகமும் அழியும். அப்படிப்பட்டவனை விட்டுவிடவேண்டும்.

यतते चापवादाय यत्नं आरभते क्षये ।
अल्पेष्यपहृते मोहात् न शान्तिमधिगच्छति ।।२६४

யததே சாபவாதா^{3}ய யத்னம் ஆரப^{4}தே க்ஷயே ।
அல்பேஷ்யபஹ்ருதே
மோஹாத் ந ஶாந்திமதி^{4} க^{3}ச்ச^{2}தி ।। 264

எவன் அபவாதம் சொல்லுவதிலும், நாசம் செய்வதிலும் முயலுவானோ, அறியாமல் சிறிது அபகாரம் செய்தாலும் பொறுமையாக எவன் இருப்பதில்லையோ, அப்படிப் பட்ட நீசர்களை புத்தியினால் நன்கு ஆராய்ந்து புத்திமான் தூரத்தில் விலக்கிவிட வேண்டும்.

यो ज्ञातिमनुगृण्हाति दरिद्रं दीनमातुरम् ।
स पुत्रपशुभिः वृद्धिं श्रेयश्चानन्त्यमश्नुते ।।२६५

யோ ஞாதிமனுக்[3]ருண்ஹாதி த[3]ரித்[3]ரம் தீ[3]னமாதுரம்।
ஸ புத்ர பஶுபி[4]: வ்ருத்[3]தி[4]ம்
ஶ்ரேயஶ்சானந்த்ய மஶ்னுதே ।। 265

எவன் பங்காளியையும், ஏழையையும், மனக்கவலை உள்ளவனையும், நோயாளியையும் உபகரித்து பாதுகாக்கிறானோ, அவன் புத்ரர்களாலும் பசுக்களாலும் அபிவிருத்தியையும் அளவுகடந்த க்ஷேமத்தையும் அடைவான்.

ज्ञातयो वर्धनीयास्तैर्य इच्छन्त्यात्मनः शुभम् ।
कुलवृद्धिं च राजेन्द्र तस्मान् साधु समाचर ।।
श्रेयसा योक्ष्यते राजन्
कुर्वाणो ज्ञातिसत्क्रियाम् ।।२६६

ஞாதயோ வர்த[4]நீயாஸ்தைர்ய
இச்ச[2]ந்த்[1]யாத்மன: ஶுப[4]ம் ।
குலவ்ருத்[3]தி[4]ம் ச ராஜேந்த்[3]ர
தஸ்மான் ஸாது[4] ஸமாச[1]ர ।।
ஶ்ரேயஸா யோக்ஷ்யதே ராஜன்
கு[1]ர்வாணோ ஞாதி ஸத் க்ரியாம் ।। 266

எவர்கள் தனக்கு நன்மையையும் குலத்திற்கு வளர்ச்சியையும் விரும்புகிறார்களோ, அவர்கள் ஞாதிகளை விருத்தி (वृद्धि) அடையச் செய்யவேண்டும். ஆகையால் நன்மையைச் செய்யும் ஞாதிகளைப் பூஜிப்பவன் க்ஷேமத்தை அடைவான்.

विगुणा ह्यपि संरक्ष्या ज्ञातयो भरतर्षभ ।
किंपुनर्गुणवन्तस्ते त्वत्प्रसादापिकाङ्क्षिणः ।।२६७

விகு[3]ணா ஹ்யபி ஸம்ரக்ஷ்யா
ஞாதயோ ப[4]ரதர்ஷப[4] ।
கிம் புனர்கு[3]ணவந்தஸ்தே
த்வத் ப்ரஸாதா[3]பி[4]காங்க்ஷிண: ।। 267

ஞாதிகள் கெட்ட குணங்கள் உள்ளவர்களாக இருந்தாலும் நன்கு ரக்ஷிக்கத் தகுந்தவர்கள். தனவான்களும் உமது அனுக்ரஹத்தை விரும்புகின்றவர்களுமான பாண்டவர்கள் விஷயத்தில் சொல்லவும் வேண்டுமா?

प्रसादं कुरु वीराणां पाण्डवानां विशांपते ।
दीयन्तां ग्रामकाःकेचित् तेषां वृत्त्यर्थमीश्वर ।।२६८

ப்ரஸாத^{3}ம் கு^{1}ரு வீராணாம்
பாண்ட^{3}வானாம் விஶாம்ப^{1}தே ।
தீ^{3}யந்தாம் க்^{3}ராமகா^{1}: கேசித் தேஷாம்
வ்ருத்^{1}யர்த்த^{2}ம் ஈஶ்வர ।। 268

ஓ ராஜனே, வீரர்களான பாண்டவர்களுக்கு அனுக்ரஹம் செய்யும். அவர்களுடைய ஜீவனத்திற்காக சில கிராமங்களைக் கொடும்.

एवं लोके यशः प्राप्तं भविष्यति नराधिप ।
वृद्धेन हि त्वया कार्यं पुत्राणां तात शासनम् ।
मया चापि हितं वाच्यं
विद्धि मां त्वद् हितैषिणम् ।।२६९

ஏவம் லோகே யஶ:ப்ராப்தம் ப^{4}விஷ்யதி நராதி^{4}ப।
வ்ருத்^{3}தே^{4}ன ஹி த்வயா கார்யம்
புத்ராணாம் தா^{1}த^1 ஶாஸனம் ।
மயா சாபி ஹிதம் வாச்யம்
வித்^{3}தி^{4} மாம் த்வத் ஹிதைஷிணம் ।। 269

இப்படிச் செய்தால் உலகில் உமக்கு கீர்த்தி ஏற்படும். வயது முதிர்ந்த நீர் புத்ரர்களுக்கு உத்தரவு போடவேண்டும். நான் உமக்கு நன்மையைக் கூறக் கடமைப்பட்டவன். நான் உமது நன்மையைக் கோருகிறவன்.

ज्ञातिभिः विग्रहस्तात न कर्तव्यः शुभार्थिना ।
सुखानि सह भोज्यानि ज्ञातिभिः भरतर्षभ ।।२७०

ஞாதிபி^{4}: விக்^{3}ரஹஸ் தாத
ந க^{1}ர்த்தவ்ய: ஶுபா^{4}ர்த்தி^{2}னா ।
ஸுகா^{2}னி ஸஹபோ^{4}ஜ்யானி ஞாதிபி^{4}: ப^{4}ரதர்ஷப^4 ।।270

பக்ஷங்களை விரும்புகிறவன் பங்காளிகளுடன் சண்டையிடக் கூடாது. ஞாதிகளோடு கூடத்தான் ஸுகங்களை அனுபவிக்க வேண்டும்.

संभोजनं संकथनं संप्रीतिश्च परस्परम् ।
ज्ञातिभिः सहकार्याणि न विरोधः कदाचन ।।२७१

ஸம்போ4ஜனம் ஸங்க1த2னம்
ஸம்ப்ரீதிஶ்ச பரஸ்பரம் ।
ஞாதிபி4: ஸஹ கார்யாணி ந விரோத4: க1தா3சன ।। 271

ஞாதிகளுடன் கூட ஒருவரிடத்தில் ஒருவர் நல்ல போ4ஜனம் **(भोजनम्)**, நல்ல பேச்சுக்கள், நல்ல அன்பும் செய்யவேண்டும். ஒரு பொழுதும் விரோதம் செய்யத்தக்கதன்று.

ज्ञातयस्तारयन्तीह ज्ञातयो मज्जयन्ति च ।
सुवृत्तास्तारयन्तीह दुर्वृत्ता मज्जयन्ति च ।।२७२

ஞாதயஸ்தாரயந்தீஹ க்ஞாதயோ மஜ்ஜயந்தி ச ।
ஸுவ்ருத்1தா1ஸ் தாரயந்தீ1ஹ
து3ர்வ்ருத்1தா1 மஜ்ஜயந்தி ச ।। 272

ஞாதிகள் ஆபத்துக்களை தாண்டுவிப்பார்கள். ஞாதிகள் ஆபத்துக்களில் முழுகும்படியும் செய்வார்கள். நல்ல குணமுள்ளவர்கள் தாண்டுவிப்பார்கள். தீய குணமுள்ளவர்கள் முழுகச் செய்வார்கள்.

श्रीमन्तं ज्ञातिमासाद्य यो ज्ञातिरवसीदति ।
दिग्धहस्तं मृग इव स एनस्तस्य विन्दति ।।२७३

ஶ்ரீமந்தம் ஞாதிமாஸாத்3ய யோ ஞாதிரவஸீத3தி ।
தி3க்3த4 ஹஸ்தம் ம்ருக3 இவ
ஸ ஏனஸ்தஸ்ய விந்த3தி ।। 273

எந்த ஞாதியானவன், பொருள்ள தனது ஞாதியை அடைந்தும் நன்மையை அடையவில்லையோ, அந்த ஞாதியின் துன்பமானது விஷம் பூசிய பா3ணத்தால் **(बाणम्)** மானைக் கொன்ற பாபம் வேடனை வந்து அடைவது போல் ஶ்ரீமானான ஞாதியை அடையும்.

पश्चादपि नरश्रेष्ठ तव तापो भविष्यति ।
तान्वा हतान्सुतान्वापि श्रुत्वा तदनुचिन्तय ।।२७४

பஶ்சாத³பி நரஶ்ரேஷ்ட² தவ தாபோ ப⁴விஷ்யதி।
தா¹ன்வா ஹதா¹ன் ஸுதா¹ன்வாபி
ஶ்ருத்வா தத³நுசிந்தய ।। 274

ஓ அரசனே! யுத்தத்தில் உனது பிள்ளைகள் மறைந்தாலும் பாண்டவர்கள் மடிந்தாலும் உனக்கு பின்பு தாபம் (तापम्) நிச்சயம் ஏற்படும். அதை இப்போதே யோசியும்.

येन खट्वां समारूढः परितप्येत कर्मणा ।
आदावेव न तत्कुर्यात् अध्रुवे जीविते सति ।।२७५

யேன க²ட்வாம் ஸமாரூட⁴: பரிதப்யேத கர்மணா।
ஆதா³வேவ நதத்குர்யாத் அத்⁴ருவே ஜீவிதேஸதி।।275

உயிர் நிலையில்லாதது. எந்தக் காரியத்தைச் செய்தால் பின்பு கட்டிலில் படுத்து மனம் தவிக்குமோ, அந்தக் காரியத்தை முன்னமேயே யோசித்து செய்யாமல் இருக்க வேண்டும்.

दुर्योधनेन यद्येतत् पापं तेषु पुरा कृतम् ।
त्वया तत्कुलवृद्धेन प्रत्यानेयं नरेश्वर ।। २७६

து³ர்யோத⁴னேன யத்³யேதத்
பாபம் தேஷு புரா க்ருதம் ।
த்வயா தத் குல வ்ருத்³தே⁴ன
ப்ரத்யானேயம் நரேஶ்வர ।। 276

துரியோதனனால் முன்பு தவறு செய்யப்பட்டு விட்டது என்றாலும், குலவிருத்³த⁴ரான (कुल वृद्धः) நீர் அதை சீர்திருத்தி அக்குற்றத்தை நீக்கிவிடும்.

तांस्त्वं पदे प्रतिष्ठाप्य लोके विगत कल्मषः ।
भविष्यसि नरश्रेष्ठ पूजनीयो मनीषिणाम् ।।२७७

தாம்ஸ்த்வம் ப¹தே³ ப்ரதிஷ்டா²ப்ய
லோகே விக³த கல்மஷ: ।

ப⁴விஷ்யஸி நரஸ்ரேஷ்ட²
பூ'ஜனீயோ மனீஷிணாம் ।। 277

நீ அரசனே! நீ அவர்களை ஒரு பக்கத்தில் நிலைக்கச் செய்து, உலகில் உயர்ந்த ஏற்பட்ட களங்கத்தை நீக்கிக் கொண்டு புத்திமான்களால் பூஜிக்கத்தக்கவராக ஆவீர்.

सुव्याहृतानि धीराणां फलतः परिचिन्त्य यः।
अध्यवस्यति कार्येषु चिरं यशसि तिष्ठति ।।२७८

ஸுவ்யாஹ்ருதானி தீ⁴ராணாம் ப²லத: பரிசிந்த்ய ய:।
அத்⁴யவஸ்யதி கார்யேஷு
சிரம் யஶஸி திஷ்ட²தி ।। 278

எவன் தீரர்களுடைய நல்வார்த்தையைக் கேட்டு, பயனேற்படுமாவென ஆலோசித்து, காரியங்களில் நிச்சயத்தை அடைகிறானோ, அவன் நீண்ட காலம் புகழுடன் விளங்குவான்.

असम्यगुपयुक्तं हि ज्ञानं सुकुशलैरपि ।
उपलभ्यं चाविदितं विदितं चाननुष्ठितम् ।।२७९

அஸம்யகு³ப யுக்தம்ஹி ஞானம் ஸுகுஶலைரபி ।
உபலப்⁴யம் சாவிதி³தம் விதி³தம் சானநுஷ்டி²தம் ।।279

மிகவும் ஸமர்த்தர்களாக இருந்தாலும் அறிய வேண்டியதை அறியாமலும் அந்தந்ததைச் செய்யாமலும் இருப்பார்களாகில், அவர்கள் தங்கள் அறிவை நல்லதில் உபயோகப்படுத்தினவர்களாக ஆக மாட்டார்கள்.

पापोदयफलं विद्वान् यो नारभति वर्धते ।।२८०

பாபோத³யப²லம் வித்³வான் யோ நாரப⁴தி வர்த⁴தே ।। 280

எவன் பாபத்தை அளிக்கும் காரியத்தை அறிந்து ஆரம்பிக்காமல் இருக்கிறானோ, அவன் விருத்³தி¹ (वृद्धि) அடைவான்.

यस्तु पूर्वकृतं पापं अविमृश्यानुवर्तते ।
अगाधपङ्के दुर्मेधा विषमे विनिपात्यते ।।२८१

யஸ்து பூர்வக்ருதம் பாபம்
அவிம்ருஶ்யாநு வர்த்ததே ।
அகா³த⁴பங்கே து³ர்மேதா⁴ விஷமே விநிபாத்யதே ।।281

எவன் முன்பு செய்த பாபத்தை போக்காமல் பின்பும் தொடர்ந்து செய்கிறானோ அவன் அஜ்ஞான சேற்றில் தள்ளப்படுவான். (துன்பமான நரகங்களை அனுபவிப்பான் எனக் கருத்து).

न वै श्रुतमविज्ञाय वृद्धाननुपसेव्य वा ।
धर्मार्थौ वेदितुं शक्यौ बृहस्पति समैरपि ॥२८२

நவை ஶ்ருதமவிஞாய வ்ருத்3தா4னநுபஸேவ்யவா।
த4ர்மார்த்தௌ2 வேதி3தும் ஶக்யௌ
ப்3ருஹஸ்பதி ஸமைரபி ॥ 282

ப்ருஹஸ்பதிக்கு ஸமானமான புத்தி உள்ளவர்களாக இருந்த போதிலும் சாஸ்திரத்தை அறியாமலும் பெரியோர்களை ஸேவிக்காமலும் தர்மார்த்தங்களை அறிய மாட்டார்கள்.

नष्टं समुद्रे पतितं नष्टं वाक्यमशृण्वति ।
अनात्मनि श्रुतं नष्टं नष्टं हुतमनग्निकम् ॥२८३

நஷ்டம் ஸமுத்3ரே ப1தி1த1ம்
நஷ்டம் வாக்யமஶ்ருண்வதி ।
அநாத்மனி ஶ்ருதம் நஷ்டம்
நஷ்டம் ஹுதமனக்3னிகம் ॥283

கடலில் விழுந்தது வீணே, கேளாதவனிடத்தில் நல்லதை கூறுவதும் வீணானதே, மனத்தை அடக்காதவனிடத்தில் இருக்கும் சாஸ்திரமும் வீணானதே. (அக்னியில் செய்யாமல்) சாம்பலில் செய்த ஹோமமும் வீணே.

अकीर्तिं विनयो हन्ति हन्त्यनर्थं पराक्रमः ।
हन्ति नित्यं क्षमा क्रोधं
आचारो हन्त्यलक्षणम् ॥२८४

அகீர்த்திம் வினயோ ஹந்தி
ஹந்த்யனர்த்த2ம் பராக்ரம: ।
ஹந்தி நித்யம் க்ஷமா க்ரோத4ம்
ஆசாரோ ஹந்த்யலக்ஷணம் ॥ 284

ஆசாரமானது அபகீர்த்தியைப் போக்கும். பராக்ரமம் கஷ்டங்களைப் போக்கும். பொறுமை எப்பொழுதும் கோபத்தைப் போக்கும். ஆசாரமானது அழகின்மையைப் போக்கும்.

परिच्छदेन क्षेत्रेण वेश्मना परिचर्यया ।
परीक्षेत कुलं राजन् भोजनाच्छादनेन च ।।२८५

பரிச்ச²தே³ன க்ஷேத்ரேண வேஶ்மனா பரிசர்யயா।
பரீக்ஷேத குலம் ராஜன் போ⁴ஜனாச்சா²த³னேன ச।।285

அனுபவிக்கும் பொருள்களாலும், பிறப்புக்குக் காரணமான தாய் தந்தையாலும், வஸிக்கும் வீட்டினாலும், ஆசாரத்தாலும், ஆஹாரத்தாலும், வஸ்திரத்தாலும் குலத்தைக் கண்டு அறிய வேண்டும்.

उपस्थितस्य कामस्य प्रतिवादो न विद्यते ।
अपि निर्मुक्तदेहस्य कामरक्तस्य किं पुनः ।।२८६

உபஸ்த்தி²தஸ்ய காமஸ்ய ப்ரதிவாதோ³ நவித்³யதே।
அபி நிர்முக்த தே³ஹஸ்ய காமரக்தஸ்ய கிம் புன:।।286

சரீரத்தில் அபிமானத்தை விட்டவனுக்குக்கூட காமம் ஏற்பட்டால் அதைத் தடுக்க முடியாது. சரீர அபிமானம் உள்ளவனுக்குக் காமம் ஏற்பட்டால் கேட்கவும் வேண்டுமா?

प्राज्ञोपसेविनं वैद्यं धार्मिकं प्रियदर्शनम् ।
मित्रवन्तं सुवाक्यं च सुहृदं परिपालयेत् ।।२८७

ப்ராக்ஞோப ஸேவினம் வைத்³யம்
தா⁴ர்மிகம் ப்ரிய த³ர்ஶனம் ।
மித்ரவந்த¹ம் ஸுவாக்யம் ச
ஸுஹ்ருத³ம் பரிபாலயேத் ।। 287

புத்திமான்களை ஸேவிக்கின்றவனும், வித்வானும், தர்மிஷ்டனும், கண்ணுக்கு அழகாக இருப்பவனும், நல்ல ஸ்நேஹிதர்களை உடையவனும், நல்ல வார்த்தை பேசுகிறவனுமான நண்பனை பரிபாலிக்க வேண்டும்.

दुष्कुलीनः कुलीनो वा मर्यादां योन लंघयेत्।
धर्मापेक्षी मृदुर्ह्रीमान् स कुलीन शताद्वरः ।।२८८

து³ஷ்குலீன: குலீனோ வா
மர்யாதா³ம் யோன லங்க⁴யேத் ।
த⁴ர்மாபேக்ஷீ ம்ருது³ர்ஹ்ரீமான்
ஸ கு¹லீன ஶதாத்³வர: ।। 288

கெட்ட குலத்தில் பிறந்தவனானாலும், நல்ல குலத்தில் பிறந்தவனானாலும், எவன் மரியாதையை (முன்னோர்கள் கடைப்பிடித்த ஆசாரத்தை) தாண்டாமல் இருக்கிறானோ, தர்மத்தை விரும்புகிறவனும், மென்மையானவனும், அடக்கமுள்ளவனுமான அவன் நற்குலத்தோர்கள் நூறு பேர்களைக் காட்டிலும் சிறந்தவன்.

ययोश्चित्तेन वा चित्तं निभृतं निभृतेन वा ।
समेति प्रज्ञया प्रज्ञा तयोर्मैत्री न जीर्यति ।।२८९

யயோஶ்சித்தேன வா சி¹த்தம்
நிப்⁴ருதம் நிப்⁴ருதேன வா ।
ஸமேதி ப்ரஜ்ஞயா ப்ரஜ்ஞா
தயோர் மைத்ரீ ந ஜீர்யதி ।। 289

எந்த இருவர்களுக்கு எண்ணத்தோடு எண்ணமும், ரஹஸ்யத்தோடு ரஹஸ்யமும், அறிவோடு அறிவும் ஒத்துப்போகிறதோ அவர்களுடைய ஸ்நேஹமானது கெடுவதில்லை.

दुर्बुद्धिमकृतप्रज्ञं छन्नं कूपं तृणैरिव ।
विवर्जयीत मेधावी तस्मिन्मैत्री प्रणश्यति ।।२९०

து³ர்பு³த்³தி⁴மக்ருத ப்ரஜ்ஞம்
ச²ன்னம் கூ¹ப¹ம் த்ருணைரிவ ।
விவர்ஜயீத மேதா⁴வீ தஸ்மின்மைத்ரீ ப்ரணஶ்யதி ।।290

மேதாவியானவன், கெட்ட புத்தி உடையவனையும், படிப்பில்லாமல் அறிவற்றவனாய் இருப்பவனையும், புல்லினால் மூடப்பட்ட காட்டிலுள்ள கிணற்றைப்போல் விலக்க வேண்டும். அவனிடத்தில் செய்யும் ஸ்நேஹம் கெட்டுவிடும்.

अवलिप्तेषु मूर्खेषु रौद्रसाहसिकेषु च ।
तथैवापेतधर्मेषु न मैत्रीं आचरेद्बुधः ।।२९१

அவலிப்தேஷு மூர்க்கே2ஷு
ரௌத்3ர ஸாஹஸிகேஷு ச ।
ததை2வாபேத த்4ர்மேஷு
நமைத்ரீம் ஆசரேத்3பு3த4: ।। 291

பண்டிதனானவன், கர்வம் கொண்டவர்களிடத்திலும், மூடர்களிடத்திலும், கோபம் உள்ளவர்களிடத்திலும், ஆலோசிக்காமல் செய்கிறவனிடத்திலும், தர்மம் விலகினவர்களிடத்திலும் ஸ்நேஹம் செய்யக் கூடாது.

कृतज्ञं धार्मिकं सत्यमक्षुद्रं दृढ भक्तिकम् ।
जितेन्द्रियं स्थितंस्थित्यां मित्रमत्यागिचेष्यते।।२९२

க்ருதஜ்ஞம் தா4ர்மிகம் ஸத்ய-
மக்ஷுத்3ரம் த்3ருட4 ப4க்திகம் ।
ஜிதேந்த்3ரியம் ஸ்தி2தம் ஸ்தி2த்யாம்
மித்ரமத்யாகி3 சேஷ்யதே ।। 292

நன்றி அறிந்தவனும், தர்மம் செய்பவனும், ஸத்யம் உள்ளவனும், அற்பத்தனம் இல்லாதவனும், உறுதியான பக்தி உடையவனும், இந்திரியங்களை ஜெயித்தவனும், இருக்க வேண்டிய முறையில் இருப்பவனுமான மனிதனை வித்வான் மித்ரனாக விரும்ப வேண்டும்.

मार्दवं सर्वभूतानां अनसूया क्षमा धृतिः ।
आयुष्याणि बुधाःप्राहुः मित्राणांचाविमानना।।२९३

மார்த3வம் ஸர்வபூ4தானாம்
அனஸூயா க்ஷமா த்4ருதி: ।
ஆயுஷ்யாணி பு3தா4: ப்ராஹு:
மித்ராணாம் சாவிமானனா ।। 293

எல்லா பிராணிகளும் அண்டும்படி அடக்கத்துடன் இருக்கும் குணமும், அஸூயை இல்லாமை, பொறுமை, தைர்யம், மித்ரர்களை அவமதியாமல் இருத்தல் இவைகளை பண்டிதர்கள் நீண்ட ஆயுளுடன் இருப்பதற்குக் காரணமெனக் கூறுகிறார்கள்.

अपनीतं सुनीतेन योऽर्थं प्रत्यानिनीषते ।
मतिमास्थाय सुदृढां तदका पुरुषव्रतम् ॥२९४

அபனீதம் ஸுனீதேன
யோऽர்த்த2ம் ப்ரத்யாநிநீஷதே ।
மதிமாஸ்தா2ய ஸுத்3ருடா4ம் தத3கா புருஷவ்ரதம் ॥294

எவன் அநீதியால் கொடுக்கப்பட்ட பொருளை நியாயமான முறையில் மறுபடி திருப்பிப்பெற விரும்புகிறானோ, அவனுடைய அச்செய்கை உத்தம புருஷர்களின் விரதமாகிறது **(व्रतम्)**.

आयत्यां प्रतिकारज्ञः तदात्वे दृढनिश्चयः ।
अतीते कार्यशेषज्ञः नरोऽर्थैर्न प्रहीयते ॥२९५

ஆயத்யாம் ப்ரதிகாரஞ: ததா3த்வே த்3ருட4நிஶ்சய: ।
அதீதே கார்யஶேஷஞ:
நரோऽர்த்தை2ர் ந ப்ரஹீயதே ॥ 295

மேலே வரப்போகும் துக்கத்தைப் போக்குவதற்கு பரிஹாரத்தை அறிந்தவனும், இப்பொழுது நடக்கிற உறுதியான நிச்சயமுள்ளவனும், தவறு நடந்தபின் மீதமுள்ள காரியத்தை சரியாக செய்ய அறிந்தவனுமான மனிதனை பொருள்கள் (செல்வம்) விடுவதில்லை.

कर्मणा मनसा वाचा यदभीक्ष्णं निषेवते ।
तदेवापहरत्येनं तस्मात् कल्याणमाचरेत् ॥२९६

கர்மணா மனஸா வாசா1 யத3பீ4க்ஷ்ணம் நிஷேவதே ।
ததே3வாபஹரத்யேனம்
தஸ்மாத் கல்யாணமாச1ரேத் ॥ 296

செய்கையினாலும், மனஸ்ஸினாலும் வாக்கினாலும் எதை அடிக்கடி ஸேவிக்கிறானோ, அது அவனை கவருகிறது. (திரிகரணத்தாலும்(**त्रिकरणम्**) *அடிக்கடி ஸேவிக்கும் வஸ்துவானது இவனை வசப்படுத்துகிறது எனக் கருத்து) ஆதலால் நல்ல காரியத்தையே செய்ய வேண்டும்.*

मङ्गलालंभनं योगः श्रुतमुत्थानमार्जवम् ।
भूतिमेतानि कुर्वन्ति सतां चाभीक्ष्णदर्शनम् ॥२९७

மங்க³லாலம்ப⁴னம் யோக³: ஶ்ருதமுத்தா²னமார்ஜவம்।
பூ⁴திமேதானி குர்வந்தி
ஸதாம் சாபீ⁴க்ஷ்ண த³ர்ஶனம் ॥ 297

தயிர், அருகம்புல், மது முதலிய மங்கள திரவியங்களைத் தொடுவதும்; யக்ஞமும், சாஸ்திரமும், முயற்சியும், நேர்மையாக இருத்தலும், அடிக்கடி ஸாதுக்களை தரிசிப்பதும் ஆகிய இவைகள் ஐச்வர்யத்தைக் கொடுக்கின்றவைகள்.

अनिर्वेदः श्रियो मूलं लाभस्य च शुभस्य च।
महान् भवत्यनिर्विण्णः सुखं चानन्त्यमश्नुते।।२९८

அநிர்வேத³: ஶ்ரியோ மூலம்
லாப⁴ஸ்ய ச ஶுப⁴ஸ்ய ச ।
மஹான் ப⁴வத்யநிர்விண்ண:
ஸுக²ம் சானந்த்யமஶ்நுதே ॥ 298

மனச்சோர்வை அடையாமல் முயற்சிப்பது லாபத்திற்கும், ஐச்வர்யத்திற்கும், மங்களத்திற்கும் மூலமாகிறது. மனச்சோர்வை அடையாமல் முயற்சி செய்பவன் மஹானாகிறான். அளவற்ற ஸுகத்தையும் அடைகிறான்.

नातः परतरं किञ्चित् अन्यत् पथ्यतमं मतम्।
प्रभविष्णोर्यथा तात क्षमा सर्वत्र सर्वदा ।।२९९

நாத¹: பரதரம் கிஞ்சித் அன்யத் பத்²யதமம் மத¹ம்।
ப்ரப⁴விஷ்ணோர் யதா² தா¹த¹
க்ஷமா ஸர்வத்ர ஸர்வதா³ ॥ 299

ஸமர்த்தனாக இருப்பவனுக்கு எப்பொழுதும் எல்லோர் விஷயத்திலும் பொறுமையுடன் இருப்பதைக் காட்டிலும் மிக ஐஶ்வர்யத்தை அளிப்பதும், மிக்க நன்மையைச் செய்வதும் வேறு ஒன்றுமில்லை.

क्षमेदशक्तः सर्वस्य शक्तिमान् धर्मकारणात् ।
अर्थानर्थौ समौयस्य तस्य नित्यं क्षमा हिता।।३००

க்ஷமேத³ஶக்த: ஸர்வஸ்ய
ஶக்திமான் த⁴ர்ம காரணாத் ।
அர்த்தா²னர்த்தௌ² ஸமௌ யஸ்ய
தஸ்ய நித்யம் க்ஷமா ஹிதா¹ ॥ 300

அசக்தன் (சக்தி இல்லாதவன்) எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்ள வேண்டும். சக்தி உள்ளவன் தர்மத்தின் காரணமாகப் பொறுத்துக் கொள்ள வேண்டும். எவனுக்கு அர்த்தமும் அனர்த்தமும் ஸமமோ, அவனுக்கு எப்பொழுதும் பொறுமையாக இருப்பது அனுகூலமானது.

यत्सुखं सेवमानोऽपि धर्मार्थाभ्यां न हीयते ।
कामं तदुपसेवेत न मूढव्रतमाचरेत् ॥३०१

யத்ஸுக2ம் ஸேவமானோऽபி
த4ர்மார்த்தா2ப்4யாம் ந ஹீயதே ।
காமம் தது3பஸேவேத ந மூட4 வ்ரதமாசரேத் ॥ 301

ஸகல ஸுகங்களும் இருந்தாலும், த4ர்மார்த்தங்களை (धर्मार्थम्) விட்டுவிடக் கூடாது. அதை விடாமல் இருந்தால் அந்த ஸுகம் தொடர்ந்து கிடைக்கும். மூடர்கள் செய்யும் காரியத்தை செய்யக் கூடாது. (அதாவது) ஸுகம்தான் இருக்கிறதே தர்மம் எதற்கு என எண்ணி தர்மத்தைக் கைவிடக்கூடாது.

दुःखार्तेषु प्रमत्तेषु नास्तिकेष्वलसेषु वा ।
न श्रीर्वसत्य दान्तेषु ये चोत्साह विवर्जिताः ॥३०२

து3:கா2ர்தேஷு ப்1ரமத்தேஷு
நாஸ்திகேஷ்வலஸேஷு வா ।
ந ஶ்ரீர்வஸத்ய தா3ந்தேஷு
யே சோத்ஸாஹ விவர்ஜிதா: ॥ 302

எப்பொழுதும் துக்கத்துடன் இருப்பவர்களிடத்திலும், மத3ம் (मदम्) கொண்டவர்களிடத்திலும், நாஸ்திகர்களிடத்திலும் (தெய்வம், சாஸ்திரம், பரலோகம், இவைகள் இல்லையெனச் சொல்லுகிறவர்கள்), சோம்பேறிகளிடத்திலும், அடக்கம் இல்லாதவர்களிடத்திலும், ஊக்கம் இல்லாதவர்களிடத்திலும் ஐஶ்வர்யம் நிற்கிறதில்லை.

आर्जवेन नरं युक्तं आर्जवात् सव्यपत्रपम् ।
अशक्तं मन्यमानास्तु धर्षयन्ति कुबुद्धयः ॥३०३

ஆர்ஜவேன நரம் யுக்தம்
ஆர்ஜவாத் ஸவ்யப1த்1ரப1ம் ।
அஶக்தம் மன்யமானாஸ்து
த4ர்ஷயந்தி கு1பு3த்3த4ய: ॥ 303

நேர்மை உடையவனும், நேர்மையால் அகார்யங்களில் (செய்யக்கூடாத கார்யங்களில்) லஜ்ஜை (வெட்கம்) உள்ளவனுமான பண்டிதனை துர்புத்தி உள்ளவர்கள் சக்தி இல்லாதவனாக நினைத்து அவமதிக்கிறார்கள்.

अत्यार्यमतिदातारं अतिशूरं अतिव्रतम् ।
प्रज्ञाभिमानिनं चैव श्रीर्भयान्नोपसर्पति ।।३०४

அத்யார்யமதி தா[3]தாரம் அதிஶூரம் அதிவ்ரதம் ।
ப்ரஜ்ஞாபி[4]மானினம் சைவ
ஶ்ரீர்ப[4]யான் நோபஸர்ப்பதி ।। 304

ரொம்பவும் வெகுளியாக இருப்பவனையும், அதிகமாகக் கொடுப்பவனையும், அதிசூரனையும், அதிகமாக நியமத்தை அனுஷ்டிப்பவனையும், தானாகவே தன்னை பெரியவ-னாக நினைத்து கர்வம் கொண்ட வனையும் லக்ஷ்மியானவள் பயத்தினால் நெருங்குவதில்லை.

न चातिगुणवत्स्वेषा नात्यन्तं निर्गुणेषु च ।
नैषा गुणान् कामयते नैर्गुण्यान्नानुरज्यते ।।
उन्मत्ता गौरिवान्धा श्रीः क्वचिदेवावतिष्ठते ।।३०५

ந சா[1]தி[1] கு[3]ணவத்ஸ்வேஷா
நாத்யந்தம் நிர்கு[3]ணேஷு ச ।
நைஷா கு[3]ணான் காமயதே
நைர்கு[3]ண்யான் நானுரஜ்யதே ।।
உன்மத்தா கௌ[3]ரிவாந்தா[4] ஶ்ரீ:
க்வசிதே[3]வாவதிஷ்ட்ட[2]தே ।।305

மஹாலக்ஷ்மியானவள் நல்ல குணம் உள்ளவர்களிடத்திலும் தங்குவதில்லை. குணமே இல்லாதவர்களிடத்திலும் தங்குவதில்லை. இவள் குணங்களை விரும்புவதில்லை. குணம் இல்லாவிட்டாலும் பற்றுகிறதில்லை. பித்துப்பிடித்த இவள் கண்ணில்லாத பசு போல் ஏதோ ஓர் இடத்திலேயே தங்கி இருக்கிறாள்.

अग्निहोत्रफला वेदाः शीलवृत्त फलं श्रुतम् ।
रतिपुत्रफला दाराः दत्तभुक्तफलं धनम् ।।३०६

அக்3னிஹோத்ர ப2லா வேதா:
ஶீல வ்ருத்1த1 ப2லம் ஶ்ருதம் ।
ரதிபுத்ர ப2லா தா3ரா: த3த்த பு4க்த ப2லம் த4னம் ।।
306

வேதங்கள் கற்றதின் பயன் (फलम्) அக்னி ஹோத்ரமே ஆகும். கல்வியைக் கற்றதின் பயன் நல்ல நடத்தையும் நல்ல எண்ணமுமே ஆகும். மனைவியை அடைந்ததின் பயன் காம ஸுகமும் புத்ரனுமேயாகும். பொருள் சம்பாதித்ததின் பயன் தானமும், தான் அனுபவிப்பதுமேயாகும்.

अधर्मोपार्जितैरर्थैः यः करोत्यौर्ध्वदेहिकम् ।
नसतस्य फलंप्रेत्य भुङ्क्तेऽर्थस्य दुरागमात् ।।३०७

அத4ர்மோபார்ஜிதைரர்த்தை2:
ய: கரோத்1யெளர்த்4வ தே3ஹிகம் ।
ந ஸதஸ்ய ப2லம் ப்ரேத்ய
பு4ங்க்தேऽர்த்த2ஸ்ய து3ராக3மாத் ।। 307

அதர்மத்தால் ஸம்பாதிக்கப்பட்ட பொருள்களால் எவன் ஒருவன் பரலோகத்திற்கான கர்மங்களைச் செய்கிறானோ, அவன் பரலோகம் சென்று அதன் பயனை அடைவதில்லை. (அதற்குக் காரணம் கெட்ட வழியில் அந்தப் பணம் வந்ததேயாகும்)

कान्तारे वनदुर्गेषु कृच्छ्रास्वापत्सु संभ्रमे ।
उद्यतेषु च शस्त्रेषु नास्ति सत्ववतां भयम् ।।३०८

காந்தாரே வனது3ர்கே3ஷு
க்ருச்ச்2ராஸ்வாபத்ஸு ஸம்ப்4ரமே ।
உத்3யதேஷு ச ஶஸ்த்ரேஷு
நாஸ்தி ஸத்வவதாம் ப4யம் ।। 308

ஸத்வ குணம் உள்ளவர்களுக்கு காடுகளிலும், வனத்திலுள்ள செல்ல முடியாத புதர் முதலான இடங்களிலும், கஷ்டமான ஆபத்துக்களிலும், பரபரப்பை உண்டு பண்ணும் காரியங்களிலும், ஆயுதங்கள் ஓங்கப்பட்ட காலங்களிலும் பயமில்லை.

उत्थानं संयमो दाक्ष्यमप्रमादो धृतिः स्मृतिः ।
समीक्ष्य च समारम्भा विद्धि मूलं भवस्य तु।।३०९

உத்தா²னம் ஸம்யமோ தா³க்ஷ்யம்
அப்¹ரமாதோ³ த்⁴ருதி: ஸ்ம்ருதி: ।
ஸமீக்ஷ்யச ஸமாரம்பா⁴ வித்³தி⁴ மூலம் ப⁴வஸ்யது।।309

முயற்சி, இந்திரிய ஜயம், திறமை, ஜாக்ரதையாக இருத்தல், தைரியம், ஞாபக சக்தி, நன்கு ஆலோசித்து ஆரம்பித்தல் இவைகளை ஐஸ்வர்யத்துக்குக் காரணமென அறியவும்.

तपोबलं तापसानां ब्रह्म ब्रह्मविदां बलम् ।
हिंसा बलमसाधूनां क्षमा गुणवतां बलम् ।।३१०

தபோப³லம் தாபஸானாம்
ப்³ரம்ஹ ப்³ரம்ஹ விதா³ம் ப³லம் ।
ஹிம்ஸா ப³லமஸாதூ⁴னாம்
க்ஷமா கு³ணவதாம் ப³லம் ।। 310

தபஸ்விகளுக்கு தவமே ப³லம் (बलम्). வேத வித்துக்களுக்கு வேதம் பலம். துஷ்டர்களுக்கு ஹிம்ஸையானது பலம். நற்குணம் உள்ளவர்களுக்கு பொறுமை பலம்.

अष्टौ तान्यव्रतघ्नानि आपोमूलं फलं पयः ।
हविर्ब्राम्हण कन्या च गुरोर्वचनमौषधम् ।।३११

அஷ்டௌ தா¹ன்ய ப்³ரத¹க்⁴னானி
ஆபோ மூலம் ப²லம் ப¹ய: ।
ஹவிர் ப்³ராம்ஹண கன்யா ச
கு³ரோர் வசனமௌஷத⁴ம் ।। 311

ஜலம், கிழங்கு, பழம், பால், ஹவிஸ், பிராம்மணனுடைய அனுமதி, குருவின் சொல், மருந்து ஆகிய இந்த எட்டையும் நற்காரியங்கள் செய்யும் போது உபயோகப்படுத்தினால் அந்த கர்மங்களுக்கு கெடுதி வராது. (ஆதலால்தான் யாகம் முதலிய சிறந்த கர்மாக்களில் மஹான்களும் தாங்கள் ருத்விக்குகளாக இருக்கும் போது பழம், பால், ஹவிஸ் முதலியவற்றை நடுவில் சாப்பிடுவார்கள். அதனால் அந்த கர்மங்களுக்கு குறைவு வராது)

न तत्परस्य संदध्यात् प्रतिकूलं यदात्मनः ।
संग्रहेणैव धर्मः स्यात् कामादन्यः प्रवर्तते ।।३१२

ந தத்பரஸ்ய ஸம்த³த்⁴யாத் ப்ரதிகூலம் யதா³த்மன:।
ஸங்க்³ரஹேணைவ த⁴ர்ம: ஸ்யாத்
காமாத³ன்ய: ப்ரவர்த்ததே ।। 312

தனக்கு எது கெடுதியோ அதைப் பிறருக்குச் செய்ய நினைக்கக்கூடாது. இந்திரிய ஜெயத்தினால்தான் தர்மம் உண்டாகும். அதர்மமானது காமத்தினால்தான் (ஆசை) உண்டாகிறது.

अक्रोधेन जयेत्क्रोधं असाधुं साधुना जयेत् ।
जयेत्कदर्यं दानेन जयेत् सत्वेन चानृतम् ।।३१३

அக்ரோதே⁴ன ஜயேத் க்ரோத⁴ம்
அஸாது⁴ம் ஸாது⁴னா ஜயேத் ।
ஜயேத் க¹த³ர்யம் தா³னேன
ஜயேத் ஸத்வேன சாந்ருதம் ।। 313

ஸேதுஸாமாவின் ஸாரத்தைக் கூறுகிறார். கோபமின்மையால் கோபத்தை ஜெயிக்க வேண்டும். துஷ்டனை நல் ஒழுக்கத்தால் ஜெயிக்க வேண்டும். லோபியை தானத்தால் ஜெயிக்க வேண்டும். பொய்யை ஸத்யத்தால் ஜெயிக்க வேண்டும்.

स्त्रीधूर्तकेऽलसे भीरौ चण्डे पुरुषमानिनी ।
चौरे कृतघ्ने विश्वासो नकार्यो नच नास्तिके।।३१४

ஸ்த்ரீதூ⁴ர்த்தகே¹ऽலஸே பீ⁴ரௌ
சண்டே³ புருஷமானினீ ।
சௌ¹ரே க்ருதக்⁴னே விஸ்வாஸோ
நகார்யோ ந ச நாஸ்திகே ।। 314

ஸ்திரீகளிடத்திலும், வஞ்சகனிடத்திலும், சோம்பேரி-யினிடத்திலும், கொடுமை உள்ளவனிடத்திலும், தான் ஒருவனே ஆண் பிள்ளை என்ற கர்வம் கொண்டவனிடத்திலும், திருடனிடத்திலும், நன்றி மறந்தவனிடத்திலும், நாஸ்திகனிடத்திலும் நம்பிக்கை வைக்கக்கூடாது.

अभिवादन शीलस्य नित्यं वृद्धोपसेविनः ।
चत्वारि संप्रवर्धन्ते कीर्तिरायुर्यशो बलम् ।।३१५

அபி⁴வாத³ன ஶீலஸ்ய நித்யம் வ்ருத்³தே⁴ாபஸேவின:।
சத்வாரி ஸம்ப்ரவர்த⁴ந்தே கீர்திராயுர்யஶோ ப³லம்।।315

தினமும் பெரியோர்களையும் தெய்வத்தையும் நமஸ்கரிக்கின்றவனுக்கும், நித்யம் பெரியோர்களை ஸேவிக்கின்றவனுக்கும், கீர்த்தியும், தானம் முதலியவற்றால் ஏற்படும் புகழும், ஆயுஸ்ஸும், கல்வியினால் ஏற்படும் புகழும், சரீர பலமும் ஆகிய இந்த நான்கும் தினந்தோறும் விருத்³தி⁴யாகும் (वृद्धि).

अतिक्लेशेन येऽर्थाः स्युः धर्मस्यातिक्रमेण वा।
शत्रोर्वा प्रणिपातेन मा स्म तेषु मनःकृथाः ।।३१६

அதி¹ க்லேஶேன யேऽர்த்தா²: ஸ்யு:
த⁴ர்மஸ்யாதிக்ரமேண வா ।
ஶத்ரோர்வா ப்ரணிபாதே¹ன
மா ஸ்ம தே¹ஷு மன: க்ருதா²: ।। 316

மிகுந்த கஷ்டத்தைத் தரும் கார்யத்தால் எந்தப் பொருள் கிடைக்குமோ, தர்மத்தை மீறுவதால் எந்தப் பொருள் கிடைக்குமோ, சத்ருக்களை வணங்குவதால் எந்தப் பொருள் கிடைக்குமோ அப்பொருளை அடைய விரும்பாதீர்.

अविद्यः पुरुषः शोच्यः शोच्यं मैथुनमप्रजम् ।
निराहाराः प्रजाः शोच्याः
शोच्यं राष्ट्रमराजकम् ।।३१७

அவித்³ய: புருஷ: ஶோச்¹ய:
ஶோச்¹யம் மைது²னமப்¹ரஜம் ।
நிராஹாரா: ப்¹ரஜா:ஶோச்¹யா:
ஶோச்¹யம் ராஷ்ட்ரமராஜக¹ம் ।। 317

கல்வியற்ற மனிதன் துக்கிக்கத் தகுந்தவன். குழந்தையற்ற மனைவியின் சேர்க்கை துக்கிக்கத் தகுந்தது. உணவற்ற

பிரஜைகள் துக்கிக்கத் தகுந்தவர்கள். அரசனில்லாத நாடு துக்கிக்கத் தகுந்தது.

अध्वा जरा देहवतां पर्वतानां जलं जरा ।
असंभोगो जरास्त्रीणां वाक्शल्यं मनसो जरा ।।३१८

அத்^{4}வா ஜரா தே^{3}ஹவதாம்
பா^{1}ர்வதா^{1}னாம் ஜலம் ஜரா ।
அஸம்போ^{4}கோ^{3} ஜரா ஸ்த்ரீணாம்
வாக் ஶல்யம் மனஸோ ஜரா ।। 318

மனிதர்களுக்கு நடப்பதால் கிழத்தனம் ஏற்படும். மலைகளுக்கு ஜலத்தால் ஜரை (**जरा**-*கிழத்தனம்) ஏற்படும். ஸ்திரீகளுக்கு போகமின்மையால் ஜரை ஏற்படும். மனதிற்கு கடும் சொல்லால் ஜரை ஏற்படும்.*

अनाम्नायमला वेदा ब्राम्हणस्याव्रतं मलम् ।
मलं पृथिव्या बाह्लीकाः पुरुषस्यानृतं मलम् ।।
कौतूहलमला साध्वी विप्रवासमलाः स्त्रियः ।
सुवर्णस्य मलं रूप्यं रूप्यस्यापि मलं त्रपुः ।
ज्ञेयं त्रपुमलं सीसं सीसस्यापि मलं मलम् ।।३१९

அநாம்னாய மலா வேதா^{3}
ப்^{3}ராம்ஹணஸ்யா வ்ரதம் மலம் ।
மலம் ப்ருதி^{2}வ்யா பா^{3}ஹ்லீகா:
புருஷஸ்யாந்ருதம் மலம் ।।
கௌதூஹல மலா ஸாத்^{4}வீ விப்ரவாஸமலா:ஸ்த்ரிய:।
ஸுவர்ணஸ்ய மலம் ரூப்யம்
ரூப்யஸ்யாபி மலம் த்^{1}ரபு^{1}: ।
ஞேயம் த்ரபுமலம் ஸீஸம் ஸீஸஸ்யாபி மலம் மலம் ।। 319

வேதங்களுக்கு அப்யஸிக்காமை களங்கம், பிராம்மணனுக்கு களங்கம் விரதமில்லாமை. பூமிக்கு பாஹ்லீக தேசத்து ஜனங்கள் மலம் (அழுக்கு), (ஸிந்து நதியைச் சேர்த்து ஆறு நதிகள் சேருமிடத்திற்கு பாஹ்லீகம் எனப் பெயர். அங்குள்ள சிலர் தருவதாகச் சொல்லி பின்பு கொடுக்கமாட்டார்கள்

என [illegible] டீகையில் (अर्जुनमिश्रकृत टीका) கூறப்பட்டுள்ளது). மனிதனுக்கு பொய் மலம் (அழுக்கு), பதிவிரதைகளுக்கு ஆடம்பரமாக இருத்தலில் ஆசை மலம். ஸ்திரீகளுக்கு பர்த்தா இல்லாமல் வெளிதேசம் செல்வது மலம். தங்கத்திற்கு வெள்ளி மலம். வெள்ளிக்கு ஈயம் மலம். ஈயத்திற்கு காரீயம் மலம். காரீயத்துக்கு அழுக்கு மலம்.

न स्वप्नेन जयेन्निद्रां न कामेन जयेत् स्त्रियः ।
नेन्धनेन जयेदग्निं न पानेन सुरां जयेत् ।।३२०

ந ஸ்வப்னேன ஜயேன் நித்[3]ராம்
ந காமேன ஜயேத் ஸ்த்ரிய: ।
நேந்த[4]னேன ஜயேத[3]க்[3]னிம்
ந பா[1]னேன ஸுராம் ஜயேத் ।। 320

படுப்பதால் தூக்கத்தை ஜயிக்க முடியாது. காமத்தால் ஸ்திரீகளை ஜெயிக்க முடியாது. விறகினால் அக்னியை ஜெயிக்க முடியாது. குடிப்பதால் கள்ளை ஜெயிக்க முடியாது.

यस्य दानजितं मित्रं शत्रवो युधि निर्जिताः ।
अन्नपानजिता दाराः सफलं तस्य जीवितम् ।।३२१

யஸ்ய தா[3]னஜிதம் மித்ரம் ஶத்ரவோ யுதி[4] நிர்ஜிதா:।
அன்னபானஜிதா தா[3]ரா: ஸப[2]லம் தஸ்ய ஜீவிதம் ।। 321

மித்ரனை தானத்தால் ஜெயித்தவனும், சத்ருக்களை யுத்தத்தால் ஜெயித்தவனும், தாரத்தை அன்னபானத்தால் ஜெயித்தவனுமாகிறவர்களின் வாழ்வு பயனுள்ளதாகும்.

सहस्त्रिणोऽपि जीवन्ति जीवन्ति शतिनस्तथा।
धृतराष्ट्र विमुञ्चेच्छां न कथञ्चिन्न जीव्यते ।।३२२

ஸஹஸ்ரிணோऽபி ஜீவந்தி ஜீவந்தி ஶதினஸ்ததா[2] ।
த்[4]ருதராஷ்ட்ர விமுஞ்சேச்சா[2]ம்
ந க[1]த[2]ஞ்சின்ன ஜீவ்யதே ।। 322

ஆயிரக்கணக்கான பொருளுள்ளவர்களும் ஜீவிக்கின்றனர். நூற்றுக்கணக்கான பொருளுள்ளவர்களும் ஜீவிக்கின்றனர். ஓ திருதராஷ்டிரனே! ஆசையை விடும். எப்படியாவது ஜீவிக்காமல் ஒருவருமில்லை.

यत्पृथिव्यां व्रीहियवं हिरण्यं पशवः स्त्रियः ।
नालमेकस्य तत्सर्वं इति पश्यन्न मुह्यति ॥३२३

யத் ப்ருதி[2]வ்யாம் வ்ரீஹியவம்
ஹிரண்யம் ப'ஶவ: ஸ்த்ரிய: ।
நாலமேகஸ்ய தத் ஸர்வம்
இதி பஶ்யன்ன முஹ்யதி ॥ 323

பூமியில் உள்ள நெல், யவை, பசுக்கள், ஸ்வர்ணம், ஸ்திரீகள், இவை எல்லாம் ஒருவனுக்கு போதும் என்ற எண்ணம் வராது என்று உணர்ந்தால் அவன் ஆசையின் மோகத்தை அடையமாட்டான்.

योऽभ्यर्चितः सद्भिः असज्जमानः
करोत्यर्थं शक्तिमहापयित्वा ।
क्षिप्रं यशस्तं समुपैति सन्तं
अलं प्रसन्ना हि सुखाय सन्तः ॥३१४

யோऽப்யர்ச்சித: ஸத்[3]பி[4]: அஸஜ்ஜமான:
கரோத்யர்த்த[2]ம் ஶக்திமஹாபயித்வா ।
க்ஷிப்ரம் யஶஸ்தம் ஸமுபைதி ஸந்தம்
அலம் ப்[1]ரஸன்னா ஹி ஸுகா[2]ய ஸந்த[1]: ॥ 324

எவன் ஒருவன் ஸாதுக்களால் பூஜிக்கப்பட்டும் அந்த பூஜையில் பற்றுதல் இல்லாமல் தன் சக்திக்குத் தக்கவாறு கார்யங்களைச் செய்கிறானோ, அந்த ஸாதுவை புகழ் தானாகவே வந்து அடைகிறது. அவன் விஷயத்தில் ஸுகம் கிடைக்கும்படி ஸாதுக்கள் அருள் புரிகின்றனர்.

महान्तमप्यर्थं अधर्मयुक्तं
यः संत्यजत्यनपाकृष्ट एव ।
सुखं सुदुःखान्यवमुच्य शेते
जीर्णां तवचं सर्प इवावमुष्य ॥३२५

மஹாந்தமப்யர்த்த[2]ம் அத[4]ர்ம யுக்தம்
ய: ஸம்த்யஜத் யனபாக்ருஷ்ட ஏவ ।

ஸுக²ம் ஸுது³:கா²ன்யவமுச்ய ஶேதே
ஜீர்ணாம் த்வச²ம் ஸர்ப்ப இவாவமுஷ்ய ॥ 325

அகப்பட்டதால் நிரம்பக் கிடைக்கும் பொருளில் ஆசையினால் இழுக்கப்படாமல் எவனொருவன் அந்தப் பொருளை விட்டுவிடுகிறானோ, ஸர்ப்பமானது ஜீர்ணமான (தனது) தோலை விட்டு ஸுகமாகத் தூங்குவது போல் அவன் ஸுகமாகத் தூங்குவான்.

अनृते च समुत्कर्षो राजगामि च पैशुनम् ।
गुरोश्चालीक निर्बन्धः समानि ब्रम्ह हत्यया ।।३२६

அந்ருதே ச ஸமுத்கர்ஷோ ராஜகா³மிச பை¹ஶுனம்।
கு³ரோஶ்சா¹லீக நிர்ப³ந்த⁴:
ஸமானி ப்³ரம்ஹ ஹத்யயா ॥ 326

பொய் சொல்லிக் கிடைக்கும் மேன்மை, அரசர்களிடத்தில் ஒருவனைப் பற்றி அசூயையினால் குற்றத்தைக் கூறிக் கெடுதல் செய்வது; தாய், தந்தை, ஆசார்யன் முதலியவர்களிடத்திலுள்ள குறைகளை வெளியில் கூறுவது (அல்லது தவறான விஷயத்தைச் சொல்லும்படி அவர்களை நிர்ப்பந்திப்பது) ஆகிய இம்மூன்றும் ப்ரம்மஹத்திக்கு ஒப்பானது.

असूयैकपदं मृत्युः अतिवादः श्रियो वधः ।
अशुश्रूषा त्वरा श्लाघा
विद्यायाः शत्रवस्त्रयः ।।३२७

அஸூயைகபத³ம் ம்ருத்யு: அதிவாத³: ஶ்ரியோ வத⁴:।
அஶுஶ்ரூஷா த்வரா ஶ்லாகா⁴
வித்³யாயா: ஶத்ரவஸ்த்ரய: ॥ 327

பொறாமை ஒன்றே ஆயுஸ்ஸை அழிக்கும் மிருத்யு. அதிகப் பேச்சானது ஸம்பத்தை அழித்து விடும். குருவுக்கு பணிவிடை செய்யாமை, பரபரப்பு, தற்புகழ்ச்சி இவைகள் மூன்றும் கல்விக்கு சத்ருக்களாகும்.

आलस्यं मदमोहौ च चापलं गोष्ठिरेव च ।
स्तब्धता चाभिमानित्वं तथाऽत्यागित्वमेवच ।।
एतेवै सप्तदोषाः स्युःसदा विद्यार्थिनां मताः।।३२८

ஆலஸ்யம் மத3மோஹௌ ச
 சா1ப1லம் கோ3ஷ்ட்டி4ரேவ ச ।
ஸ்தப்3த4தா1 சா1பி4மானித்வம்
 ததா2ऽத்யாகி3 த்வமேவ ச ॥
ஏதே வை ஸப்த தோ3ஷா: ஸ்யு:
 ஸதா3 வித்3யார்த்தி2னாம் மதா: ॥ 328

கல்வி கற்பவனுக்கு இடையூறாக உள்ள தோஷங்களைக் கூறுகிறார். சோம்பல், மதம் (**मदम्**), மோஹம், சாபல்யம் (**चापल्यम्**), வீண் பொழுதுபோக்குக் கூட்டம், திமிர், அஹங்காரம், தியாகியாக இருப்பது இவை ஏழும் கல்விக்கு இடைஞ்சலாகும்.

सुखार्थिनः कुतो विद्या
 नास्ति विद्यार्थिनः सुखम् ।
सुखार्थी वा त्यजेद्विद्यां
 विद्यार्थी वा त्यजेत् सुखम् ॥३२९

ஸுகா2ர்த்தின: கு1தோ1 வித்3யா
 நாஸ்தி வித்3யார்த்தி2ன: ஸுக2ம் ।
ஸுகா2ர்த்தீ2 வா த்யஜேத்3 வித்3யாம்
 வித்3யார்தீ2 வா த்யஜேத் ஸுக2ம் ॥ 329

ஸுகத்தை விரும்புகிறவனுக்கு வித்யை ஏது? வித்யையை விரும்புகிறவனுக்கு ஸுகமில்லை. ஸுகத்தை விரும்பினால் வித்யையை விட வேண்டும். வித்யையை விரும்பினால் ஸுகத்தை விட வேண்டும்.

नाग्निस्तृप्यति काष्ठानां नापगानां महोदधिः ।
नान्तकः सर्वभूतानां न पुंसां वामलोचनाः ॥३३०

நாக்3னிஸ் த்ருப்யதி காஷ்ட்டா2னாம்
 நாப1கா3னாம் மஹோத3தி4: ।
நாந்த1க: ஸர்வ பூ4தா1னாம்
 ந பு1ம்ஸாம் வாமலோச1னா: ॥ 330

எவ்வளவு கட்டைகளைப் போட்டாலும் அக்னி திருப்தியாவதில்லை. எவ்வளவு நதிகள் வந்து விழுந்தாலும் ஸமுத்ரம் போதுமென நினைப்பதில்லை. எல்லா

பிராணிகளை அழித்தாலும் ம்ருத்யு ஆகிவிட்டதென திருப்தி அடைவதில்லை. ஸ்த்ரீகள் புருஷர்களின் போ⁴க³ம் (भोगम्) போதுமென நினைப்பதில்லை.

आशा धृतिं हन्ति समृद्धिमन्तकः
क्रोधः श्रियं हन्ति यशः कदर्यता।
अपालनं हन्ति पशूंश्च राजन्
एकः क्रुद्धो ब्राम्हणो हन्ति राष्ट्रम्।।३३१

ஆஶா த்⁴ருதிம் ஹந்தி ஸம்ருத்³தி⁴மந்த'க:
க்ரோத⁴: ஶ்ரியம் ஹந்தி யஶ: க'த³ர்யதா' ।
அபாலனம் ஹந்தி பஶூம்ஶ்ச ராஜன்
ஏக: க்ருத்³தோ⁴ ப்³ராம்ஹணோ ஹந்தி ராஷ்ட்ரம்।।331

ஆசை தைரியத்தை அழிக்கும். எவ்வளவு உறவினர்கள் இருந்தாலும் எமன் அழிக்கிறான். கோபமானது ஸ்ரீயை அழிக்கிறது. காக்காமல் இருத்தல் பசுக்களை அழிக்கும். (அடிக்கடி பார்த்து ஆகாரம் ஜலம் முதலியவற்றைக் கொடுத்து பசுக்களை ரக்ஷிக்க வேண்டுமெனக் கருத்து. பீஷ்மரும் மற்றொரு இடத்தில் பசுக்களுக்கு ஆகாரம் கொடுத்தால் ஸ்ரீ மஹாலக்ஷ்மி தங்குவாளென்றும், பசுக்களுக்காக செலவு செய்தது வீணாகாதென்றும் (**गावो लक्ष्मयास्तथा मूलं गोषुदत्तं न नश्यति**) கா³வோ லக்ஷ்ம்யாஸ்ததா² மூலம் கோ³ஷு த³த்தம் ந நஶ்யதி எனக் கூறியுள்ளார்) கோபமடைந்த ஒரு பிராம்மணன் ராஜ்யத்தையே அழித்து விடுவான்.

अजाश्च कांस्यं रजतं च नित्यं
मध्वाकर्षः शकुनिः श्रोत्रियश्च ।
वृद्धो ज्ञातिरवसन्नः कुलीनः
एतानि ते सन्तु गृहे सदैव ।।३३२

அஜாஶ்ச காம்ஸ்யம் ரஜதம் ச நித்யம்
மத்⁴வாகர்ஷ: ஶகுனி: ஶ்ரோத்ரியஶ்ச ।
வ்ருத்³தோ⁴ ஞாதிரவஸன்ன: குலீன:
ஏதானி தே ஸந்து க்³ருஹே ஸதை³வ ।। 332

ஓ பாரதரே! ஆடுகள், வெண்கலப் பாத்திரம், வெள்ளி, தேன், விஷத்தைக் (கண்டுபிடித்துக்) காட்டும் சகோரபக்ஷி **(चकोरपक्षि)**, *(அரசர்கள் உண்ணும் போது சகோரபக்ஷியை பக்கத்தில் வைத்துக் கொள்வார்கள். உணவில் விஷம் கலந்திருந்தால் அந்த பக்ஷியின் கண்கள் சிவந்து விடுமாம்) வேதம் கற்ற அந்தணன், வயது முதிர்ந்த பங்காளி, ஏழ்மை தசையை அடைந்த நற்குலத்தில் பிறந்தோர்கள். இவர்கள் எல்லாம் எப்பொழுதும் உன் வீட்டில் இருக்க வேண்டும் (அதனால் நல்ல பயன்கள் ஏற்படுமெனக் கருத்து)*

अजोक्षा चन्दनं वीणा आदर्शो मधुसर्पिषी ।
विषमौदुंबरं शङ्खः स्वर्णनाभोथ रोचना ॥
गृहे स्थापयितव्यानि धन्यानि मनुरब्रवीत् ।
देवब्राम्हण पूजार्थं अतिथीनां च भारत ॥३३३

அஜோக்ஷா ஸந்த3னம் வீணா
ஆத3ர்ஶோ மது4ஸர்ப்பிஷீ ।
விஷமௌது3ம்பரம் ஶங்க2:
ஸ்வர்ணனாபோ4த2 ரோசனா ॥
க்3ருஹே ஸ்தா2பயிதவ்யானி த4ன்யானி மனுரப்3ரவீத்।
தே3வப்3ராம்ஹண பூஜார்த்த2ம்
அதி1தீ2னாம் ச பா4ரத ॥ 333

ஓ பாரதரே! ஆடு, காளை, சந்தனம், வீணை, கண்ணாடி, தேன், நெய், உலோகம், தாம்பர பாத்திரம், வலம்புரிச் சங்கம், சாளகிராமம், கோரோசனை இவைகளை தேவ, பிராம்மண, அதி1தி2 **(अतिथि)** பூஜைக்காக வீட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். இவைகள் வீட்டில் இருந்தால் நிரம்பப் பொருள் கிடைக்குமென்றும் மனு கூறியுள்ளார்.

इदं च त्वां सर्वपरं ब्रवीमि
पुण्यं पदं तात महा विशिष्टम् ।
न जातु कामान्न भयान्न लोभात्
धर्मं जह्याज्जीवितस्यापि हेतोः ॥३३४

இத3ம் ச த்வாம் ஸர்வபரம் ப்3ரவீமி
புண்யம் பத3ம் தாத மஹா விஶிஷ்டம் ।

ந ஜாது காமான்ன ப[4]யான்ன லோபா[4]த்
த[4]ர்மம் ஜஹ்யாஜ் ஜீவிதஸ்யாபி ஹேதோ: ।।334

எல்லா தர்மத்திற்கும் மேற்பட்டதும், மிகுந்த புண்யத்துக்கு இருப்பிடமும், சிறந்த பலன்களை அளிப்பதுமான இதை உனக்குக் கூறுகிறேன். அது என்னவென்றால் ஒருக்காலும் காமத்தாலோ (ஆசையினாலோ), பயத்தாலோ, லோபத்தாலோ, உயிரின் நிமித்தமாகக் கூட தர்மத்தை விடக்கூடாது.

नित्यो धर्मः सुख दुःखे त्वनित्ये
जीवो नित्यः हेतुरस्य त्वनित्यः ।
त्यक्त्वाऽनित्यं प्रतितिष्ठस्व नित्ये
सन्तुष्य त्वं तोषपरो हि लाभः ।।३३५

நித்யோ த[4]ர்ம: ஸுக[2] து[3]:கே[2] த்[1]வநித்யே
ஜீவோ நித்ய: ஹேதுரஸ்ய த்வநித்ய: ।
த்யக்த்வாऽநித்யம் ப்ரதி திஷ்ட்ட[2]ஸ்வ நித்யே
ஸந்துஷ்ய த்வம் தோ[1]ஷபரோ ஹி லாப[4]: ।।335

தர்மம் அழியாமல் என்றும் இருக்கக்கூடியது. (அதாவது பரலோகத்திலும் தொடர்ந்து வருமெனக் கருத்து. நித்யமான மோக்ஷத்திற்கும் காரணமாதலால் தர்மத்தை நித்யமெனக் கூறப்பட்டது) ஸுகம், துக்கம் இரண்டும் அநித்யங்களானதுகள் (தாற்காலிகமானது). ஜீவன் நித்யமானது. ஜீவனாக ஆவதற்குக் காரணமான அவித்யையானது அநித்யமானது. அநித்யமான ஸுகதுக்கம், அவித்யை இவைகளைத் தள்ளிவிட்டு, நித்யமான தர்மத்திலும் ஆத்மாவிலும் நிலைத்திரும். சந்தோஷத்தை அடையும். சந்தோஷமாய் இருத்தல்தான் பெரும் லாபம்.

महाबलान्पश्य महानुभावान्
प्रशास्य भूमिं धनधान्य पूर्णाम् ।
राज्यानि हित्वा विपुलांश्च भोगान्
गतान्नरेन्द्रान् वशमन्तकस्य ।।३३६

மஹாப3லான் பஶ்ய மஹாநுபா4வான்
ப்ரஶாஸ்ய பூ4மிம் த4ன தா4ன்ய பூர்ணாம் ।
ராஜ்யானி ஹித்வா விபுலாம்ஶ்ச போ4கா3ன்
க3தா1ன் நரேந்த்3ரான் வஶமந்த1கஸ்ய ।। 336

பல அரசர்கள் மிக்க பலசாலிகளாகவும், மிகுந்த மகிமை வாய்ந்தவர்களாகவும், தனங்களாலும் தான்யங்களாலும் பூர்ணமாய் இருக்கிற பூமியை ஆண்டனர். தாங்கள் ஆண்ட ராஜ்யங்களையும் விரிவான போகங்களையும் விட்டுவிட்டு எமனுக்கு வசமானதை ஆலோசித்துப்பாரும்.

अन्यो धनं प्रेतगतस्य भुङ्क्ते
वयांसि चाग्निश्च शरीरधातून् ।
द्वाभ्यामयं सह गच्छत्यमुत्र
पुण्येन पापेन च वेष्ट्यमानः ।।३३७

அன்யோ த4னம் ப்ரேத க3தஸ்ய பு4ங்க்தே
வயாம்ஸி சாக்3னிஶ்ச ஶரீர தா4தூன் ।
த்3வாப்4யாமயம் ஸஹ க3ச்ச2த்யமுத்ர
புண்யேன பாபேன ச வேஷ்ட்யமான: ।। 337

மரித்தவனுடைய பொருளை மற்ற யாராவது அநுபவிக்கிறான். மரித்தவனுடைய சரீரத்தையும் சரீர தாதுக்களையும் பக்ஷிகளும் அக்னியும் பக்ஷிக்கின்றன. புண்யத்தாலும் பாபத்தாலும் சூழப்பட்டு இந்த இரண்டுடன் (புண்ய பாபத்துடன்) பரலோகம் செல்கிறான்.

उत्सृज्य विनिवर्तन्ते ज्ञातयः सुहृदयः सुताः ।
अपुष्पानफलान् वृक्षान्
यथा तात पतत्रिणः ।।३३८

உத்ஸ்ருஜ்ய விநிவர்த்தந்தே
ஞாதய: ஸுஹ்ருத3ய: ஸுதா1: ।
அபுஷ்பானப2லான் வ்ருக்ஷான்
யதா2 தாத ப1த1த்1ரிண: ।। 338

மரித்தவனுடைய பிரேதத்தை சுடுகாட்டில் போட்டுவிட்டு ஞாதிகளும், ஸ்நேகிதர்களும், பிள்ளைகளும் திரும்பி வந்து விடுகின்றனர். புஷ்பமும், பழமும் இல்லாத மரங்களை பறவைகள் விட்டுவிடுவது போல் திரும்பி வந்து விடுகின்றனர்.

अग्नौ प्रास्तं तु पुरुषं कर्मान्वेति स्वयंकृतम् ।
तस्मात्तु पुरुषो यत्नाद्धर्मं सञ्चिनुयाच्छनैः ॥३३९

அக்'னௌ ப்ராஸ்த்த'ம் து புருஷம்
கர்மான்வேதி' ஸ்வயங்க்ருதம் ।
தஸ்மாத்து புருஷோ யத்னாத்
த4ர்மம் ஸஞ்சிநுயாச்ச2னை: ॥ 339

அக்னியில் போடப்பட்ட அந்த மனிதனை அவன் (செய்த) கர்மங்கள் தொடர்ந்து செல்கின்றன. ஆகையால் மனிதன் மெள்ள முயற்சி செய்து தர்மத்தைச் சேர்த்து வைக்க வேண்டும்.

अस्माल्लोकादूर्ध्वममुष्य चाधो
महत्तमस्तिष्ठति ह्यन्धकारम् ।
तद्वै महामोहनं इन्द्रियाणां
बुध्यस्व मा त्वां प्रलभेत राजन् ॥३४०

அஸ்மால்லோகாதூ3ர்த்4வமமுஷ்ய சா1தோ4
மஹத் தமஸ்திஷ்ட்ட2தி ஹ்யந்த4காரம் ।
தத்3வை மஹாமோஹனம் இந்த்3ரியாணாம்
பு3த்4யஸ்வ மா த்வாம் ப்ரலபே4த ராஜன் ॥ 340

ஸ்வர்கத்துக்கும் பூமிக்கும் கீழே, பெரும் இருள் அடைந்த 'அந்த'தா'மிஸ்ரம்' (अन्धतामिश्रम्) என்னும் நரகம் இருக்கின்றது. அது அங்கு ஏற்படும் துக்கத்தில், இந்திரியங்கள் ஒரு விஷயத்தையும் கவனிக்காமல் மோஹத்தை அளித்துவிடும். இதை உணர்ந்து அந்த நரகத்தை அடைய வேண்டாம்.

इदं वचः शक्ष्यसि चेद्यथावन्
निशम्य सर्वं प्रतिपत्तुमेव ।

यशः परं प्राप्स्यसि जीवलोके
भयं न चामुत्र न चेह ते॒स्ति ।।३४१

இத^{3}ம் வச: ஶக்ஷ்யஸி சேத்'யதா'வன்
நிஶம்ய ஸர்வம் ப்ரதிப^{1}த்'து'மேவ ।
யஶ: பரம் ப்ராப்ஸ்யஸி ஜீவலோகே
ப^{4}யம் ந சாமுத்ர ந சேஹ தேऽஸ்தி ।। 341

இந்த வார்த்தை எல்லாவற்றையும் கேட்டு நீ உண்மையாக நடப்பீரேயாகில், இவ்வுலகில் சிறந்த கீர்த்தியை அடைவீர். உமக்கு இவ்வுலகிலும், அவ்வுலகிலும் பயமில்லை.

आत्मा नदी भारत पुण्यतीर्था
सत्यो दया धृतिकूलादयोर्मिः ।
तस्यां स्नातः पूयते पुण्यकर्मा
पुण्यो ह्यात्मा नित्यमलोभ एव ।।३४२

ஆத்மா நதீ^{3} பா^{4}ரத புண்யதீர்த்தா^{2}
ஸத்யோ த^{3}யா த்^{4}ருதிகூ^{1}லாத^{3}யோர்மி: ।
தஸ்யாம் ஸ்நாத: பூ^{1}யதே புண்யகர்மா
புண்யோ ஹ்யாத்மா நித்யமலோப^4 ஏவ ।। 342

ஜீவன் மஹாநதியைப் போன்றது. அந்த நதிக்கு புண்ய கர்மமே தீர்த்தம். இந்த ஜீவனாகிய நதியானது ஸத்யமான பிரம்மத்தினிடமிருந்து உண்டானது. தைர்யத்தை கரையாக உடையது. இரக்கம் என்ற அலை வீசுகிறது. அந்த ஆத்மாவாகிற நதியில் ஸ்னானம் செய்தவன் பரிசுத்தனாகிறான். ஸகல புண்ய கர்மங்களையும் செய்தவனாகிறான். ஆத்மாவானது தூய்மையானது. சிறந்த புண்யமானது வைராக்யமேயாகும்.

काम क्रोध ग्राहवतीं पञ्चेन्द्रिय जलां नदीम्।
नावं धृतिमयीं कृत्वा जन्मदुर्गाणि संतर ।।३४३

காம க்ரோத^4 க்^{3}ராஹவதீம்
பஞ்சேந்த்^{3}ரிய ஜலாம் நதீ^{3}ம் ।
நாவம் த்^{4}ருதிமயீம் க்ருத்வா
ஜன்மது^{3}ர்கா^{3}ணி ஸந்த^{1}ர ।। 343

காமக்ரோதங்களாகிற முதலைகள் உள்ளதும், ஐந்து இந்திரியங்களாகிற ஜலம் உள்ளதுமான நதியையும், [illegible] ஜன்மங்களாகிற மடுக்களையும், தைர்யமாகிற ஓடத்தைக் கொண்டு தாண்டக்கடவீர்.

प्रज्ञावृद्धं धर्मवृद्धं स्वबन्धुं
विद्यावृद्धं वचसा चापि वृद्धम् ।
कार्याकार्ये पूजयित्वा प्रसाद्य
यः सपृच्छेन्न स मुह्येत्कदाचित् ।।३४४

ப்ரஜ்ஞா வ்ருத்[3]த[4]ம் த[4]ர்ம வ்ருத்[3]த[4]ம் ஸ்வப[3]ந்து[4]ம்
வித்[3]யா வ்ருத்[3]த[4]ம் வசஸா சாபி வ்ருத்[3]த[4]ம் ।
கார்யா கார்யே பூ[1]ஜயித்வா ப்ரஸாத்[3]ய
ய: ஸப்ருச்சே[2]ன்ன ஸ முஹ்யேத் க[1]தா[3]சித் ।। 344

அறிவினால் முதிர்ந்தவனையும், தர்மத்தால் முதிர்ந்தவனையும், வித்யையால் முதிர்ந்தவனையும், வயதினால் முதிர்ந்தவனையும், தனக்கு பந்துவாகவும் **(बन्धु)** இருப்பவனையும், கார்யாகார்யங்களில் பூஜித்து, சந்தோஷப்படுத்தியும் கேட்பானோ, அவன் ஒரு போதும் மோஹத்தை அடையமாட்டான்.

धृत्या शिश्नोदरं रक्षेत् पाणिपादं च चक्षुषा।
चक्षुःश्रोत्रे च मनसा मनो वाचं च कर्मणा।।३४५

த்[4]ருத்யா ஶிஶ்னோத[3]ரம் ரக்ஷேத்
பாணிபாத[3]ம் ச ச[1]க்ஷுஷா ।
சக்ஷு: ஶ்ரோத்ரே ச மனஸா
மனோ வாச[1]ம் ச கர்மணா ।। 345

தைர்யத்தால் பெண் விருப்பத்தையும், உதரத்தையும் **(उदरम्)** ரக்ஷிக்க வேண்டும். கால்களையும் கைகளையும் கண்ணினால் ரக்ஷிக்க வேண்டும். கண்களையும் காதுகளையும் மனதால் ரக்ஷிக்கவேண்டும். மனதையும் வாக்கையும் நல்ல கர்மாவினால் ரக்ஷிக்கவேண்டும் (கல்வியால் ரக்ஷிக்க வேண்டுமென ஒரு பாடம்).

नित्योदकी नित्य यज्ञोपवीती
नित्यस्वाध्यायी पतितान्नवर्जी ।
ऋतं ब्रुवन् गुरवे कर्म कुर्वन्
न ब्राम्हणश्च्यवते ब्रह्मलोकात् ।।३४६

நித்யோத3கீ நித்ய யஜ்ஞோபவீதீ1
நித்யஸ்வாத்4யாயீ ப1தி1தா1ன்னவர்ஜீ ।
ருத1ம் ப்3ருவன் கு3ரவே கர்ம குர்வன்
ந ப்3ராம்ஹணஶ்ச்யவதே ப்3ரம்ஹ லோகாத் ।। 346

விடியற்காலம் ஜலத்தில் நித்யம் ஸ்நானம் செய்பவனும், எப்பொழுதும் வஸ்திரத்தை யக்ஞோபவீதமாக (यज्ञोपवीतम्) (இடது தோளில்) தரிப்பவனும், நித்யம் தன் வேதத்தை அத்1யயனம் (अध्ययनम्) செய்பவனும், பதிதர்கள் (पतिताः) கொடுக்கும் உணவை உண்ணாதவனும் (பதிதர்கள் என்றால் ஸ்வதர்மத்தை விட்டவர்கள்) உண்மையை உரைப்பவனும், குருவுக்குப் பணிவிடை செய்கிறவனுமான பிராம்மணன் முடிவில் பிரம்மலோகம் செல்வான். அங்கிருந்து திரும்பமாட்டான்.

अधीत्य वेदान् परिसंस्तीर्य चाग्नी-
निष्ट्वा यज्ञैः पालयित्वा प्रजाश्च ।
गोब्राम्हणार्थं शस्त्र पूतान्तरात्मा
हतः संग्रामे क्षत्रियः स्वर्गमेति ।।३४७

அதீ4த்ய வேதா3ன் பரிஸம்ஸ்தீர்ய சாக்3னீ-
நிஷ்ட்வா யஜ்ஞை: பா1லயித்வா ப்ரஜாஶ்ச ।
கோ3 ப்3ராம்ஹணார்த்த2ம் ஶஸ்த்ர பூ1தா1ந்த1ராத்மா
ஹத: ஸங்க்3ராமே க்ஷத்ரிய: ஸ்வர்க3மேதி ।। 347

வேதங்களைக் கற்று, தினந்தோறும் அக்னிக்கு த3ர்ப4த்தினால் **(दर्भम्)** பரிஸ்தரணம் **(परिस्तरणम्)** போட்டு, அக்னிஹோத்ரம் செய்து, யாகங்களைச் செய்து, பிரஜைகளை நன்றாக ரக்ஷித்து, பசுக்களுக்காகவும் பிராம்மணர்களுக்காகவும் யுத்தத்தில் ஆயுதத்தினால் கொல்லப்பட்டு பரிசுத்தமான மனதை உடையவனாகி க்ஷத்ரியன் ஸ்வர்கலோகம் செல்கிறான்.

वैश्योऽधीत्य ब्राम्हणान् क्षत्रियांश्च
धनैः काले संविभाज्याश्रितांश्च ।
त्रेतापूतं धूममाघ्राय पुण्यं
प्रेत्य स्वर्गे दिव्य सुखानि भुङ्क्ते।।३४८

வைஶ்யோऽதீ⁴த்ய ப்³ராம்ஹணான் க்ஷத்ரியாம்ஶ்ச
த⁴னை: காலே ஸம்விபா⁴ஜ்யாஶ்ரிதாம்ஶ்ச ।
த்ரேதாபூதம் தூ⁴மமாக்⁴ராய புண்யம்
ப்ரேத்ய ஸ்வர்கே³ தி³வ்ய ஸுகா²னி பு⁴ங்க்தே ।। 348

வைஶ்யனானவன் வேதங்களைக் கற்று, பிராம்மணர்களுக்கும் க்ஷத்ரியர்களுக்கும் தன்னை அண்டினவர்களுக்கும் ஸமயத்தில் பணத்தைப் பிரித்துக் கொடுத்து, பரிசுத்தமானதும் பாபத்தைப் போக்குவதுமான கார்யத்தையும், கா³ர்ஹபத்யம் (गार्हपत्यम्), *த³க்ஷிணாக்³னி* (दक्षिणाग्नि), *ஆஹவனீயம்* (आहवनीयम्) *என்ற மூன்று அக்னிகளின் புகையை முகர்ந்து, மரித்த பின்பு ஸ்வர்கத்தில் திவ்ய ஸுகத்தை அனுபவிக்கிறான்.*

ब्रह्म क्षत्रं वैश्यवर्णं च शूद्रः
क्रमेणैतान्न्यायतः पूजयानः ।
तुष्टेष्वेतेप्वव्यथो दग्ध पापः
त्यक्त्वा देहं स्वर्ग सुखानिभुङ्क्ते।।३४९

ப்³ரம்ஹ க்ஷத்ரம் வைஶ்ய வர்ணம் ச ஶூத்³ர:
க்ரமேணைதான் ந்யாயத: பூஜயான: ।
து¹ஷ்டேஷ்வேதேப்வவ்யதோ² த³க்³த⁴ பாப:
த்யக்த்வா தே³ஹம் ஸ்வர்க³ஸுகா²னி பு⁴ங்க்தே ।। 349

ஶூத்ரனானவன் பிராம்மண, க்ஷத்ரிய, வைஶ்ய ஜாதிகளை முறையாக நியமப்படி பூஜிப்பவனும், இவர்கள் சந்தோஷத்தை அடைந்தபோது வருந்தாதவனுமாகி, பாபங்களை எரித்து, சரீரத்தை விட்டு ஸ்வர்கத்தில் ஸுகத்தை அனுபவிக்கிறான்.

चातुर्वर्ण्यस्यैष धर्मस्तवोक्तो
हेतुं चानुब्रुवतो मे निबोध ।
क्षात्राद्धर्माद्धीयते पाण्डुपुत्रः
तं त्वं राजन् राजधर्मे नियुङ्क्ष्व ।।३५०

சாதுர்வர்ண்ய ஸ்யைஷ த4ர்மஸ் தவோக்தோ
ஹேதும் சாநு ப்3ருவதோ மே நிபோ'த4 ।
க்ஷாத்ராத்3த4ர்மாத் தீ4யதே பாண்டு'புத்ர:
தம் த்வம் ராஜன் ராஜத4ர்மே நியுங்க்ஷ்வ ।। 350

நான்கு வர்ணங்களுடைய தர்மத்தையும் உமக்குக் கூறி விட்டேன். இதைக் கூறியதற்கு காரணத்தையும் சொல்லுகிறேன் கேளும். பாண்டு புத்ரனானவன் க்ஷத்ரிய தர்மத்திலிருந்து குறைவை (ராஜ்யம் இல்லாமையால்) அடைகிறானே! ஓ அரசரே! நீர் அவனை ராஜ தர்மத்தில் வைக்கவேண்டும் எனச் சொன்னார்.

धृतराष्ट्र उवाच -
एवमेतद्यथा त्वं मां अनुशाससि नित्यदा ।
ममापिच मतिःसौम्य भवत्येवं यथाऽत्थ माम् ।।
सातु बुद्धिः कृताऽप्येवं पाण्डवान्प्रति मेसदा ।
दुर्योधनं समासाद्य पुनर्विपरिवर्तते ।।
न दिष्टमभ्यतिक्रान्तुं शक्यं भूतेन केनचित् ।
दिष्टमेव ध्रुवं मन्ये पौरुषं तु निरर्थकम् ।।३५१

த்4ருதராஷ்ட்ர உவாச -
ஏவமேதத்3யதா2 த்வம் மாம்
அனு ஶாஸஸி நித்யதா3 ।
மமாபி ச மதி:ஸௌம்ய
ப4வத்யேவம் யதா2ऽத்த2 மாம் ।।

ஸாது பு3த்3தி4: க்ருதாऽப்யேவம்
பாண்ட3வான் ப்ரதி மே ஸதா3 ।
து3ர்யோத4னம் ஸமாஸாத்3ய புனர்விபரிவர்த்ததே ॥
ந தி3ஷ்ட்டமப்4யதி3க்3ராந்தும்
ஶக்யம் பூ4தேன கேனசித் ।
தி3ஷ்ட்டமேவ த்4ருவம் மன்யே
பௌ3ருஷம் து நிரர்த்த2கம் ॥ 351

த்ருதராஷ்ட்ரன் சொன்னான்-

ஓ விதுரா! நீ தினந்தோறும் எனக்கு உபதேசித்து வருவதெல்லாம் சரியானதே ஆகும். நீ சொல்லுகிறபடிதான் என்னுடைய புத்தியும் உணருகிறது. பாண்டவர்களைக் குறித்து நல்லது செய்யவேண்டும் என்றே தோன்றுகிறது. ஆனால் துரியோதனனை அடைந்ததும் மாறிவிடுகிறது. ஒருவனாலும் தெய்வத்தை தாண்ட முடியாது. தெய்வமே நிலைத்ததென்றும் மனிதனுடைய சக்தி பிரயோஜனம் அற்றதென்றும் சொன்னான்.

விது3ர நீதி முற்றிற்று.

சுபம்

श्रीः

श्रीमदादिशङ्कर भगवत्पादकृता

।।श्री प्रश्नोत्तर रत्न मालिका ।।

ஸ்ரீமத் ஆதிஸங்கர பகவத்பாதர்களால் சிஷ்யனுக்கு உபதேசிக்கப்பட்ட ஸ்ரீ ப்ரஶ்நோத்தர ரத்ன மாலிகா

ஸ்ரீ பகவானுடைய உபதேசங்களே வேதங்கள் அவைகளில் நமக்கு ஸுகத்தை அளிக்கக்கூடிய உபாயங்களும் துக்கத்தைப் போக்கக்கூடிய உபாயங்களும் கூறும் [illegible] சமுத்திரங்களில் உள்ள ரத்னங்களை நோக யாவராலும் எடுத்து ஆபாரணமாக தரித்துக் கொள்ள முடியாது. ஆனால் நல்ல தீரனான மனிதன் கவசங்களை தரித்துக் கொண்டு கடலில் முழ்கி ரத்தினங்களை எடுத்து, சாணைப்பிடித்து, ஆபரணமாக ஆக்கிக் கொடுத்தால் எவ்வாறு சுலபமாய் தரிக்கமுடியுமோ அவ்வாறு கருணைக் கடலாகிய ஸ்ரீ ஆதிசங்கரர் வணக்கத்துடன் தன்னை வினவிய சிஷ்யனுக்கு வேதங்களிலிருந்து ரத்தினம் போன்ற அந்த உபாயங்களை (வழிகளை) உபதேசித்துள்ளார் துக்கம் வேண்டாம். ஸுகம்தான் வேண்டுமென்று எண்ணுகிற யாவரும் இந்த உபதேசத்தை அறிந்து நடக்க வேண்டும். அந்த ஸுகமே ஆனந்த ரூபமான மோக்ஷமாகவும் ஆகிவிடும். கேள்வி பதில் இவற்றுடன் கூடிய இந்நூலானது 67 சுலோகங்கள் உள்ளதாக அமைந்துள்ளது.

कः खलु नालंक्रियते दृष्टादृष्टार्थ साधन पटीयान्।
अमुया कण्ठस्थितया प्रश्नोत्तर रत्न मालिकया ।। १

க: க^{2}லு நாலங்க்ரியதே த்^{3}ருஷ்டா
த்^{3}ருஷ்டார்த்த^2 ஸாத^{4}ன படீயான் ।
அமுயா க^{1}ண்ட^{2}ஸ்த்தி^{2}த^{1}யா
ப்ரஶ்நோத்தர ரத்ன மாலிகயா ।। 1

இந்த பிரஶ்னோத்தர ரத்னமாலையை கழுத்தில் அணிந்து கொண்ட எவன்தான் (உள்ளத்தில் வைத்துக் கொண்டவன் எனக் கருத்து) இவ்வுலகிலும் அவ்வுலகிலும் அடையவேண்டிய ஸுகத்தின் ஸாதனத்தை அறிந்தவனாக

ஆகி அலங்கரிக்கப்பட்டவனாக ஆகமாட்டான்? (அதாவது இவ்வுலகிலும் அவ்வுலகிலும் அடைய வேண்டிய லக்ஷணத்தை அறிந்து விளங்குவான் எனக் கருத்து)

भगवन् किमुपादेयं?गुरुवचनं
हेयमपिचकिम्? अकार्यम्। किं गुरुः? अधिगततत्त्वः
शिष्यहितायोद्यतस्सततम् ॥ २

ப^{4}க^{3}வன் கிமுபாதே^{3}யம்? கு^{3}ருவச^{1}னம்.
ஹேயமபி^{1}ச கிம்? அகார்யம் । கிம் கு^{3}ரு: ?
அதி^{4}கத தத்த்வ: ஶிஷ்ய ஹிதாயோத்^{3}யதஸ் ஸததம் ॥ 2

கேள்வி : பூஜ்யர்களான ஓ குருவே, கிரஹித்துக் கொள்ள வேண்டியது எது?
பதில் : கு^{3}ரு வசனம் (**गुरुवचनम्**).
கேள்வி : விட வேண்டியது எது?
பதில் : சாஸ்திரங்களில் கூடாதெனச் சொன்ன காரியம்.
கேள்வி : எவர் குரு?
பதில் : உண்மையை அறிந்து சிஷ்யர்களின் நன்மைக்காக எப்பொழுதும் முயற்சிப்பவர்.

त्वरितं किं कर्तव्यं विदुषां? संसार संततिच्छेदः ।
किं मोक्षतरो बीजम्? संयग् ज्ञानं क्रियासिद्धम् ॥ ३

த்வரிதம் கிம் கர்த்தவ்யம் விது^{3}ஷாம்?
ஸம்ஸார ஸந்த^{1}தி^{1}ச்சே^{2}த^3: ।
கிம் மோக்ஷத^{1}ரோ பீ^{3}ஜம்?
ஸம்யக் ஞானம் க்ரியா ஸித்^{3}த^{4}ம் ॥ 3

கேள்வி : படித்தவர்கள் சீக்கிரமாகச் செய்யவேண்டியது எது?
பதில் : பிறப்பு இறப்பின் தொடர்பை அறுத்தல்.
கேள்வி : மோக்ஷமாகிற மரத்திற்கு விதை யாது?
பதில் : அக்னிஹோத்ரம் முதலிய ஸத்கர்மங்களால் சி^{1}த்தஶுத்^{3}தி^{4} (**चित्तशुद्धि**) ஏற்பட்டதும் உண்டாகும் சிறந்த ஞானமே.

कः पथ्यतरो? धर्मः,
कः शुचिरिह? यस्य मानसं शुद्धम्। कः पण्डितो?
विवेकी, किं विषम्? अवधीरणा गुरुषु ॥ ४

க: பத்[2]யதரோ? த[4]ர்ம:, க: ஶுசி'ரிஹ?
யஸ்ய மானஸம் ஶுத்[3]த[4]ம் ।
க: பண்டி[3]தோ? விவேகீ, கிம் விஷம்?
அவதீரணா கு[3]ருஷு ॥ 4

கேள்வி : சிறந்த நன்மையை அளிப்பது எது?
பதில் : தர்மம்.
கேள்வி :இவ்வுலகில் பரிசுத்தனாக இருப்பவன் எவன்?
பதில் : விவேகமுள்ளவன்.
கேள்வி : விஷம் எது?
பதில் : பெரியோர்களை அலட்சியம் செய்தல்.

किं संसारे सारम् ? बहुशोऽपि विचिन्त्यमानमिदमेव।
किं मनुजेष्विष्टतमं ? स्वपरहितायोद्यतं जन्म ॥ ५

கிம் ஸம்ஸாரே ஸாரம் ?
ப[3]ஹுஶோऽபி விசிந்த்யமானமித[3]மேவ।
கிம் மனுஜேஷ்விஷ்டத[1]மம்?
ஸ்வ பரஹிதாயோத்[3]யதம் ஜன்ம ॥ 5

கேள்வி : பிறப்பு இறப்பாகிற ஸம்ஸாரத்தில் ஸாரம் எது?
பதில் : இதில் எது ஸாரம் என்பதை பலமுறை ஆலோசிப்பதே ஆகும் (அதாவது ஸம்ஸாரம் அஸாரமென தோன்றிவிடுமென கருத்து)
கேள்வி : மனிதர்களுக்கு மிகப் பிரியமாய் இருக்கவேண்டியது எது?
பதில் : தனக்கும் பிறருக்கும் நன்மையைச் செய்ய முயற்சிக்கும் ஜன்மம்.

मदिरेव मोहजनकः कः? स्नेहः,
के च दस्यवो? विषयाः।

का भववल्ली ? तृष्णा, को वैरी ? यस्त्वनुद्योगः ।। ६

மதி'ரேவ மோஹ ஜனக: க:? ஸ்னேஹ:,
கே ச த³ஸ்யவோ? விஷயா: ।
கா ப⁴வ வல்லீ? த்ருஷ்ணா,
கோ வைரீ? யஸ்த்வனுத்³யோக³: ।। 6

கேள்வி	: கள்ளைப் போல் மோஹத்தை அளிக்கக்கூடியது எது?
பதில்	: ஸ்நேகம்.
நூற்றுக்கணக்கான வேதங்களால் போற்றப்பட்ட ரத்னம்போல் சிறப்பு வாய்ந்தவரும், சுத்தமான ஸத்வகுணத்தை ரத்னம்போல் வைத்துக் கொண்டவரும், துறவிகளுக்கு நன்மையைச் செய்கிற ரத்னமும், யக்ஞத்தில் துதிக்கப்படுகின்ற ரத்னமும், அஸுரர்களை அழிக்கும் ரத்னமும், தேவஸேனையின் கணவனாகிற ரத்னமும், மன்மதனை ஜெயித்த அழகுவாய்ந்த ரத்னமுமான ஸ்ரீ ஸ்கந்தனாகிற ரத்னத்தை த்யானம் செய்யவேண்டும்.

सुरमुखपति रत्नं सूक्ष्म बोधैक रत्नं
परम सुखद रत्नं पार्वती सूनुरत्नम् ।
शरवणभव रत्नं शत्रुसंहार रत्नं
स्मरहरसुत रत्नं चिन्तयेत् स्कन्दरत्नम् ।। २

ஸுரமுக2பதி ரத்னம் ஸூக்ஷ்ம போ3தை4க ரத்னம்
பரம ஸுக2த3 ரத்னம் பார்வதீ ஸூனுரத்னம் ।

ஶரவணப4வ ரத்னம் ஶத்ரு ஸம்ஹார ரத்னம்
ஸ்மரஹரஸூத ரத்னம் சிந்தயேத் ஸ்கந்த3ரத்னம்॥ 2

தேவ ஸைன்யங்களுக்கு பதியான ரத்னமும், ஸச்சிதா ஞான வடிவமான ரத்னமும், சிறந்த ஸம்பத்தை அளிக்கும் ரத்னமும், பார்வதியின் புத்ரனாகிற ரத்னமும், நாணற் காட்டில் உண்டான ரத்னமும், பக்தர்களை ரக்ஷிக்கும் ரத்னமும், மன்மதனை விபூதியாக்கிய ஸ்ரீ பரமேச்வரனின் குழந்தையாகிய ரத்னமுமான ஸ்ரீஸ்கந்த ரத்னத்தை த்யானம் செய்ய வேண்டும்.

निधिपति हित रत्नं निश्रिताद्वैत रत्नं
मधुर चरित रत्नं मानितांघ्र्यब्ज रत्नम् ।
विधु शतनिभ रत्नं विश्वसन्त्राण रत्नं
बुधमुनि गुरु रत्नं चिन्तयेत् स्कन्दरत्नम् ॥ ३

நிதி4பதி ஹித ரத்னம் நிஶ்ஸிதாத்3வைத ரத்னம்
மது4ர ச1ரித ரத்னம் மானிதாங்க்4ர்யப்3ஜ ரத்னம்।
விது4 ஶதநிப4 ரத்னம் விஶ்வ ஸந்த்ராண ரத்னம்
பு3த4முனி கு3ருரத்னம் சிந்தயேத் ஸ்கந்த3ரத்னம்॥ 3

அபயத்தையும், வரன்களையும் அளிக்கும் ரத்னமும், ஸந்தான லாபத்தை அளிக்கும் ரத்னமும், யானை முகத்தோனான ஸ்ரீ கணபதியுடன் கூடிய ரத்னமும், ஸ்ரீ பரமேஶ்வரனுடைய சக்தியாகிற ரத்னமும், மங்களத்தை அளிக்கும் கைகள், முகங்கள் இவைகளை உடைய ரத்னமும், சூரபத்மனை ஸம்ஹரித்த ரத்னமும், இம்மையிலும் மறுமையிலும் நன்மையை அளிக்கும் ரத்னமுமான ஸ்ரீஸ்கந்தனாகிற ரத்னத்தை த்யானம் செய்யவேண்டும்.

अभयवरद रत्नं चाप्तसन्तान रत्नं
इभमुखयुत रत्नं ईश शक्त्यैक रत्नम् ।
शुभकरमुखरत्नं शूरसंहार रत्नं
उभयगतिद रत्नं चिन्तयेत् स्कन्दरत्नम् ॥ ४

அப4ய வரத3 ரத்னம் சா1ப்1த1 ஸந்தான ரத்னம்

இப4முகயுத ரத்னம் ஈஶ ஶக்த்யைக ரத்னம் ।
ஶுப4 கர முக ரத்னம் ஶூர ஸம்ஹார ரத்னம்
உப4யகதித ரத்னம் சிந்தயேத் ஸ்கந்த3ரத்னம் ।। 4

அபயத்தையும் **(अभयम्)** *வரன்களையும் அளிக்கும் ரத்னமும், ஸந்தான லாபத்தை அளிக்கும் ரத்னமும், யானை முகத்தோனான ஸ்ரீ கணபதியுடன் கூடிய ரத்னமும், ஸ்ரீ பரமேஸ்வரனுடைய சக்தியாகிற ரத்னமும், மங்களத்தை அளிக்கும் கைகள் முகங்கள் இவைகளை உடைய ரத்னமும், இம்மையிலும் மறுமையிலும் நன்மையை அளிக்கும் ரத்னமுமான ஸ்ரீஸ்கந்தனாகிற ரத்னத்தை த்யானம் செய்ய வேண்டும்.*

सुजन सुलभ रत्नं स्वर्ण वल्लीश रत्नं
भजन सुखद रत्नं भानुकोट्याभ रत्नम् ।
अजशिवगुरु रत्नं चाद्भुताकार रत्नं
द्विजगणनुत रत्नं चिन्तयेत् स्कन्दरत्नम् ।।५

ஸுஜன ஸுலப4 ரத்னம் ஸ்வர்ண வல்லீஶ ரத்னம்
ப4ஜனஸுக2த3 ரத்னம் பா4னுகோட்யாப4 ரத்னம்।
அஜ ஶிவ கு3ரு ரத்னம் சாத்3பு4தாகார ரத்னம்
த்3விஜக3ணனுத ரத்னம் சிந்தயேத் ஸ்கந்த3ரத்னம்।। 5

ஸாதுக்களுக்கு சுலபமான ரத்னமும், ஸ்வர்ண காந்தியுள்ள **(कान्ति)** *வள்ளியின் கணவனாகிற ரத்னமும், தன்னை பஜிப்பவர்களுக்கு ஸுகத்தை அளிக்கும் ரத்னமும், கோடி சூரியனுக்கு ஒப்பான காந்தியுள்ள* **(कान्ति)** *ரத்னமும், பிரம்மதேவனுக்கும் ஸ்ரீ பரமேஸ்வரனுக்கும் குருவான ரத்னமும், ஆச்சரியமான ஸ்வரூபமுள்ள ரத்னமும், வேத வித்துக்களின் கூட்டங்களால் போற்றப்பட்ட ரத்தினமுமான ஸ்ரீ ஸ்கந்த ரத்னத்தை த்யானம் செய்ய வேண்டும்.*

षणमुखस्य सकलार्थ सिद्धिदं
पञ्चरत्नमघ वृन्द कृन्तनम् ।
ये पठन्ति विभवैः स्फुटान्विताः
श्रीधराख्य गुरुमूर्त्यनुग्रहात् ।। ६

ஷண்முக2ஸ்ய ஸகலார்த்த1 ஸித்3தி4த3ம்
பஞ்சரத்னமக4 வ்ருந்த3 க்ருந்த3னம் ।
யே பட2ந்தி விப4வை: ஸ்பு2டான்விதா:
ஸ்ரீத4ராக்2ய கு3ருமூர்த்யனுக்3ரஹாத் ।। 6

பாபக் கூட்டங்களைப் போக்குகின்றதும், ஸகல அர்த்த ஸித்திகளை அளிக்கின்றதுமான ஆறுமுகக் கடவுளின் இந்த பஞ்ச ரத்ன ஸ்தோத்திரத்தை எவர்கள் படிக்கின்றனரோ அவர்கள் திருவிசநல்லூரில் ஜ்யோதிர்மயமாய் விளங்குகின்ற ஸ்ரீதர அய்யாவாள் என்ற குருமூர்த்தியின் அனுக்ரஹத்தால் ஸகல ஐஸ்வர்யத்துடன் கூடியவர்களாக நிச்சயம் விளங்குவார்கள்.

திருவிசநல்லூர் ஸ்ரீ ஸ்ரீதர அய்யாவாளால் செய்யப்பட்ட
ஸ்ரீ ஸுப்ரமண்ய பஞ்சரத்ன ஸ்தோத்ரம் முற்றிற்று

।। श्रीशरवण मन्त्राक्षर षट्क स्तोत्रम् ।।

ஸ்ரீஶரவண மந்த்ராக்ஷர ஷட்க ஸ்தோத்ரம்

இதைப் படிப்பதால் ஸ்ரீ ஷண்முகனுடைய மூல மந்திரத்தை பலமுறை ஜபித்த புண்யமும். ஆயுஸ். ஆரோக்யம் முதலிய ஸௌக்யங்களும் கிடைக்கும்.

शक्ति स्वरूपाय शरोद्भवाय
शक्रार्चितायाथ शची स्तुताय ।
शमाय शम्भु प्रणवार्थदाय
शकार रूपाय नमो गुहाय ।। १

ஶக்தி ஸ்வரூபாய ஶரோத்3ப4வாய
ஶக்ரார்ச்சிதாயாத2 ஶசீ1 ஸ்துதாய ।
ஶமாய ஶம்பு4 ப்ரணவார்த்த2தா3ய
ஶகார ரூபாய நமோ கு3ஹாய ।। 1

சக்திவேலின் உருவமாக இருப்பவரும், சரவணத்தில் உண்டானவரும், இந்திரனால் பூஜிக்கப்பட்டவரும், இந்திராணியால் துதிக்கப்பட்டவரும், சாந்தியின்

ஸ்வரூபமாக இருப்பவரும், ஸ்ரீ பரமேஸ்வரனுக்கு பிரணவார்த்தத்தை (प्रणवार्थम) *உபதேசித்தவரும்* (ஶ-श) *என்ற அக்ஷர ரூபியாகவும் இருக்கின்ற ஸ்ரீ குஹனுக்கு நமஸ்காரம்.*

रणन्मणि प्रोज्वल मेखलाय
रमासनाथ प्रणवार्थदाय ।
रतीश पूज्याय रविप्रभाय
रकार रूपाय नमो गुहाय ।। २

ரணன்மணி ப்ரோஜ்வல மேக²லாய
ரமாஸநாத² ப்ரணவார்த்த²தா³ய ।
ரதீஶ பூஜ்யாய ரவிப்ரபா⁴ய
ரகார ரூபாய நமோ கு³ஹாய ।। 2

சப்திக்கின்ற ரத்தின மணிகளுள்ள அரைஞாண் கயிற்றால் சோபிக்கின்றவரும், ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு ஆஸனமான தாமரையில் உதித்த பிரம்மதேவனுக்கு பிரணவார்த்தத்தை உபதேசித்தவரும், மன்மதனால் பூஜிக்கத் தகுந்தவரும் (ர) என்ற அக்ஷரரூபியாகவும் இருக்கின்றவரும், ஹ்ருதய குகையில் வசிக்கின்றவருமான ஸ்ரீ குஹனுக்கு நமஸ்காரம்.

वराय वर्णाश्रम रक्षकाय वरत्रिशूलाऽभय मण्डिताय।
वलारिकन्यासुकृतालयाय
वकार रूपाय नमो गुहाय ।। ३

வராய வர்ணாஶ்ரம ரக்ஷகாய
வர த்ரிஶூலாऽப⁴ய மண்டி³தாய ।
வலாரி கன்யா ஸுக்ருதாலயாய
வகார ரூபாய நமோ கு³ஹாய ।। 3

சிறந்தவரும், வர்ணாஶ்ரம தர்மத்தை ரக்ஷிக்கின்றவரும், சிறந்த திரிசூலத்தால் அலங்கரிக்கப்பட்டவரும், வலன் என்ற அஸுரனைக் கொன்ற இந்திரனின் பெண்ணாகிய தேவஸேனையின் புண்ய உருவாக இருப்பவரும், (வ) என்ற அக்ஷரத்தின் உருவாக இருக்கின்ற ஸ்ரீ குஹனுக்கு நமஸ்காரம்.

नगेन्द्रकन्येश्वर तत्वदाय नगाधिरूढाय नागार्चिताय।
नगासुरघ्नाय नगालयाय
नकार रूपाय नमो गुहाय ।।४

நகே³ந்த்³ர கன்யேஶ்வர தத்வதா³ய
நகா³தி⁴ரூடா⁴ய நாகா³ர்ச்சிதாய ।
நகா³ஸுரக்⁴னாய நகா³லயாய
ணகார ரூபாய நமோ கு³ஹாய ।। 4

ஸ்ரீ பார்வதி காந்தனான **(पार्वतीकान्तः)** *பரமேச்வரனுக்கு பிரணவார்த்தத்தை உபதேசித்தவரும், மலைகள் மீது அமர்ந்தவரும், பர்வதராஜனால் பூஜிக்கப்பட்டவரும், கிரௌஞ்சமலையின் உருவான அஸுரனைக் கொன்றவரும், பர்வதங்களைக் கோயில்களாகக் கொண்டவரும் (ண) என்ற அக்ஷரத்தின் உருவாக இருப்பவருமான ஸ்ரீ குஹனுக்கு நமஸ்காரம்.*

भवाय भर्गाय भवात्मजाय भस्मायमानाद्भुत विग्रहाय।
भक्तेष्ट कामप्रद कल्पकाय
भकाररूपाय नमोगुहाय ।। ५

ப⁴வாய ப⁴ர்கா³ய ப⁴வாத்¹மஜாய
ப⁴ஸ்மாயமானாத்³பு⁴த விக்³ரஹாய ।
ப⁴க்தேஷ்ட காமப்ரத³ க¹ல்ப¹கா¹ய
ப⁴காரரூபாய நமோகு³ஹாய ।। 5

மங்கள ரூபியும், பாபங்களைப் போக்குகின்றவரும், ஸ்ரீ பரமசிவனின் புத்ரரும், விபூதியை தரித்த ஆச்சரியமான சரீரத்தை உடையவரும், பக்தர்கள் கோரிய பொருளை அளிப்பதில் கல்பவிருக்ஷம் போல இருப்பவரும் (ப¹-भ) என்ற அக்ஷரத்தின் உருவாக இருப்பவருமான ஸ்ரீ குஹனுக்கு நமஸ்காரம்.

वल्लीवलाराति सुतार्चिताय वराङ्ग रागाञ्चित विग्रहाय।
वल्लीकराम्भोरुह मर्दिताय
वकाररूपाय नमो गुहाय ।। ६

வல்லீ வலாராதி1 ஸுதார்ச்சிதாய
வராங்க3 ராகா3ஞ்சித விக்3ரஹாய ।
வல்லீ க1ராம்போ4ருஹ மர்தி3தாய
வகாரரூபாய நமோ கு3ஹாய ॥ 6

வள்ளி தேவஸேனையால் பூஜிக்கப்பட்டவரும், சிறந்த வாஸனையுள்ள வஸ்துக்களால் பூசப்பட்ட சரீரத்தை உடையவரும், ஸ்ரீ வள்ளியின் தாமரை போன்ற கைகளால் பிடித்து விடப்பட்டவரும் (வ) என்ற அக்ஷரத்தின் உருவாக இருப்பவருமான ஸ்ரீ குஹனுக்கு நமஸ்காரம்.

॥ जयप्रद श्रीसुब्रह्मण्य स्तोत्रम् ॥

ஜயத்தை அளிக்கும் ஸ்ரீஸுப்3ரம்ஹண்ய ஸ்தோத்ரம்

இதைப்படிப்பதால் ஏழ்மை, கடன், வியாதி, சத்ருபயம், மனக்கவலை முதலியவைகளைப் போக்கி புத்ரலாபம், ஐச்வர்யம், கல்வி, ஞாபக சக்தி, ஜயம் முதலியவைகள் உண்டாகும்.

जय देवेन्द्रजा कान्त जय मृत्युञ्जयात्मज ।
जय शैलेन्द्रजा सूनो जय शम्भुगणावृत ॥ १
जय तारक दर्पघ्न जय विघ्नेश्वरानुज ।
जय देवेन्द्र जामातः जय पङ्कज लोचन ॥ २
जय शङ्कर संभूत जय पद्मासनार्चित ।
जय दाक्षायणी सूनो जय काश वनोद्भव ॥ ३
जय भागीरथी सूनो जय पावक संभव ।
जय पद्मज गर्वघ्न जय वैकुण्ठ पूजित ॥ ४
जय भक्तेष्टवरद जय भक्तार्ति भञ्जन ।
जय भक्त पराधीन जय भक्त प्रपूजित ॥ ५

जय धर्मवतां श्रेष्ठ जय दारिद्र्य नाशन ।
जय बुद्धिमतां श्रेष्ठ जय नारद सन्नुत ।। ६
जय भोगीश्वराधीश जय तुम्बुरु सेवित ।
जय षट्तारकाराध्य जय वल्ली मनोहर ।।७
जय योगसमाराध्य जय सुन्दर विग्रह ।
जय सौन्दर्य कूपार जय वासव वन्दित ।। ८
जय षड्भाव रहित जय वेदविदां वर ।
जय षण्मुख देवेश जय भो विजयी भव ।। ९

ஜயத்தை அளிக்கும்
ஸ்ரீஸுப்3ரம்ஹண்ய ஸ்தோத்ரம்

ஜய தே3வேந்த்3ரஜா கா1ந்த ஜய ம்ருத்யுஞ்ஜயாத்மஜ।
ஜய ஶைலேந்த்3ரஜா ஸூனோ ஜய ஶம்பு4க3ணாவ்ருத।।1
ஜய தா1ரக த3ர்பக்4ன ஜய விக்4னேஶ்வரானுஜ ।
ஜய தே3வேந்த்3ர ஜாமாத: ஜய பங்கஜ லோச1ன ।। 2
ஜய ஶங்கர ஸம்பூ4த ஜய பத்3மாஸனார்ச்சித ।
ஜய தா3க்ஷாயணீ ஸூனோ ஜய காஶவனோத்3ப4வ।। 3
ஜய பா4கீ3ரதீ ஸூனோ ஜய பா1வக ஸம்ப4வ ।
ஜய பத்3மஜ க3ர்வக்4ன ஜய வைகுண்ட2 பூ1ஜித ।। 4
ஜய ப4க்தேஷ்டவரத3 ஜய ப4க்தார்த்தி1 ப4ஞ்ஜன ।
ஜய ப4க்த ப1ராதீ4ன ஜய ப4க்த ப்1ரபூ1ஜித ।। 5
ஜய த4ர்மவதாம் ஶ்ரேஷ்ட2 ஜய தா3ரித்3ர்ய நாஶன।
ஜய பு3த்3தி4மதாம் ஶ்ரேஷ்ட2 ஜய நாரத3 ஸன்னுத।। 6
ஜய போ4கீ3ஶ்வராதீ4ஶ ஜய து1ம்பு3ரு ஸேவித ।
ஜய ஷட் தாரகா1ராத்4ய ஜய வள்ளீ மனோஹர ।। 7
ஜய யோக3 ஸமாராத்4ய ஜய ஸுந்த3ர விக்3ரஹ ।
ஜய ஸௌந்த3ர்ய கூ1பா1ர ஜய வாஸவ வந்தி3த ।। 8
ஜய ஷட்3பா4வ ரஹித ஜய வேத3 விதா3ம் வர ।
ஜய ஷண்முக2 தே3வேஶ ஜய போ4 விஜயீ ப4வ ।। 9

தேவசேனையின் கணவனான ஓ முருகா, தாங்கள் ஜயத்துடன் விளங்க வேண்டும். (ஸர்வோத்தமமாய் எப்பொழுதும் விளங்க வேண்டும்) ம்ருத்யுவை ஜெயித்த ருத்ர புத்ரா, தாங்கள் ஜெயிக்க வேண்டும். ஓ பார்வதீ குமாரா, தாங்கள், ஜயத்துடன் விளங்க வேண்டும். சிவகணங்களால் சூழப்பட்ட ஓ முருகா, தாங்கள் ஜயத்துடன் விளங்க வேண்டும்.

தாரகாஸுரனின் கொழுப்பை அடக்கிய ஓ முருகா, தங்களுக்கு ஜயமுண்டாகட்டும். விநாயகரின் தம்பியான ஓ முருகா, தாங்கள் ஜெயிக்க வேண்டும். இந்திரனின் மருமகனான ஓ முருகா, தாங்கள் ஜெயிக்க வேண்டும். ஓ தாமரைக்கண்ணா, தாங்கள் ஜெயிக்க வேண்டும்.

ஹே, சங்கரபுத்ரா, தாங்கள் ஜெயிக்க வேண்டும். பிரம்ம தேவனால் பூஜிக்கப்பட்டவரே, தாங்கள் ஜெயிக்க வேண்டும். தாக்ஷாயணியின் **(दाक्षायणी)** குமாரரே, தாங்கள் ஜெயிக்க வேண்டும். நாணற்காட்டில் அவதரித்தவரே, தாங்கள் ஜயத்துடன் விளங்க வேண்டும்.

ஓ கங்காபுத்ரனே, தாங்கள் ஜயத்துடன் விளங்க வேண்டும். ஓ அக்னிதேவரின் புத்ரரே, ஜெயிக்க வேண்டும். பிரம்மதேவரின் கர்வத்தைப் போக்கியவரே, ஜெயிக்க வேண்டும். ஸ்ரீ வைகுண்டநாதரால் பூஜிக்கப்பட்டவரே, தாங்கள் ஜயத்துடன் விளங்க வேண்டும்.

பக்தர்களுக்கு அபீஷ்டங்களை அளிப்பவரே, ஜெயிக்க வேண்டும். பக்தர்களின் மனக்குறைகளை போக்குகிறவரே, ஜெயிக்க வேண்டும். பக்தர்களுக்கு வசப்பட்டவரே ஜெயிக்க வேண்டும். பக்தர்களால் பூஜிக்கப்பட்டவரே, தாங்கள் ஜெயிக்க வேண்டும்.

தர்மிஷ்டர்களுக்குள் சிறந்தவரே, தாங்கள் ஜெயிக்க வேண்டும். ஏழ்மையைப் போக்குகிறவரே, தாங்கள் ஜெயிக்க வேண்டும். புத்திமான்களுக்குள் சிறந்தவரே, தாங்கள் ஜெயிக்க வேண்டும். நாரத முனிவரால் துதிக்கப்பட்டவரே, தாங்கள் ஜயத்துடன் விளங்க வேண்டும்.

நாகராஜனுக்கு அதிபனே, தாங்கள் ஜெயிக்க வேண்டும். தும்பு³ரு **(तुम्बुरु)** முனிவரால் ஸேவிக்கப்பட்டவரே, ஜெயிக்க வேண்டும். ஆறு நக்ஷத்திரங்களாகிய கிருத்திகா தேவிகளால் ஆராதிக்கத்தக்கவரே, தாங்கள் ஜெயிக்க வேண்டும். (அல்லது கிருத்திகா நக்ஷத்திரத்தன்று ஆராதிக்கத்தக்கவரே, தாங்கள்

ஜெயிக்க வேண்டும்) வள்ளியின் மனதை கவர்ந்தவரே, தாங்கள் ஜெயிக்க வேண்டும்.

த்யான யோகத்தால் நன்கு ஆராதிக்கத் தகுந்தவரே, தாங்கள் ஜெயிக்க வேண்டும். அழகு வாய்ந்த வடிவம் உள்ளவரே, ஜெயிக்க வேண்டும். அழகுக்கு ஸமுத்திரமானவரே, (இருப்பிடமானவரே) தாங்கள் ஜெயத்துடன் விளங்க வேண்டும். இந்திரனால் நமஸ்கரிக்கப்பட்டவரே, தாங்கள் ஜெயிக்க வேண்டும்.

பிறப்பு இறப்பு முதலிய ஆறு விகாரங்கள் அற்றவரே, ஜெயிக்க வேண்டும். வேத வித்துக்களுள் சிறந்தவரே, தாங்கள் விளங்க வேண்டும். ஆறுமுகக் கடவுளான தேவாதி தேவனே, தாங்கள் ஜெயிக்க வேண்டும். தாங்கள் எப்பொழுதும் விஜயத்துடன் விளங்க வேண்டும்.

ஜயப்ரத^3 ஸுப்^{3}ரம்மண்ய ஸ்தோத்ரம் முற்றிற்று

।। श्री सुब्रह्मण्य मङ्गल स्तोत्रम् ।।

எண்கண் க்ஷேத்ரத்தில் ப்ரகாசிக்கும்
ஸ்ரீஸ்கந்தனைப்பற்றிய

ஸ்ரீ ஸுப்^{3}ரம்ஹண்ய மங்க^{3}ள ஸ்தோத்ரம்

இதைப் படிப்பதால் ஸகல மங்களங்களும், புத்ர லாபமும், ஆரோக்யமும் உண்டாகும். ரத்த தோஷம், கடன், சத்ரு பயம் நீங்கும். பங்காளிகள், வேலைக்காரர்கள் இவர்களுடைய ஒற்றுமை ஏற்படும். தினந்தோறுமோ செவ்வாய்க்கிழமை, ஷஷ்டி, கிருத்திகை நக்ஷத்ரம் இந்த தினங்களிலோ படிக்கவும். தஞ்ஜை ஜில்லா எண்கண் க்ஷேத்ரத்தில் ப்ரகாசிக்கும் ஸ்கந்தனைப்பற்றிய ஸ்தோத்ரம்.

मङ्गलं देवदेवाय राज राजाय मङ्गलम् ।
मङ्गलं नाथनाथाय काल कालाय मङ्गलम् ।। १
मङ्गलं कार्तिकेयाय गङ्गापुत्राय मङ्गलम् ।
मङ्गलं जिष्णुजेशाय वल्लीनाथाय मङ्गलम् ।। २

मङ्गळं शंभु पुत्राय जयन्तीशाय मङ्गळम् ।
मङ्गळं सुकुमाराय सुब्रह्मण्याय मङ्गळम् ।। ३
मङ्गळं तारकजिते गण नाथाय मङ्गळम् ।
मङ्गळं शक्तिहस्ताय वन्हिजाताय मङ्गळम् ।।४
मङ्गळं बाहुलेयाय महासेनाय मङ्गळम् ।
मङ्गळं स्वामिनाथाय मङ्गळं शरजन्मने ।।५
अष्टनेत्र पुरीशाय षणमुखायास्तु मङ्गळम् ।
कमलासन वागीश वरदायास्तु मङ्गळम् ।। ६
श्रीगौरी गर्भ जाताय श्रीकण्ठ तनयाय च ।
श्रीकान्त भागिनेयाय श्रीमत् स्कन्दाय मङ्गळम् ।।७
श्रीवल्ली रमणायाथ श्रीकुमाराय मङ्गळम् ।
श्री देवसेना कान्ताय श्रीविशाखाय मङ्गळम् ।। ८
मङ्गळं पुण्यरूपाय पुण्यश्लोकाय मङ्गळम् ।
मङ्गळं पुण्य यशसे मङ्गळं पुण्य तेजसे ।। ९

ஸ்ரீ ஸுப்^{3}ரம்ஹண்ய மங்க^{3}ள ஸ்தோத்ரம்

மங்க^{3}ளம் தே^{3}வ தே^{3}வாய ராஜ ராஜாய மங்க^{3}ளம்।
மங்க^{3}ளம் நாத^2 நாதா^{2}ய கால காலாய மங்க^{3}ளம்।। 1
மங்க^{3}ளம் கார்திகேயாய க^{3}ங்கா^{3}புத்ராய மங்க^{3}ளம்।
மங்க^{3}ளம் ஜிஷ்ணுஜேஶாய
வள்ளீநாதா^{2}ய மங்க^{3}ளம் ।। 2
மங்க^{3}ளம் ஶம்பு^{4} புத்ராய ஜயந்தீஶாய மங்க^{3}ளம்।
மங்க^{3}ளம் ஸுகுமாராய
ஸுப்^{3}ரம்ஹண்யாய மங்க^{3}ளம் ।। 3
மங்க^{3}ளம் தா^{1}ரக ஜிதே க^{3}ண நாதா^{2}ய மங்க^{3}ளம்।
மங்க^{3}ளம் ஶக்தி ஹஸ்தாய
வன்ஹி ஜாதாய மங்க^{3}ளம் ।। 4

மங்க3ளம் பா3ஹுலேயாய
மஹாஸேனாய மங்க3ளம் ।
மங்க3ளம் ஸ்வாமிநாதா2ய
மங்க3ளம் ஶரஜன்மனே ॥ 5

அஷ்டநேத்ர பு1ரீஶாய
ஷண்முகா2யாஸ்து மங்க3ளம் ।
கமலாஸன வாகீ3ஶ வரதா3யாஸ்து மங்க3ளம் ॥ 6

ஶ்ரீகௌ3ரீ க3ர்ப4 ஜாதாய ஶ்ரீகண்ட2 த1னயாய ச ।
ஶ்ரீ காந்த பா4கினேயாய
ஶ்ரீமத் ஸ்கந்தா3ய மங்க3ளம் ॥ 7

ஶ்ரீவள்ளீ ரமணாயாத2 ஶ்ரீகுமாராய மங்க3ளம் ।
ஶ்ரீ தே3வஸேனா காந்தாய
ஶ்ரீவிஶாகா2ய மங்க3ளம் ॥ 8

மங்க3ளம் புண்யரூபாய
புண்யஶ்லோகாய மங்க3ளம் ।
மங்க3ளம் புண்ய யஶஸே
மங்க3ளம் புண்ய தே1ஜஸே ॥ 9

தேவர்களுக்கெல்லாம் தேவனான முருகனுக்கு மங்களம் உண்டாகட்டும். அரசர்களுக்கெல்லாம் அரசனான முருகனுக்கு மங்களம். பாதுகாப்பவர்களுக்கெல்லாம் காப்பாளியான ஶ்ரீ முருகனுக்கு மங்களம்.

கிருத்திகாதேவிகளின் புத்ரனான ஶ்ரீ முருகனுக்கு மங்களம். கங்கையின் புத்ரனான ஶ்ரீ முருகனுக்கு மங்களம். இந்திரனின் புத்ரியான தேவஸேனையின் கணவனுக்கு மங்களம். ஶ்ரீ வள்ளியின் கணவனுக்கு மங்களம்.

ஶம்பு1வின்(शम्भुः) புத்ரனான ஶ்ரீ முருகனுக்கு மங்களம். திருச்செந்தூர் நாயகனுக்கு மங்களம். அழகிய உருவம் கொண்ட ஶ்ரீ முருகனுக்கு மங்களம். வேதம், வேத வித்துக்கள், யாகம் இவைகளைப் பாதுகாக்கும் ஶ்ரீ முருகனுக்கு மங்களம்.

தாரகாஸுரனைக் கொன்ற ஶ்ரீ முருகனுக்கு மங்களம். பூ4தக3ண(भूतगणः)ங்களின் தலைவனான ஶ்ரீ ஸ்கந்தனுக்கு மங்களம். ஞானவேலை தரித்த ஶ்ரீ முருகனுக்கு மங்களம். அக்னியிலிருந்து உண்டான ஶ்ரீ முருகனுக்கு மங்களம்.

கிருத்திகா தேவிகளின் புத்ரனுக்கு மங்களம். பெரும் சேனைத் தலைவனுக்கு மங்களம். ஸ்வாமிமலை க்ஷேத்ர நாயகனுக்கு மங்களம். சரவணப் பொய்கையில் அவதரித்தவனுக்கு மங்களம்.

க்ஷேத்ரத்துக்கு நாயகனான ஸ்ரீ முருகனுக்கு மங்களம். ஆறுமுகக் கடவுளுக்கு மங்களம். பிரம்மதேவன் பிரஹஸ்பதி இவர்களுக்கு வரங்களை அளித்த ஸ்ரீ முருகனுக்கு மங்களம்.

ஸ்ரீ கௌரி புத்ரனும், ஸ்ரீ நீலகண்டனின் அருமைக் குழந்தையும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் மருமகனும், ஸ்ரீ ஸம்ருத்தியுடன் **(श्री समृद्धि)** கூடியவனுமான ஸ்ரீ முருகனுக்கு மங்களம்.

அழகு வாய்ந்த ஸ்ரீ வள்ளியின் கணவனுக்கு மங்களம். அழகு வாய்ந்த குமாரக் கடவுளுக்கு மங்களம். ஸ்ரீ தேவஸேனையின் கணவனுக்கு மங்களம். விசாக நக்ஷத்திரத்தில் பிறந்த ஸ்ரீ முருகனுக்கு மங்களம்.

புண்யத்தின் உருவான ஸ்ரீ முருகனுக்கு மங்களம். புண்யத்தை அளிக்கும் சரிதத்தை உடைய ஸ்ரீ ஸ்கந்தனுக்கு மங்களம். புண்ய கீர்த்தியை உடையவனுக்கு மங்களம். புண்யத்தை அளிக்கும் தேஜஸ்ஸை உடைய ஸ்ரீ முருகனுக்கு மங்களம்.

ஸ்ரீ ஸுப்ரமண்ய மங்களம் முற்றிற்று.

ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் த்4யானமும் ஸ்தோத்ரமும்

(ஸ்ரீதேவீ பாகவதம் 9-வது ஸ்கந்த[illegible]
கூறப்பட்[illegible])

सहस्त्र दळ पद्मस्थ कर्णिका वासिनीं पराम्।
शरत्पार्वण कोटीन्दु प्रभा मुष्टिकरां पराम् ।। १
स्वतेजसा प्रज्वलन्तीं सुखदृश्यां मनोहराम्।
प्रतप्त काञ्चननिभ शोभां मूर्तिमतीं सतीम् ।। २
रत्नभूषण भूषाढ्यां शोभितां पीतवाससा ।
ईषद्धास्य प्रसन्नास्यां शस्वत् सुस्थिर यौवनाम्।
सर्वसंपत् प्रदात्रीं च महालक्ष्मीं भजे शुभाम्।। ३

ஸஹஸ்ரத3ள பத்3மஸ்த்த2 கர்ணிகா வாஸினீம் பராம்।
ஶரத்பார்வண கோடீந்து3 ப்ரபா4 முஷ்டிகராம் பராம்।। 1
ஸ்வதேஜஸா ப்ரஜ்வலந்தீம்
ஸுக2 த்3ருஶ்யாம் மனோஹராம் ।
ப்ரதப்த காஞ்சனநிப4 ஶோபா4ம் மூர்த்திமதீம் ஸதீம்।। 2
ரத்னபூ4ஷண பூ4ஷாட்4யாம் ஶோபி4தாம் பீ1தவாஸஸா।
ஈஷத்3தா4ஸ்ய ப்ரஸன்னாஸ்யாம்
ஶஸ்வத் ஸுஸ்த்தி2ர யௌவனாம் ।
ஸர்வஸம்பத் ப்ரதா3த்ரீம் ச
மஹாலக்ஷ்மீம் ப4ஜே ஶுபா4ம் ।। 3

ஆயிரம் தளத்துடன் கூடிய தாமரை புஷ்பத்தின் நடுவில் வசிப்பவளும், சிறந்தவளும், ஶரத் காலத்திலுள்ள கோடி சந்திரனுக்கு ஒப்பான காந்தி (कान्ति) உள்ளவளும், தனது காந்தியால் (कान्ति) மிகவும் பிரகாசிக்கின்றவளும், ஆனந்தமாக காக்ஷி அளிப்பவளும், பக்தர்களுடைய மனதைக் கவருகின்றவளும், உருக்கி வார்த்த தங்கத்தின் காந்தியே (कान्ति) உருவெடுத்து வந்தது போல் இருப்பவளும், பதிவ்ரதையும், ரத்னாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும், தங்கப் பட்டாடையால்

விளங்குகிறவளும், மந்தஹாஸத்தால் பிரஸன்ன முகம் உடையவளும், சாச்வதமாய் அமைந்துள்ள யௌவனத்தை உடையவளும், பக்தர்களுக்கு ஸர்வ ஸம்பத்துக்களையும் நன்கு அளிப்பவளும், மங்களத்தைச் செய்கிறவளுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மியை பஜிக்கிறேன்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மீ த்யானம் முற்றிற்று.

।। श्री महालक्ष्मी स्तोत्रम् ।।

ஸ்ரீ மஹாலக்ஷ்மீ ஸ்தோத்ரம்

पुरन्दर उवाच-

नमः कमलवासिन्यै नारायण्यै नमो नमः ।
कृष्णप्रियायै सततं महालक्ष्म्यै नमो नमः ।। १
पद्मपत्रेक्षणायै च पद्मास्यायै नमो नमः ।
पद्मासनायै पद्मिन्यै वैष्णव्यै च नमो नमः ।। २
सर्वसंपत् स्वरूपिण्यै सर्वाराध्यै नमो नमः ।
हरिभक्ति प्रदात्र्यै च हर्षदात्र्यै नमो नमः ।। ३
कृष्णवक्षः स्थितायै च कृष्णेशायै नमो नमः ।
चन्द्रशोभा स्वरूपायै रत्नपद्मे च शोभने ।। ४
संपत्यधिष्टातृ देव्यै महादेव्यै नमो नमः ।
नमो वृद्धिस्वरूपायै वृद्धिदायै नमो नमः ।। ५
वैकुण्ठे या महालक्ष्मीः या लक्ष्मीः क्षीरसागरे ।
स्वर्गलक्ष्मीः इन्द्रगेहे राजलक्ष्मीः नृपालये ।। ६
गृहलक्ष्मीश्च गृहिणां गेहे च गृहदेवता ।
सुरभिः सागरे जाता दक्षिणा यज्ञकामिनी ।। ७

अदितिर्देवमाता त्वं कमला कमलालया ।
स्वाहा त्वं च हविर्दाने कव्यदाने स्वधा स्मृता ।। ८
त्वं हि विष्णु स्वरूपा च सर्वाधारा वसुन्धरा ।
शुद्धसत्व स्वरूपा त्वं नारायण परायणा ।। ९
क्रोधहिंसा वर्जिता च वरदा शारदा शुभा ।
परमार्थ प्रदा त्वं च हरिदास्यप्रदा परा ।।१०
यया विना जगत्सर्वं भस्मीभूतं असारकम् ।
जीवन्मृतं च विश्वं च शश्वत्सर्वं यया विना ।।११
सर्वेषां परा माता सर्व बान्धव रूपिणी ।
धर्मार्थ काम मोक्षाणां त्वं च कारण रूपिणी ।।१२
यथा माता स्तनान्धानां शिशूनां शैशवे सदा ।
तथा त्वं सर्वदा माता सर्वेषां सर्वरूपतः ।।१३
मातृहीनः स्तनांधस्तु स च जीवति दैवतः ।
त्वया हीनो जनःकोऽपि नजीवत्येव निश्चितम् ।।१४
सुप्रसन्न स्वरूपा त्वं मां प्रसन्ना भवाम्बिके ।
वैरिग्रस्तं च विषयं देहि मह्यं सनातनि ।।१५
अहं तावत्त्वया हीनो बन्धुहीनश्च भिक्षुकः ।
सर्वसंपद्विहीनश्च तावदेव हरिप्रिये ।।१६
ज्ञानं देहि च धर्मं च सर्वसौभाग्यमीप्सितम् ।
प्रभावं च प्रतापं च सर्वाधिकारमेव च ।।१७
जयं पराक्रमं युद्धे परमैश्वर्यमेव च ।
इत्युक्त्वा च महेन्द्रश्च सर्वैः सुरगणैस्सह ।।१८
प्रणनाम साश्रुनेत्रो मूर्ध्ना चैव पुनः पुनः ।
ब्रह्मा शङ्करश्चैव शेषो धर्मश्च केशवः ।।१९

सर्वे चक्रुः परीहारं सुरार्थे च पुनः पुनः ।
देवेभ्यश्च वरं दत्त्वा पुष्पमालां मनोहरम् ।।२०
केशवाय ददौ लक्ष्मीः संतुष्टा सुरसंसदि ।
ययुर्देवाश्च संतुष्टाः स्वं स्वं स्थानं च नारत ।।२१
देवी ययौ हरेः स्थानं हृष्टा क्षीरोद शायिनः ।
ययतुश्चैव स्वगृहं ब्रह्मेशानौ च नारद ।।२२
दत्त्वा शुभाशिषं तौ च देवेभ्यः प्रीतिपूर्वकम् ।
इदं स्तोत्रं महापुण्यं त्रिसन्ध्यं यः पठेन्नरः ।।२३
कुबेर तुल्यः स भवेत् राजराजेश्वरो महान् ।
पञ्च लक्ष जपेनैव स्तौत्र सिद्धिः भवेन्नृणाम् ।।२४
सिद्धस्तोत्रं यदिपठेन् मासमेकं तु संततम् ।
महासुखी च राजेन्द्रो भविष्यति न संशयः ।।२५

।। इति श्री देवीभागवते महापुराणे नवमस्कन्धे
द्विचत्वारिंशोध्यायः ।।

ஸ்ரீ மஹாலக்ஷ்மீ ஸ்தோத்ரம்

புரந்த3ர உவாச-

நம: கமலவாஸின்யை நாராயண்யை நமோ நம: ।
க்ருஷ்ண ப்ரியாயை ஸத1த1ம்
மஹாலக்ஷ்ம்யை நமோ நம: ।। 1
பத்3மப1த்1ரேக்ஷணாயை ச பத்3மாஸ்யாயை நமோ நம:।
பத்3மாஸனாயை பத்3மின்யை
வைஷ்ணவ்யை ச நமோ நம: ।। 2
ஸர்வ ஸம்பத் ஸ்வரூபிண்யை
ஸர்வாராத்4யை நமோ நம: ।
ஹரிப4க்தி ப்ரதா3த்1ர்யை ச
ஹர்ஷதா3த்1ர்யை நமோ நம: ।। 3

க்ருஷ்ண வக்ஷ: ஸ்த்தி²தாயை ச
க்ருஷ்ணேஶாயை நமோ நம ।
சந்த்³ரஶோபா⁴ ஸ்வரூபாயை
ரத்னபத்³மே ச ஶோப⁴னே ।। 4
ஸம்பத்யதி⁴ஷ்டாத்ரு தே³வ்யை
மஹாதே³வ்யை நமோ நம: ।
நமோ வ்ருத்³தி⁴ ஸ்வரூபாயை
வ்ருத்³தி⁴தா³யை நமோ நம: ।। 5
வைகுண்டே² யா மஹாலக்ஷ்மீ:
யா லக்ஷ்மீ: க்ஷீரஸாக³ரே ।
ஸ்வர்க³ லக்ஷ்மீ: இந்த்³ரகே³ஹே
ராஜலக்ஷ்மீ: ந்ருபாலயே ।। 6
க்³ருஹலக்ஷ்மீஶ்ச க்³ருஹிணாம்
கே³ஹே ச க்³ருஹ தே³வதா ।
ஸுரபி⁴: ஸாக³ரே ஜாதா த³க்ஷிணா யக்ஞ கா¹மினீ ।। 7
அதி³தி¹ர் தே³வமாதா¹ த்வம் கமலா கமலாலயா ।
ஸ்வாஹா த்வம் ச ஹவிர்தா³னே
க¹வ்யதா³னே ஸ்வதா⁴ ஸ்ம்ருதா ।। 8
த்வம் ஹி விஷ்ணு ஸ்வரூபா ச
ஸர்வாதா⁴ரா வஸுந்த⁴ரா ।
ஶுத்³த⁴ஸத்வ ஸ்வரூபா த்வம் நாராயண பராயணா ।। 9
க்ரோத⁴ ஹிம்ஸா வர்ஜிதா ச வரதா³ ஶாரதா³ ஶுபா⁴ ।
பரமார்த்த² ப்ரதா³ த்வம் ச ஹரிதா³ஸ்யப்ரதா³ ப¹ரா ।। 10
யயா வினா ஜகத் ஸர்வம் ப⁴ஸ்மீ பூ⁴தம் அஸாரக¹ம் ।
ஜீவன் ம்ருதம் ச விஶ்வம் ச
ஶஶ்வத் ஸர்வம் யயா வினா ।। 11
ஸர்வேஷாம் ப¹ரா மாதா¹ ஸர்வ பா³ந்த⁴வ ரூபிணீ ।
த⁴ர்மார்த்த² காம மோக்ஷாணாம்
த்வம் ச காரண ரூபிணீ ।। 12
யதா² மாதா¹ ஸ்தனாந்தா⁴னாம்
ஶிஶூனாம் ஶைஶவே ஸதா³ ।
ததா² த்வம் ஸர்வதா³ மாதா
ஸர்வேஷாம் ஸர்வ ரூபத¹: ।। 13

மாத்ருஹீன: ஸ்தநாந்த4ஸ்து ஸ ச ஜீவதி தை3வத: ।
த்வயா ஹீனோ ஜன: கோ'பி1
ந ஜீவத்வேவ நிஶ்சிதம் ॥ 14
ஸுப்ரஸன்ன ஸ்வரூபா த்வம்
மாம் ப்ரஸன்னா ப4வாம்பி3கே ।
வைரிக்3ரஸ்தம் ச விஷயம்
தே3ஹி மஹ்யம் ஸனாத1னி ॥ 15
அஹம் தாவத்வயா ஹீனோ
ப3ந்து4 ஹீனஶ்ச பி4க்ஷுக: ।
ஸர்வ ஸம்பத் விஹீனஶ்ச தாவதே3வ ஹரிப்ரியே ॥ 16
ஞானம் தே3ஹி ச த4ர்மம் ச
ஸர்வ ஸௌபா4க்3யம் ஈப்ஸிதம் ।
ப்ரபா4வம் ச ப்ரதாபம் ச ஸர்வாதி4காரமேவ ச ॥ 17
ஜயம் பராக்ரமம் யுத்3தே4 பரமைஶ்வர்யமேவ ச ।
இத்யுக்த்வா ச மஹேந்த்3ரஶ்ச
ஸர்வை: ஸுர க3ணைஸ் ஸஹ ॥ 18
ப்ரணநாம ஸாஶ்ரு நேத்ரோ
மூர்த்4னா சைவ பு1ன: பு1ன: ।
ப்3ரஹ்மா ஶங்கரஶ்சைவ
ஶேஷோ த4ர்மஶ்ச கேஶவ: ॥ 19
ஸர்வே ச1க்ரு: பரீஹாரம் ஸுரார்த்தே2 ச புன: புன: ।
தே3வேப்4யஶ்ச வரம் த3த்வா
புஷ்ப மாலாம் மனோஹரம் ॥ 20
கேஶவாய த3தௌ3 லக்ஷ்மீ:
ஸந்து1ஷ்ட்டா ஸுர ஸம்ஸதி3 ।
யயுர் தே3வாஶ்ச ஸந்து1ஷ்ட்டா:
ஸ்வம் ஸ்வம் ஸ்தா2னம் ச நாரத3 ॥ 21
தே3வீ யயௌ ஹரே: ஸ்தா2னம்
ஹ்ருஷ்டா க்ஷீரோத3 ஶாயின: ।
யயது1ஶ்சைவ ஸ்வக்3ருஹம்
ப்3ரம்ஹேஶானௌ ச நாரத3 ॥ 22

த3த்வா ஶுபா4ஶிஷம் தௌ1 ச
தே3வேப்4ய: ப்ரீதி பூ1ர்வக1ம் ।
இத3ம் ஸ்தோத்ரம் மஹாபுண்யம்
த்ரிஸந்த்4யம் ய: படே2ன் நர: ।। 23
குபே3ர து1ல்ய: ஸ ப4வேத்
ராஜ ராஜேஶ்வரோ மஹான் ।
பஞ்ச லக்ஷ ஜபேநைவ
ஸ்தௌத்ர ஸித்3தி4: ப4வேன் ந்ருணாம் ।।24
ஸித்3த4 ஸ்தோத்ரம் யதி3 படே2ன்
மாஸமேகம் து ஸந்த1த1ம் ।
மஹாஸூகீ2 ச ராஜேந்த்3ரோ ப4விஷ்யதி ந ஸம்ஶய: ।।25

।। இதி ஸ்ரீ தே3வீபா4க3வதே மஹாபுராணே நவம ஸ்கந்தே3
த்3விசத்வாரிம்ஶோத்4யாய: ।।

ஸ்ரீ மஹாலக்ஷ்மீ ஸ்தோத்ரம்

உபேந்த்3ரன் வாக்யம்

தாமரைப்பூவில் வசிக்கின்ற ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு நமஸ்காரம். ஸ்ரீ நாராயணனின் மனைவிக்கு நமஸ்காரம். ஸ்ரீ கிருஷ்ணனின் மனைவியான ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு எப்போதும் நமஸ்காரம். தாமரை இதழ் போன்ற அகண்ட கண்கள் உள்ளவளும், தாமரை போன்ற முகம் உடையவளுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு நமஸ்காரம். தாமரை புஷ்பத்தை தரித்தவளும், விஷ்ணு பத்னியுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு நமஸ்காரம். ஸர்வஸம்பத்துக்களின் உருவாக இருப்பவளும், யாவராலும் ஆராதிக்கத் தகுந்தவளுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்குப் பல நமஸ்காரங்கள். விஷ்ணு பக்தியை அளிப்பவளும், சந்தோஷத்தை அளிப்பவளுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு நமஸ்காரம். ஸ்ரீ கிருஷ்ணனுடைய மார்பில் வசிக்கின்றவளும் ஸ்ரீ கிருஷ்ணனை கணவனாக உடையவளுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு நமஸ்காரம்.

சந்த்ரிகையின் ஸ்வரூபமாக இருப்பவளும் அழகிய பத்3மராக3ம் **(पद्मरागम्)** *என்னும் கல்லில் ஸகல ஸம்பத்துக்களுக்கும் நாயகியான மஹாதேவிக்கு நமஸ்காரம்.*

ஸாம்ராஜ்யத்தில் வளர்ச்சியின் ஸ்வரூபமாக இருப்பவளும், அந்த வளர்ச்சியை செய்கிறவளுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு நமஸ்காரம். வைகுண்டத்தில் மஹாலக்ஷ்மியாகவும், பாற்கடலில் லக்ஷ்மியாகவும், இந்திரனுடைய வீட்டில் ஸ்வர்கஸ்ரீ (स्वर्गश्री) ஆகவும், அரசனுடைய அரண்மனையில் ராஜலக்ஷ்மியாகவும், கிருஹஸ்த தர்மத்தை அனுஷ்டிப்பவர்களின் வீட்டில் கிருஹலக்ஷ்மியாகவும், வீட்டைப் பாதுகாக்கும் தேவதையாகவும், பால் கடலிலிருந்து உண்டான காமதேனுவாகவும், யாகத்தில் தானம் செய்யும் தக்ஷிணையின் ஸ்வரூபமாகவும், தேவர்களின் தாயான அதி³தி'(अदिति)யாகவும், தாமரை புஷ்பமாகவும், தாமரைப் புஷ்பமாலையை தரித்தவளும், தாமரைப்பூவில் வசிப்பவளும், தெய்வங்களுக்கு ஹவிஸ்ஸை ஹோமம் செய்யும் போது ஸ்வாஹா தேவியாகவும், பித்ருக்களுக்கு ஹவிஸ்ஸை அளிக்கும்போது ஸ்வதா'(स्वधा) தேவியாகவும்- ஓ மஹாலக்ஷ்மீ, தாங்கள் விஷ்ணு ஸ்வரூபமாகவும், யாவற்றுக்கும் ஆதாரமான பூமிதேவியாகவும், இன்னும் தாங்கள் சுத்தமான ஸத்வகுண ஸ்வரூபமாகவும், நாராயணனையே அண்டினவளாகவும், கோபம், பிறருக்குத் துன்பம் செய்வது இவைகள் அற்றவளாகவும், அபீஷ்டங்களை அளிப்பவளாகவும், மங்களத்தைச் செய்யும் ஸாரஸ்வதியாகவும், பரமார்த்த ஸ்வரூபத்தை அளிப்பவளும், ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சேவையைச் செய்கிறவளும், யாவருக்கும் சிறந்த தாயாகவும், யாவருக்கும் உறவினராகவும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், இவைகளை அளிப்பதற்குக் காரணமாய் இருப்பவளும், தாங்களே சிறுபிராயத்தில் பால் குடிக்கும் குழந்தைகளுக்கு தாய் போல் தாங்கள் அப்படி யாவருக்கும் எப்பொழுதும் எவ்வகையிலும் தாயாக விளங்குகிறீர்கள். தாயில்லாத பால் சாப்பிடும் குழந்தைகூட தெய்வத்தின் அருளால் பிழைத்து வளர்ந்து வரும். தாங்கள் இல்லாமல் உலகில் ஒருவர் கூட நிச்சயம் ஜீவித்து வாழ முடியாது.

ஓ அம்பிகே! தாங்கள் பிரஸன்ன ஸ்வரூபத்துடன் எனக்கு நேரில் தரிசனமளிக்க வேண்டும். சத்ருவினால் ஆக்ரமிக்கப்பட்ட தேசத்தை, ஓ ஆதி³ஸ்வரூபிணீ **(आदिस्वरूपिणी)**, தாங்கள் திரும்ப எனக்கு அளிக்க வேண்டும்.

ஓ ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் மனைவியே, நான் தங்களுடைய அருள் கிடைக்கும் வரைதான் உறவினர்கள் இல்லாதவனாயும், பிச்சைக்காரனாகவும், ஸர்வ

ஸம்பத்துக்கள் அற்றவனாயும் இருப்பேன். (தங்கள் அருள் கிடைத்துவிட்டால் எல்லா ஸம்பத்துக்களுடனும் கூடியவ னாகி விடுவேன் எனக் கருத்து).

நல்ல அறிவு, தர்ம புத்தி, மேலான சகல பாக்யங்கள், ஆளும் சக்தி, அடக்கும் சக்தி, யாவருக்கும் தலைவனாக இருக்கும் தன்மையையும், யுத்தத்தில் எதிரிகளை வென்று, ஜெயத்தையும் சிறந்த ஐஸ்வர்யங்களையும் கொடுத்து அருள வேண்டும்.

இவ்வாறு முப்பத்து மூன்று கோடி தேவர்களுடன் தேவேந்த்ரன் ஆனந்தக் கண்ணீர் விட்டு, தலையால் பல முறை வணங்கி நமஸ்கரித்தான். பிரம்மதேவன், சங்கரன், ஆதிசேஷன், தர்மதேவன், ஸ்ரீ மஹாவிஷ்ணு முதலிய தேவர்களும், இந்திராதி தேவர்களுக்கு ஸம்பத்தை அளிக்கும்படி பன்முறை வேண்டினர்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மியானவள் தேவர்களுக்கு கோரிய வரன்களையும் அளித்து விட்டு, ஸ்ரீ மஹாலக்ஷ்மியானவள் மனோஹரமான புஷ்பமாலையை ஸந்தோஷத்துடன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் கழுத்தில் அணிவித்தாள். தேவர்கள் மிகுந்த சந்தோஷத்துடன் தங்கள் ஸ்தானங்களுக்குச் சென்றார்கள். தேவியான மஹாலக்ஷ்மியானவள் மிகுந்த சந்தோஷத்துடன் பாற்கடலில் இருக்கும் தனது கணவனிடம் சென்றாள்.

ஓ நாரதா! பிரம்மதேவனும் ஸ்ரீ பரமேஸ்வரனும் அன்புடன் தேவர்களுக்கு மங்களமான ஆசிகளைச் செய்து விட்டுத் தங்கள் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள்.

இந்த ஸ்தோத்திரத்தை காலை, மாலை, நடுப்பகல் இம்மூன்று வேளைகளிலும் படிக்கின்ற மனிதன், ராஜாதிராஜனான குபேரனுக்கு நிகராகவும் மஹிமை வாய்ந்தவனாகவும் ஆவான்.

இந்த ஸ்தோத்திரத்தை ஐந்து லக்ஷம் தடவை படித்தால், இந்த மந்திரத்தின் ஸித்தியை அடைவான். இந்த மந்திர ஸித்தி ஏற்பட்ட பிறகு ஒரு மாத காலம் தொடர்ந்து இதைப் படிப்பானேயாகில் மிக ஸௌக்கியாவும், அரசர்களுக்குத் தலைவனாகவும் ஆவான். இதில் சந்தேஹமில்லை.

ஸ்ரீ நாரதருக்கு உபதேசித்த ஸ்ரீ லக்ஷ்மீ ஸ்தோத்ரம் முற்றிற்று.

பூமியில் வைக்கக் கூடாத வஸ்துக்கள்

वसुधोवाच -

वहामि सर्वं वाराह रूपेणाहं तवाऽज्ञया ।
लीलामात्रेण भगवन् विश्वं च सचराचरम् ।। १
मुक्तां शुक्तिं हरेरर्चां शिवलिङ्गं शिवां तथा ।
शङ्खं प्रदीपं यन्त्रं च माणिक्यं हीरकं तथा ।। २
यज्ञसूत्रं च पुष्पं च पुस्तकं तुलसीदळम् ।
जपमालां पुष्पमालां कर्पूरं च सुवर्णकम् ।। ३
गोरोचनं चन्दनं च शालग्राम जलं तथा ।
एतान्वोठुमशक्तोहं क्लिष्टा च भगवन् शृणु ।।४

வஸுதோ4வாச -

வஹாமி ஸர்வம் வாராஹ
ரூபேணாஹம் த1வாऽக்ஞயா ।
லீலா மாத்ரேண ப4க3வன் விஶ்வம் ச ஸச1ராச1ரம் ।। 1
முக்தாம் ஶுக்திம் ஹரேரர்ச்சாம்
ஶிவலிங்க3ம் ஶிவாம் ததா2 ।
ஶங்க2ம் ப்ரதீ3பம் யந்த்ரம் ச
மாணிக்யம் ஹீரக1ம் ததா2 ।। 2
யஞஸூத்1ரம் ச புஷ்பம் ச புஸ்தகம் து1லஸீத3ளம் ।
ஜபமாலாம் புஷ்பமாலாம் கற்பூரம் ச ஸுவர்ணக1ம் ।। 3
கோ3ரோசனம் சந்த3னம் ச ஶாலக்3ராம ஜலம் ததா2 ।
ஏதான்வோடு2ம் அஶக்தோஹம்
க்லிஷ்ட்டா ச ப4க3வன் ஶ்ருணு ।। 4

பூமியில் வைக்கக் கூடாத வஸ்துக்கள்

பூமியானவள் சொன்னாள்

ஸ்ரீ பூமி தேவியானவள் ஸ்ரீ பகவானிடத்தில் சொல்லியபடி.

ஓ நாராயணா! நான் எல்லாவற்றையும் தரிப்பேன் (தாங்குவேன்). ஆனால் சிலவற்றை என் மீது வைத்தால் என்னால் தரிக்க முடியாது எனக் கூறினாள். அதாவது நல்முத்து, முத்துச் சிப்பி, பகவானுடைய பிம்பம், சிவலிங்கம், ஸ்ரீ அம்பாளுடைய மூர்த்தி, சங்கு, தீபம், தேவதா யந்திரங்கள், மாணிக்கம், வைரம், பூணூல், புஷ்பம், புஸ்தகம், துளஸீ தளம் (तुलसी दळम्), *ஜபமாலை, புஷ்பமாலை, கூடம், தங்கம், கோரோசனை, சந்தனம், ஸாளக்கிராமம், ஸாளக்கிராமத்திற்கு அபிஷேகம் செய்த தீர்த்தம், இவைகளை என்னால் தாங்க முடியாது. ஆதலால் இவைகளை பூமியில் வைக்கக் கூடாது. (அப்படி வைத்தவர்களுக்கு பல தீங்குகள் ஏற்படுமெனக் கருத்து)*

முற்றிற்று

ஜயமங்கள ஸ்தோத்ரம் பன்னிரண்டாம் பாகம்
முற்றிற்று



ஸ்ரீ கணேசாய நம:

।। श्री रामजयम् ।।

।। श्री महागुरुभ्यो नमः ।।

।। श्री महागणपतये नमः ।।

।। श्रीजयमङ्गल स्तोत्रम् ।।

ஜயமங்கள ஸ்தோத்ரம்

பதிமூன்றாம் பாகம்

श्री रामजयम्। श्री महागुरुभ्यो नमः। श्रीमहागणपतये नमः।

श्री जयमङ्गल स्तोत्रम्

ஸ்ரீ ஜயமங்கள ஸ்தோத்ரம்

பதிமூன்றாம் பாகம்

கும்ப'கோண மஹாமக' (महामघम्) மஹிமையும் அங்குள்ள தெய்வங்களின் ஸ்தோத்ரங்களும்

தேவர்கள் யாவரும் ஸ்நானம் செய்யவரும் மஹாமக'ம்.

ஸ்ரீ பகவானுடைய உபதேசங்களே வேத சாஸ்திரங்கள். அவைகளில் மனிதர்களின் பாபங்களைப் போக்கிக் கொள்ள பல வழிகள் கூறப்பட்டுள்ளன. அவைகளுள் தீர்த்த ஸ்நானம் மிகச் சிறந்தது என்று கூறப்பட்டு இருக்கிறது. அதிலும் மஹாமகத்தன்று கும்பகோணத்திலுள்ள மஹாமக குளத்தில் ஸ்நானம் செய்வதற்கு ஈடானது ஒன்றுமில்லை.

கும்பகோணம் என்னும் க்ஷேத்ரம் தஞ்சை ஜில்லாவில் காவேரி தீரத்தில் (कावेरीतीरम्) உள்ளது. அங்குள்ள மஹாமகக் குளத்தில் பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறை பாரத தேசத்தில் உள்ள துறவிகள் முதல் யாவரும் ஸ்நானத்திற்கு வருவது வழக்கம். அந்தப் பெரிய குளத்தில் பல கிணறுகள் உள்ளன. இப்படி உலகமெல்லாம் ஸ்நானத்திற்கு வருவதன் காரணம், சூரியன் கும்ப ராசியிலும், ப்ருஹஸ்பதி(குரு) ஸிம்ம ராசியிலும் வரும்போது பௌர்ணமியில் மகா நக்ஷத்திரத்தன்று பகல் சுமார் 11-30 மணிக்குமேல் 1-30 மணிக்குள் விருஷப லக்னத்தில் பதினான்கு உலகங்களிலும் உள்ள பிரும்மாதி தேவர்கள் யாவரும் அங்கு ஸ்நானத்திற்கு வருகின்றார்கள்.

गङ्गा च यमुना चैव नर्मदा च सरस्वती ।
गोदावरी च कावेरी कन्या नाम्ना महानदी ॥

पयोष्णी सरयूश्चैव नवैतास्सरितः शुभाः ।
कन्यारूपाश्शोभनाङ्ग्यः चित्राभरण मण्डिताः ।।
शुभवस्त्रान्विता दिव्याः रत्नकञ्चुक शोभिताः ।
जगन्मङ्गळ रूपास्ताः जनपातक धारिणः ।।
दर्शनात् कीर्तनात् पानात् ध्यानाच्च नमनादपि ।
भक्तानामपि सर्वेषां पापाचल विभेदिकाः ।।
सर्वा एताश्च संभूय संभाष्य च परस्परम् ।
दुर्वर्णाचल संस्थानं गत्वा नत्वा मुहुर्मुहुः ।।

க^{3}ங்கா^{3} ச யமுனா சைவ நர்மதா^{3} ச ஸரஸ்வதீ ।
கோ^{3}தா^{3}வரீ ச காவேரீ கன்யா நாம்னா மஹாநதீ^{3} ।।
பயோஷ்ணீ ஸரயூஶ்சைவ நவைதாஸ் ஸரித: ஶுபா^{4}: ।
கன்யாரூபாஶ்ஶோப^{4}னாங்க்^{3}ய: சித்ராப^{4}ரண மண்டி^{3}தா: ।।
ஶுப^{4}வஸ்த்ரான்விதா தி^{3}வ்யா: ரத்னகஞ்சுக ஶோபி^{4}தா: ।
ஜக^{3}ன்மங்க^{3}ள ரூபாஸ்தா^{1}: ஜனபா^{1}த^{1}க^1 தா^{4}ரிண: ।।
த^{3}ர்ஶனாத் கீர்த்தனாத் பானாத் த்^{4}யானாச்ச நமனாத^{3}பி ।
ப^{4}க்தானாமபி ஸர்வேஷாம் பா^{1}பா^{1}ச^{1}ல விபே^{4}தி^{3}கா: ।।
ஸர்வா ஏதாஶ்ச ஸம்பூ^{4}ய ஸம்பா^{4}ஷ்ய ச பரஸ்பரம் ।
து^{3}ர்வர்ணாச^{1}ல ஸம்ஸ்தா^{2}னம்
க^{3}த்வா நத்வா முஹுர்முஹு: ।।

அழகு வாய்ந்தவர்களும், அழகிய ஆபரணங்களை உடையவர்களும், மங்கள வஸ்திரங்களை தரித்தவர்களும், திவ்ய ரூபம் உள்ளவர்களும், ரத்ன கவசம் தரித்தவர்களும், உலகத்திற்கு மங்களத்தை அளிக்கின்ற உருவம் கொண்டவர்களும், ஸ்நானம் செய்த ஜனங்களின் பாபத்தை தரிக்கின்றவர்களும், அதிலும் பக்தி கொண்ட மனிதர்கள் யாவருக்கும் தர்சனத்தாலும், பெயரைச் சொல்வதாலும், தீர்த்தத்தைச் சாப்பிடுவதாலும், தியானம் செய்வதினாலும், நமஸ்கரிப்பதாலும், மலை போன்ற பாபங்களை உடன் போக்குகின்றவர்களுமான கங்கை முதலிய மஹா நதிகள் ஒன்று சேர்ந்து கைலாஸ மலை சென்று ஸ்ரீ பரமசிவனை திரும்பத் திரும்ப நமஸ்கரித்து வேண்டினார்கள்.

गङ्गाधर महेशान गिरिजार्धवपुर्धर ।
समस्त पातक ध्वंसिन् परानन्द परात्पर ।।
महापातकिनस्सर्वे ह्युपपातक संयुताः ।
तत्पापसङ्ग लिप्तास्मः मोक्तुं तत्पातकैरपि ।।
उपायं नो वदस्वाद्य त्वं हि नः परमागतिः । ¡

க'ங்காத4ர மஹேஶான கி3ரிஜார்த4 வபுர்த4ர ।
ஸமஸ்த' பா'த'க' த்4வம்ஸின் பரானந்த3 பராத்பர ।।
மஹாபா'த'கி'னஸ் ஸர்வே ஹ்யுப பாதக ஸம்யுதா: ।
தத்பாபஸங்க3 லிப்தாஸ்ம: மோக்தும் தத்பாத'கைரபி ।।
உபாயம் நோ வத3ஸ்வாத்3ய த்வம் ஹி ந: பரமாக3தி: ।।

ஒக'ங்கா3த4ரா (**गङ्गाधर**)*, ஓமஹேஶ்வரா, பாதிசரீரத்தில் ஸ்ரீ அம்பாளை தரித்தவரே, ஸகல பாபங்களை அழிக்கின்றவரே, பரமானந்த ரூபியே, பிரும்மாதி தேவர்களுக்கும் மேலாக இருப்பவரே, தாங்கள்தான் எங்களை ரக்ஷிக்க வேண்டியவர். எங்களிடத்தில் மஹாபாபிகளும், உபபாதகத்தைச்* (**उपपातकम्**) *செய்தவர்களும் ஸ்நானம் செய்து பாபங்களை எல்லாம் விட்டு விடுகிறார்கள். எங்கள் பாபத்தை எங்கு போக்கிக்கொள்வோம் எனக் கேட்டனர்.*

यूयं गच्छत वेगेन अस्मिन्नेव दिने शुभे ।
शिवविष्णोः प्रिये क्षेत्रे कुम्भकोणाह्वये शुभे ।।
लग्ने वृषभसंज्ञे तु महामाघोत्सवे परे ।
सन्निधौ कुम्भलिङ्गस्य तीर्थे पापापनोदके ।।
साक्षात् सुधापूरकृत्ते परब्रह्माज्ञया पुरा ।
गुरौ मृगेन्द्रगे माघे मघर्क्षे पूर्णिमा दिने ।।
स्नानं कुरुध्वं मद्भक्त्या ध्वस्त पातक सञ्चयाः ।
सर्वेषां पापजालानां भेदितुं शक्तिमेत्य च ।।
इतः परं पापजालैः निर्लिप्ताः तीर्थदेवताः ।
भवन्ति नात्र सन्देहः सत्यं सत्यमितीरिताः ।।

யூயம் க3ச்ச2த வேகே3ன அஸ்மின்னேவ தி3னே ஶுபே4 ।

ஶிவவிஷ்ணோ: ப்ரியே க்ஷேத்ரே
கும்ப4கோணாஹ்வயே ஶுபே4 ॥
லக்3னே வ்ருஷப4 ஸஞ்ஜ்ஞே து
மஹா மாகோ4த்ஸவே பரே ।
ஸன்னிதௌ4 கும்ப4 லிங்க3ஸ்ய
தீர்த்தே2 பாபாபனோத3கே ॥
ஸாக்ஷாத் ஸுதா4பூரக்ருதே பரப்3ரஹ்மாஞயா புரா ।
கு3ரௌ ம்ருகே3ந்த்3ரகே3 மாகே4
மக4ர்க்ஷே பூர்ணிமா தி3னே ॥
ஸ்னானம் கு1ருத்4வம் மத்3ப4க்த்யா
த்4வஸ்த பா1த1க ஸஞ்சயா: ।
ஸர்வேஷாம் பாபஜாலானாம்
பே4தி3தும் ஶக்திமேத்ய ச ॥
இத: பரம் பாபஜாலை: நிர்லிப்தா: தீர்த்த2 தே3வதா: ।
ப4வந்தி நாத்ர ஸந்தே3ஹ: ஸத்யம் ஸத்யமிதீ1ரிதா1: ॥

ஸ்ரீ பரமேஶ்வரன் பதில் கூறியதாவது:- ஓ தீர்த்த தேவதைகளான நதிகளே, இன்றே கும்பகோணம் செல்லுங்கள். இன்று அங்கு மஹாமகம். ''பாபாபநோத3கம்'' **(पापापनोदकम्)** என்ற தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யுங்கள். உங்கள் பாபங்கள் எல்லாம் விலகுவதோடு இனி பாபிகள் ஸ்நானம் செய்தால் உங்களிடம் அந்த பாபம் ஸம்பந்திக்காமலே, ஸ்னானம் செய்தவர்களுக்கும் பாபங்கள் விலகி விடும். இதில் ஸந்தேஹமில்லை. ஸத்யமாகக் கூறுகிறேன். ஸத்யமாகக் கூறுகிறேன் என்று பரமசிவன் கூறியதும், அந்த ஒன்பது தீர்த்த தேவதைகளும் கும்பகோணம் (திருக்குடந்தை) எங்கு இருக்கிறது. நாங்கள் அறியோம். தங்களுடைய ச1ரண கமலம் **(चरणकमलम्)** ஒன்றைத்தான் நாங்கள் அறிவோம்.

त्वत्पादमूलमेकं तु जानीमोत्र न संशयः ।

த்வத்பாத3மூலமேகம் து ஜானீமோத்ர ந ஸம்ஶய: ।

என்று கூறினார்கள்.

ஸ்ரீ பரமசிவன் பார்வதீ தேவியுடன் கைலாஸ மலையிலிருந்து விருஷபத்தின் மீது ஏறிக் கொண்டு 'பரிவாரங்களுடன் நான்

வருகின்றேன். என்னுடன் நீங்கள் வாருங்கள்' என்று கூறி உடன் காசிக்குச் சென்றார்.

वारणासीं च स्वपुरीं कन्यकाभिस्समन्वितः।

வாரணாஸீம் ச ஸ்வபுரீம் கன்யகாபி⁴ஸ் ஸமன்வித:।

அங்கு சென்று, ஸ்ரீ விஸ்வேஸ்வரர் இந்திராதி தேவதைகளுடனும், தீர்த்த தேவதைகளான ஒன்பது கன்னிகைகளுடனும், கந்தர்வர்கள் அப்ஸரஸ்களுடனும் ஒரு க்ஷணத்தில் கும்பகோணம் வந்து சேர்ந்தார்.

இவ்வாறு வேத கோஷங்களுடனும், வாத்ய கோஷங்களுடனும் பாபநோதகம் **(पापपनोदकम्)** என்ற மஹாமகக் குளத்தின் வட கரையில் வந்து அமர்ந்தார். அவர் அந்த வாத்ய கோஷம், வேத கோஷம் இவைகளைக் கேட்டு, கிழக்கு முகமாக அமர்ந்திருந்த பலேச்வரர் **(फलेश्वरः)** என்ற பரமசிவன் (மஹாமகக் குளம் கிழக்கு கரையில் உள்ளவர்) மேற்கு முகமாகத் திரும்பி விட்டார். அந்தக் கோவிலில் உள்ள ஸுதாவல்லி என்றும், அம்ருதவல்லி என்றும் பெயர் உள்ள அம்பாள் தெற்கு முகமாக அமர்ந்து விட்டாள். இவ்வாறு ஆனதைப் பார்த்து பக்தர்களும், நவ கன்னிகைகளும் ஆச்சர்யப்பட்டனர். அதைக் கண்ட விஸ்வேஸ்வரர் அந்த நவ கன்னிகைகளைப் பார்த்து நான்தான் ப²லேஸ்வராராக **(फलेश्वरः)** இருந்து இப்பொழுது அபி⁴முகே²ச்வரர் **(अभिमुखेश्वरः)** என்று ஆனேன் என்று கூறினார்.

உடன் ஒன்பது கன்னிகைகளும் 'நாங்கள் இந்த தீர்த்தத்தைப் பார்த்துக் கொண்டு சந்த்ர சூரியன் உள்ள வரையிலும் இங்கு இருக்கிறோம். நீங்கள் எங்களை பாதுகாக்க வேண்டும்' என்று வேண்டி, இன்று முதல் ப²லேஸ்வரர் என்ற தங்களை அபி⁴முகே²ச்வரர் என்று அழைக்கட்டும் என்றும் வேண்டினார்கள். அப்படியே விஸ்வேஸ்வரரும் வரன் கொடுத்தார். உடன் அந்த ஒன்பது கன்னிகைகளும் ஸ்ரீ விஸ்வநாதருடன் அந்த பாபாபநோதகம் என்ற மஹாமகக் குளத்தை பிரதக்ஷிணம் செய்து அந்த விச்வநாதர் கோவிலில் வந்து அமர்ந்தார்கள்.

ஸ்ரீ பிரும்மதேவர் ஸ்ரீ கும்பேஸ்வரருக்கு மஹோத்ஸவத்தை நடத்தி, பத்தாவது தினம் அந்த குளத்தில் விருஷப லக்னத்தில் அவப்⁴ருத ஸ்நானம் **(अवभृतस्नानम्)** செய்ய, பரிவாரங்களுடன்

ஸ்ரீ கும்பேஸ்வரரை ஸ்ரீ மங்களாம்பிகையுடன் விருஷ பா4ரூட4ராய் (காளைமாட்டின் மீதேறி) அழைத்துவந்து தனது தீர்த்தமாகிய ப்ரம்ம தீர்த்த மண்டபத்தில் (அதாவது மஹாமகக் குளம் வடக்குக் கரையில்) அமர்த்தினார். அப்பொழுது-

सुरेन्द्र गन्धर्व महोरगाद्यैः
वराप्सरोभिः सहवाद्य घोषैः ।
सोमार्क वैश्वानर साध्यसङ्घैः
महोत्सवस्यावभृथे मुदान्विताः ॥

ஸுரேந்த்3ர க3ந்த4ர்வ மஹோரகா3த்3யை:
வராப்ஸரோபி4: ஸஹவாத்3ய கோ4ஷை: ।
ஸோமார்க்க1 வைஶ்வானர ஸாத்4யஸங்கை4:
மஹோத்ஸவஸ்யாவப்4ருதே முதா3ன்விதா: ॥

தேவேந்திரன், கந்தர்வர்கள், உரகர் முதலியவர்கள், அப்ஸரஸ்திரீகள், சந்திரன், சூரியன், அக்னி, ஸாத்4யாள் **(साध्याः)** முதலிய தேவர்கள் வாத்ய கோஷத்துடன் பிரும்ம தேவருடன் வந்தார்கள். அப்பொழுது அந்த கும்பகோணத்திலுள்ள எல்லா ஆலயங்களிலும் உள்ள மூர்த்திகள் தங்கள் தங்கள் வாஹனங்களில் தீர்த்தம் கொடுப்பது வழக்கம். இப்பவும் அங்கு ஸ்ரீ கும்பே1ஶ்வரர், ஸ்ரீ ஸோமேஶ்வரர், ஸ்ரீ கௌ3தமேஶ்வரர், ஸ்ரீ அபி4முகே2ஶ்வரர், ஸ்ரீ ஸோமேஶ்வரர், ஸ்ரீகௌ3தமேஶ்வரர், ஸ்ரீகாளேஶ்வரர், ஸ்ரீகோடீஶ்வரர், ஸ்ரீ பா3ணேஶ்வரர் **(बाणेश्वरः)** முதலிய கோவில்களிலிருந்து அந்த தீர்த்தங்களுக்கு தீர்த்தம் கொடுக்க வருவது வழக்கம்.

மூன்று லோகத்திலும் இம்மாதிரி பிரும்மஹத்தி முதலிய பாபங்களை போக்கும் தீர்த்தம் ஒன்றுமில்லை. இதற்கு மாக4தீர்த்தம் **(माघतीर्थम्)** எனப் பெயர். அதாவது ''அக4ம்'' **(अघम्)** என்றால் பாபம், ''மா'' என்றால் தொடாது. இதில் ஸ்நானம் செய்தவர்களை பாபம் தொடாது. அதனால் இந்தப் பெயர் வந்தது. இந்த தீர்த்தத்தை ஒரு தடவை நமஸ்கரித்தால் தேவர்கள் யாவரையும் நமஸ்கரித்த புண்யம் கிடைக்கும். இந்தக் குளத்தை ஒரு தடவை பிரதக்ஷிணம் செய்தால் பூமியை நூறுமுறை பிரதக்ஷிணம் செய்த புண்யம்

கிடைக்கும். மஹாமகத்தன்று இந்தக் குளத்தில் ஸ்நானம் செய்தால், கங்காதீர்த்தில் நூறு வருஷம் வஸித்து மூன்று காலம் ஸ்நானம் செய்த பலன் வரும். இதே மஹாமக குளத்தில் உள்ள ப்ரம்ம தீர்த்தத்தில் (வட புறத்தில் உள்ளது) மகத்தன்று ஸ்நானம் செய்கின்றவன் தனது கோத்திரம், மனைவியின் கோத்திரம், மாதாமஹனின் (அம்மாவின் அப்பா) கோத்திரம் முதலிய ஏழு கோத்திரங்களைச் சேர்ந்த நூற்றொன்று (101) தலைமுறையை ஸத்3க3தியை **(सद्गति)** *அடையச் செய்கிறான். இந்த மஹாமகத்தன்று ஸ்நானம் செய்தாலோவெனில் மூன்றுகோடி தலைமுறையை ஸத்கதியை அடையச் செய்கிறான்.*

ब्रह्मतीर्थे सकृत् स्नानं यः करोति सुभक्तितः ।
उद्धरेत् सप्त गोत्राणि कुलमेकोत्तरं शतम् ।।
महामाघे सकृत् स्नानं त्रिकोटि कुलमुद्धरेत् ।।

ப்3ரம்ஹதீர்த்தே2 ஸக்ருத் ஸ்னானம்
யஃ கரோதி ஸுப4க்தித: ।
உத்3த4ரேத் ஸப்த கோ3த்ராணி
குலமேகோத்தரம் ஶதம் ।।
மஹாமாகே4 ஸக்ருத் ஸ்னானம்
த்ரிகோடி குலமுத்3த4ரேத் ।।

மற்ற நாட்களில் ஸ்நானம் செய்தால் ஸப்த க்ருச்ரத்தை **(सप्त कृच्छ्रम्)** *அனுஷ்டித்த பலன் வரும். இந்த ப்ரும்ம தீர்த்தத்தை தர்சித்தாலே மஹா பாபங்களெல்லாம் விலகி ஸர்வ அபீஷ்டங்களும் உண்டாகிவிடும். ஓ நாரதா இது ஸத்யம், ஸத்யம் (உண்மை உண்மை) என்று பிரம்மதேவர் கூறினார்.*

दर्शनात् ब्रह्मतीर्थस्य महाघौघ निवारणम् ।
सर्वाभीष्टमवाप्नोति सत्यं सत्यं हि नारद ।।

த3ர்ஶனாத் ப்3ரம்ஹ தீர்த்த2ஸ்ய
மஹாகௌ4க4 நிவாரணம் ।
ஸர்வாபீ4ஷ்டம் அவாப்னோதி
ஸத்யம் ஸத்யம் ஹி நாரத3 ।।

இந்த ப்ரும்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால் ப்ரும்மக்ஞானம் உண்டாகும். அதும்

श्रियं विद्यां जयञ्चैव कीर्तिमायुः परं वसु ।
पुत्रपौत्र समृद्धिश्च ब्रह्मतीर्थ निषेवणात् ।।

ஶ்ரியம் வித்3யாம் ஜயஞ்சைவ
கீர்த்திமாயு: பரம் வஸு ।
புத்ரபௌத்ர ஸம்ருத்3தி4ஶ்ச
ப்3ரம்ஹதீர்த்த2 நிஷேவணாத் ।।

லக்ஷ்மியையும், கல்வியையும், ஜெயத்தையும், கீர்த்தியையும், நீண்ட ஆயுளையும், சிறந்த ஐஸ்வர்யத்தையும், புத்ரர்கள், பேரப்பிள்ளைகள் முதலிய ஸம்பத்துக்களையும் **(समृद्धि)** அந்த ப்ரும்ம தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால் அடைகிறான். இதற்கு கீழ்புறத்தில் குபேர தீர்த்தம் உள்ளது. அதில் ஸ்நானம் செய்து, தானம் செய்வதால் குபேரனுக்கு ஒப்பான ஐஸ்வர்யம் உள்ளவனாக ஆவான். இந்த தீர்த்தத்திற்கு கீழ்பாகத்திலும் இந்திர தீர்த்தத்திற்கு வடபுறத்திலும் உள்ள ஈஶான தீர்த்தத்தில் **(ईशान तीर्थम्)** ஸ்நானம் செய்வதால் மலைபோல் உள்ள பாபங்கள் விலகிவிடும். கோரிய பலன்களை அடைவான். இதில் ஸந்தேஹமில்லை.

இந்த மஹாமகக் குளத்தின் நடுவில் உள்ளது கன்யா தீர்த்தம் எனச் சொல்வது. இதில் அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும் உள்ளனவாம். இதில் ஸ்நானம் செய்வதால் ப்ரம்மாண்டத்திலுள்ள எல்லா தீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்த பலன் கிடைக்குமாம்.

षट्षष्टि कोटि तीर्थानि संभूय किल नारद।
कन्यातीर्थे मध्यभागे वासं कुर्वन्ति नित्यशः।।
तत्तीर्थ स्नानकरणात् सर्वतीर्थ फलं लभेत्।।

ஷட்ஷஷ்டி கோடி தீர்த்தா2னி ஸம்பூ4ய கில நாரத3 ।
கன்யாதீர்த்தே2 மத்4யபா4கே3 வாஸம் குர்வந்தி நித்யஶ:।।
தத்தீர்த்த2 ஸ்னானகரணாத் ஸர்வதீர்த்த2 ப2லம் லபே4த்।।

ப்ரம்ம தீர்த்தத்திற்கும், வாயு தீர்த்தத்திற்கும் நடுவில் பா4கீ3ரதி தீர்த்தம் **(भागीरत्ती तीर्थम्)** உள்ளது. அதில் கங்கை நித்ய வாஸம் செய்கிறாள்.

तत्र स्नानान् नरो याति वैकुण्ठं नात्र संशयः ।
तत्र स्नानान् नरो याति कैलासं नात्र संशयः ।।

தத்ர ஸ்னானான் நரோ யாதி
வைகுண்ட[2]ம் நாத்ர ஸம்ஶய: ।
தத்ர ஸ்னானான் நரோ யாதி
கைலாஸம் நாத்ர ஸம்ஶய: ॥

இதில் ஸ்நானம் செய்பவர் தன் இஷ்டப்படி கைலாஸத்தையோ, வைகுண்டத்தையோ அடைவர். மஹாமகத்தன்று இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால் காசியில் வஸித்து கங்கையில் பதினாயிரம் ஸ்நானம் செய்த பலனை அடைவர் என ப[4]விஷ்யோத்தர புராணத்தில் **(भविष्योत्तर पुराणम्)** *ப்ரம்மதேவர் நாரதரைப் பார்த்து கூறியிருக்கிறார்.*

गङ्गास्नानायुत फलं महामाघे कृतं नृणाम् ।

க[3]ங்கா[3]ஸ்னானாயுத ப[2]லம்
மஹாமாகே[4] க்ருதம் ந்ருணாம் ।

ஆதலால்தான் நமது ஜகத்குரு ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடம் 68-வது பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யாளான ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் இந்த பாகீரதி தீர்த்தத்தில் மஹாமகத்தன்று ஸ்நானம் செய்வது வழக்கம். இக்கலியிலும் மஹாமகத்தன்று வடபுறத்தில் காசியிலிருந்து கங்கை வருவது ஆச்சரியப்படத்தகுந்ததாக இருக்கும். அங்கு பல குமிழிகள் வ்ருஷப லக்கினத்தில் ஏற்படுவதைப் பார்க்கலாம். இம்மாதிரி இந்த குளத்தில் இருபது தீர்த்தங்கள் உள்ளன. அங்குள்ள வைதீகர்களும், ஸங்கல்பம் செய்து வைக்கும்போது முறைப்படி மந்திரங்களைச் சொல்லி தீர்த்தங்களுடைய பெயர்களைச் சொல்லி ஸ்நானம் செய்து வைப்பார்கள். இங்கு ஒவ்வொரு தீர்த்தங்களிலும் தனித்தனி ஸங்கல்பம் செய்து கொண்டு ஸ்நானம் செய்து க்ருச்ச்ர தா[3]னம் **(कृच्छ्रदानम्)** *செய்வது ரொம்பவும் விசேஷம். க்ருச்ச்ரம்* **(कृच्छ्रम्)** *என்றால் பசுவின் விலையை ஒரு அக்னிஹோத்ரியினிடத்திலோ, வேதவித்துக்களிடத்திலோ தானம் செய்வது ஆகும். ப்ரத்யக்ஷ "கோ[3]"* **(गो-** *பசு)வை த[3]த்தம்* **(दत्तम्)** *பண்ணியோ, நேரிலோ அக்னி ஹோத்ரிகளிடத்திலோ, வேதவித்துக்களிடத்திலோ கொடுக்கலாம். இந்த சமயத்தில் தானம் செய்வது கோடி கோ[3]தா[3]னம்* **(गो दानम्)** *செய்த புண்யமாகும். ஏனென்றால்*

கங்காதி புண்ய நதிகளும் அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும். ஸமஸ்த தேவதைகளும் அந்த இடத்திலிருப்பதால் அந்த ஸன்னிதியில் தானம் செய்வது விசேஷமானது. அந்த தீர்த்தங்களின் பெயர்களை பவிஷ்யோத்தர புராணம் முதலியவைகளில் கூறியபடி கீழே காணலாம்.

(1) வாயு தீர்த்தம்- அந்த குளத்தின் வடமேற்கு திக்கில் உள்ள தீர்த்தத்தில் உள்ளது. அதிலிருந்து பிரதக்ஷிணமாக ஒவ்வொரு தீர்த்தங்களும் உள்ளன.

(2) பா4கீ3ரதி தீர்த்தம் (கங்கா தீர்த்தம்)- இந்த இடத்தில்தான் நமது ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பரமாசார்யாள் ஸ்நானம் செய்வது வழக்கம்.

(3) ப்3ரம்ம தீர்த்தம் (4) யமுனா தீர்த்தம் (5) குபேர தீர்த்தம் (6) கோ3தா3வரி தீர்த்தம் (7) ஈசான தீர்த்தம் (8) நர்மதா3 தீர்த்தம் (9) இந்த்3ர தீர்த்தம் (10) ஸரஸ்வதீ தீர்த்தம் (11) அக்3னி தீர்த்தம் (12) காவேரி தீர்த்தம் (13) யம தீர்த்தம் (14) குமரி தீர்த்தம் (15) நிருருதி தீர்த்தம் (16) பயோஷ்ணீ (பாலாறு) தீர்த்தம் (17) தே3வ தீர்த்தம் (18) வருண தீர்த்தம் (19) ஸரயூ தீர்த்தம் (20) கன்யா தீர்த்தம். நடுவில் அறுபத்தாறு கோடி தீர்த்தங்கள் உள்ளன. இந்த மஹாமக குளத்தில் ப்ரம்மா அவப்4ருதம் **(अवभृतम्)** செய்ததால் ''பிரம்ம தீர்த்தம்'' என்றும், பாபங்களை போக்குவதால் ''பாபாபநோத3கம்'' **(पापापनोदकम्)** என்றும், அமிருத தா4ரையினின்றும் **(अमृतधारा)** பெருகினதால் ''ஸுதா4 தீர்த்தம்'' **(सुधा तीर्थम्)** என்றும், கங்காதி ஒன்பது தீர்த்தங்களும் கன்னிகைகளாக வந்து ஸ்நானம் செய்ததால் ''கன்யா தீர்த்தம்'' என்றும் பொதுவாக பெயர்கள் கூறப்படுகிறது.

இந்த மஹாமக குளத்தில் ஸ்நானம் செய்வதற்குமுன் காவேரியில் ஸ்நானம் செய்வது வழக்கம். முடிந்தால் முதல் தினமோ, அன்றோ பஞ்சகவ்யத்தை பிராஶனம் **(पञ्चगव्यप्राशनम्)** செய்யலாம்.

இந்த மஹாமக வருஷத்தில் மஹாமகத்திற்கு ஒரு வருஷம் முன்னமேயே கங்காதி அறுபத்தாறு கோடி தீர்த்தங்களும் ஸமஸ்த தேவதைகளும் கும்பகோணத்திற்கு வந்து விடுகின்றனராம். ஆதலின் இந்த மஹாமக வருஷத்தில், வேறு தேசத்திலுள்ள தீர்த்தங்களுக்குச் செல்வதில்லை.

ஆனால் ஸ்ம்ருதிகளில் (स्मृति) ஸர்வ தேவதைகளும் விந்திய மலைக்கும் நர்மதைக்கும் தென்புறமுள்ள தென்னாட்டில் வருவதால், விந்திய மலைக்கு தெற்கே உள்ளவர்கள் விவாஹாதி சுப முகூர்த்தங்கள் செய்யலாமென்றும், அதற்கு வடக்கே உள்ளவர்கள்தான் செய்யக்கூடாது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

வியாஸ ஸ்ம்ருதியில் கூறிய வசனங்களை கீழே காணலாம்

नर्मदोत्तरदेशे तु सिम्हस्थे देवमन्त्रिणि ।
विवाहं नैव कुर्वीत निषेधो नास्ति दक्षिणे ।।

நர்மதோ3த்தரதே3ஶே து ஸிம்ஹஸ்த்தே2 தே3வமந்த்ரிணி।
விவாஹம் நைவ குர்வீத நிஷேதோ4 நாஸ்தி த3க்ஷிணே।।

இப்படியே மத்ஸ்ய, க3ர்க3 ஸ்மிருதிகளிலும் (गर्ग स्मृति) கூறப்பட்டுள்ளது.

விஸ்வநாத ஸ்வாமி கோவிலில் உள்ள ஒன்பது கன்னிகைகளை பூஜை செய்ய வேண்டும். இந்த கன்னிகைகள் தமது ஓர் அம்சத்தால் இந்தக் கோவிலில் பெண்களின் உருவங்களாகவும், மற்ற அம்சத்தால் தீர்த்த உருவங்களாகவும் விளங்குகின்றனர். இவர்கள் தினந்தோறும் மந்த்ர பீடேஸ்வரியான ஸ்ரீ மங்களாம்பிகையையும், திரிபுர ஸம்ஹாரம் செய்து சத்ரு பயத்தைப் போக்குகின்ற ஸ்ரீகும்பேஸ்வரரையும், ஸ்ரீகோமளவல்லியையும், க3தா3த4ரனும் (गदाधरः), ஸர்வக்ஞனுமான ஸ்ரீ ஶாரங்க3பாணியையும் (श्री शार्ङ्गपाणिः) நமஸ்கரித்து ஸேவித்து வருகின்றனர்.

இந்த மஹாமக குளத்தில் ஸ்நானம் செய்ததும் ஒன்பது முறங்களில் மாதுளம் பழம் முதலிய பழங்களையும், வஸ்திரம், தாம்பூலம் முதலியவைகளை வைத்து வேதவித்துக்களிடத்தில் தானம் செய்ய வேண்டும். அந்த மஹாமகத்தன்று ஸ்நானம் செய்வதும், தானம் செய்வதும், பித்ருக்களைக் குறித்து தர்ப்பணம் செய்வதும், ஸ்ரீஅபி4முகே3ஶ்வரர், ஸ்ரீவிஶ்வேஶ்வரர், ஸ்ரீ கௌ3தமேஶ்வரர், ஸ்ரீ நாகே3ஶ்வரர், ஸ்ரீ ஶாரங்க3பாணி, ஸ்ரீ ச1க்ரபாணி, ஸ்ரீ வராஹப்பெருமாள், ஸ்ரீ கோடீஶ்வரர் முதலிய மூர்த்திகளை தர்சித்து, பூஜித்து, அர்ச்சனம் செய்வதும் அளவு கடந்த பயனை அளிக்கும்.

तस्मात् तस्मिन् दिने स्नात्वा सर्वतीर्थफलं लभेत् ।
तदा स्नानञ्च दानञ्च पितृनुद्दिश्य तर्पणम् ॥
भगवत् पूजनं चैव अनन्तफलदं विदुः ॥

தஸ்மாத் தஸ்மின் தி^{3}னே ஸ்னாத்வா
ஸர்வ தீர்த்த^{2} ப^{2}லம் லபே^{4}த் ।
ததா^{3} ஸ்னானஞ்ச தா^{3}னஞ்ச
பித்ருநுத்^{3}தி^{3}ஶ்ய தர்ப்பணம் ॥
ப^{4}க^{3}வத் பூஜனம் சைவ அனந்த ப^{2}லத^{3}ம் விது^{3}: ॥

ஸ்ரீ விஶ்வனாத ஸ்வாமி கோவிலில் இருக்கும் ஒன்பது கன்னிகைகளையும் பூஜித்து அர்ச்சனம் செய்து, ஒன்பது முறங்களில் புஷ்பம், பழம், குங்குமம், தேங்காய், வஸ்திரம் இவைகளை வைத்து, அதன்மேல் ஒன்பது முறங்களால் மூடி, ஒன்பது ஸுமங்கலிகளிடத்தில் கொடுக்க வேண்டும்.

மஹாமகத்தன்று இருபது தானங்கள் செய்ய வேண்டும். அந்த தானங்களை தீர்த்தக்கரையிலோ, அங்குள்ள அரசமரத்தின் அடியிலோ, கோவில்களிலோ, வீட்டிலோ செய்யலாம். அந்த தானங்களாவன -

(1) பூமிதானம் (2) கன்னிகாதானம் (இதற்காக பொருளை தானம் செய்வது) (3) ஸ்வர்ண தானம் (4) யக்ஞோபவீத தானம் (5) கோ^{3}(பசு) தானம் **(गोदानम्)** *(6) அஶ்வதானம் (குதிரை) (7) வ்ருஷப^{1} தானம் (காளை மாடு) (8) அன்ன தானம் (9) பாயஸ தானம் (10) தா^{4}ன்ய தானம் (11) கல்பக வ்ருக்ஷ தானம் (தென்னை) (12) குப்த தானம் (பூஷணிக்காய் அல்லது பலாப்பழம் அல்லது இளநீர், இவைகளில் ஒரு ரூபாய் அகலத்திற்கு பூரி(ஓட்டை போட்டு), அதற்குள் ரத்னம், ஸ்வர்ணம், வைரம், வைடூர்யம், வெள்ளி, முத்து இவைகளை போட்டு, எடுத்த தோலினாலேயே மூடி, தக்ஷிணையுடன் கொடுப்பது குப்த தானம்) (13) சந்தன தானம் (14) நல்முத்து தானம் (15) நவரத்ன தானம் (16) தேன் தானம் (17) உப்பு தானம் (18) எள்ளு தானம் (19) மாதுளம் பழம் தானம் (20) 16 விதமான பழங்களை வைத்து 16 பேர்களுக்கு தானம் செய்வது ஷோட^{3}சப^{2}ல தா^{3}னம்* **(षोडश फल दानम्)**. *ஆக இந்த இருபது தானங்களையும் தன் சக்திக்குத் தக்கவாறு அவரவர்கள் வஞ்சனை இல்லாமல் செய்ய வேண்டும்.*

[illegible] விரும்புகிறவன் செய்ய வேண்டிய தானங்களாவன-

(1) கல்பவிருக்ஷம் (தென்னை மரம்) (2) பதினோரு எள்ளுருண்டை (3) ஐம்பது பலம் (ஒரு பலம் என்பது 35 கிராம்) எடையுள்ள வெண்ணையைக்குள் நவரத்தினங்களை வைத்து லிங்கமாகச் செய்து வேதவித்துக்களிடம் தானம் செய்ய வேண்டும். இந்த தானங்களை அங்குள்ள அரச மரத்தடியிலேயே செய்வது நலம். முடியாவிடில் வேறு இடத்திலும் செய்யலாம். அதன் வசனமாவது-

पिप्पलद्रुममूलं तु समासाद्य द्विजोत्तमम् ।
संपूज्य कल्पवृक्षन्तु दानं कुरु द्विजोत्तम ।।
तिलपिण्ड प्रदानं तु शर्कराक्तं दशैककम् ।
नवनीतकृतं शम्भुं पञ्चाशत् पलनिर्मितम् ।।
नवरत्नसगर्भन्तु ददस्व त्वं द्विजातये ।।

பிப்பல த்[3]ருமமூலம் து ஸமாஸாத்[3]ய த்[3]விஜோத்தமம் ।
ஸம்பூஜ்ய கல்பவ்ருக்ஷந்து தா[3]னம் கு[1]ரு த்[3]விஜோத்தம ।।
திலபிண்ட[3] ப்ரதா[3]னம் து ஶர்க்கராக்தம் த[3]ஶைககம் ।
நவனீதக்[1]ருதம் ஶம்பு[4]ம் பஞ்சாஶத் ப[1]ல நிர்மிதம் ।।
நவரத்னஸக[3]ர்ப[4]ந்து த[3]த[3]ஸ்வ த்வம் த்[3]விஜாதயே ।।

இதனால் அழகான புத்ரன் பிறப்பான் என்று சாண்டில்ய முனிவர், வீர சர்மா என்ற அரசனுக்கு உபதேசித்து அவ்வாறு அந்த அரசன் செய்து புத்ர லாபத்தை அடைந்தான். அன்று வேதவித்துக்களுக்கு போஜனம் செய்து வைப்பது மிகவும் புண்யமாகும்.

நினைத்த மாத்திரத்தில் பாபங்களைப் போக்கும் ஸ்ரீ கும்பேஶ்வரர், ஸ்ரீ சாரங்கபாணி, ஸ்ரீ சக்ரபாணி, ஸ்ரீ நாகேஶ்வரர், முதலிய மூர்த்திகளை சிறந்த முறையில் பூஜித்து அர்ச்சனை செய்து வேதவித்துக்களுக்கு அன்னதானம் செய்து வைக்க வேண்டும்.

कुम्भलिङ्गं च शम्भोश्च स्मरणात् पापभेदिनः ।
श्रीमद्वैकुण्ठनाथस्य शार्ङ्गपाणेश्च चक्रिणः ।।
महदभ्यर्चनं कृत्वा प्रणमेच्च ततः परम् ।।

கும்ப⁴லிங்க³ம் ச ஶம்போ⁴ஶ்ச ஸ்மரணாத் பாபபே⁴தி³ன:।
ஸ்ரீமத்வைகுண்ட²நாத²ஸ்ய ஶார்ங்க³பாணேஶ்ச ச²க்ரிண:॥
மஹத³ப்⁴யர்ச்சனம் க்ருத்வா ப்ரணமேச்ச தத: பரம் ॥

அன்று செய்த சிறிதளவு தானமும் மேரு மலைக்கு ஸமானமாக ஆகி அளவற்ற புண்யங்களைத் தரும்.

கும்பகோணத்தில் தீர்த்த ஸ்ராத்தம் செய்வது நலம். மஹாமகத்திற்கு முன்தினங்களிலும் செய்யலாம். அன்றும் செய்யலாம். ஹிரண்ய ரூபமாகச் செய்து பின்பு தானமும் செய்யலாம். அன்று சௌகர்யப்பட்டால் குளத்துக்கரையில் வபனம் (க்ஷவரம்) செய்வித்துக் கொள்ளுவது நலம். அந்த வசனமாவது-

कक्षोपस्थं वर्जयित्वा क्षौरकर्म समाचरेत् ॥

கக்ஷோபஸ்த²ம் வர்ஜயித்வா க்ஷௌரகர்ம ஸமாசரேத்॥

இதற்கு பின்பு ஸ்நானம் செய்து, தர்ப்பணம் தானம் முதலியவைகளை செய்ய வேண்டும்.

महामघ व्रतं त्वेवं यः करोति नरो भुवि ।
करस्थं तस्य कैवल्यं किमुताखिल संपदः ॥

மஹாமக⁴ வ்ரதம் த்வேவம் ய: கரோதி நரோ பு⁴வி।
கரஸ்த²ம் தஸ்ய கைவல்யம் கிமுதா²கி²ல ஸம்ப¹த³:॥

இம்மாதிரி மஹாமக வ்ரதத்தை (மஹாமக ஸ்நான, தான, பூஜைகளை) இவ்வுலகில் எவன் செய்கிறானோ, அவன் கையில் மோக்ஷம் கிட்டிவிடும். அப்படி இருக்க அவனுக்கு ஸகல ஸம்பத்தும் கிடைக்கும் என்பதில் என்ன ஸந்தேஹம்.

அன்று கும்பகோணம் போக முடியாத அசக்தர்கள், தாங்கள் இருக்கும் இடத்திலேயே ஸ்நானம் செய்து அந்த கும்பகோணம் இருக்கும் திக்கை குறித்து நமஸ்கரித்து மஹாதானங்களை முடிந்தவரையில் வேதவித்துக்களிடத்தில் செய்யலாம்.

இந்த கும்பகோணமானது சிறந்த க்ஷேத்திரம் என்பதற்கு பல ப்ரமாணங்கள் உள்ளன. மனிதர்கள் செய்யும் பாபங்கள் எல்லாம், புண்ய க்ஷேத்திரங்களில் ஸ்நானம், தானங்கள் செய்வதால் விலகிவிடும். புண்ய க்ஷேத்திரங்களில்

[illegible] அங்கு செய்யும் பாபங்களை, காசியில் சென்று ஸ்நான, தானங்கள் செய்வதால் பாபங்கள் விலகிவிடும். காசியில் செய்யும் பாபங்கள், கும்பகோணம் வந்து ஸ்நான தானங்கள் செய்தால் விலகிவிடும். கும்பகோணத்தில் செய்யும் பாபங்கள் கும்பகோணத்தில்தான் போகும். ஆதலால்தான் காசியில் உள்ளவர்களும் மஹாமக ஸ்நானத்திற்கு இங்கு வருகின்றனர். இதன் வசனமாவது-

अन्यक्षेत्रे कृतं पापं पुण्यक्षेत्रे विनश्यति ।
पुण्यक्षेत्रे कृतं पापं वाराणस्यां विनश्यति ।।
वाराणस्यां कृतं पापं कुम्भकोणे विनश्यति।
कुम्भकोणे कृतं पापं कुम्भकोणे विनश्यति।।

அன்யக்ஷேத்ரே க்ருதம் பாபம்
புண்யக்ஷேத்ரே விநஶ்யதி ।
புண்யக்ஷேத்ரே க்ருதம் பாபம்
வாராணஸ்யாம் விநஶ்யதி ।।
வாராணஸ்யாம் க்ருதம் பாபம்
கும்ப4கோணே விநஶ்யதி ।
கும்ப4கோணே க்ருதம் பாபம்
கும்ப4கோணே விநஶ்யதி ।।

இந்த மஹாமக உத்ஸவ அவப்4ருத (**अवभृत**) ஸ்நான காலத்தில் எல்லா தேவர்களும், எல்லா தீர்த்தங்களும் சேர்ந்து வருவதால், பெரிய ப்ராயச்சித்தங்களாலும், கங்காதி புண்ய தீர்த்த ஸ்நானங்களாலும் விலகாத ''ப்ரம்மஹத்தி, ஸுராபானம், ஸ்வர்ண ஸ்தேயம் (பொன்னை திருடுதல்), குருவின் மனைவியை விரும்புதல், இந்த மேலே சொன்ன நான்கைச் செய்த பாதகர்களோடு சேர்ந்து வஸித்தல்'' ஆகிய ஐந்து மஹா பாதகங்களும் விலகும். வேதவித்துக்களுக்கு துரோஹம் செய்தல், குரு துரோஹம், தாய் தந்தைகளுக்கு துரோஹம் செய்தல், விஷ்ணு துரோஹம், சிவ துரோஹம், துர்தானங்களை வாங்குவது, துஸ்ஸங்கம் செய்பவன், கெட்ட புத்தி உடையவன், நம்பினவனை மோசம் செய்வது, பில்வ மரம், அரசமரம் முதலிய புண்ய மரங்களை வெட்டுவது, பிறர் மனைவிகளுடன் சேருவது, சிவ த்ரவ்யத்தை அபகரிப்பது, கிணறு, குளம், குட்டை முதலியவைகளை மூடுவது,

எள், எண்ணை முதலிய விற்கக் கூடாத பதார்த்தங்களை விற்றுப் பிழைப்பது, சிவலிங்கம், ஸாளக்ராமம், முதலிய பூஜா சாமான்களைத் திருடுவது, ஸாளக்ராமத்தை விற்பது, பழம், புஷ்பம், முதலியவைகளைத் திருடுவது, கொடுப்பதாக வாக்களித்து பின்பு இல்லை எனச் சொல்வது, பிதாவுக்கும் பிள்ளைக்கும் விரோதத்தை உண்டாக்குவது, தம்பதிகளுக்குள் விரோதத்தை உண்டாக்குவது, தாய் தந்தைகளுடைய ப்ராத்தத்தை விடுவது, குழந்தைகளைக் கொல்லுவது, கர்பத்தை அழிப்பது, விஷம் கொடுப்பது, வீட்டை கொளுத்துவது, தன்னுடைய கோத்திரத்தில் பிறந்த பெண்ணை மணப்பது, விலக்கத் தக்கதும் ஆசாரமில்லாமல் பாகம் (पाकम्-சமையல்) செய்யப்பட்டதுமான ஆஹாரங்களை உண்பது, ஆசௌசம் (आशौचम्-தீட்டு) உள்ளவர்களின் அன்னத்தை புஜித்து (உண்டு) ஜீவிப்பது, யாகாதி கர்மாக்களைத் தடுப்பது, தர்மத்தை தூஷிப்பது முதலிய பாபங்களை செய்தவர்கள் கூட இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால், உடன் எல்லா பாபங்களிலிருந்தும் விடுபடுவார்கள்.

மாக^4 மாஸத்தில் (माघ मासम्) மஹாமக குளத்தில் ஸ்நானம் செய்து தர்ப்பணம் செய்வதால், பதினாயிரம் முறை க^{3}யாஶ்ராத்^{3}த^{4}ம் (गया श्राद्धम्) செய்த பலன் கிட்டும்.

माघमासे माघतीर्थे तिलैस्तर्पयते पितॄन् ।
गया श्राद्धायुत फलं लभन्ते नात्र संशयः ।।

மாக^{4}மாஸே மாக^{4}தீர்த்தே^{2} தி^{1}லைஸ்த^{1}ர்ப்பயதே பித்^{1}ரூன்।
க^{3}யா ஶ்ராத்^{3}தா^{4}யுத ப^{2}லம் லப^{4}ந்தே நாத்ர ஸம்ஶய:।।

கன்யா தீர்த்தத்தில் மஹாமகத்தில் ஸ்நானம் செய்து எள்ளினால் தர்ப்பணம் செய்தால், நூற்றெட்டு தலைமுறைகள் நமது முன்னோர்கள் நரகத்திலிருந்து கரையேறுவார்கள்.

कन्यातीर्थे महामाघे तिलैस्तर्पणं आचरेत् ।
उद्धरेत् सप्त गोत्राणि कुलमेकोत्तरं शतम् ।।

கன்யாதீர்தே^{2} மஹாமாகே^{4} திலைஸ் தர்ப்பணம் ஆசரேத்।
உத்^{3}த^{4}ரேத் ஸப்த கோ^{3}த்ராணி குலமேகோ^{1}த்தரம் ஶதம்।।

மஹாமகத்தில் அக்குளக்கரையில் விருஷோத்ஸர்க³ம் **(वृषोत्सर्गम्)** (காளையை விடுதல்) செய்தால் கோடி முறை கயா ச்ராத்தம் செய்த புண்யத்தை அடைவான். இது நிச்சயம்.

இந்த கும்பகோணத்தில் சிவவிஷ்ணு பேதமின்றி யாவரும் எல்லா ஆலயங்களுக்கும் சென்று வழிபடுவதால் மூன்று மதஸ்தர்களும் (ஸ்மார்த்த, வைஷ்ணவ, மாத்'வ) ஒற்றுமையாக இருப்பதைக் காணலாம்.

சுபம்

ஸ்ரீ கும்ப⁴கோணம்
என்று பெயர் வந்ததற்குக் காரணம்

ப்ரளயம் வருவதற்கு முன் ஸ்ரீ பரமாத்மா ப்ரம்மதேவனை புண்ய க்ஷேத்திரங்களிலிருந்து சிறிது சிறிது மண்ணை கொண்டுவரச் செய்து அமிருதத்தை விட்டுப் பிசைந்து ஓர் குடமாகச் செய்யும்படி சொன்னார். அக்குடத்திற்குள் அம்ருதத்தையும், வேதங்கள், இதிஹாஸ புராணங்கள், ஆகமங்கள், மந்திர சாஸ்திரங்கள், அடுத்த கல்பத்தில் ஸ்ருஷ்டி செய்ய வேண்டிய விதைகள் முதலியவற்றை வைத்து, அதன்மேல் ஐந்து விதமான துளிர்களை வைத்து, ஓர் கூர்ச்சத்தையும்(தர்பையால் கட்டிய முடிச்சு), தேங்காயையும் வைத்து, சந்திர கலையால் உள்ளே இருக்கும் அம்ருதம் வெளிவராமல் செய்து, அக்குடத்தின் மேலும் அமிருதத்தைப் பூசி, தர்பையால் செய்யப்பட்ட உறியில் அக்குடத்தை வைத்து, ப்ரம்மதேவனுடைய வீட்டின் நடுவில் கட்டி வைக்கும்படியும் சொன்னார். சிறிது காலத்திற்குப் பிறகு ப்ரளயம் ஏற்பட்டது. காற்றினால் தள்ளப்பட்டு அக்குடம் ப்ரளய ஜலத்தில் மிதந்து வந்தது. அப்பொழுது அந்தக் குடத்தின் மேலிருந்த கூர்ச்சமானது கும்பகோணத்திற்கு பக்கத்தில் விழுந்தது. அந்த இடம்தான் ஸாக்ஷிபுரம் **(साक्षिपुरम्)**

என்னும் திருப்பிரம்பியம் என்னும் க்ஷேத்ரமாக ஆகியது. அந்த கூர்ச்சம்தான் ஸாக்ஷீஸ்வரர் (साक्षीश्वर:) என்னும் பரமேஸ்வரராக ஆனார். அதாவது உலகத்தில் உள்ளவர்களின் தர்மம், அதர்மம் இவற்றுக்கு ஸாக்ஷியாக அமர்ந்துள்ளார்.

குடத்தில் வைத்திருந்த மாங்கொழுந்து முதலிய இலைகள் விழுந்த இடத்தில் வன்னிமரம் உண்டாகியது. அந்த மரமானது தர்மம் அதர்மம் இவற்றின் பயனான ஸுக துக்கத்தை அளிக்கும்படி பாதுகாத்து வருகிறது.

அந்தக் குடத்தை பாதுகாப்பதற்காக ப்ரம்ம தேவரால் கட்டளையிடப்பட்ட ஏழு கன்னிகைகள் அக்குடத்தைப் பாதுகாத்து வந்தனர். அந்த ஏழு கன்னிகைகள்: (1) ப்3ராம்மீ (2) மாஹேஸ்வரி (3) கௌமாரி (कोमारी) (4) வைஷ்ணவி (5) வாராஹி (6) இந்திராணி (7) சா1முண்டா1 (चामुण्डा) எனப்படுகின்றனர். இந்த ஏழு பேர்களும் அந்த ஸாக்ஷீஸ்வரரை பூஜித்தனர். ப்ரம்மா முதலிய தேவர்களும் தாங்கள் கோரிய பயன்களை அடைவதற்காக அந்த ஸாக்ஷீஸ்வரரை பூஜித்து வஸித்து வந்தனர். அந்த கூர்ச்சம் விழுந்த இடத்திற்கு தென் கிழக்கு திசையில் சுமார் ஏழு மைல் தூரத்தில் உள்ளதும், பரம பவித்ரமானதும், அனாதி-யாய் உள்ளதும் மூன்று கோடி தேவதைகள் வஸிக்கும் தீர்த்தமாகிய பொற்றாமரை தீர்த்தத்தின் மேற்கு கரையில் உலகத்திலுள்ள ஸகல க்ஷேத்திரங்களின் தேஜஸ்ஸுகளின் ஸாரபூ1தமாயும் (सारभूतम) உள்ள இடத்தில், அக்குடமானது ப்ரளய கால காற்று நின்றதும் தங்கி விட்டது. உடன் ஸ்ரீ பரமாத்மாவின் கட்டளையின் பேரில் அக்குடத்தின் மீது புஷ்ப வர்ஷம் ஏற்பட்டது. ஆகாசத்திலிருந்து அசரீரி வாக்கும் உண்டாயிற்று.

शुभमेतत् पदं दिव्यं शुभमेतत् पदोत्तमम् ।
जयत्येतत् पदं श्रेष्ठं मङ्गळं मङ्गळन्त्विति ।।
बभूवाऽमाऽनुषी वाणी पुनः कुसुमवृष्टयः ।।

ஶுப4மேதத் பத3ம் தி3வ்யம் ஶுப4மேதத் பதோ3த்தமம்।
ஜயத்யேதத் பத3ம் ஶ்ரேஷ்ட்ட2ம்
மங்க3ளம் மங்க3ளந்த்விதி1 ।।
ப3பூ4வாऽமாऽநுஷீ வாணீ புன: குஸும வ்ருஷ்ட்டய:।।

"இந்த திவ்யமான ஸ்தலமானது மங்களத்தை அளிக்கக்கூடியது. இந்த ஸ்தலமானது எல்லா க்ஷேத்திரங்களுக்கும் மேல் சிறப்பு வாய்ந்தது. இந்த சிறந்த ஸ்தலமானது மிகச் சிறப்பாக விளங்கப்போகிறது. இது பரம மங்களமான ஸ்தலம், பரம மங்களமான ஸ்தலம்" எனக் கூறப்பட்டு மறுபடியும் புஷ்பவர்ஷம் ஏற்பட்டது. ப்ரளய ஜலமும் சிறிது சிறிதாகக் குறைந்தது. அந்த மங்களமான ஸ்தலத்தில் அந்த அமுதக் குடமானது தங்கி நின்றதும், ஸ்ரீ பரமசிவன் வேடுவ உருவம் கொண்டு அம்பினால் மிகச் சிரமப்பட்டு அக்குடத்தில் துளை போட்டார்.

அப்பொழுது அக்குடத்தின் கழுத்து தெறித்து விழுந்த இடம்தான் குடவாயில் என்னும் சிறந்த க்ஷேத்திரம். இந்த குடவாசலுக்கு மூன்று மைல் தூரத்தில் எங்கள் ஊராகிய சேங்காலிபுரம் கிராமம் உள்ளது. அங்கு மஹா குருக்களாகிய இரண்டு மஹான்களின் ஸமாதி கோவில்களும் நான்கு வேத பாடசாலைகளும் உள்ளன. அந்த ஸமாதி கோவிலில் உள்ள ஒருவராகிய எங்கள் ப்ரபிதாமஹராகிய (அப்பாவின் அப்பாவின் அப்பா) ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர், அக்னி ஹோத்ரம், யாகங்கள் செய்துகொண்டு நூறு வருஷம் ஜீவித்திருந்து, ஸன்யாஸம் செய்துகொண்டு ஸித்³தி (सिद्धि) அடைந்தவர்கள். மற்றொருவராகிய என் பிதாமஹர் (அப்பாவின் அப்பா) முத்தண்ணாவாள் என்ற ஸ்ரீ வைத்யனாத தீக்ஷிதர், தனது 16-வது வயதில் ஸோமயாகம் செய்து, நித்யாக்னிஹோத்ரம் செய்துவந்து, தனது 63-வது வயதில், நந்தன வருஷம் (1893-ஆம் வருஷம்) தை மாதம் 2-ஆம் தேதி கோ³பூஜை ஏகாதசியன்று காலையில் ஸன்யாஸம் செய்து கொண்டு, மறுதினம் துவாதசியன்று ஸித்தியானவர்கள்.

இவர்களுடைய 75-வது ஆராதனை பிலவங்க வருஷம் தை மாதம் 12-ஆம் தேதி 1968 ஜனவரி மாதம் 26-ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று நடக்கிறது. இந்த ஸாமதிகளில் வயிற்றுவலி, ஹ்ருதயநோய் உள்ளவர்கள் பிரார்த்தித்துக் கொண்டு அங்கு நடக்கும் அன்னதானத்திற்கு உதவி புரிந்து கு³ருவார (வியாழக்கிழமை) விரதமிருந்து, ஸ்ரீ ஸமாதிகளுக்கு அபிஷேகம் அர்ச்சனம் செய்ததும், அவைகள் விலகி விடுகின்றன. இதேபோல் அங்கு பிரார்த்தனை செய்து கொள்ளுகிறவர்களுக்கு ஸகல காரிய ஸித்திகளும், புத்ரலாபமும் நிச்சயமாய் உண்டாகின்றன.

இந்த மஹானுடைய சரித்திரம் 'காமகோடி' பத்திரிகையில் வெளிவந்தது. அதை ஜயமங்களம் 8 வது பாகத்தில் எழுதப்பட்டுள்ளது. அந்த க்ஷேத்திரத்திலுள்ள தீர்த்தத்தில் காலையில் ஸ்நானம் செய்துவிட்டு, பிறகு மஹாமக குளத்தில் வந்து ஸ்நானம் செய்வார்கள் பல பெரியோர்கள். அந்த ஸ்ரீ பரமேஸ்வரருக்கு கோணேஸ்வரர் **(कोणेश्वरः)** எனப்பெயர். அவர் மலையின் மீது அமர்ந்துள்ளார். அங்கு க்ஷேத்திர விருக்ஷம் பலாமரம். அந்த மரத்தில் பாம்பு இன்றும் வசிக்கிறது. அந்த பழங்களை அங்குள்ள ஸ்ரீ பரமேஸ்வரருக்கு நிவேதனம் செய்யாமல் கொடுப்பதில்லை. அப்படிக் கொடுத்தால் அந்த கனிகளில் புழுக்கள் உண்டாகின்றன.

குடத்திலிருந்து பெருகிய அமுதம் நான்கு பக்கங்களிலும் சுமார் ஐந்து மைல் தூரத்திற்குப் பரவியது. இரண்டு இடத்தில் தேங்கியது. அதில் ஒன்று மஹாமக குளம். மற்றொன்று பொற்றாமரைக் குளம்.

ஸோமேஸ்வரர் அந்த அம்ருத கலசம் வைத்த சிக்யத்தி(உறியி)லிருந்து ஆவிர்பவித்தார். இந்த ஸோமேஸ்வரரை சந்திரன் பூஜித்து, இவர் எதிரில் சந்திர புஷ்கரணி என்ற தீர்த்தத்தை நிர்மாணித்து தன் உபாதியை நீக்கிக் கொண்டு, ஸ்ரீ ஸோமேஸ்வரருடைய சிரஸ்ஸுக்கு ஆபரணமானார்.

நாகே³ஸ்வரர்

அந்த அமிருத கலசத்தின் மேலுள்ள பில்வ தளம் இங்கு விழவே, அது பில்வ விருக்ஷமாக ஆயிற்று. இங்கு நாகேஸ்வரர் எனப்படும் ஸ்ரீ பகவானை, பூ⁴ பா⁴ரத்தை **(भू भारम्)** தாங்கும் சக்தி பெற ஸ்ரீ ஆதிசேஷன் பூஜித்து தனது அபீஷ்டத்தைப் பெற்றார். இந்திரன் இவரை ஆராதித்து தன் சரீரத்திலுள்ள ஸ்த்ரீ சின்னங்களை ஆயிரம் கண்களாக மாற்றிக் கொண்டார். ஸ்ரீ வாஸுகி இவரை பூஜித்து நாக தீர்த்தத்தை நிர்மாணம் செய்தார். த்'வஷ்டாவின் **(त्वष्टा)** சாபத்தால் சூரியன் ஒளி இழந்து இந்த நாகேஸ்வரரை ஆராதித்து,

பூஜித்து, ஸூர்ய புஷ்கரணி என்ற தீர்த்தத்தை நிர்மாணித்து, முன் போல் ஒளியைப் பெற்றார். தற்போதும் சித்திரை மாதம் மூன்று நாட்களில் ஸூர்யன் ஒளி இந்த நாகேஸ்வரரின்மேல் பலகணி வழியாய் விழுகிறது. அது ஸமயம் (சித்திரை 11,12,13. தேதிகளில்) ஸூர்ய பூஜை நடக்கிறது.

கௌ³தமேஸ்வரர் (**गौतमेश्वरः**)

அந்த குடத்தின்மேல் சாற்றியிருந்த யக்ஞோபவீதம் (பூணூல்) இங்கு விழுந்தது. அதிலிருந்து ஆவிர்பவித்ததால் உபவீதேஸ்வரர் (**उपवीतेश्वरः**) எனப் பெயர். பின்பு கௌதம முனிவருக்கு மஹரிஷிகளால் ஏற்பட்ட கோ³ஹத்தி (**गोहत्ति**) தோஷம் விலக இவரை ஆயிரம் வருஷம் ஆராதித்து நீங்கியது. ஆதலால் கௌ³தமேஸ்வரர் (**गौतमेश्वरः**) என்ற பெயரும் ஏற்பட்டது. இங்கு கௌதம தீர்த்தம் என்ற ஓர் தீர்த்தம் இவரால் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. இந்த கோயில் மஹாமக குளத்தின் மேல் (மேற்கு) கரையில் இருக்கிறது.

அந்த அமிருத கலசத்தின்மேல் வைத்திருந்த தேங்காய் விழுந்து அதிலிருந்து ஆவிர்பவித்தவர்தான் அபி⁴முகேஸ்வரர் (**अभिमुखेश्वरः**). இவருக்கு ப²லேஸ்வரர் (**फलेश्वरः**) என்ற பெயரும் உண்டு. கைலாசத்திலிருந்து காமவிஸ்வேஸ்வரர் நவ கன்னிகைகளுடன் இந்த மஹாமக குளத்திற்கு வரும் கோலாஹலத்தைப் பார்க்க, கிழக்கு முகமாயிருந்த அபி⁴முகேச்வரர் மேற்கு முகமாய் திரும்பிப் பார்த்தார். பிறகு நவ கன்னிகைகள் ''தாங்கள் இந்த தீர்த்தத்தைப் பார்த்தபடியே மேற்கு முகமாய் இருக்க வேணுமென்று'' கேட்டுக் கொண்டதின் பேரில் அப்படியே மேற்கு முகமாக இருக்கிறார்.

ततः कैरातरूपीसः शङ्करो वृषभ ध्वजः।
मृत्सैकताभ्यां कृत्वातु लिङ्गं परमसुन्दरम् ।।
सुधयाप्लावितं कृत्वा स्थापयामास तत्तटे ।।

தத: கைராத ரூபீஸ: ஶங்கரோ வ்ருஷப^{4} த்^{4}வஜ: ।
ம்ருத்ஸைகதாப்^{4}யாம் க்ருத்வாது
லிங்க^{3}ம் பரமஸுந்த^{3}ரம் ॥
ஸுத^{4}யா ப்லாவித^{1}ம் க்ருத்வா
ஸ்த்தா^{2}பயாமாஸ தத் த^{1}டே^{1} ॥

"பின்பு வேட உருவம் கொண்ட வ்ருஷப^{4} த்^{4}வஜரான (वृषभध्वजः) ஸ்ரீ பரமேச்வரன் மணல், மண் இவ்விரண்டையும் சேர்த்து அமிருதத்தை விட்டுப் பிசைந்து ஓர் அழகிய லிங்கம் செய்து, அக்குடத்தின் மீது வைத்து பூஜை செய்தார். அந்த லிங்கத்தில், தானே ப்ரவேசித்தார். அந்த லிங்கம்தான் ஆதி^{3}கும்பே^{4}ச்வரர் என (आदिकुम्भेश्वरः) விளங்குகிறது. இதனால்தான் கும்பகோணம் எனப் பெயர் வந்தது. இந்த கும்பகோணத்திற்கு சுற்றிலும் அமிருதம் பெருகிய ஐந்து இடங்களை 'பஞ்சக்ரோஶம்' (पञ्चक्रोशम्) என புராணம் கூறுகிறது. அங்கு சென்றதும் பாபங்கள் 'போய் விடுகிறேன்' என அலறி சிதறுவதால் 'க்ரோஶம்' (क्रोशम्) என பெயர் வந்ததாக புராணம் கூறுகிறது. அந்த பஞ்சக்ரோஶ க்ஷேத்திரங்களாவன: (1) மத்^{4}யார்ஜுனம் (मध्यार्जुनम्) (திருவிடை மருதூர்) (2) ச^{1}ம்பகாரண்யம் (चम्पकारण्यम्) (திருநாகேஶ்வரம்) (3) ருத்^{3}ராக்ஷாரண்யம் (रुद्राक्षारण्यम्) (தாராசுரம்) (4) கு^{1}ஹாசலம் (गुहाचलम्) (ஸ்வாமி மலை) (5) பாடலீவனம் (पाटलीवनम्) (கருப்பூர்). சக்தி உள்ளவர்கள் இந்த ஐந்து க்ஷேத்திரங்களுக்கும் சென்று தர்சித்து பின்பு மஹாமக தீர்த்தத்தில் வந்து ஸ்நானம் செய்ய வேண்டும். ஸ்நானம் செய்வதற்கு முன்பு ஸ்ரீ கும்பேஶ்வரர் முதலிய, ஸ்ரீ சக்ரபாணி முதலிய விஷ்ணு மூர்த்திகளையும் அர்ச்சித்து, ப்ரார்த்தித்து ஸ்நானம் செய்வது வழக்கம். இந்த பஞ்சக்ரோஶ யாத்திரையை ஒரே தினத்தில் ஆகார நியமத்துடன் செய்வது நலம். இந்த பஞ்சக்ரோசம் கும்பகோணத்திற்கு முதல் ஆவரணமாக உள்ளது.

இரண்டாவது ஆவரணமாகிய பதினெட்டு க்ஷேத்திரங்களாவன:

(1)மத்^{4}யார்ஜுனம் (திருவிடை மருதூர்) ஸ்ரீ அம்பாள் ப்^{3}ருஹத் ஸுந்த^{3}ரகுசா^{1}ம்பி^{3}கை (बृहत् सुन्दर कुचाम्बिका), ஸ்ரீ ஸ்வாமி மஹாலிங்கம் ப்ரும்மஹத்தியை போக்கும். இன்றும்

அப்படியாக ப்ரதக்ஷிணம் செய்வதால் பாக்கியங்கள் கிடைக்கிறது. அங்கு ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி ஆசார்யாள் மடமும் இருக்கிறது.

(2) திருபுவனம். இது மத்யார்ஜுனத்திற்கு முக்கால் மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கு த⁴ர்மவர்த்⁴னி **(धर्मवर्धनी)** அம்பாள். ஸ்ரீ கம்பகரேஶ்வரர் **(श्री कम्पकरेश्वरः)** ஸ்வாமி. ஒரு சமயம் த்ரிபுராஸுரர்களைக் கண்டு தேவர்கள் நடுங்கியபோது, அந்த பயத்தை நிவர்த்தி செய்தார். இங்கு கற்பூர மரத்தின் அடியில் தேவர்களால் ஸுர தீர்த்தமென்ற புண்ய தீர்த்தம் ஏற்படுத்தப்பட்டது. இங்கு வைஶாக பௌர்ணமியில் ஸ்நானம் செய்வது விசேஷம். இங்கு சத்ரு பயத்தைப் போக்கும் ஶரப⁴ மூர்த்தி **(शरभमूर्तिः)** விளங்குகிறது. இந்த ஶரப மூர்த்தியானது நங்கவாரம் பெரிய பண்ணை போன்ற பல குடும்பங்களில் தெய்வமாக விளங்குகிறது. இந்த மூர்த்தியை தரிசிப்பதும், இந்த மூர்த்திக்கு அர்ச்சனம் அபிஷேகம் முதலியன செய்து வழிபடுவதும், இந்த ஶரப மந்திரத்தை ஜெபிப்பதும் சத்ரு பயத்தைப் போக்கும் .

(3) தர்பாரண்யம் அல்லது பை⁴ரவ க்ஷேத்திரம் **(भैरव क्षेत्रम्)** (அம்மா சத்திரம்) இங்கு அம்பாள் ஞானாம்பிகை. ஸ்ரீ ஸ்வாமி பை⁴ரவேஶர் . இந்த க்ஷேத்திரத்தில் தேவ தீர்த்தம். இதில் கும்ப(மாசி) மாஸத்தில் ஸ்நானம் செய்வது விசேஷம். கும்பகோண க்ஷேத்திரத்தை ஸம்ரக்ஷிப்பதற்காக எட்டு பைரவ ரூபியாய் ஸ்ரீ பைரவர் இங்கு எட்டு திக்குகளில் விளங்குகிறார்.

(4) திருநாகே³ஶ்வரம்.

(5) ரக்த கத³ளீவனம் **(रक्तकदलीवनम्)** (செல்வரம்பை) அய்யாவாடி என்ற பெயர்கள் உள்ளது. அங்கு அம்பாள் ஆனந்த தாயினி. ஸ்ரீ ஸ்வாமி கதளீ வனேஶ்வரர் **(कदली वनेश्वरः)**. காம தீர்த்தம் (கோரியவற்றை அளிக்கும் தீர்த்தம்)

(6)கண்வபுரம் (சிவபுரம்) ஸ்ரீ அம்பாள் ப்ருஹன்னாயகி **(बृहन्नायकी)**. ஸ்ரீ ஸ்வாமி ப்ரும்ம புரேஶர். கண்வ தீர்த்தம்.

(7)லாங்க³லாரண்யம்(சாக்கோட்டை) ஸ்ரீ அம்பாள் யோகாம்பிகை. ஸ்ரீ ஸ்வாமி ஸுதா⁴க⁴டேச்வரர் **(सुधाघटेश्वरः)**.

அம்ருத தீர்த்தம். இங்கு ஸ்ரீ ஸ்வாமி [illegible] அளித்தார்.

(8) அமிருத ஸ்தா²னம் (अमृतस्थानम्) (மருதாநல்லூர்) ஸ்ரீ அம்பாள் அம்ருதவல்லி, ஸ்வாமி ஸ்ரீ [illegible], ஸோமதீர்த்தம். இங்குதான் ஸ்ரீ ராமன் தாயார் கோரியபடி க்ருஹஸ்தனாய் அரிசியை பிக்ஷை வாங்குவதற்காக ஸத்குரு ஸ்வாமிகளாய் அவதாரம் செய்து உஞ்சவ்ருத்தி எடுத்தார். இங்கு ஸத்குரு ஸ்வாமிகள் மடம் விளங்கி வருகிறது. இந்த மடத்தில் நித்யம் ஸ்ரீ ராம நாமம்தான் ஜபம். மார்கழி மாதம் 24-ம் தேதி ராதா கல்யாணம் சாச்வதமாய் நடந்து வருகிறது.

(9) பஞ்சாக்ஷரபுரம் (पञ्चाक्षर पुरम्) (பட்டீச்வரம்) ஸ்ரீ அம்பாள் ஞானம்பிகை, ஸ்ரீ ஸ்வாமி தே³னுபுரீச்வரர் (धेनुपुरीश्वरः), பக்ஷி தீர்த்தம்.

(10) த்ரிசக்திபுரம் (त्रिशक्ति पुरम्) (திருச்சத்திமுத்தம்) இது பட்டீச்வரத்திலிருந்து அரை மைல் தூரத்தில் உள்ளது. இங்கு ஸ்ரீ அம்பாள் ப்ருஹன் நாயகி. ஸ்ரீ ஸ்வாமி ஶக்திவனேச்வரர். ஶக்தி தீர்த்தம்.

(11) ருத்³ராக்ஷாரண்யம் (रुद्राक्षारण्यम्) (தாராசுரம்)

(12) த³க்ஷிணாவர்த்த ஸம்ஸ்தா²னம் (திருவரிஞ்சுழி) இது தாராசுரத்திலிருந்து இரண்டு மைல் தூரத்திலிருக்கிறது. இங்கு ஶ்வேத வினாயகர் (श्वेतविनायकः), ஆவர்த்த தீர்த்தம்.

(13) கு³ஹாச²லம் (गुहाचलम्) (ஸ்வாமி மலை) ஸ்ரீ முருகனின் ஆறு முக்ய க்ஷேத்திரங்களில் இது ஒரு முக்ய க்ஷேத்திரம். இங்கு அங்க பிரதக்ஷிணம் செய்வதால் ப்ரம்மஹத்தி முதலிய பாபங்கள் போகும். கோரிய பொருள்கள் கிட்டும். பிள்ளை, பேரன் முதலிய லாபங்கள் உண்டாகும். ஸ்ரீ ஸ்வாமிநாதனுக்கு பசுவின் பால், தேன், நாட்டுச் சர்க்கரை, பஞ்சாமிருதம் இவைகளால் அபிஷேகத்தை, (வேதவித்துக்களை வைத்து ஸ்ரீருத்ர ஜபம் செய்யச் சொல்லி) செய்வது பெரிய புண்யமாகும் .

(14) இனபுரம் (இன்னம்பூர்) ஸ்ரீ ஸ்வாமி மலையிலிருந்து மூன்று மைல் தூரத்தில் உள்ளது. ஸ்ரீ ஸ்வாமி

திவா நாதேச்வரர் (दिवा नाथेश्वरः). சூரிய தீர்த்தம்.

(15) ஸாக்ஷிபுரம் (साक्षि पुरम्) (திருப்பிறம்பியம்) இது இன்னம்பூரிலிருந்து முக்கால் மைல் தூரத்திலுள்ளது. பிரளய ஜலத்தில் மிதந்து வந்த அமிர்த கடத்தின் மீதிருந்த கூர்ச்சம் இங்கு சமீ விருக்ஷமாய் (வன்னிமரம்) வளர்ந்திருக்கிறது. அதை ஸாக்ஷிக்க ஏழு கன்னிகைகள் அங்கு இருக்கிறார்கள். இவர்களை நான்கு நாளை நமஸ்கரிக்க வேண்டும். ஸ்வாமி ஸாக்ஷிநாதர் (साक्षि नाथः). ஸுதா^{4}பி^{3}ந்து^{3} (सुधाबिन्दु) என்னும் தீர்த்தம்.

(16) கோடிபுரம் (கொட்டையூர்) இது திருப்பிறம்பியத்திலிருந்து நான்கு மைல் தூரத்தில் உள்ளது. இங்கு அம்பாள் 'கந்^{3}து^{3}க க்ரீடாம்பி^{3}கை' (कन्दुक क्रीडाम्बिका) (பந்தாடு நாயகி) ஸ்வாமி கோடீச்வரர். அமிருத தீர்த்தம். ஸமீபத்தில் இங்கு கும்பகோணத்தில் பிரபல பெப்பர்மிண்ட் தொழிற்சாலைக்கு சொந்தக்காரரான ஸ்ரீமான் குஞ்சிபாதம் செட்டியார் அவர்கள் தனது ஏராளமான திரவியத்தைக் கொண்டும், இன்னும் பல ஆஸ்திகர்களுடைய உதவியைக் கொண்டும் மஹா கும்பாபிஷேகத்தை மிகச் சிறப்பாக நடத்தினார்.

(17) பாடலீவனம் (கரூப்பூர்) இது கொட்டையூரிலிருந்து நான்கு மைல் தூரத்தில் உள்ளது.

(18) பா^{3}த^{3}ராயணபுரி (बादरायणपुरी) (வாணாதுரை) இது கும்பகோணத்திலேயே கிழக்குப் பக்கத்தில் உள்ளது. இங்கு அம்பாள் ஸோமகலாம்பிகை, ஸ்வாமி பா^{3}ணபுரீச்வரர் (बाणपुरीश्वरः), வ்யாஸ தீர்த்தம்.

இவ்வாறு மேலே சொல்லப்பட்ட பதினெட்டு க்ஷேத்திரங்களில் உள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து, அங்குள்ள பகவத் மூர்த்திகளை தரிசித்து, ஜபம், தானம், ச்ராத்தம், தர்ப்பணம் முதலியவைகளையும் செய்து, கும்பகோண க்ஷேத்ரத்தை மேலே கண்டபடி முறையாக வலம் வந்து கும்பகோணத்திற்குள் பிரவேசித்து, ஆதிகும்பேச்வரரை தரிசித்து, இந்த பதினெட்டு க்ஷேத்திர யாத்திரை முடித்து கடைசியாக ஸ்ரீ சாரங்கபாணியை தரிசித்து நமஸ்கரித்து அவரிடம் இந்த யாத்திரையின் பலனை அர்ப்பணம் செய்ய வேண்டும்.

ஸ்ரீ மங்க³ளாம்பாள்

மிக அழகு வாய்ந்த பார்வதியை ஸ்ரீ ப்ராணநாதரான பரமேஸ்வரர் கைலாஸத்திலிருந்து வரவழைத்து, தன் வடபார்ஸ்வத்தில் மந்திர ரத்னம் என்னும் விமானத்தில், எழுபத்திரண்டாயிரம் மந்த்ர தேவதைகள் வசிக்கும் பீடத்தில், மந்த்ர பீடே²ஸ்வரி **(मन्त्रपीठेश्वरी)** *என்ற திருநாமத்துடன் ஸ்தாபித்தார். ஸமஸ்த மங்களங்களையும் பக்தர்களுக்கு அளிப்பதால் மங்களாம்பாள் என்ற திருநாமம். ஒவ்வொருவரும் ஸாயங்காலத்தில் ஸ்ரீ மங்களாம்பிகையை தரிசித்து நமஸ்கரித்தால் ஸர்வ கர்மங்களையும் நல்ல முறையில் செய்த பலனை அடையலாம். மேலும் பூத, ப்ரேத, பிசாசாதி பாதைகள் ஸ்ரீ அம்பாளுடைய கடாக்ஷத்தால் சிறிது மேல்பட்டதும் உடன் விலகி விடும்.*

ते हि सन्ध्यामुखे नित्यं दर्शनान् नमनादपि।
साङ्गं कृतानां पुण्यानां पात्रभूता भवन्ति हि।।

தே ஹி ஸந்த்⁴யாமுகே² நித்யம் த³ர்ஶனான் நமனாத³பி।
ஸாங்க³ம் க்ருதானாம் புண்யானாம்
பா¹த்ரபூ⁴தா ப⁴வந்தி ஹி ।।

மேலும் வெள்ளிக்கிழமையில் ஒருமுறை தர்சனம் செய்து நமஸ்கரித்தால் ஸகல க்ஷேமங்களும் மேலும் மேலும் வளரும்.

मङ्गलानि च वर्धन्ते भार्गवे दर्शनात् सकृत्।।

மங்க³ளானி ச வர்த⁴ந்தே பா⁴ர்க³வே த³ர்ஶனாத் ஸக்ருத்।।

ஸ்ரீ மங்களாம்பிகையை இன்னும் பலர் பிரார்த்தித்துக் கொண்டு பல கஷ்டங்களினின்றும் உடன் விடுபடுகின்றனர். இன்னும் பல ஸ்த்ரீகள் தன் கணவருக்கு வியாதி முதலியவற்றால் ஆயுஸ்ஸுக்கு ஹானி வருமோவென்று பயம் இருந்தால், ஸ்ரீ மங்களாம்பாளுக்கு திருமாங்கல்யம் போடுவதாக ப்ரார்த்தித்துக் கொண்டு உடன் தீர்கஸௌமங்கல்யத்தை அடைகின்றனர்.

ஸ்ரீ சாரங்க³பாணிப் பெருமாள்

அஸுரர்களை வதம் செய்து ஶார்ங்க³ம் (शार्ङ्ग) என்னும் வில்லை கையில் தரித்துக் கொண்டு, கும்பகோணம் வந்து அங்கத்துக்கு அங்கம் அழகுடன் விளங்கும் இந்த மூர்த்தியை எத்தனை தடவை தரிசித்தாலும் போதும் எனத் தோன்றாது. ஆதலால் அபர்யாப்தாம்ருதர் (अपर्याप्तामृत:)(ஆராவமுதர்) எனப் பெயரும் உண்டு. ஸ்ரீ சாரங்கபாணிக்கு முத்தங்கி சாத்தி அலங்காரம் செய்தபோது தர்சித்தால் லக்ஷம் கண்கள் பார்ப்பதற்கு வேணும் எனத் தோன்றும்.

முன்னொரு சமயம் ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஏதோ ஒரு காரணத்தால் ஸ்ரீ பகவானை விட்டு கோபத்தினால் பிரிந்து இருந்தவள், கும்பகோணம் வர, ஸ்ரீ பகவான், ஸ்ரீ சாரங்கபாணி உருவமாய் இருக்கும் மூர்த்தியைப் பார்த்து, ஸ்ரீ பகவானுடன் சேர்ந்து வசிக்கிறாள். வேங்கட மலையிலிருந்து ஸ்ரீ வெங்கட்டரமண ஸ்வாமி இங்கு சாரங்பாணிக்கு ஸமீபத்தில் இருந்து வருகிறார். இவரை பாதாள வெங்கட்டரமணர் எனச் சொல்வது வழக்கம். இவரை தர்சிப்பதால் ஸகல க்ஷேமங்களும் உண்டாகும்.

பூ⁴வராஹர் (भूवराहः)

ஹிரண்யாக்ஷன் பூமியை சுருட்டி பாதாளத்துக்கு எடுத்துப் போக, அப்போழுது ஸ்ரீ மஹாவிஷ்ணு அந்த அஸுரனை ஸம்ஹரித்து, வராஹ மூர்த்தியாய் அவிர்பவித்து, தன் தித்திப் பல்லால் பூமியை எடுத்துக் கொண்டு, இங்குள்ள வராஹ தீர்த்தத்தின் வழியாய் வெளிவந்து, இந்த இடத்தில் ப்ரத்யக்ஷமானார். இங்குள்ள வராஹ தீர்த்தத்தில் தேவர்கள் ஸ்நானம் செய்து தனது அபீஷ்டத்தை அடைந்தனர்.

ஸ்ரீ ராமஸ்வாமி கோவில்

ஸ்ரீ கும்பேச்வரர் ஆலயத்திற்கு தென் புறத்தில் ஸ்ரீ ராமர் கோவில் இருக்கிறது. இந்த கோவிலில் ஸ்ரீ ஸீதா ஸமேத, ஸ்ரீ ராமர், ஸ்ரீ லக்ஷ்மணர், ஹனுமார் இவர்கள் உள்ளனர். இந்த கோவிலின் உள் பிராகாரத்தின் சுவற்றில் ஸ்ரீ ராமாயணம் பூராவும் சித்திரமாக வரையப்பட்டிருக்கிறது. அன்று ப்ரதக்ஷிணம் செய்தால் பூராவையும் பார்த்து விடலாம். இத்தெய்வங்களை அவசியம் பக்தர்கள் தரிசனம் செய்ய வேண்டும்.

இதே போல் காளஹஸ்தீச்வரர் கோவில், பக்தபுரீச்வரர் அக்ரஹாரத்திலுள்ள சிவாலயம், பல விநாயகர்களின் ஆலயங்கள், ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் அத்வைத மடம், விசிஷ்டாத்வைத மடம், த்வைத மடம், ஸ்ரீ ராயர்வாள் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் போன்ற பல புண்ய ஸ்தலங்களை அவச்யம் தரிசிக்க வேண்டும்.

கும்பகோணத்தை தரிசித்தால் பூவைகுண்டமோ, பூகைலாஸமோ, தேவலோகமோவெனத் தோன்றும். இதில் கூறப்பட்ட மஹிமைகள் முழுவதும் பவிஷ்யோத்தர புராணத்தில் **(भविष्योत्तर पुराणम)** கூறப்பட்டதேயாகும். அதில் ஆதி கும்பேச்வரர் கோவிலை அனாதியாக கூறியபோதிலும் இதற்கு முன்னமேயே உள்ளது நாகேச்வரர் கோவில் எனக் கூறப்பட்டுள்ளது. இந்த கோவிலை தரிசித்தால் ஸர்ப்ப தோஷங்கள் விலகும். ஸ்வப்னத்திலும், வீட்டிற்குள்ளும் பாம்புகள் வருவது விலகும். ஸ்ரீ நாகேச்வர பிரஸாதத்தால் ஸகல பாக்யங்களும் உண்டாகும்.

சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்

।। ब्रम्हदेवकृत श्रीकुम्भेश्वर स्तोत्रम् ।।

ப்'ரம்ஹதே3வனால் செய்யப்பட்ட ஸ்ரீகும்பே4ஶ்வர ஸ்தோத்ரம்

[illegible] மஹாமக தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து [illegible] துதிக்கிறார் இந்த ஸ்தோத்ரத்தைப் படிப்பதால் [illegible] சாரம் நீங்கி அபம்ருத்யு **(अपमृत्यु)** [illegible] நீங்கும் ஜாதகத்தில் குரு, சூரியன் முதலிய கிரஹங்கள் [illegible] வகளாக இருந்தால் அந்த தோஷங்கள் நீங்கி, [illegible] ஆரோக்கியம் முதலிய க்ஷேமங்கள் உண்டாகும்.

नमो नमः कारण कारणाय
श्रीमत्सुधा कुम्भग विग्रहाय ।
कल्याणसान्द्राय गुणाकराय
श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ।। १

நமோ நம: காரண காரணாய
ஸ்ரீமத் ஸுதா4 கும்ப4க3 விக்3ரஹாய ।
கல்யாண ஸாந்த்3ராய கு3ணாகராய
ஸ்ரீகும்ப4லிங்கா3ய நமஶ்ஶிவாய ।। 1

காரணங்களுக்கெல்லாம் காரணமாக இருப்பவரும், அம்ருத கலசத்தையே தனது ஸ்வரூபமாகக் கொண்டவரும், கல்யாணங்கள் நிறம்பியவரும், கல்யாண குணங்களுக்கெல்லாம் இருப்பிடமானவருமான ஸ்ரீ கும்பேஶ்வாருக்கு நமஸ்காரம்.

भीमाय भीमाधिहराय शंभवे
नागाय शान्ताय मनोहराय ।
महाजटाजूटधराय भूतये
श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ।। २

பீ4மாய பீ4மாதி4ஹராய ஶம்ப4வே
நாகா3ய ஶாந்தாய மனோஹராய ।
மஹா ஜடாஜூடத4ராய பூ4தயே
ஸ்ரீகும்ப4லிங்கா3ய நமஶ்ஶிவாய ।। 2

சத்ருக்களுக்கு பயத்தை அளிப்பவரும், பயங்கரமான மனோவியாதியை போக்குகின்றவரும், லோகத்துக்கு இருப்பிடமானவரும், ஸர்ப்பங்களை ஆபரணமாக தரித்தவரும், சாந்த ஸ்வரூபியும், பக்தர்களின் மனதைக் கவருகின்றவரும், பெரியதான பினாகத்தை தரித்தவரும், விபூதியின் ஸ்வரூபமாக இருப்பவருமான ஸ்ரீ கும்பலிங்க ஸ்வரூபியான ஸ்ரீ பரமேஸ்வரனுக்கு நமஸ்காரம். (2)

सर्वागमाम्नाय शरीरधारिणे सोमार्कनेत्राय महेश्वराय।
यज्ञाय यज्ञेश्वरपूजिताय
श्रीकुम्भलिङ्गाय नमशिवाय ।। ३

ஸர்வாக^{3}மாம்னாய ஶரீர தா^{4}ரிணே
ஸோமார்க்க நேத்ராய மஹேஶ்வராய।
யக்ஞாய யக்ஞேஶ்வர பூ^{1}ஜிதாய
ஸ்ரீகும்ப^{4}லிங்கா^{3}ய நமஶ்ஶிவாய ।। 3

எல்லா வேதங்களையும் சரீரமாக தரிக்கின்றவரும், சந்திர சூரியர்களைக் கண்களாக உடையவரும், மஹேஶ்வரரும், யக்ஞ ஸ்வரூபமாக இருப்பவரும், யக்ஞேஶ்வரரான மஹா விஷ்ணுவால் பூஜிக்கப்பட்டவருமான ஸ்ரீ கும்பேஶ்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (3)

कात्यायनी कामित दायकाय दुर्गार्धदेहाय कृतागमाय।
कालाय कालेश्वरपूजिताय
श्रीकुम्भलिङ्गाय नमशिवाय ।। ४

காத்யாயனீ கா^{1}மித தா^{3}யகாய
து^{3}ர்கா^{3}ர்த^4 தே^{3}ஹாய க்ருதாக^{3}மாய ।
கா^{1}லாய கா^{1}லேஶ்வர பூஜிதாய
ஸ்ரீகும்ப^{4}லிங்கா^{3}ய நமஶ்ஶிவாய ।। 4

காத்யாயனீதேவி கோரிய பொருளை அளிப்பவரும், ஸ்ரீ துர்காதேவியை பாதி சரீரமாகக் கொண்டவரும், ஆக^{3}ம சாஸ்திரங்களைச் (**आगम शास्त्राः**) *செய்தவரும், கால ரூபியாக இருப்பவரும், சூரியனால் பூஜிக்கப்பட்டவருமான, ஸ்ரீ கும்பேஶ்வரரான மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம்.(4)*

विभूतिदानेक शरीरधारिणे
कल्पाय कल्पान्तकराय शंभवे ।
विश्वाय वैश्वानर लोचनाय
श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ।। ५

விபூ[4]திதா[3]னேக ஶரீர தா[4]ரிணே
கல்பாய கல்பாந்த கராய ஶம்ப[4]வே ।
விஶ்வாய வைஶ்வானர லோச[1]னாய
ஶ்ரீகும்ப[4]லிங்கா[3]ய நமஶ்ஶிவாய ।। 5

உலகத்திற்கு பலவித ஐஶ்வர்யங்களை அளிக்கும் பலவித ஸ்வரூபமாக இருப்பவரும், பிரளய காலத்தைச் செய்கின்றவரும், லோகத்துக்கு இருப்பிடமானவரும், உலகத்தின் உருவாக இருப்பவரும், அக்னியை நெற்றிக் கண்ணாக உடையவரும், ஶ்ரீ கும்ப ரூபியுமான ஶ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (5)

मायाप्रपञ्चाय मनोहराय मायाघटेशाय महाधिहारिणे।
मायाप्रपञ्चैक निदानमूर्तये
श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ।। ६

மாயா ப்ரபஞ்சாய மனோஹராய
மாயா க[4]டே[1]ஶாய மஹாதி[4] ஹாரிணே ।
மாயா ப்ரபஞ்சைக நிதா[3]ன மூர்த்தயே
ஶ்ரீகும்ப[5]லிங்கா[3]ய நமஶ்ஶிவாய ।। 6

உலகத்தை மாயையால் உண்டு பண்ணியவரும், மனதைக் கவரும் உருவத்தை உடையவரும், மாயையால் செய்த கும்ப ரூபியாக இருப்பவரும், பெரும் மனக் குறை-களை நீக்குகிறவரும், மாயையினால் செய்த உலகிற்கு காரணமாக இருப்பவரும், ஶ்ரீ கும்பேச்வர ரூபியான ஶ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (6)

भोगीन्द्र संपूजित विग्रहाय
भोगीन्द्रभूपाय भवान्तकाय ।

Form 32 Side B Volume II

श्रीभारती शंकर पूजिताय
श्रीकुम्भलिङ्गाय नमशिवाय ॥ ७

போகீ3ந்த்3ர ஸம்பூ3ஜித விக்3ரஹாய
போ4கீ3ந்த்3ர பூ4பாய ப4வாந்தகாய ।
ஸ்ரீபா4ரதீ1 ஶங்கர பூஜிதாய
ஸ்ரீகும்ப4லிங்கா3ய நமஶ்ஶிவாய ॥ 7

ஆதிசேஷனால் பூஜிக்கப்பட்டவரும், ஸர்ப்பங்களை ஆபரணமாகக் கொண்டவரும், ஸர்வ பயத்தைப் போக்குகின்றவரும், விஷ்ணு, பிரம்மா இவர்களால் பூஜிக்கப் பட்டவருமான ஸ்ரீ கும்பலிங்கத்துக்கு நமஸ்காரம். (7)

ताम्राय चामीकर भूषिताय
श्रीसोमकोटीर विभूषिताय ।
समस्तसत्क्षेत्र कलावराय
श्रीकुम्भलिङ्गाय नमशिवाय ॥ ८

தாம்ராய சா1மீகர பூ4ஷிதாய
ஸ்ரீஸோம கோடீர விபூ4ஷிதாய ।
ஸமஸ்த்த ஸத் க்ஷேத்ர க1லாவராய
ஸ்ரீகும்ப4லிங்கா3ய நமஶ்ஶிவாய ॥ 8

சிவப்பு நிறமுள்ளவரும், தங்க நகைகளை அணிந்தவரும், சந்திரனை தலையில் ஆபரணமாக அணிந்தவரும், எல்லா புண்ய க்ஷேத்திரங்களுக்கும் மேற்பட்ட கலையை தரிக்கின்றவருமான ஸ்ரீகும்பேஶ்வரருக்கு நமஸ்காரம். (8)

सृष्टिस्थिति ध्वंसन कारणाय
श्रीसृष्टि बीजाङ्ग मनोहराय ।
सच्छास्त्र वेदान्त कळेबराय
श्रीकुम्भलिङ्गाय नमशिवाय ॥ ९

ஸ்ருஷ்டி1ஸ்தி2தி த்4வம்ஸன கா1ரணாய
ஸ்ரீ ஸ்ருஷ்டி பீ3ஜாங்க3 மனோஹராய ।

ஸச்சாஸ்த்ர வேதா1ந்த களேப3ராய
ஸ்ரீகும்ப4லிங்கா3ய நமஶ்ஶிவாய ।। 9

படைக்கல், காக்கல், அழிக்கல் இவைகளைச் செய்கின்றவர். அம்ருத கலசத்தில் வைக்கப்பட்ட படைப்பு விதையை (शृष्टिबीजम्) முக்கியமான அங்கமாகக் கொண்டவர், வேதங்கள், வேதாந்தம் இவைகளை சரீரமாக உடையவர், ஸ்ரீ கும்பேஶ்வரரான மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (9)

षड्वर्ग संभेदन दीक्षिताय
षडाननादित्य फलप्रदाय ।
समस्त मन्त्रार्थ निदान रूपिणे
श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ।।१०

ஷட்3வர்க3 ஸம்பே4த3ன தீ3க்ஷிதாய
ஷடா3னனாதி3த்ய ப2லப்ரதா3ய ।
ஸமஸ்த்த மந்த்ரார்த்த2 நிதா3ன ரூபிணே
ஸ்ரீகும்ப4லிங்கா3ய நமஶ்ஶிவாய ।। 10

காமம், க்ரோதம் முதலிய ஆறுவகையான சத்ருக் கூட்டங்களை அழிப்பதில் தீக்ஷை கொண்டவரும், முருகன், சூரியன் இவர்களுக்கு நற்பயனை அளித்தவரும், ஸகல மந்திரங்களின் பயனை அளிப்பதற்கு மூலகாரணமாக இருப்பவரும், ஸ்ரீ கும்பேஶ்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (10)

कुम्भोद्भव प्रमुख पूजित विग्रहाय
वीराय वीरान्तकराय मायिने ।
भक्तेष्टदान निपुणाय भवाब्धि पोत्रे
श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ।।११

கும்போ4த்3பவ ப்ரமுக2 பூஜித விக்3ரஹாய
வீராய வீராந்த1க1ராய மாயினே ।

ப4க்தேஷ்டதா3ன நிபுணாய ப4வாப்3தி4 போத்ரே
ஸ்ரீகும்ப4 லிங்கா3ய நமஶ்ஶிவாய ।। 11

அகஸ்தியர் முதலிய முனிவர்களால் பூஜிக்கப்பட்ட சரீரத்தை உடையவரும், யுத்த வீரனாக விளங்குகின்றவரும், சத்ருக்களான வீரர்களை அழிப்பவரும், மாயையை தன் வசமாக்கிக் கொண்டு, வரும் பக்தர்கள் கோரியதை அளிப்பதில் திறமை வாய்ந்தவரும், ஸம்ஸார ஸமுத்திரத்துக்கு படகாக இருப்பவரும், ஸ்ரீ கும்பேச்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (11)

मूलाय मूलागम पूजिताय पाताळमूलाय निधीश्वराय।
नित्याय सिद्धेश्वर पूजिताय
श्रीकुम्भलिङ्गाय नमशिशवाय ।।१२

மூலாய மூலாக3ம பூஜிதாய
பா1தா1ள மூலாய நிதீ4ஶ்வராய ।
நித்யாய ஸித்3தே4ஶ்வர பூஜிதாய
ஸ்ரீகும்ப4லிங்கா3ய நமஶ்ஶிவாய ।। 12

ஆதி மூலமாக இருப்பவரும், மூலாகமத்தால் பூஜிக்கப்பட்டவரும், பாதாளத்தில் ஒரு ஶிரஸ்ஸை உடையவரும், ஶங்கம் முதலிய ஒன்பது நிதிகளுக்கு அதிபராக இருப்பவரும், எக்காலத்திலும் இருப்பவரும், ஸித்தர்களின் தலைவர்களால் பூஜிக்கப்பட்டவரும், ஸ்ரீ கும்பேஶ்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (12)

समस्तकल्याण वरप्रदाय समस्तकल्याण निदानमूर्तये।
श्रीमङ्गलाम्बार्चित पादपद्मिने
श्रीकुम्भलिङ्गाय नमशिशवाय ।।१३

ஸமஸ்த்த கல்யாண வரப்ரதா3ய
ஸமஸ்த்த கல்யாண நிதா3னமூர்த்தயே ।
ஸ்ரீமங்க3ளாம்பா3ர்ச்சித பாத3 பத்3மினே
ஸ்ரீகும்ப4லிங்கா3ய நமஶ்ஶிவாய ।। 13

கல்யாணங்கள் யாவையையும் வரனாக அளிப்பவரும், கல்யாணங்கள் யாவற்றுக்கும் மூலகாரணமாக இருப்பவரும்,

[illegible] அர்ச்சிக்கப்பட்ட சரண கமலங்களை உடையவரும், ஸ்ரீ கும்பேச்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (13)

लग्नाधिपेशाय ग्रहार्चिताय
श्रीकामधेनु सुरसङ्घ सुपूजिताय ।
पञ्चाननाय परमार्थ निदर्शकाय
श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ॥१४

லக்3னாதி4பேஶாய க்3ரஹார்ச்சிதாய
ஶ்ரீகாமதே4னு ஸுரஸங்க3 ஸுபூஜிதாய।
ப1ஞ்சா1னனாய பரமார்த்த2 நித3ர்ஶகாய
ஶ்ரீகும்ப4லிங்கா3ய நமஶ்ஶிவாய ॥ 14

லக்னங்களுக்கு அதிபதிகளான நவக்ரஹங்களுக்கும் தலைவராக இருப்பவரும், நவக்ரஹங்களால் பூஜிக்கப்பட்டவரும், ஸ்ரீ காமதேனு, தேவர்களின் கூட்டம் இவர்களால் பூஜிக்கப்பட்டவரும், ஐந்து முகங்களை உடையவரும், புருஷார்த்தத்தைக் காண்பித்துக் கொடுப்பவருமான ஸ்ரீ கும்பேச்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். (14)

तीर्थाधिनाथाय फलप्रदाय
फलस्वरूपाय फलाङ्गधारिणे ।
श्रीमन्त्र पीठेश्वरि वल्लभाय
श्रीकुम्भलिङ्गाय नमश्शिवाय ॥१५

தீர்த்தா2தி4நாதா2ய ப2லப்ரதா3ய
ப2ல ஸ்வரூபாய ப2லாங்க3 தா4ரிணே।
ஶ்ரீமந்த்ர பீடே2ஶ்வரி வல்லபா4ய
ஶ்ரீகும்ப4லிங்கா3ய நமஶ்ஶிவாய ॥ 15

கும்பகோணத்திலுள்ள தீர்த்தங்களுக்கு அதிபராக இருப்பவரும், தீர்த்த ஸ்நானத்தின் பயனை அளிப்பவரும், ப2லத்தின் **(फलम्)** உருவாக இருப்பவரும், கோரிய பயனை அளிக்கும் ஸ்வரூபத்தை உடையவரும், ஸ்ரீ மந்த்ர

பீடேஸ்வரியான ஸ்ரீ மங்களாம்பாளின் கணவனான ஸ்ரீ கும்பேஸ்வரருக்கு நமஸ்காரம். (15)

कारुण्य निधये तुभ्यं कल्याण गुणसिन्धवे।
शूलिने मालिने तुभ्यं नमस्ते विश्वमूर्तये ।।१६

காருண்ய நித4யே துப்4யம் கல்யாண கு3ணஸிந்த4வே।
ஶூலினே மாலினே துப்4யம்
நமஸ்த்தே விஶ்வ மூர்த்தயே ।। 16

கருணைக்கு இருப்பிடமானவரும், கல்யாண குணங்களுக்குக் கடலாக இருப்பவரும், சூலத்தை தரித்தவரும், புஷ்பமாலைகளை அணிந்தவரும், உலகத்தின் உருவாக இருப்பவரும், ஸ்ரீ கும்பேஸ்வரரான ஸ்ரீ மஹாலிங்கத்துக்கு நமஸ்காரம். 16

अघोराय नमस्तुभ्यं वामदेवाय ते नमः ।
सद्योजाताय नीलाय लोहिताक्षाय तेनमः।।१७

அகோ4ராய நமஸ்துப்4யம் வாமதே3வாய தே நம: ।
ஸத்3யோஜாதாய நீலாய லோஹிதாக்ஷாய தே நம: ।। 17

அகோ1ர மூர்த்தியான (अघोरमूर्तिः) தங்களுக்கு நமஸ்காரம். வாமதே3வ மூர்த்தியான தங்களுக்கு நமஸ்காரம். ஸத்3யோஜாத மூர்த்தியும் (सद्योजातमूर्तिः), நீலவர்ணமாக இருப்பவரும், சிவந்த கண்களை உடையவருமான தங்களுக்கு நமஸ்காரம். (17)

चन्द्रखण्डाय शान्ताय कालकालान्तकाय च।
रुद्राय नीलकण्ठाय नमो मृत्युञ्जयाय च ।। १८

சந்த்3ரக2ண்டா3ய ஶாந்தாய கால காலாந்த1காய ச ।
ருத்3ராய நீலகண்டா2ய நமோ ம்ருத்யுஞ்ஜயாய ச ।। 18

சந்திரனின் சகலத்தை தரித்தவரும், சாந்தியுடன் கூடினவரும், காலரூபியாகவும், காலனுக்கும் அந்த1க ரூபியாக (कालान्तकरूपिः) இருப்பவரும், ருத்ரனும், கழுத்தில் நீல வர்ணம் உள்ளவரும், மிருத்யுவை ஜயித்தவருமான தங்களுக்கு நமஸ்காரம். (18)

शिपिविष्टाय कालाय कालदण्डाय ते नमः।
श्रीमते वेदनिधये वेद वेद्याय ते नमः ।।१९

ஶிபி'விஷ்ட்டாய கா'லாய கா'லத³ண்டா³ய தே நம:।
ஶ்ரீமதே வேத³நித⁴யே வேத³ வேத்³யாய தே நம: ।। 19

பிராணிகளின் ஹ்ருதய கமலத்தில் அமர்ந்திருப்பவரும், கால ரூபியாக இருப்பவரும், துஷ்டர்களை சிக்ஷிக்கும் கால தண்டமாக விளங்குகிறவரும், ஸ்ரீமானும், வேதங்களுக்கு இருப்பிடமானவரும், வேதங்களால் அறியத்தக்கவருமான தங்களுக்கு நமஸ்காரம். (19)

वैद्याय वसुनाथाय वरिष्ठाय नमो नमः ।
शर्वाय शाखिने तुभ्यं मदनाङ्ग विभेदिने ।।२०
चन्द्रचूडाय चण्डाय नमस्ते खण्डितारये ।
हरिकेशाय देवाय पुष्टानां पतये नमः ।।२१

வைத்³யாய வஸுநாதா²ய வரிஷ்ட்டா²ய நமோ நம:।
ஶர்வாய ஶாகி²னே துப்⁴யம் மத³னாங்க³ விபே⁴தி³னே।।20
சந்த்³ரசூ'டா³ய ச'ண்டா³ய நமஸ்த்தே க²ண்டி³தா'ரயே।
ஹரிகேஶாய தே³வாய புஷ்ட்டானாம் பதயே நம: ।। 21

வியாதிகளைப் போக்கும் மருந்தளிக்கும் வைத்யராக இருப்பவரும், ஸ்வர்ணம் முதலிய பொருள்களுக்கு அதிபராக இருப்பவரும், உலகிற்கெல்லாம் சிறந்து விளங்குகிறவருமான தங்களுக்கு நமஸ்காரம். உலகத்தின் தாபத்தைப் போக்குவதில் கிளைகள் நிரம்பிய மரம்போல் இருப்பவரும், மன்மதனின் சரீரத்தைப் பிளந்தவரும், சந்திரனை தலையில் ஆபரணமாகக் கொண்டவரும், துஷ்டர்களிடத்தில் மிகுந்த கோபம் கொண்டரும், சத்ருக்களை வதம் செய்கிறவருமான தங்களுக்கு நமஸ்காரம். காந்தி **(कान्ति)** *உள்ளவராகவும், பாதுகாக்கிறவர்களுள் தலைவனாக இருக்கும் தங்களுக்கு நமஸ்காரம். (20,21)*

पशूनां पतये तुभ्यं वृषभाक्षाय ते नमः ।
वृषवाहाय विषवे पुण्यकालाय ते नमः ।।२२

பஶூனாம் பதயே துப்4யம் வ்ருஷபா4க்ஷாய தே நம ।
வ்ருஷவாஹாய விஷவே புண்யகாலாய தே நம ।। 22

பசுக்களுக்கு பதியாக இருப்பவரும், ருத்ராக்ஷ மாலையை தரித்தவரும், தர்ம ரூபமான ரிஷபத்தை வாகனமாகக் கொண்டவருமான தங்களுக்கு நமஸ்காரம். விஷுவங்களான சித்திரை, ஐப்பசி மாதப் பிறப்பு புண்ய காலங்களாக இருப்பவருமான தங்களுக்கு நமஸ்காரம். (22)

कार्यकारण रूपाय भेदभेद्याय ते नमः ।
पुरतः पृष्ठतश्चैव पार्श्वतस्ते नमो नमः ।
भूयो भूयो नमस्तुभ्यं भूयो भूयो नमोनमः ।।२३

கார்யகாரண ரூபாய பே4த3 பே4த்3யாய தே நம: ।
புரத: ப்ருஷ்ட2தஶ்சைவ பார்ஶ்வதஸ்தே நமோ நம: ।
பூ4யோ பூ4யோ நமஸ்துப்4யம்
பூ4யோ பூ4யோ நமோ நம: ।। 23

காரியம், காரணம் இவைகளாக இருப்பவரும், அபிப்ராய பேதங்களை எல்லாம் போக்குகிறவருமான தங்களுக்கு நமஸ்காரம். முன்பும் பின்பும் பக்கத்திலும் தங்களுக்கு நமஸ்காரம். திரும்பத் திரும்பவும் மறுபடியும் திரும்பத் திரும்பவும் நமஸ்கரிக்கிறேன். (23)

பவிஷ்யோத்தர புராணத்தில் பிரம்மதேவனால் செய்யப்பட்ட

ஸ்ரீ கும்பேச்வர ஸ்தோத்ரம் முற்றிற்று

।। श्रीशार्ङ्गपाणि ध्यानम् ।।

ஶ்ரீஶார்ங்க[3]பாணி த்[4]யானம்

ஸ்ரீ கும்பகோணை மாஹாத்மியத்தில் ஸ்ரீ சக்ர தீர்த்தத்தின் மஹிமை (ஸ்ரீ சக்ரப் படித்துறை)

கும்பகோணம், காவேரியில் இது மிகப் பிரஸித்தமாயும், மிகப் புண்யம் உள்ளதுமான கட்டமாகும். இந்த கட்டத்தில் மஹான்களெல்லாம் கடைசி காலத்தில் வஸித்து, ஸாயுஜ்யத்தை அடைய விரும்புவார்கள். அதே போல் தமது சரம கிரியைகளை செய்ய ஏற்பாடு செய்து போவார்கள். பல மஹான்கள் இந்த கட்டத்தில் சிராத்தம் முதலிய பித்ரு கர்மாக்களைச் செய்வார்கள்.

பாவனன் என்ற பிராம்மணன் தனது பிதாவின் எலும்புகளை காசிக்குச் சென்று கங்கையில் போட்டான். அவைகள் பல நாட்கள் ஆகியும் மாறுதல் ஆகாததைக் கண்டு, அவை-களை கும்பகோணம் ச[1]க்ர தீர்த்தத்தில் ஒரு மண் குடத்தில் வைத்துப் போட்டான். அவைகள் மறுதினமே புஷ்பங்களாக மாறிவிட்டன. இந்த க்ஷேத்திரம் காசிக்கும் மேற்பட்டதென அசரீரி வாக்கும் உண்டாயிற்று. இன்றும் அந்த சக்ர தீர்த்தத்தில் மண் குடத்தில் வைத்து புதைத்தால், மறுதினம் கரைந்து விடுவதாக மஹான்கள் கூறுகின்றனர். ஜலம் இல்லாத காலத்தில்கூட ஊற்றுப் போட்டு புதைப்பதுண்டு. அதுவும் மறுதினம் கரைந்து விடுகிறது.

பிரம்மதேவன் இந்த ச[1]க்ர தீர்த்தத்தில் யாகம் செய்து, அவப்[1]ருத ஸ்நானம் **(अवभृतस्नानम्)** செய்தார். அந்த ஸமயத்தில் ஜலந்தரன் முதலிய அஸுரர்களை வதம் செய்து, ச[1]க்ராயுதமானது பாதாளத்திலிருந்து மேலே வந்தது. அதைக் கண்ட பிரம்மதேவன் பூஜை செய்தார். பிரதிஷ்டையும் செய்தார். அந்த ச[1]க்ரத்தின் நடுவிலேயே ஸ்ரீமன் நாராயணன் திவ்ய ரூபத்துடன் தரிசனம் அளித்தார். இவர்தான் ஸ்ரீ ச[1]க்ரபாணிப் **(श्रीचक्रपाणिः)** பெருமாள். அந்த தீர்த்தக் கரையில் பிரம்மதேவன் ஓர் அரச மரத்தை பிரதிஷ்டை செய்தது இன்றும் இருக்கிறது. அந்த மரத்தடியில் தர்ப்பணம், சிராத்தங்கள் முதலியவற்றை செய்தால் பித்ருக்களுக்கு அளவு கடந்த திருப்தி ஏற்படும். அங்குள்ள ருத்ர பூமியில் அபரக் கிரியைகள் செய்வதற்காக ஓர் கட்டிடத்தை அமைத்துள்ளார்கள். இந்த தீர்த்த ஸ்நானம் பரம மங்களத்தை அளிக்கும்.

புத்திர லாபத்தை கொடுக்கும் பிரதக்ஷிணம்

இந்த தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து புத்ரலாபத்தை கோரும் பெண்ணானவள், மஞ்சளால் செய்த தங்கப்பட்டத்தை தரித்துக் கொண்டு, ஈரப்புடவையுடன் ஸ்ரீ சக்ரபாணியின் ஸந்நிதியில் ஒரு தீபத்தை ஏற்றி வைத்துவிட்டு, ஒரு மண்டலமோ, அரை மண்டலமோ, கால் மண்டலமோ பிரதக்ஷிணம் செய்து, ஸ்ரீ சக்ரபாணிக்கு புருஷஸூக்தத்தால் அர்ச்சனை செய்து, பாயஸம் நிவேதனம் செய்து, ஒரு வெள்ளிக்குத்து பாத்திரத்துடன் தானம் செய்து, மீதத்தை குழந்தை முதலியவர்களுக்கு கொடுத்து, ஸாப்பிட வேண்டும். இந்த மண்டல பிரதக்ஷிண தின காலத்தில், உப்பு இல்லாமல் ஆஹாரம் செய்ய வேண்டும். ஸ்ரீ சாரங்கபாணியும், ஸ்ரீசக்ரபாணியும் வேறுபடாத மூர்த்தியாதலால் ஸ்ரீ சாரங்கபாணி ஸந்நிதியிலும் இவ்வாறு பிரதக்ஷிணத்தைச் செய்யலாம். ஸ்ரீ சாரங்கபாணி அங்கத்திற்கு அங்கம் அழகு வாய்ந்த மூர்த்தி. இவருக்கு முத்தங்கி ஸாத்தி தர்சித்தால், பார்க்க பதினாயிரம் கண்கள் போதாதெனத் தோன்றும்.

।। श्री शार्ङ्गपाणि ध्यानम् ।।

ஶார்ங்க3பாணி த்4யானம்

त्रिंशत् त्रिकोटि वसुरुद्र दिवाकरादि
देवादि देवगण सन्तत सेव्यमानम् ।
अम्भोज सम्भव चतुर्मुख गीयमानं
वन्दे शयानमिह भोगिनि शार्ङ्गपाणिम् ।।

த்ரிம்ஶத் த்ரிகோடி வஸு ருத்3ர தி3வாகராதி3
தே3வாதி3 தே3வக3ண ஸந்தத ஸேவ்யமானம் ।
அம்போ4ஜ ஸம்ப4வ ச1துர்முக2 கீ3யமானம்
வந்தே3 ஶயானமிஹ போ4கி3னி ஶார்ங்க3பாணிம் ।।

முப்பத்து முக்கோடி தேவர்கள், வஸுக்கள், ருத்ரர்கள், சூரியர்கள் முதலிய தேவாதி தேவர்களால்

எப்பொழுதும் சேவிக்கப்படுகிறவரும், பிரம்மதேவனால் துதிக்கப்படுகிறவரும், ஆதிசேஷ சயனத்தில் படுத்திருக்கின்றவருமான ஸ்ரீ ஸார்ங்கபாணியை நமஸ்கரிக்கின்றேன்.

பவிஷ்யோத்தர புராணத்தில் கூறப்பட்ட கும்பகோணம்
ஸ்ரீ சக்ர தீர்த்தத்தின் மாஹாத்மியம் முற்றிற்று.

।। आदिकुम्भेश्वर ध्यानम् ।।

ஆதி³கும்பே⁴ஶ்வர த்⁴யானம்

श्रीमन्मङ्गळ नायकी सहचरं कल्याण सन्दोदहं
मुक्तामुक्त सुरौघ वन्दित पदद्वन्द्वारविन्दं मुदा।
ध्यायेत्सन्ततं आदिनायकमहं सृष्ट्यादि सत्कारणं
श्रीमद्दिव्यसुधा घटेश्वरमजं क्षिप्र प्रसादप्रदम्।।

ஸ்ரீமன் மங்க³ள நாயகீ ஸஹசரம் கல்யாண ஸந்தோ³த³ஹம்
முக்தாமுக்த ஸுரௌக⁴ வந்தி³த பத³-
த்³வந்த்³வாரவிந்த³ம் முதா³ ।
த்⁴யாயேத் ஸந்ததம் ஆதி³நாயகமஹம்
ஸ்ருஷ்ட்யாதி³ ஸத்காரணம்
ஸ்ரீமத்³தி³வ்ய ஸுதா⁴ க⁴டேஶ்வரமஜம்
க்ஷிப்ர ப்ரஸாத³ ப்ரத³ம் ।।

மிகுந்த அழகு வாய்ந்த ஸ்ரீ மங்களாம்பாளுடன் கூடியவரும், கல்யாணங்களை அளிப்பவரும், ஜீவன் முக்தர்கள், விஷயிகள் (அமுக்தர்கள்)(விஷயத்தில் ஈடுபட்டவர்கள்), தேவர்கள் இவர்களால் சந்தோஷத்துடன் நமஸ்கரிக்கப்பட்ட சரண கமலங்களை உடையவரும், ஸ்ருஷ்டி முதலியவைகளுக்கு முதற் காரணமாய் இருப்பவரும், ஆதி நாயகரும், பிறப்பற்றவரும், சீக்கிரத்தில் அருள் புரிகிறவருமான அமிருத க⁴டேஶ்வரர் **(अमृतघटेश्वरः)** என்ற ஆதி கும்பேஸ்வரரை தியானம் செய்கிறேன்.

कुम्भकोण माहात्म्ये

।। श्रीसूर्यकृत श्रीसुदर्शन स्तोत्रम् ।।

கும்ப4கோண மாஹாத்ம்யத்தில்

ஸ்ரீஸூர்யக்ருத ஸ்ரீஸுத3ர்ஶன ஸ்தோத்ரம்

सुदर्शन महाज्वाल प्रसीद जगतः पते ।
तेजोराशे प्रसीद त्वं कोटिसूर्यामित प्रभ ।। १

ஸுத3ர்ஶன மஹாஜ்வால ப்ரஸீத3 ஜகத: பதே।
தேஜோராஶே ப்ரஸீத3 த்வம்
கோடிஸூர்யாமித1 ப்ரப4 ।। 1

உலகத்துக்கு நாயகனும், சிறந்த ஜ்வாலையுடன் கூடியதுமான ஓ ஸுதர்ஶன சக்ரமே! ப்ரஸாதம் செய்ய வேண்டும். கோடி சூர்யனுக்கு ஒப்பான காந்தியை (कान्ति) *உடையதும், தேஜஸ்ஸுக்களின் கூட்டமாகவும் விளங்குகின்ற ஓ ஸுதர்ஶன சக்ரமே, தாங்கள் அருள் புரிய வேண்டும்.(1)*

अज्ञान तिमिर ध्वंसिन् प्रसीद परमाद्भुत ।
सुदर्शन नमस्तेस्तु देवानां त्वं सुदर्शन ।। २

அக்ஞான திமிர த்4வம்ஸின் ப்ரஸீத3 ப1ரமாத்3பு4த1।
ஸுத3ர்ஶன நமஸ்தேஸ்து
தே3வானாம் த்வம் ஸுத3ர்ஶன ।। 2

மிக ஆச்சர்யத்துடன் விளங்குகின்றதும், அக்ஞானமாகிற இருளைப் போக்குகின்ற ஓ ஸுதர்ஶன சக்ரமே, அருள் புரிய வேண்டும். ஓ ஸுதர்ஶன சக்ரமே, தங்களுக்கு நமஸ்காரம். தாங்கள் தேவர்களுக்கு தர்சனம் அளிப்பவர். (2)

असुराणां सुदुर्दर्श पिशाचानां भयङ्कर ।
भञ्जकाय नमस्तेस्तु सर्वेषामपि तेजसाम् ।। ३

அஸுராணாம் ஸுது3ர்த3ர்ஶ பிஶாசானாம் ப4யங்கர।
ப4ஞ்ஜகாய நமஸ்தேஸ்து ஸர்வேஷாமபி தேஜஸாம்।। 3

அசுரர்களால் காண முடியாதவர். பிசாசுகளுக்கு பயத்தை அளிக்கக் கூடியவர். மற்ற தேவர்கள் யாவற்றையும் மங்கச் செய்கிறவர். அப்படிப்பட்ட ஸுதர்ஶன சக்ரமே தங்களுக்கு நமஸ்காரம். (3)

शान्तानामपि शान्ताय घोराय च दुरात्मनाम्।
चक्राय चक्ररूपाय परचक्राय मायिने ।। ४

ஶாந்தானாமபி ஶாந்தாய கோ^{4}ராய ச து^{3}ராத்மனாம்।
ச'க்ராய ச'க்ர ரூபாய ப'ரச'க்ராய மாயினே ।। 4

சாந்தர்களுக்கு சாந்தராகவும், துஷ்டர்களுக்கு பயங்கரமாக இருப்பவரும், சக்கரத்தின் உருவம் கொண்டவரும், சத்ருக்களின் சேனைகளை அழிப்பவருமான தங்களுக்கு நமஸ்காரம். (4)

हेतये हेतिरूपाय हेतीनां पतये नमः ।
कालाय कालरूपाय कालचक्राय ते नमः ।। ५

ஹேதயே ஹேதிரூபாய ஹேதீனாம் பதயே நம: ।
காலாய காலரூபாய கால சக்ராய தே நம: ।। 5

ஆயுதத்தின் உருவமாக விளங்குகிறதும், எல்லா ஆயுதங்களுக்கும் நாயகனாக விளங்குகிறதுமான ஸுதர்ஶன சக்ரத்துக்கு நமஸ்காரம். கால சக்ரமாகவும், கால ரூபியாகவும் விளங்கும் ஸுதர்ஶன சக்ர ரூபமாக விளங்கும் காலனுக்கு நமஸ்காரம். (5)

उग्राय चोग्ररूपाय क्रुद्धोल्काय नमो नमः ।
सहस्त्राराय शूराय सहस्त्राक्षाय ते नमः ।। ६

உக்^{3}ராய சோக்^{3}ரரூபாய க்ருத்^{3}தோ^{4}ல்காய நமோ நம:।
ஸஹஸ்ராராய ஶூராய ஸஹஸ்ராக்ஷாய தே நம: ।। 6

கொள்ளிக்கட்டை போல் ஜ்வலிக்கின்றதும், உக்ரமான ரூபத்துடன் விளங்குகிறதுமான உக்^{3}ர சக்ரத்துக்கு நமஸ்காரம். ஆயிரம் ஆரங்களுடன் கூடியதும், சத்ருக்களை அழிப்பதில் சக்தி வாய்ந்ததும், ஆயிரம் கண்களுடன் கூடியதுமான சக்ராயுதத்திற்கு நமஸ்காரம். (6)

सहस्त्राक्षादि पूज्याय सहस्त्र शिरसे नमः ।
ज्योतिर्मण्डल रूपाय जगत् त्रितय धारिणे ।।७

ஸஹஸ்ராக்ஷாதி[3] பூஜ்யாய ஸஹஸ்ர ஶிரஸே நம. ।
ஜ்யோதிர்மண்ட[3]ல ரூபாய ஜகத் த்ரித'ய தா[4]ரிணே ।। 7

இந்திரன் முதலியவர்களால் பூஜிக்கப்பட்டவரும், ஜ்யோதிர் மண்டலமாக விளங்குகிறவரும், மூவுலகையும் காப்பவரும், ஆயிரம் தலைகளுடன் கூடியவருமான தங்களுக்கு நமஸ்காரம். (7)

त्रिणेत्राय त्रयी धाम्ने नमस्तेस्तु त्रिरूपिणे ।
त्वं यज्ञस्त्वं वषट्कारः त्वं ब्रम्हा त्वं प्रजापतिः ।। ८

த்ரிணேத்ராய த்ரயீ தா[4]ம்னே
நமஸ்தேஸ்து த்ரிரூபிணே ।
த்வம் யக்ஞஸ் த்வம் வஷட்கார: த்வம்
ப்[3]ரம்ஹா த்வம் ப்ரஜாபதி: ।। 8

முக்கண்ணனாக விளங்குகிறவரும், வேதங்களின் ஒளியாக விளங்குகிறவரும், மும்மூர்த்திகளாக விளங்குபவருமான தங்களுக்கு நமஸ்காரம். தாங்களே யக்ஞரூபி, தாங்களே வஷட்காரம் (**वषट्कारः**), *தாங்களே ப்ரம்மதேவன், தாங்களே ஹிரண்ய க[3]ர்ப[4]ன்*(**हिरण्यगर्भः**). (8)

त्वमेव वह्निस्त्वं सूर्यः त्वं वायुस्त्वं विशांपतिः ।
आदिमध्यान्त शून्याय नाभिचक्राय ते नमः ।।९

த்வமேவ வன்ஹிஸ் த்வம் ஸூர்ய:
த்வம் வாயுஸ் த்வம் விஶாம்ப[1]தி: ।
ஆதி[3]மத்[4]யாந்த ஶூன்யாய
நாபி[4]சக்ராய தே நம: ।। 9

தாங்களே அக்னி, தாங்களே சூரியன், தாங்களே வாயு, தாங்களே பிரஜைகளுக்கு பதி (**पति**). *ஆதி[3], மத்[4]யம், அந்தம் அற்றவரும், நாபி[4]சக்ரமாக* (**नाभिचक्रः**) *விளங்குகிறவருமான தங்களுக்கு நமஸ்காரம்.* (9)

ज्ञानविज्ञान रूपाय ध्यान ध्येय स्वरूपिणे ।
चिदानन्द स्वरूपाय प्रकृतेः पृथगात्मने ॥१०
चराचराणां भूतानां सृष्टि स्थित्यन्त कारिणे।
सर्वेषामपि भूतानां त्वमेव परमागतिः ॥११
त्वयैव सर्व सर्वेश भासते सकलं जगत् ।
त्वदीयेन प्रसादेन भास्करोस्मि सुदर्शन ॥१२

க்ஞான விக்ஞான ரூபாய
த்4யான த்4யேய ஸ்வரூபிணே ।
சிதா3னந்த3 ஸ்வரூபாய ப்ரக்ருதே: ப்ருத2காத்மனே ॥ 10
சராசராணாம் பூ4தானாம்
ஸ்ருஷ்ட்டி ஸ்த்தி2த்யந்த1 காரிணே ।
ஸர்வேஷாமபி பூ4தானாம் த்வமேவ பரமாக3தி: ॥ 11
த்வயைவ ஸர்வ ஸர்வேஶ பா4ஸதே ஸகலம் ஜகத் ।
த்வதீ3யேன ப்ரஸாதே3ன
பா4ஸ்கரோஸ்மி ஸுத3ர்ஶன ॥ 12

ஞானமாயும், விஞ்ஞான ரூபமாயும் இருப்பவரும், தியானத்தின் உருவமாயும், தியானம் செய்யப்படும் மூர்த்தியின் உருவமாயும் இருப்பவரும், சித்ரூபமாயும், ஆனந்த ரூபமாயும், மாயையின் ஸம்பந்தம் அற்றவராயும், அசையும் பொருள், அசையாப் பொருள் இவைகளைப் படைத்து அழிக்கின்றவரும், எல்லா பிராணிகளுக்கும் தாங்களே பரமகதியாய் அமைபவர். தங்களாலேயே எல்லா உலகும் பிரகாசிக்கின்றது. தாங்களே எல்லாவற்றுக்கும் ஈச்வரன். தங்களின் பிரஸாதத்தால் ஓ ஸுதர்சன சக்ரமே, நான் பிரகாசத்தைச் செய்கிறேன். (10,11,12)

त्वत्तेजसां प्रभावेन मम तेजो हतं प्रभो ।
भूयस्संहर तेजस्त्वं अविषह्यं सुरासुरैः ॥१३

த்வத்தேஜஸாம் ப்ரபா4வேன
மம தேஜோ ஹதம் ப்ரபோ4 ।
பூ4யஸ் ஸம்ஹர தேஜஸ்த்வம்
அவிஷஹ்யம் ஸுராஸுரை: ॥ 13

தங்கள் தேஜஸ்ஸின் மஹிமையினால் என் தேஜஸ் அழிந்து விட்டது. தேவர்கள், அஸுரர்கள் முதலியவர்களால் ஸஹிக்க முடியாத தங்கள் தேஜஸ்ஸை மறைத்துக் கொள்ள வேண்டும். (13)

त्वत्प्रसादादहं भूयः भविष्यामि प्रभान्वितः ।
क्षमस्व ते नमस्तेस्तु अपराधं कृतं मया ।
भक्तवत्सल सर्वेश प्रणमामि पुनः पुनः ।।१४

த்வத் ப்ரஸாதா[3]த[3]ஹம் பூ[4]ய:
ப[4]விஷ்யாமி ப்ரபா[4]ன்வித: ।
க்ஷமஸ்வ தே நமஸ்தேஸ்து
அபராத[4]ம் க்ருதம் மயா ।
ப[4]க்தவத்ஸல ஸர்வேஶ ப்ரணமாமி புன: புன: ।। 14

தங்களுடைய அருளால், நான் மறுபடி காந்தி (कान्ति) *உடையவனாக ஆக வேண்டும். என்னால் செய்யப்பட்ட அபராதத்தை க்ஷமிக்க வேண்டும். தங்களுக்கு நமஸ்காரம். பக்தர்களிடம் அன்பு கொண்டவரே, யாவருக்கும் ஈசனே, தங்களுக்கு திரும்பத் திரும்ப நமஸ்காரம் செய்கிறேன். (14)*

इति स्तुतो भानुमता सुदर्शनः
हतप्रभेणाद्भुत धाम वैभवः ।
शशाम धाम्नातिशयेन धाम्नां
सहस्र भानौ कृपया प्रसन्नः ।। १५

।। इति भविष्योत्तर पुराणे कुम्भकोण माहात्म्ये
श्री सूर्यकृत श्रीसुदर्शन स्तोत्रं सम्पूर्णम् ।।

இதி ஸ்துதோ பா[4]நுமதா ஸுத[3]ர்ஶன:
ஹத ப்ரபே[4]ணாத்[3]பு[4]த தா[4]ம வைப[4]வ: ।
ஶஶாம தா[4]ம்னாதி[1]ஶயேன தா[4]ம்னாம்
ஸஹஸ்ர பா[4]னௌ க்ருபயா ப்ரஸன்ன: ।। 15

।। இதி ப[4]விஷ்யோத்தர புராணே கும்ப[4]கோண மாஹாத்ம்யே
ஸ்ரீ ஸூர்யக்ருத ஸ்ரீஸுத[3]ர்ஶன ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம் ।।

[illegible] வரும். அளவு [illegible] குறைத்துக் கொண்டு [illegible].(15)

हेममुनिकृत कुम्भकोणस्थ

श्री शार्ङ्गपाणि स्तोत्रम् ।

(भविष्योत्तर पुराणे क्षेत्रवैभव खण्डे ब्रम्ह नारद संवादे पञ्चादशोध्यायः ।)

ஹேம முனிவரால் செய்யப்பட்ட

கும்ப[4]கோணம் ஶ்ரீ ஶார்ங்க[3]பாணி ஸ்த்தோத்ரம்

(ப[4]விஷ்யோத்தர புராணம் க்ஷேத்ர வைப[4]வ க[2]ண்ட[3]ம் ப்[3]ரம்ஹ நாரத[3] ஸம்வாத[3]த்தில் 50 வது அத்[4]யாயம்)

नमो नमोऽगण्य गुणैक सिन्धवे
कल्याण सद्विग्रह शालिने प्रभो ।
योगीन्द्र हृत्पङ्कज मध्यवासिने
योगाय योगीन्द्र करार्चिताय ।। १

நமோ நமோऽக[3]ண்ய கு[3]ணைக ஸிந்த[4]வே
கல்யாண ஸத்[3]விக்[3]ரஹ ஶாலினே ப்ரபோ[4] ।
யோகீ[3]ந்த்[3]ர ஹ்ருத்பங்கஜ மத்[4]யவாஸினே
யோகா[3]ய யோகீ[3]ந்த்[3]ர கரார்ச்சிதாய ।। 1

கணக்கிட முடியாத கல்யாண குணங்களுக்குக் கடல் போன்றவரும், மங்களத்தை அளிக்கும் திவ்ய சரீரத்தை உடையவரும், சிறந்த யோகிகளின் ஹ்ருதய கமலத்தின் நடுவில் வசிப்பவரும், யோக ஸ்வரூபியும், சிறந்த யோகிகளின் கரங்களால் அர்ச்சிக்கப்பட்ட ஸ்ரீ சாரங்கபாணிக்கு அடிக்கடி நமஸ்காரம். *(1)*

कामादि षड्वर्ग विभेदकाय
भक्तार्ति सम्भेदन दीक्षिताय ।
कल्याण नाथाय कालाधरार्क
सुरेन्द्र सम्पूजित विग्रहाय ।। २

காமாதி3 ஷட்3வர்க3 விபே4த3காய
ப4க்தார்த்தி ஸம்பே4த3ன தீ3க்ஷிதாய ।
கல்யாண நாதா2ய காலாத4ரார்க்க
ஸுரேந்த்3ர ஸம்பூஜித விக்3ரஹாய ।। 2

காமம் முதலிய ஆறு சத்ருக்களை அழிக்கின்றவர், பக்தர்களின் மனோ வியாதியைப் போக்க தீக்ஷை கொண்டவரும், பக்தர்களுக்கு மங்களத்தை அளிப்பவர், சந்திர ஸூர்யர்கள், தேவேந்திரர்கள் இவர்களால் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ சாரங்கபாணிக்கு நமஸ்காரம். (2)

कालात्मने काल सुयोग कारिणे
श्रीकालचक्राय सुचक्र धारिणे ।
भूचक्र संस्थाय सुमानिताय
खगध्वजेशाय नमामि सन्ततम् ।।३

காலாத்மனே கால ஸுயோக3 கா1ரிணே
ஸ்ரீ காலசக்ராய ஸுசக்ர தா4ரிணே ।
பூ4சக்ர ஸம்ஸ்த்தா2ய ஸுமானிதா1ய
க2க3 த்4வஜேஶாய நமாமி ஸந்ததம் ।। 3

கால ரூபியாக இருப்பவரும், நல்ல காலத்தைச் செய்கின்றவரும், காலத்தையே சக்கரமாகக் கொண்டவரும், ஸுதர்ஶன சக்ரத்தை தரிப்பவரும், பூ4மண்ட3லத்தில் வசிப்பவரும், பக்தர்களால் பூஜிக்கப்பட்டவரும், கருடனைக் கொடியில் கொண்டவருமான ஸ்ரீ சாரங்கபாணியை எப்பொழுதும் நமஸ்கரிக்கிறேன். (3)

मत्स्याय कूर्माय किटीन्द्र रूपिणे
श्रीनारसिम्हाय नमो नमस्ते ।

इन्द्रानुजाय दितिजेन्द्र विभेदकाय
निशाचरेश वरकण्ठ विभेदकाय ॥४

மத்ஸ்யாய கூர்மாய கிடீந்த்[3]ர ரூபிணே
ஸ்ரீநாரஸிம்ஹாய நமோ நமஸ்தே ।
இந்த்[3]ராநுஜாய தி[3]தி[3]ஜேந்த்[3]ர விபே[4]த[3]காய
நிஶாச[1]ரேஶ வரக[1]ண்ட[2] விபே[4]த[3]காய ॥ 4

மத்ஸ்யம், கூர்மம், வராஹம் இந்த அவதாரங்களை எடுத்தவரும், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனாக வந்தவரும், இந்திரனுக்குத் தம்பியான வாமனாக வந்தவரும், ஹிரண்யகசிபுவை ஸம்ஹரித்தவரும், ராவணனை வதம் செய்தவருமான ஸ்ரீ சாரங்கபாணிக்கு நமஸ்காரம். (4)

गोपी कुचासक्त यदूद्वहाय
नमामि बुद्धाय रमाधिहारिणे ।
ज्ञानेतर ध्वान्त निवारकाय
विज्ञान वैराग्य सुभक्ति दायिने ॥ ५

கோ[3]பீ கு[1]சா[1]ஸக்த யதூ[3]த்[3]வஹாய
நமாமி பு[3]த்[3]தா[4]ய ரமாதி[4]ஹாரிணே ।
ஞானேத[1]ர த்[4]வாந்த[1] நிவாரகாய
விஞான வைராக்[3]ய ஸுப[4]க்தி தா[3]யினே ॥ 5

*கோபிகளின் குச[1] மண்டலங்களில் ஆசை கொண்டவரும், யது[3] குலத்தில் (**यदु कुलम्**) தோன்றியவரும், பு[3]த்[3]தா[4]வதாரம் (**बुद्धावतारम्**) செய்தவரும், ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் மனக் கவலையைப் போக்கியவரும், அக்ஞானமாகிற இருளைப் போக்கியவரும், விக்ஞானம், வைராக்யம், பக்தி இவற்றை அளிப்பவருமான ஸ்ரீ சாரங்கபாணியை நமஸ்கரிக்கின்றேன்.*

प्रज्ञात्मने प्राज्ञ संपूजिताय
प्रह्लाद संरक्षण दीक्षिताय ।
आनन्दपूर्णाय सदान्तरात्मने
वेदान्त वेद्याय नमो नमस्ते ॥ ६

ப்ரஞாத்மனே ப்ராக்ஞ ஸம்பூஜிதாய
ப்ரஹ்லாத2 ஸம்ரக்ஷண தீ2க்ஷிதாய ।
ஆனந்த3பூர்ணாய ஸதா2ந்தராத்மனே
வேதா3ந்த வேத்3யாய நமோ நமஸ்தே ।। 6

ஞான வடிவமாக இருப்பவரும், ஞானிகளால் நன்கு பூஜிக்கப்பட்டவரும், ப்ரஹ்லாதனைக் காப்பதில் கருத்துள்ளவரும், எங்கும், எப்பொழுதும் அந்தராத்மாவாக இருப்பவரும், வேதாந்தங்களில் அறியத் தகுந்தவருமான ஸ்ரீ சாரங்கபாணிக்கு நமஸ்காரம். (6)

सर्गस्थिति प्रलयकारण कारणाय
भोगीन्द्र तल्पाश्रित विग्रहाय ।
कल्पार्ध कल्पाय फलप्रदायिने
कञ्जासना पूजित मङ्गलाङ्गिने ।। ७

ஸர்க3ஸ்த்தி2தி ப்ரளய காரண காரணாய
போகீ3ந்த்3ர த1ல்பாஶ்ரித விக்3ரஹாய ।
கல்பார்த4 கல்பாய ப2ல ப்ரதா3யினே
கஞ்ஜாஸனா பூ1ஜித மங்க3ளாங்கி3னே ।। 7

படைத்தல், காத்தல், அழித்தல், இம்மூன்றுக்கும் காரணமாக இருப்பவரும், ஆதிசேஷன் மீது படுத்திருப்பவரும், மனுகல்பத்திற்கு வேண்டிய பொருள்களைக் காப்பதில் சக்தி வாய்ந்தவரும், தாமரையை ஆஸனமாகக் கொண்ட மஹாலக்ஷ்மியால் பூஜிக்கப்பட்ட அழகான சரீரத்தை உடையவருமான ஸ்ரீ சாரங்கபாணிக்கு நமஸ்காரம். (7)

नमो नमस्ते करुणाकराय
नागारि दिव्यांस गताय विष्णवे ।
श्री भूमिनीलार्चित सुन्दराङ्गिने
नमो नमः शार्ङ्गधराय तुभ्यम् ।। ८

நமோ நமஸ்தே கருணாகராய
நாகா3ரி தி3வ்யாம்ஸ க3தா1ய விஷ்ணவே ।

ஸ்ரீ பூ4மி நீலார்ச்சித ஸுந்த3ராங்கி3னே
நமோ நம: ஶார்ங்க3 த4ராய துப்4யம் ॥ 8

பக்தர்களுக்குக் கருணை செய்பவரும், கருடனின் அழகான தோளில் அமர்ந்திருப்பவரும், பூமிதேவி, நீளாதேவி இவர்களால் பூஜிக்கப்பட்ட அழகான சரீரத்தை உடையவருமான ஸ்ரீ சாரங்கபாணிக்கு அடிக்கடி நமஸ்காரம். (8)

पुनः पुनस्ते प्रणमामि विष्णो
त्वत्पार्श्वयोः पुरतः पृष्ठतश्च ।
सर्वत्र ते सन्ततं आदरेण
नमामि शार्ङ्गेश महाप्रभो विभो ॥ ९

புன: புனஸ்த்தே ப்ரணமாமி விஷ்ணோ
த்வத் பார்ஶ்வயோ: புரத: ப்ருஷ்ட2தஶ்ச ।
ஸர்வத்ர தே ஸந்ததம் ஆத3ரேண
நமாமி ஶார்ங்கே3ஶ மஹாப்ரபோ4 விபோ4 ॥ 9

ஹே மஹாவிஷ்ணோ! அடிக்கடி உமக்கு நமஸ்காரம் செய்கிறேன். தங்களுடைய இரு புறங்களிலும், முன் பக்கத்திலும், பின் பக்கத்திலும், நான்கு புறங்களிலும், எப்பொழுதும், மரியாதையுடன் உலகத்திற்குத் தலைவராக இருப்பவரும், எங்கும் வியாபித்திருப்பவருமான ஸ்ரீ சாரங்கபாணியை பலமுறை நமஸ்கரிக்கின்றேன். (9)

ततस्स तूष्णींवर शार्ङ्गपाणिनः
अग्रे स्थितोसौ मुनिराट् मुनीन्द्र ।
कृताञ्जलिः भक्तवरो महात्मा
पुनः पुनस्तं प्रणनाम भक्त्या ॥१०

ததஸ்ஸ தூ1ஷ்ணீம் வர ஶார்ங்க3பாணின:
அக்3ரே ஸ்தி2தோஸௌ முனிராட் முனீந்த்3ர ।
க்ருதாஞ்ஜலி: ப4க்தவரோ மஹாத்மா
புன: புனஸ்தம் ப்ரணனாம ப4க்த்யா ॥ 10

தேவ முனிப்ரேஷ்டரான நாரதர் அந்த முனிவரான தேவ மகரிஷி ஸ்ரீ சாரங்கபாணியின் முன்னிலையில் [illegible] பக்தியுடன் பல தடவை நமஸ்கரித்தார். (10)

இப்படி ஸ்துதி செய்த தேவ முனிவருக்கு ஸ்ரீசாரங்கபாணி அனுக்ரஹம் செய்தார்.

।। श्री महालक्ष्मी स्तोत्रम् ।।

ஸ்ரீ மஹாலக்ஷ்மீ ஸ்தோத்ரம்

விவாஹம் ஆக வேண்டிய கன்னிகைகளோ புருஷர்களோ இதைப் படிப்பதால் உடன் விவாஹமாகும் ஐச்வர்யம் முதலிய பாக்யங்களும் கிடைக்கும்.

तत्तस्य पद्मासन संस्थितां तां
समाधि संपत्तियुतां मनोहराम् ।
शनैस्समुन्मीलित लोचनाग्रां
ददर्श तत्काञ्चनं अग्र्यमम्बुजम् ।। १

तत्कर्णिकायां तरुणार्क कोटि
सङ्काश सोम प्रयुताति शीतळाम् ।
पदाग्रशोभाजित पद्मरागां
माल्याङ्गभूषां महितां ददर्श ।। २

தத்தஸ்ய பத்³மாஸன ஸம்ஸ்தி²தாம் தா¹ம்
ஸமாதி⁴ ஸம்பத்தி¹யுதா¹ம் மனோஹராம் ।
ஶனைஸ் ஸமுன்மீலித லோச¹னாக்³ராம்
த³த³ர்ஶ தத் காஞ்சனம் அக்³ர்யம் அம்பு³ஜம் ।। 1
தத் கர்ணிகாயாம் தருணார்க்க கோடி
ஸங்கா¹ஶ ஸோம ப்ரயுதாதி¹ ஶீத¹ளாம் ।
ப¹தா³க்³ர ஶோபாஜித பத்³ம ராகா³ம்
மால்யாங்க³ பூ⁴ஷாம் மஹிதாம் த³த³ர்ஶ ।। 2

ஸ்ரீ பகவான் மஹாலக்ஷ்மியை [illegible] செய்து கொண்டு இருந்தார். பத்மாஸனத்தில் அமர்ந்தவளும், ஸமாதியில் ஸ்ரீ பகவானை [illegible] பார்க்கின்றவளும், மனதைக் [illegible] ஸமாதியிலிருந்து கண்களை திறக்கின்றவளும், தங்கத் தாமரையில் அமர்ந்தவளும், [illegible] ஸூர்யனுக்கு ஒப்பானவளும், பத்து லக்ஷம் சந்திரனுக்கு ஒப்பான குளிர்ச்சியை உடையவளும், கால் விரல்களின் நுனியினால் [illegible] பத்மராகக் கற்களை உடையவளும், புஷ்ப மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட அங்கங்களை உடையவளும், மஹிமை வாய்ந்தவளுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மியை ஸ्ரீ சாரங்கபாணி கண்டார். (1,2)

सौवर्ण रम्भागुणजिद्वरोरु
　　शोभावदातं वसनं वसानाम् ।
उत्तुङ्ग पीनस्तन कुम्भ मध्ये
　　स्फुरन् महार्हाभरण प्रभाभिः ॥ ३
सौदामिनी सन्तति शालिनीभिः
　　प्रभासयन्तीं ककुभश्च सर्वतः ।
माणिक्य कर्णाभरणाभिरामां
　　उदार मालां महनीय केशाम् ॥ ४
आनन्द हासामृत पूरितेन
　　मुखेन निर्भर्त्सित पूर्ण चन्द्राम् ।
नखांशुधाराभिवृते दधानां
　　कराम्बुजाभ्यां कनकारविन्दे ॥ ५

ஸௌவர்ண ரம்பா4கு3ணஜித்3வரோரு
　　ஶோபா4வதா3தம் வஸனம் வஸானாம் ।
உத்துங்க3 பீனஸ்தன கும்ப4 மத்4யே
　　ஸ்பு2ரன் மஹார்ஹாப4ரண ப்ரபா4பி4: ॥ 3
ஸௌதா3மினீ ஸந்ததி ஶாலினீபி4:
　　ப்ரபா4ஸயந்தீம் க1கு1ப4ஶ்ச ஸர்வத1: ।

மாணிக்ய கர்ணாப⁴ரணாபி⁴ராமாம்
உதா³ர மாலாம் மஹனீய கேஶாம் ।। 4
ஆனந்த³ ஹாஸாம்ருத பூ³ரிதேன
முகே²ன நிர்ப⁴ர்த்ஸித பூர்ண சந்த்³ராம் ।
நகா²ம்ஶுதா⁴ராபி⁴வ்ருதே த³தா⁴னாம்
கராம்பு³ஜாப்⁴யாம் கனகாரவிந்தே³ ।। 5

தங்க வாழை மரங்களைப் போல் அழகு வாய்ந்த சிறந்த தொடைகளின் அழகினால் பரிசுத்தமான பட்டாடையை தரித்தவளும், மின்னல் கொடிகளின் சேர்ந்த காந்திகள் **(कान्ति)** *போல் இருக்கின்றவைகளும், மிக உயர்ந்த கும்பம் போன்ற ஸ்தனங்களின் நடுவில் பிரகாசிக்கின்றவைகளும், விலை மதிக்க முடியாததுமான ரத்ன ஆபரணங்களின் காந்திகளால்* **(कान्ति)** *பத்து திக்கு(திசை)களையும் பிரகாசிக்கும்படிச் செய்கின்றவளும், மாணிக்கம் இழைத்த தோடுகளை காதுகளில் தரித்து அழகு வாய்ந்தவளும், மிக அழகான ரத்ன மாலைகளை கழுத்தில் அணிந்தவளும், மிகச் சிறந்த கூந்தலை உடையவளும், ஆனந்தமான புன்சிரிப்பினால் நிரம்பிய முகத்தால் அவமதிக்கப்பட்ட பூர்ண சந்திரனை உடையவளும், கை நகங்களின் காந்தியால்* **(कान्ति)** *சூழப்பட்ட இரண்டு தங்கத் தாமரைகளை கைகளில் தரித்தவளும்.* *(3-5)*

करेण तस्याऽभयं आदधानां
अन्येन तत्क्षेत्रमिदं भजेति ।
विनिर्दशन्तीं स्मयमान वक्त्रां
अधोमुखस्वाङ्गुलि तर्जनीकाम् ।। ६
चतुर्भुजां चारु किरीट रुच्या
विभासयन्तीं करुणाकरः प्रभुः ।
पस्पर्श हस्तांबुज शन्तमेन
गुणाभिपूर्णां स्वकराम्बुजाभ्याम् ।। ७

கரேண தஸ்யாऽப⁴யம் ஆத³தா⁴னாம்
அன்யேன தத் க்ஷேத்ரமித³ம் ப⁴ஜேதி ।

விநிர்த'ஶந்தீம் ஸ்மயமான வக்த்ராம்
அதோ4முக'ஸ்வாங்கு'ளி த'ர்ஜனீகாம் ॥ 6
சதுர்பு4ஜாம் சா'ரு கிரீட ருச்'யா
விபா4ஸயந்தீம் கருணாகர: ப்ரபு4:
ப'ஸ்ப'ர்ஶ ஹஸ்தாம்பு3ஜ ஶந்தமேன
கு'ணாபி4 பூர்ணாம் ஸ்வ கராம்பு3ஜாப்4யாம் ॥ 7

கையினால் ஸ்ரீ சாரங்கபாணிக்கு அபயம் அளிக்கிறவளும், மற்றொரு கையினால் இந்த க்ஷேத்திரத்தில் வந்து செய்யுங்கள் எனக் கூறுகின்றவளும், புன்சிரிப்புடன் கூடிய முகத்தை உடையவளும், கீழ்நோக்கிய தன் கையின் ஆள்காட்டி விரலை உடையவளும், நான்கு கைகளுடன் கூடியவளும், அழகிய கிரீடத்தின் காந்தியால்(कान्ति) எங்கும் பிரகாசத்தை உண்டு பண்ணுகிறவளுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மியை, கருணாகரனான ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி, மங்களத்தை அளிக்கும் தனது கைகளால் ஸகல குணங்களும் நிறைந்த ஸ்ரீ மஹாலக்ஷ்மியை ஸ்பரிசித்தார். (6,7)

पद्मासनस्थां परिरभ्य शीघ्रं
उत्थाप्य वक्षस्थलगां चकार ।
रूपान्तरेणान्वित पङ्कजां तां
समीपगां चापि तनोद्भृशं मुने ॥ ८

பத்3மாஸனஸ்த்தா2ம் பரிரப்4ய ஶீக்4ரம்
உத்தா2ப்ய வக்ஷஸ்த்த2லகா3ம் ச1கா1ர ।
ரூபாந்த1ரேணான்வித பங்க1ஜாம் தா1ம்
ஸமீபகா3ம் சா1பி த1னோத்3 ப்4ருஶம் முனே ॥ 8

பிறகு பத்மாஸனத்தில் இருந்த தேவியைக் கட்டி அணைத்து, விரைவில் தன் மார்பில் எடுத்து வைத்துக் கொண்டார். மற்றொரு உருவத்துடன் கூடியவளும், கையில் தாமரையை தரித்தவளுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மியை தனது ஸமீபத்திலும் அமர்த்திக் கொண்டார். (8)

ततोन्तरिक्षात् सुमवर्ष पूर्णः
विमानवर्यः प्रबभूव सन्ततम् ।

विनेदिरे दुन्दुभयो दिविस्थाः
जगुश्च गन्धर्व वरास्सुगीतम् ।। ९

ததோந்த1ரிக்ஷாத் ஸுமவர்ஷ பூர்ண:
விமானவர்ய: ப்ரப3பூ4வ ஸந்த்ததம் ।
வினேதி3ரே து3ந்து3ப4யோ தி3விஸ்த்தா:
ஜகு3ஶ்ச க3ந்த4ர்வ வராஸ் ஸுகீ3தம் ।। 9

பின்பு ஆகாசத்திலிருந்து தொடர்ந்து புஷ்ப வர்ஷம் ஏற்பட்டு, அந்த விமானமானது புஷ்பங்களால் நிரம்பி இருந்தது. ஆகாசத்தில் இருந்த தேவர்கள் துந்துபி (दुन्दुभि) *வாத்யங்கள் முழங்கினார்கள். கந்தர்வ ஸ்ரேஷ்டர்கள் நன்கு பாடினார்கள்.* *(9)*

ननर्तुरुच्चैः वरनाकवेश्याः
जयेति शब्दस्सुमहान्तथेति ।
लक्ष्मीसमेतं परमं पुमांसं
विमानगं शान्तमधोक्षजं प्रभुम् ।।१०
भोगीन्द्र तल्पे सुखशायिनं तं
समस्त कल्याण गुणाभिपूर्णम् ।
दृष्ट्वा मुनिस्तुष्टमनास्तदानीं
प्रणम्य सत्काञ्चन दण्डसन्निभः ।।११
परिक्रमन् भक्तिवरेण देवं
कृताञ्जलिः तत्पुरतस्समास्थितः ।
तुष्टाव तेजोमयमप्रमेयं
